விலை: 30
பக்கங்கள்: 56

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 365 கார்த்திகை 10ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 26 நவம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048









## நினைவேந்தல்களை நடத்த துயிலும் இல்லங்கள் தயார்

யாழ்ப்பாணம், நவ. 26
தமிழீழக் கனவோடு களமாடி தம்முயிரைத் தியாகம் செய்த தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகளை நினைவிருத்தும் மாவீரர் நாளை எதிர்கொள்ள தமிழர் தாயகத்தில் உள்ள பல துயிலுமில்லங்களும் முழு அளவில் தயாராகி உள்ளன. போர் முடிவடைந்த பின்னர் முதற்றடவையாக 13 மாவீரர் துயிலும் இல்லங்களில் நிகழ்வுகள் நடக்கவுள்ளன.
போரின் பின்னர் காடுகளும் பற்றைகளும் மண் >> 53

தமிழீழ படம் பொறித்த ரீசேட்டுக்களுடன்

## புதிய அரசமைப்புக்கு எதிராக மோட்டார் சைக்கிள் ஊர்வலம்



கொழும்பு,நவ.26
புதிய அரசமைப்புக்கு எதிராகக் கொழும்பில் உந்துருளி (மோட்டார் சைக்கிள்) ஊர்வலம் நடத்தப்பட்டது. கொழும்பு மத்திய பேருந்து நிலையம் முன்பாக ஆரம்பித்த ஊர்வலத்தை பிவித்துரு ஹெல உறுமய கட்சி ஏற்பாடு செய்தது.
பிவித்துரு ஹெல உறுமயவின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தலைமையிலான இளைஞர் படையணி ஊர்வலத்தில் கலந்துகொண்டது.
தமிழீழ வரைபடம் பொறிக்கப்பட்ட, கூட்டாட்சி >> 53

## நாடாளுமன்றத்தில் சிறிதரன் மாவீரர்களுக்கு அஞ்சலி

கொழும்பு, நவ. 26
"நெஞ்சுறுதியோடு நிமிர்ந்து நின்று போராடி, ஆபத்தான கட்டத்திலும் உறுதி ஒன்றையே தமது இறுதி ஆயுதமாகக் கொண்டு உலகின் மிகப் பெரிய ஆயுத பலத்தையே எதிர்கொண்டு எழுந்துநின்ற வீர மறவர்களை நெஞ்சிருத்தி அஞ்சலிப்பதை தமிழர்கள் ஒவ்வொருவரும் தமது தலையாய கடமையாகவே கருதுகிறார்கள்" என்று தெரிவித்து மாவீரர்களை வணங்கி அஞ்சலித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் >> 53

வெடிகொழுத்தி, கேக்வெட்டி

## நள்ளிரவில் பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாட்டம்

வல்வெட்டித்துறையில் அவரது வீடு முன்பாகவும் நடந்தது



யாழ்ப்பாணம், நவ. 26
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே. பிரபாகரனின் பிறந்த நாள் இன்று அதிகாலை 12 மணிக்கு குடாநாட்டின் பல்வேறு >> 53

# உள்ளூராட்சி தேர்தலை நடத்துவதில் ஆணைக்குழு விடாப்பிடி

## வடக்கில் ஒன்று உட்பட 93 சபைகளுக்கான தேர்தல் அறிப்பு நாளை வெளிவரும்

யாழ்ப்பாணம், நவம்பர் 26
உள்ளூராட்சித் தேர்தலைப் பிற்போடுவதில் அரசுக்குள் சில சக்திகள் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கும் நிலையில் தேர்தலை எப்படியும் நடத்தியே தீருவது என்பதில் தேர்தல்கள் ஆணைக்குழுவும் பிடிவாதமாகவே உள்ளது. நீதிமன்றத் தடைகள், நிர்வாகச் சிக்கல்களால் தேர்தல் வைக்கமுடியாமல் போகும் சபைகள் தவிர்ந்த எஞ்சிய சபைகளில் தேர்தலைத் திட்டமிட்ட படி ஜனவரியில் நடத்தி முடிப்பது என்று ஆணைக்குழு முடிவு செய்துள்ளதாகத் தெரிகின்றது. இது தொடர்பான ஆணைக்குழுவின் தெளிவான நிலைப்பாடும் அரச உயர்மட்டத்துக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது.
நீதிமன்றினால் இடைக்கால தடை உத்தரவு பிறப்பிக்கப்படாத 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலுக்கான அறிவிப்பை நாளை திங்கட்கிழமை வெளியிடுவது என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுத் தீர்மானித்தது. அதன்படி ஜனவரி மாதம் 29ஆம் திகதி திட்டமிட்டவாறு இந்தச் சபைகளுக்கு தேர்தல் நடத்தப்படும்.
இந்த ஏற்பாடுகளுக்கு அமைவாக தேர்தல் நடைபெற்றால் வடக்கு மாகாணத்தில் சாவகச்சேரி நகர சபைக்கு மாத்திரமே தேர்தல் இடம்பெறும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்தது. >> 53

see more news in
newuthayan.com

## கிணற்றில் தவறி வீழ்ந்து 3 வயதுக் குழந்தை சாவு

சங்குவேலியில் நேற்றுப் பரிதாபம்

யாழ்ப்பாணம் நவ 26
சங்குவேலி பகுதியில் மூன்று வயதுக் குழந்தையின் சடலம் கிணற்றில் இருந்து நேற்று மீட்கப்பட்டது. குழந்தை கிணற்றில் தவறி வீழ்ந்ததில் உயிரிழந்திருக்கலாம் எனக் கருதப்படுகின்றது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.
காலையிலிருந்து குழந்தையை >> 53

## 3 பிள்ளைகளின் தந்தை டிப்பரால் மோதி கொலை

சாரதி கைது

பருத்தித்துறை, நவ.26
டிப்பர் வாகனத்தால் மோதி ஒருவரைக் கொலை செய்தார் என்ற குற்றச்சாட்டில் வாகனச் சாரதி ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் நேற்று பருத்தித்துறையில் நடந்துள்ளது. திட்டமிட்டு டிப்பரால் மோதி அதே பிரதேசத்தைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை >> 53

## அரசுக்கு எச்சரிக்கை!

யாழ்ப்பாணம், நவ. 26
தேர்தல்கள் ஆணைக்குழு ஜனவரி மாதம் நடத்த தீர்மானித்துள்ள 93 உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கும் ஏதாவது தடை ஏற்படுத்தப்படுமாக இருந்தால், எதிர்வரும் புதன்கிழமையிலிருந்து தேர்தல்கள் அலுவலகத்தில் கறுப்புக்கொடி பறக்கவிடப்படும்.
இவ்வாறு தேர்தல்கள் ஆணைக் குழு அரச தரப்பினருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது.
தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் நேற்று மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் >> 53

## தேசியக் கொடியை மதிக்காதோர் நாட்டைவிட்டு வெளியேறுங்கள்

அமைச்சர் தயாசிறி நாடாளுமன்றில் முழக்கம்

கொழும்பு, நவ. 26
தேசியக் கொடிக்கு மதிப்பளிக்க முடியாவிட்டால் அது யாராக இருந்தாலும் நாட்டை விட்டு வெளியேறவேண்டும்.
வடக்கில் அடிப்படைவாதிகள் இருக்கும்போது அரசமைப்பு ஊடாக தீர்வு வழங்குவது தொடர்பில் எப்படி பேச முடியும்? சி.வி.விக்கினேஸ்வரனை ஒருபோதும் தமிழர்களின் தலைவராக நாம் ஏற்க மாட்டோம். வடக்கிலுள்ள இனவாதத்தை தோற்கடிக்க வேண்டும். >> 53

ஏற்கனவே உள்ள 93க்கு மேலதிகமாக

## 113 மன்றங்களில் தேர்தலை நடத்த அனுமதி கோரப்படும்

யாழ்ப்பாணம், நவ. 26
உள்ளூராட்சித் தேர்தலை நடத்த முடியாத வகையில் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கை அடுத்து, பிரச்சினை இல்லாத சில தொகுதிகளுக்குத் தேர்தலை நடத்த அனுமதிக்கும்படி சட்ட மா அதிபர் திணைக்களம் மேன்முறையீட்டு மனு ஒன்றைத் தாக்கல் செய்யவுள்ளது.
பலஉறுப்பினர் வட்டாரம் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த அனுமதிக்கக் கோரும் மனுவையே சட்டமா அதிபர் எதிர்வரும் புதன்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றில் தாக்கல் செய்வார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
தற்போது மேன்முறையீட்டு நீதிமன்றின் இடைக்கால தடை உத்தரவினால் 203 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை நடத்த முடியாத சூழல் ஏற்பட் >> 53



*நிபந்தனைகளுக்குட்பட்டது
சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ




## "தேர்தலை ஒத்தி வைக்கும் சட்டவிரோதச் செயலுக்கு த.தே. கூட்டமைப்பு உடந்தை"

### சோஷலிசக் கட்சித் தலைவர் குற்றச்சாட்டு



ஹற்றன்,நவ.26
உள்ளூராட்சி மன்ற தேர்தலை ஒத்தி வைக்கும் ஜனநாயக விரோத செயலுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடந்தையாக உள்ளது என முன்னிலை சோஷலிசக் கட்சியின் தலைவர் குமார் குணரத்னம் குற்றம் சாட்டியுள்ளார்.

ஹற்றனில் நேற்று இடம்பெற்ற கட்சிக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

"உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கான உண்மையான காரணம் சிறிலங்கா சுதந்திர கட்சியினருக்கும், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினருக்கும் இடையில் நடக்கும் முரண்பாடே ஆகும்.

தேர்தலை ஒத்தி வைக்கும் ஜனநாயக விரோத செயலுக்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபாவே பொறுப்பு கூறுகிறார்.

தேர்தல் சம்பந்தமாக முக்கிய முடிவுகளை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சர் பைஸர் முஸ்தபா எடுப்பதால் தேர்தல் தாமதம் ஏற்படுவதற்கும் அவரே பொறுப்பு கூற வேண்டிய நிலையில் உள்ளார்.

அவர் பொறுப்புக் கூற வேண்டும் ஆனால் இதற்கு முழு பொறுப்பும் ஏற்க வேண்டியது அரசே என்றார்.

(ற-ரி5)

# அறிவுடைய சமூகத்தை கட்டியெழுப்ப ஊர்வலம்




மட்டக்களப்பு, நவ.26
ஆரோக்கியமான, அறிவான, எதிர்காலச் சவால்களை வெற்றி கொள்ளக் கூடிய சமூகத்தை கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டு மட்டக்களப்பில் நேற்று விழிப்புணர்வு ஊர்வலம் நடத்தப்பட்டது.

குருமண்வெளி கிராம மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் குருமண்வெளி சிவசக்தி மகா வித்தியாலய சமூகத்தால் இந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்பட்டது.

'சிறுவர்களாகி எங்களை வாழ விடுங்கள்', சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதை கண்டிக்கிறோம்', சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்திருப்போம்' 'போதைப்பொருளை ஒழிப்போம்', 'நஞ்சற்ற உணவுகளை உற்பத்தி செய்வோம்', 'ஆரோக்கியமான சமூகத்தை கட்டியெழுப்புவோம்', போன்ற பல வாசகங்களைத் தாங்கி பதாதைகளை ஏந்திய வண்ணம் மாணவர்கள் ஊர்வலமாக சென்றனர்.

மாணவர்கள் மத்தியில் ஆரோக்கியமான, அறிவான, எதிர்கால சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதை நோக்காக கொண்ட பேண்தகு வேலைத் திட்டம் நாடளாவியரீதியில் 3 ஆயிரத்து 409 பாடசாலைகளில் முன்னெடுக்கப்படுகின்றது.

அந்த செயற்றிட்டத்தின் ஒரு அங்கமாகவே இந்த ஊர்வலம் நடத்தப்பட்டது.

(ற)



திருகோணமலை, முள்ளிப்பொத்தானையில் ஆட்டுக் கொட்டிலில் நேற்று ஏற்பட்ட தீ விபத்தில் 5 ஆடுகள் கருகி உயிரிழந்தன. ஆட்டுக்கொட்டிலுக்குத் தீ வைத்தவர்கள் தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடைபெறுகின்றன எனறு பொலிஸார் தெரிவித்தனர். (ற)

## வடக்கு சுகாதாரத் திணைக்கள பணியாளர் நிரந்தர நியமனம்

### அமைச்சர் குணசீலன் உறுதியளிப்பு



மன்னார்,நவ.26
வடமாகாண சுகாதார திணைக்கத்தில் பணியாற்றும் ஓட்டுநர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவது தொடர்பாக மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வ ரனுடன் கலந்துரையாடுவேன் என சுகாதார அமைச்சர் ஜி.குணசீலன் உறுதியளித்துள்ளார்.

மன்னாரில் உள்ள பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கு நேற்று சென்ற வடமாகாண சுகாதார திணைக்களத்தில் பணியாற்றும் ஓட்டுநர்கள், தமக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரியுள்ளனர். இதன் போதே அவர் இவ்வாறு உறுதியளித்தார்.

சுகாதார திணைக்களத்தில் பணியாற்றும் ஓட்டுநர்களால் தமது ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. வடமாகாண சுகாதார திணைக்கள ஓட்டுநர்கள், பல்வேறு பயிற்சிகளைப் பெற்ற தாம், போர் காலம் தொடக்கம் இன்று வரை சிறப்பான முறையில் பணியாற்றுவதால் தமது கோரிக்கை தொடர்பாக கவனம் செலுத்துமாறு வலியுறுத்தியுள்ளனர்.

(ற-ரி5)





## வவு.முஸ்லிம் மகாவித்தியாலய பரிசளிப்பு நிகழ்வு நேற்று

வவுனியா,நவ.26
வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்புவிழா நேற்று அதிபர் என்.எஸ்.ரம்ஸீன் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலையில் 2017ஆம் ஆண்டில் பல்கலைக்கழகத்திற்கு தோற்றிய மாணவர்களுக்கும், பாடசாலையில் திறமையுடன் சாதித்த மாணவர்களுக்கும் சான்றிதழ்களும், வெற்றிக்கேடயங்களும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட முன்னாள் மாவட்ட செயலர் றோகண புஸ்பகுமார, தற்போதைய வவுனியா மாவட்ட செயலாளர் சோமரத்தின விதான பத்திரண, தெற்கு வலயக் கல்விப்பணிப்பாளர் மு.இராதாகிருஸ்ணன் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(ற-ரி5)



வவுனியா மாவட்ட சமூக சேவைகள் திணைக்களம் நடத்திய மாற்றுத்திறனாளிகளுக்கான வினாடி வினா போட்டிகள் நேற்று சமூக சேவைகள் திணைக்களத்தில் இடம்பெற்றன. சமூக சேவைகள் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட உத்தியோகத்தர் இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன் தலைமையில் இடம்பெற்ற போட்டியில் அரச, அரசசார்பற்ற நிறுவனத்தினைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். (ற-ரி5)

# நிரந்தர அரசியல் தீர்வே கூட்டமைப்பின் இலக்கு!

## மக்கள் ஏற்காத ஒன்றுக்கு இணங்கோம் என்று மீண்டும் சம்பந்தன் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 26
நிரந்த அரசியல் தீர்வே எங்களது இலக்காக இருக்கின்றது. தமிழ் மக்கள் ஏற்காத தீர்வை நாம் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

புதிய அரசமைப்புக்கு ஆதரவு திரட்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரப்புரைக் கூட்டம் அம்பாறை மாவட்டத்தின் கல்முனைப் பிரதேசத்தில் நேற்று நடைபெற்றது. அம்பாறையில் கல்முனை நாலவர் கோட்டத்தில் நேற்று நடந்த இந்தச் சந்திப்பில் பெருமளவு பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

தமிழ் மக்கள் ஏற்காத தீர்வை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது என்றும், புதிய அரசமைப்பு ஏன் அவசியம் என்பது தொடர்பிலும் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் கருத்துத் தெரிவித்தார்.

கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், வெளியாகியுள்ள இடைக்கால அறிக்கையை வாசிக்காமல் பலர் அது தொடர்பில் கருத்து வெளியிடுகின்றனர் என்றும், இடைக்கால அறிக்கையில் எதுவுமே இல்லை என்று பொய்ப் பரப்புரை முன்னெடுக்கின்றனர் என்றும் குறிப்பிட்டார். இந்தக் கூட்டத்தில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராசா, கட்சிச் செயலர் துரைராஜசிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர்களான கோடீஸ்வரன், துரைரட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (5)

# கேரளக் கஞ்சாவுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,நவ.26
புத்தூர் பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் கஞ்சாவுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரின் உடமையிலிருந்து. 3 கிலோ 200 கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சந்தேகநபர் அவரது வீட்டில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார்.

இதேவேளை அச்சுவேலி பகுதியில் அனுமதிப் பத்திரம் இன்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். மணலை மூடாது போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்ற குற்றச்சாட்டில் இன்னுமொருவர் கைது செய்யப்பட்டார். (ரி2,26,37)

## சாவகச்சேரியில் மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு



சாவகச்சேரி, நவ. 26
தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 70 உம் அதற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்று மாகாண ரீதியில் 83 வீத சித்தி பெற்ற மாணவர்களுக்கு மதிப்பளிக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

சாவகச்சேரி கலைமன்ற கலாசார மண்டபத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம் தலைமையில் இடம்பெற்றது.

பரீட்சைக்குத் தோற்றிய 51 பாடசாலைகளிலிருந்து 70க்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்ற 760 மாணவர்கள் நிகழ்வில் மதிப்பளிக்கப் பட்டனர்.

நிகழ்வில், வட மாகாண கல்வித் திணைக்கள ஆரம்பக் கல்வி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சு. சற்குணராஜா, வட மாகாண சபை உறுப்பினர் க.தர்மலிங்கம் மற்றும் அதிபர்கள், ஆசிரியர்கள் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்று 100 வீத சித்தி பெற்ற 10 பாடசாலைகளுக்கு பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (ரி2, 9)

## வீடு புகுந்து அட்டகாசம் நால்வர் கைது

இளவாலை,நவ.26
வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அட்டகாசம் செய்த குற்றச்சாட்டில் நால்வர் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டனர்.


மாதகல் மற்றும் பருத்தித்துறைப் பகுதிகளைச் சேர்ந்த 25,27,29,50 வயதுடைய நால்வரே இளவாலைப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதில் தந்தையும் இரு மகன்களும் உள்ளடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வியாழக்கிழமை இளவாலைப் பகுதியில் உள்ள வீடொன்றில் சிலர் அத்துமீறி உள்நுளைந்து அங்கிருந்தவர்ளிடம் சேட்டை செய்து அட்டகாசம் செய்துள்ளனர்.

இக் குற்றச் சாட்டிலேயே குறித்த நால்வரும் நேற்று சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்பட்டனர். (ரி2,26)



வவுனியா பிரமண்டு வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா நேற்றுப் பாடசாலை அதிபர் எம்.எ.மோகன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வின் முதன்மை விருந்தினராக வடமாகாண விவசாய, மீன்பிடி அமைச்சர் ஞா.சிவநேசன் மற்றும் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (ற)

# தேடுதலில் எழுவர் கைது

பருத்தித்துதறை,நவ.26
பருத்தித்துறைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் எழுவர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இரவு தொடக்கம் நேற்று அதிகாலைவரை பொலிஸார் மேற்கொண்ட தேடுதலின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட ஐவரும், சந்தேகத்தின்பேரில் இருவரும் கைதுசெய்யப்பட்டனர். பருத்தித்துறைப் பொலிஸாரால் இச் சிறப்பு தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. (ரி2,26)


## 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 . 08 . 1953



மறைவு 19 . 11 . 2015


அமரர் சுவாமிநாதபிள்ளை இராசமனோகரன்
(ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளர்)

இரு தைகள் தாண்டியும்
இருதயம் தைக்கும் வலி
இறைவன் எமக்களித்த வரத்தை
இயற்கை பறித்தெடுத்த தேனோ?
நீங்கள் போன வழி அறியாது
விழி கனத்து நிற்கிறோம்
இரண்டாண்டுகளாய் வற்றாத
கண்ணீர் அருவிகளுடன்

"ஸ்ரீபதி"
இணுவில் தெற்கு, இணுவில்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



காசிநாதன் ஜெகநாத்
(இளைப்பாறிய உபதபாலதிபர் - சங்குவேலி)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிநாதன் ஜெகநாத் 25.11.2017 ஆம் திகதி சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிநாதன்(மலேயன் பென்சனியர்) பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் விஜயலட்சுமி, பிறேமாதேவி ஆகியோரின் அன்புக் கணவரும் திவாகர்(பிரான்ஸ்), குளோரியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிசாந்தியின் மாமனாரும் இமையாவின் பாசமிகு பேரனும் தையல்நாயகி(சிங்கப்பூர்), காலஞ்சென்ற ஆனந்த கிருஷ்ணன் காலஞ்சென்ற கரிக்கிருஷ்ணன். சத்தியபாமா, கமலாதேவி, காலஞ்சென்ற சாந்திமதி, காலஞ்சென்ற ஜோதிநாதன், காலஞ்சென்ற தேவராஜன், காலஞ்சென்ற ஞானசேகரம், திலகவதி(ஓய்வு பெற்ற ஆசிரியர்), சப்தசமுத்திரன்(பிரான்ஸ்), உமாதேவி(சிங்கப்பூர்), கேதீஸ்வரி(ஓய்வு பெற்ற பிரதேசசபை செயலாளர்), வர்ணராஜா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயலட்சுமி, பரமநாதன், தனலட்சுமி, கேதீஸ்வரி, சிவராஜா, சத்தியராஜா, பிரியதர்சினி(கமநலசேவை நிலையம் சண்டிலிப்பாய்), வேணுகா ஆகியோரின் மாமனாரும் வதனி, கிசொன்னி, சிறீதரன், கரிகரன், கரிஸ், அபிலாஷ் ஆகியோரின் பெரியப்பாவும் ஞானேஸ்வரி, யக்னேஸ்வரி, நந்தினி, டினேஷ், பிரியங்கா, டிலாஜினி, டினோஜி, அபிவரதன், நினுசினி, டனுசினி, கஜானனன், சாகித்தியன், பிருந்தாபன், பிரணவன், துளசிகன், லக்சனா, அஜித், டிலக்சன், துவாரகா, பிரவின் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


சங்குவேலி பிள்ளையார் கோயிலடி,
சங்குவேலி, மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

திவாகர்(மகன்) 00365 2181001
குளோரியா - (மகள்) - 077 506 3430/ 021 225 5350

# தேச சக்தியின் அபிமான அடையாளம்

CAPTAIN
Steel (PVT) LTD



T.M.T Bar, Angle Iron, Round Iron, Channel Iron, Flat Iron, I Beam

ஆகியவற்றை யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பெற்றுக் கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்.

S.SIVANESAN (CHANDIPAN)
Sales Executive
(Northern Province)
077 8915 770, 021 3737 625


# 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 11 | | 27 |
| 04 | | 10 |
| 1941 | | 2017 |



கடந்த 27.10.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவி

## அமரர் திலகவதி அருளானந்தன்

[ஓய்வுபெற்ற தாதிய உத்தியோகத்தர், யாழ். போதனா வைத்தியசாலை, இரத்த வங்கி]

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (26.11.2017) ஞாயிற்றுக் கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம். அமரர் அமரத்துவம் அடைந்தநேரம் சகல வழிகளிலும் உறுதுணைபுரிந்து அஞ்சலி செலுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள் மற்றும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், பதாகைகள் வெளியிட்டோருக்கும் மற்றும் தேவையான உதவிகளை சேவையாக வழங்கியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பு : இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

வளர்மதி, வல்லை வீதி, சங்கானை. — குடும்பத்தினர்.


அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 87
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2017.11.25
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 54,663,640/-
வெற்றி இலக்கங்கள்
06 61 67 74
ஆங்கில எழுத்து M

SUPER BALL
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் ▸ 733
சீட்டிழுப்பு திகதி ▸ 25.11.2017 சனிக்கிழமை
I 20 38 67 72
அடுத்த சுப்பர் ஜக்பொட்
ரூ. 46,510, 352/-
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம் 2960 திகதி 25.11.2017
வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து
20 47 50 69 C
போனஸ் இல. 23
திங்கட் கிழமை ஜக்பொட் 30, 783,160/=
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

உத்தியோகபூர்வ முடிவுகள்
Development Fortune
சீட்டிழுப்பு வாரம் ▸ 095
சீட்டிழுப்பு திகதி ▸ 25.11.2017 சனிக் கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 06 10 32
சுப்பர் இலக்கம் 03
அதிர்ஷ்ட மாதம் ஆகஸ்ட்
அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 6,293, 840/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5, 634, 101/=
அடுத்த ஜக்பொட் ரூ. 1, 504, 370/=
2017.11.30ம் திகதி வியாழக் கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk


## உள்ளூராட்சி தேர்தல் சட்ட கருத்தமர்வு

யாழ்ப்பாணத்தில் நேற்று புதிய உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் சட்டம் தொடர்பான அறிவூட்டல் கருத்தமர்வு நடைபெற்றது. தேர்தல் திணைக்களமும், தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையமும் இணைந்து இந்தக் கருத்தமர்வை ஏற்பாடு செய்திருந்தன. கருத்தமர்வு தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையத்தின் யாழ்ப்பாண மாவட்ட இணைப்பாளர் இம்மானுவேல் தயாளன் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.


விற்பனைக்கு
உயர் இன மறி ஆடுகள் மற்றும் UK இல் இருந்து கொண்டுவரப்பட்ட இறைச்சி அரைக்கும் இயந்திரம், சிறிய கமரா Jigsaw, Sander, Room warmer (Heater) என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு - 076 615 1837

பெண் உதவியாளர் தேவை
திருநெல்வேலியில் இயங்கும் உணவகம் ஒன்றுக்குப் பெண் உதவியாளர் தேவை.
071 368 6432

பணிப்பெண் தேவை
வீட்டில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு பணிப்பெண் ஒருவர்தேவை.
077 262 6944


# மரண அறிவித்தல்

## செல்வி சுப்பிரமணியம் ஜெயலட்சுமி



நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும் நயினாதீவை வசிப்பிடமாகவும் இல.105/10. இராசாவின்தோட்டம், யாழ்ப்பாணத்தை பிரதான வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சுப்பிரமணியம் ஜெயலட்சுமி 22.11.2017 புதன் கிழமை காலமாகி விட்டார்.


அன்னார் காலஞ் சென்றவர்களான சுப்பிரமணியம் (தலைமை ஆசிரியர்), சீதேவிப்பிள்ளை (ஆசிரியை) தம்பதியரின் கனிஸ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான இராமநாதன், சாரதா தேவி, சிந்தாமணி மற்றும் ஶ்ரீதரன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சத்தியதேவி, பானுகாந்தி காலஞ் சென்றநாகேஸ்வரன் (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியும் Dr.மாலதி, சித்திரா, Dr.சத்தியா ஆகியோரின் பாசமிகு சிறிய தாயாரும் சுப்பிரமணியம், தர்சினி நரேந்திரன் (பொறியியலாளர்), வாசுகி, திலீபன் (பொறியியலாளர்), பாரதன் (பொறியியலாளர்), றோஜா (பொறியியலாளர்), கவின் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2017) ஞாயிற்றுக் கிழமை பி.ப.2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**105/10. இராசாவின்தோட்டம்,**
**யாழ்ப்பாணம்.**
**076 944 2461,**
**077 4196946**

**தகவல்: சு.ஶ்ரீதரன் (சகோதரன்)**

# மரண அறிவித்தல்



## கந்தசாமி இராஜரட்ணம்

யாழ். அரியாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட கந்தசாமி இராஜரட்ணம் அவர்கள் 17.11.2017 வெள்ளிக்கிழமை அன்று லண்டனில் காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி பாக்கியம் தம்பதிகளின் மூத்த புதல்வரும் இராசையா அன்னலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும்,

காலஞ்சென்ற ஆனந்தபவானி அவர்களின் பாசமிகு கணவரும் காலஞ்சென்ற சிவாகரன், சிவாநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் செல்வரட்ணம், ஜெகன்நாதன், சற்குணநாதன், குணரட்ணம், குருநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் லெஜினா குகதாசன் (இலங்கை), இராசையா இராஜகுலசேகரன்(இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருஸ்ணாகரன், சிந்துஜா, துஸ்சியா, ஜஸ்மின், யெனிகா ஆகியோரின் அன்புப் பேரனும் டினோஜினி, டினேஸ், டிறாஜ் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை லண்டனில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குருநாதன் (சகோதரன்)**
**சிவாநிதி (மகள்,பிரித்தானியா) +447 828 669 412**

# மரண அறிவித்தல்



## குமாரசாமி கனகரத்தினம்

இணுவில் தெற்கைப்பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட குமாரசாமி கனகரத்தினம் (25.11.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி (குமாருவப்பா) தங்கம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் நவரத்தினராசா (ஓய்வு பெற்ற ஆசிரியர்), சிவகுமார்(கனடா), சிவபாலன் (சுவிஸ்) ,சரோஜாதேவி (கனடா), தேவகுமார்,மங்களேஸ்வரிஆகியோரின்அன்புத்தந்தையும் காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்ற ஶ்ரீதயா மற்றும் சுந்தரி, குணராஜன், சிவமலர், இந்திரஜித் (பொதுசுகாதாரப்பரிசோதகர், இணுவில்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பத்மசுதர்சன், கபிலன், நிலானி, துஷ்யந்தி, துஷ்யந்தன், தருணன், கஜீபன், மதுஷா, மதுராங்கி, சங்கீர்த்தனன், விஜிதா ஆகியோரின் அன்புப்பேரனும் நிலானிகாவின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இணுவில் தெற்கு,**
**இணுவில்.**
**021 561 9370**

**தகவல்: குடும்பத்தினர்**

# மண்காத்த மாவீரர்கள் நினைவாக சூழல் காக்கும் மரங்களை நடுவோம்

*என்றார் வடக்கு மாகாணசபை உறுப்பினர் ஐங்கரநேசன்*

மாவீரர்களுக்காகக் கண்ணீர் சொரியும் இந்தக் கார்த்திகை மாதம் வானம் மழைநீர் சொரியும் மாதமுமாக இருப்பதால் மண் காத்த மாவீரர்கள் நினைவாக சூழல் காக்கும் மரங்களையும் நடுவோம். இந்த உயிருள்ள நினைவுச் சின்னங்களில் எம்மாவீரச் செல்வங்கள் தினம் தோறும் முகம் காட்டுவார்கள் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவரும் முன்னாள் விவசாய அமைச்சருமான பொ. ஐங்கரநேசன் குறிப்பிட்டுள்ளார்.



மாவீரர் தினம் தொடர்பாக அவர் விடுத்திருக்கும் ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது;

மாவீரர்கள் எமது மண்ணின் காவலர்கள். இந்த மண்ணையும் மக்களையும் அளவுக்கு அதிகமாக நேசித்ததன் காரணமாகத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டவர்கள். தங்கள் குடும்ப உறவுகளைக் கடந்து மொத்தத் தமிழினத்தினதும் வலிகளைத் தங்கள் தோள்மேல் சுமந்தவர்கள். ஈகைக்கு உவமை வேறு இல்லாத அளவுக்கு தங்கள் இன்னுயிரை ஈந்த தியாக சீலர்கள்.

உக்கிரமான போர் நகர்வுகளின்போதுகூடப் படையினரின் நினைவு நடுகற்களைப் பாதுகாத்த முன்னுதாரணர்கள். போர் மரபுகளை மீறி இவர்களது நினைவு நடுகற்களைப் படையினர் ஆழக் குழிதோண்டி அகற்றிச் சிதைத்தாலும் எம் ஆழ்மனதில் நீங்காத நினைவுகளாக இடம்பெற்றிருப்பவர்கள். இவர்தம் வித்துடலணுக்கள் நிலம், நீர், காற்று என்று அரூபமாக வியாபித்திருந்தாலும் நினைக்கும்தோறும் சோதிப் பெருவெளிச்சமாய் முகம் காட்டுபவர்கள். தமிழர்கள் விக்கிரக வழிபாட்டுக்கு முன்னர் மரங்களை வளர்த்து இறைவனாக வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருந்தவர்கள். இப்போதும் ஆலயங்களில் தலவிருட்சங்களாக மரங்களை வளர்த்து வழிபடும் மரபைக் கடைப்பிடிப்பவர்கள். மாண்டவர்கள் நினைவாக நடுகற்களை நிறுவுவதற்கு முன்னர் மரங்களை உயிருள்ள நினைவுச் சின்னங்களாக நட்டுப் பராமரிக்கும் மரபைக் கொண்டிருந்தவர்கள். அந்தவகையில் மாவீரர் புகழ் பாடி, அவர்களின் நினைவு நாளில் சுடரேற்றி அஞ்சலிக்கும் நாம் அவர்களின் நினைவாக மரமொன்றையும் நட்டுவைப்போம்.

மாவீரர்களைப் போன்றே மரங்களும் இந்த மண்ணின் பாதுகாவலர்கள். இவை வேறு எந்த உயிரினத்தையும்விட மண்மீது கூடுதலான நேசிப்பும் பிடிமானமும் கொண்டவை. தங்கள் இனத்தையும் கடந்து புவிக்கோளின் ஒட்டுமொத்த உயிர்ப்பல்வகைமையையும் தாங்கி நிற்பவை. எமது எதிர்காலச் சந்ததி இந்த மண்ணில் வளமாக வாழ்வதற்கான உத்தரவாதமும் இவையே. மாவீரர்தம் இலட்சியக் கனவுகளும் இந்த மண்ணில் எமது மக்களின் வளமான சுதந்திரமான நீடித்த வாழ்வை உறுதி செய்வதாகத்தான் இருந்தன. மாவீரர்களுக்காகக் கண்ணீர் சொரியும் இக்கார்த்திகை மாதம் வானம் மழைநீர் சொரியும் மாதமுமாக இருப்பதால் மண்காத்த மாவீரர்கள் நினைவாக சூழல் காக்கும் மரங்களையும் நடுவோம் - என்றுள்ளது. (21.8)

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது...

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

British Way® English Academy

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

**இரண்டு மாத காலப் பயிற்சி** — 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

02, January, 2018 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

**வார இறுதி வகுப்புகள்** — 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**KIDS' Class** Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

**IELTS**

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

British Way English Academy

Contact (Jaffna Branch) : 021 300 55 55

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

டேர்டன்ஸ் வைத்தியசாலை இதய அறுவை சிகிச்சை முன்பதிவுகள் உங்கள் வசதி கருதி இப்போது டேர்டன்ஸ் யாழ் ஆய்வுகூடத்தில்...

DURDANS HEART CENTRE

35,000 க்கும் அதிகமான அறுவை சிகிச்சைகள்

- நீண்டகால வாழ்வினை உறுதிப்படுத்தும் மேலதிக Grafting உடனான விசேட இதய பைபாஸ் அறுவை சிகிச்சை
- Angiogram மற்றும் Angioplasty அறுவை சிகிச்சைக்கான விசேட பேக்கேஜ்கள்
- 24 மணிநேர இதயத்துடிப்பு கண்காணிப்பு வசதி (Holter Monitor)
- அனைத்துவிதமான இதய அறுவை சிகிச்சைகளையும் மற்றும் பரிசோதனைகளையும் தனிப்பட்ட முறையில் ஒருங்கிணைப்பாளர் (Cardiac Coordinator) மூலம் ஒழுங்குசெய்யும் வசதி
- சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற இதய நோய் சிகிச்சை நிபுணர்கள்
- Digital Cath Lab உள்ளடங்கலான நவீன இதயநோய் சிகிச்சை மையம் (இதய அறுவை சிகிச்சைகளுக்கான அதிநவீன Philips *Azurion* 7 Image Guided Therapy Platform விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது)

இதய அறுவை சிகிச்சைகளுக்கான நிதியுதவிகள் ஜனாதிபதி நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் (EPF) மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் (ETF) மூலம் விண்ணப்பிக்க ஏற்பாடு செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு:

டேர்டன்ஸ் யாழ் ஆய்வுகூடம் (போதனா வைத்தியசாலைக்கு எதிரில்)

021 2 225 522 | 077 3 068 122 (டிலான்)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
30 . 08 . 1928



இறப்பு
06 . 12 . 2016

## திருமதி வள்ளியம்மை சபாரெத்தினம்

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர் அனைவரையும் போற்ற
வாழ்ந்து காட்டிய அன்னையே - நாங்கள்
வையத்துள் வாழ்வாங்கு வாழ - ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய்
என்றும் எங்களின் இதயத்தில்
சுடர்விட்டுக் கொண்டிருக்கும் குலவிளக்கே - அம்மா
நீங்கள் எம்மைவிட்டுப்பிரிந்து ஆண்டொன்று சென்றாலும்
உங்கள் நினைவுகள் என்றும் எங்களை விட்டுப்பிரியாது

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள்.**

# விழிநீர் காணிக்கை

மலர்வு
24 . 02 . 1976



உதிர்வு
24 . 11 . 2017

காலஞ்சென்ற **பரமசிவம் ஆசாரி** மற்றும் **சண்முகசுந்தரி**
தம்பதியரின் அன்பு மகன்

## பரமசிவம் அசோக்

24.11.2017 அன்று இறைவனடி அடைந்தார். அன்னாரின் பூதவுடல் 248/37, ஆட்டுப்பட்டி வீதி, (Police Flats), கொழும்பு 13 இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. 27.11.2017 திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு இறுதிக்கிரியைக்காக அவரது இல்லத்திலிருந்து எடுக்கப்பட்டு மாதம்பிட்டிய பொது மயானத்திற்கு அடக்கத்திற்காக பி.ப.3.30 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவரது மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அன்னாரின் பிரிவால் துயருறும்*

**075 505 0377,**
**075 488 1198**

**கன்னாதிட்டி**
**நண்பர்கள்**

# இரங்கல் செய்தி



**லயன் செல்லத்துரை மகாதேவா** அவர்கள் நேற்றைய தினம் சடுதியாய் அமரராகிவிட்டார் என்ற செய்தி இடியாய் வந்து இறங்கியது. இத்தனை சீக்கிரத்தில் இந்த மனிதர் எம்மிடமிருந்து விடை கொள்வார் என்று யாருமே நினைத்திருக்கவில்லை.

நாடறிந்த சேவையாளராய் நல்லதோர் குடும்பத் தலைவராய் வாழ்வாங்கு வாழ்ந்த மகாதேவா அவர்கள் எமது வாழ்வக நிறுவனத்தோடும் மிக நெருக்கமான கேண்மை பூண்டொழுகிவந்தவராவார். எமது பொதுச்சபை, நிர்வாக சபைகளின் அங்கத்தவராகவும் வாழ்வக நிறுவனத்தின் கௌரவ செயலாளராகவும் பணியாற்றிய இவர் வாழ்வகத்தின் வளர்ச்சியில் எப்போதுமே அதீத ஈடுபாடு காட்டி வந்திருக்கிறார். எம்மைப் பொறுத்தவரை லயன் மகாதேவா அவர்களின் திடீர் மறைவானது எவ்வகையிலும் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது இரு புதல்வர்கள், புதல்வி, மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உறவுகளுடன் நாமும் இணைந்துகொள்கின்றோம். நொந்துபோன நம் இதயங்களைக் காலம் ஆற்றட்டும். கடவுள் நம்மைத் தேற்றட்டும்.

**வாழ்வக சமூகம்,**
**சபாபதிப்பிள்ளை வீதி, சுன்னாகம்.**

# மரண அறிவித்தல்

## லயன் செல்லத்துரை மகாதேவா (J.P)



கந்தரோடை, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட லயன் செல்லத்துரை மகாதேவா (J.P) (24.11.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை சீவநாயகம் தம் நியரின் அன்பு மகனும் காலஞ்செனறவர்களான சுப்பிர மணியம் பொன்னுப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற லயன் பூமாதேவியின் அன்புக்கணவரும் ம. பிருந்தாவன் (சுதன், லண்டன்), திருமதி வி. பிரியதர்ஷினி (லண்டன்), லயன் ம. பிரிதிவிராஜா (ராஜன், லண்டன்), ஆகியோரின் அன்புத்தந்தையும் திருமதி பி. சிவனேஸ்வரி (லண்டன்), ச. விஷ்னுகாந்தன் (லண்டன்), திருமதி பி.பவித்திரா ஆகியோரின் அன்பு மாமனாரும் பி.சர்விகா, பி. கோவரசன், வி. ஜஸ்வீனா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைக்ள்நாளை(27.11.2017)திங்கட்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல்தகனக்கிரியைகளுக்காக கந்தரோடை சங்கன்புலவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கந்தரோடை, சுன்னாகம்.**

**தகவல்:**
**பிள்ளைகள்**

# மரண அறிவித்தல்

மலர்வு
1945 . 04 . 23



உதிர்வு
2017 . 11 . 24

## பொன்னம்பலம் கனகலிங்கம்

புங்குடுதீவு 7 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், மாட்டீன் றோட் ஐ வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கனகலிங்கம் கடந்த (24.11.2017) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் கண்மணி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற இராசையா மற்றும் இலட்சுமி தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக்கணவரும் சசிக்குமார் (டென்மார்க்), பிரேம்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நிதர்சினி (டென்மார்க்), கம்ஷா (ஜேர்மனி) ஆகியோரின் அன்புமாமனாரும் லரிஷா, மனோரிஷா, துர்க்கா, அய்ஷா ஆகியோரின் அன்புப்பேரனும் காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரி, சபாரெத்னம், தர்மரெத்னம், குணபாலசிங்கம் மற்றும் பரமலிங்கம் (கொழும்பு) ஆகியோரின் அன்புச்சகோதரரும் பேரம்பலம் (கனடா), மனோராணி (கனடா), பேரின்பநாதன் (ஜேர்மனி), மனோரஞ்சிதம் (பிரான்ஸ்), நாகேஸ்வரி (பிரான்ஸ்), குகநாதன் (இராஜ இலட்ச்சுமி Hardware, யாழ்ப்பாணம்), தங்கேஸ்வரி (யாழ்ப்பாணம்), கோகுலநாதன் (டென்மார்க்) காலஞ்சென்ற கமலநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2017) திங்கட்கிழமை பி.ப. 2 மணியளவில் இன்பம் அந்தியகால சேவையில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# மாவீரர் தடம் பதிந்த மண்ணை நீறாக பூசும் தமிழ் மரபை உருவாக்குவோம்!

## ஈச்சங்குளத்தில் இடம்பெறும் மாவீரர் நாளுக்கு வவுனியா பிரைஜகள் குழு அழைப்பு

வவுனியா, நவ.26
மாவீரத்தடம் பதிந்த மண்ணை நீறாக நெற்றியில் பூசும் புதிய தமிழ்மரபை உருவாக்குவோம் எனும் தொனிப்பொருளிலான மாவீர் நாள் நாளை வவுனியா, ஈச்சங்குளத்தில் எழுச்சியாக இடம்பெறவுள்ளது என வவுனியாபிரஜைகள் குழு அறிவித்துள்ளது.

பிரஜைகள் குழுவால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது; தமிழர் தேசத்தின் இதய ஆத்மாவாக உள்ளிருந்து எங்கள் மொழியாகி, எங்கள் கலையாகி, எங்கள் மூச்சாகி, எங்கள் வாழ்வுமாகி, எங்களையெல்லாம் இயக்குகின்ற உந்துசக்திகளை, மாசுமருவற்ற ஒப்பற்ற மானமாமறவர்களை எங்கள் நெஞ்சத்தில் கொலுஇருத்தி மதிப்பளிக்கும் உயர்குலப்பண்பாட்டின் செல்நெறிநின்று, மாவீரர்களின் கால்கள் இறுதியாக நடந்த முள்ளி வாய்க்கால் மண்ணை நீறாக நெற்றியில் பூசி விசுவாசமாகவும், நன்றியுணர்வாகவும் மாவீரத்தெய்வங்களை நினைந்துருகி வழிபடும் புதிய தமிழ்மரபை உருவாக்குவதற்காக 'குப்பிகளில் அடைக்கப்பட்ட மண்' தத்தமது இல்லங்கள் தோறும் எடுத்துச்செல்வதற்காக வழங்கப்படும். மாவீரர் நாள் நினைவேந்தல் நாளை வழமை போன்றே வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஒழுங்கமைப்பில் வவுனியா ஈச்சங்குளம் மாவீரர் துயிலுமில்லச் சூழலில், ஆலய மணியோசை மூன்று முறை ஒலிக்கவிடப்பட்டு, மாவீரத்தெய்வங்களுக்காக பிரத்தியேகமாக அமைக்கப்பட்டுள்ள திருக்கோவிலில் (நினைவேந்தல் பாடல் இசைக்க) மாலை 6.05 மணிக்குப் பொதுச்சுடர் ஏற்றலுடன் நினைவேந்தல் இடம்பெறும். மாவீரர் போராளி குடும்பங்களின் பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள், தமிழ் இனமான உணர்வாளர்கள், சிவில் சமுக மனித உரிமை செயல்பாட்டாளர்கள் அனைவரையும் சமவாய்ப்புடன் பங்கேற்று, 'தமிழ் தேசிய இனத்தின் வீரஆத்மாக்களுக்கு' உணர்வு பூர்வமாக அஞ்சலி செலுத்துமாறும், தாங்கள் வசிக்கும் இடத்திலிருந்து நினைவேந்தல் இடம்பெறும் கிட்டிய தூரத்திலுள்ள மாவீரர் துயிலுமில்லங்களுக்கு முடிந்தவரை நேரில் வருகை தருமாறும் அழைக்கின்றோம். கூடவே 'எனது மொழி தமிழ், எனது பிறப்பு தமிழன் தமிழிச்சி' என்று உணருக்கின்ற ஒவ்வொரு தமிழ் பிரஜையையும், நவம்பர் 27 அன்று மாலை 6.05 மணிக்குத் தத்தமது இல்லங்களின் வாசல்கள் தோறும் நெய் விளக்கேற்றி மண்ணுறங்கும் 'மாவீரத்தை' தட்டி எழுப்பி மதிப்பளிக்கும் தேசிய பெரும் பணியை - தேசியக் கடமையை, 'தரம் தாழ்ந்துபோகாது சிரம் உயர்த்தி' நிறைவேற்றுமாறும் கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (21)



## 37அகத்தி மரக்கன்றுகள் கட்டாக்காலிகளால் அழிப்பு

### கோத்தபாய முகாமில் உள்ள கடற்படையினர் நட்டவை

முல்லைத்தீவு, நவ.26
மக்களுடைய காணிகளை அபகரித்து முகாமிட்டுள்ள கடற்படையினரால் நட்டுப் பராமரிக்கப்பட்ட அகத்தி மரக்கன்றுகளைக் கட்டாக்காலிகள் சேதப்படுத்தின. அந்த அகத்திக் கன்றுகளை நட்ட இடத்திலி இருந்து அப்புறப்படுத்தும் முயற்சியில் கடற்படையினர் ஈடுபட்டனர்.

மக்களுடைய காணிகளை அபகரித்து அமைக்கப்பட்ட முல்லைத்தீவு வட்டுவாகல் கோத்தபாய கடற்படை முகாமுக்கு முன்பாக 2 கிலோ மீற்றர் நீளம் கடறபடையினர் அகத்தி மரக் கன்றுகளை நட்டிருந்தனர். இவ்வாறு 135 அகத்திக் கன்றுகள் கூடு அடைத்து நடப்பட்டன. அதைக் கடற்படையினர் பராமரித்தும் வந்தனர். கடந்த காலத்தில் ஏற்பட்ட கடும் வரட்சியின்போது கூட அவர்கள் தண்ணீர் தாங்கியில் தண்ணீர் கொண்டுவந்து அகத்திகளுக்கு ஊற்றிப் பராமரித்தனர். அவை தற்போது பெய்த மழையில் நன்றாகச் செழித்தும் இருந்தன. இந்த நிலையில் அந்த அகத்திக் கன்றுகளைக் கட்டாக்காலிகள் கடித்து அழித்துள்ளன. இதனை அடுத்து 135 அகத்திக்கன்றுக ளையும் அதற்காகக் கட்டப்பட்ட கூடுகளையும் கடற்படையினர் அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்."

இந்த அகத்திக் கன்றுகளைப் பயன்தரு மரமாகவும், புயல்தாக்கத்தைக் குறைக்கும் மரமாகவும் நட்டோம். எனினும் கட்டாக் காலிகள் அவற்றை அழிக்கின்றன. எனவே முகாமுக்குள் நடப்பட்டிருக்கும் பெருமளவான அகத்திக் கன்றுகளுடன் இவற்றையும் நடுகை செய்யப்படுவதற்காகவே இங்கிருந்து அகற்றப்படுகின்ற என கடற்படையினர் தெரிவித்தனர். (21,ரி3)

## "அன்பின் ஆழம்" வகுப்பு இன்று

யாழ்ப்பாணம், நவ.26
யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் இளநிலை யுவகேந்திராவினருக்கான வகுப்புகள் வரிசையில் இன்று ஞாயிற்றுக்கிழமை "அன்பின் ஆழம்" எனும் தொனிப்பொருளில் வகுப்பு இடம்பெறவுள்ளது இந்த வகுப்பு சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யாவால் வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படுகிறது. 13 வயது முதல் 16 வயதினருக்குக்கான இந்த வகுப்புக்கள் சின்மயா மிஷன், இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் எனும் முகவரியில் மதியம் 1.30 முதல் 2.30 மணிவரை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இலவசமாக இடம்பெறும் இந்த வகுப்புக்களில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்து பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (21)

## போதையில் சாரத்தியம்; தண்டத்துடன் சாரதி அனுபதிப்பத்திரத்துக்கும் இடைக்காலத்தடை

மது போதையில் வாகனம் செலுத்திய 9 சாரதிகளின் சாரதி அனுமதிப்பத்திரங்ளை தடை செய்த கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று அவர்கள் ஒன்பது பேருக்கும் 67ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதித்துத் தீர்ப்பளித்தது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை, தருமபுரம், கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் மது போதையில் வாகனம் செலுத்தினார்கள் என பொலிஸாரால் கைது செய்யப்பட்ட 9 நபர்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கு விசாரணைகள் இடம்பெற்றன. 9 பேரும் குற்றத்தை ஒப்புக் கொண்டனர். அவர்களுக்குத் தலா 7ஆயிரத்து 500 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. அவர்களில் ஐவரின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 2 மாதங்களுக்கும், மூவரின் சாரதி அனுமதிப்பத்திரங்கள் 4 மாதங்களுக்கும், ஒருவரின் சாரதி அனுமதிப்பத்திரம் 5 மாதங்களுக்கும் மன்று இடை நிறுத்தியது. (21,6)

## குருதிக் கொடை நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ.26
பாசையூர் யுப்பிற்றஸ் குறூப்பின் 40 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாளை திங்கட்கிழமை குருதிக்கொடை நிகழ்வு இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. பாசையூரில் அமைத்துள்ள திருமண மண்டபத்தில் காலை 9 மணிக்கு நிகழ்வு இடம்பெறும் எனவும் அறிவிக்கப்பட்டது. (21,23)



## முள்ளியவளை மாவீர் துயிலுமில்லத்தில் மாவீரர் பசீலனின் தாயார் சுடரேற்றுவார்

### பணிக்குழு முடிவு செய்தது

முல்லைத்தீவு, நவ.26
முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவீரர் ஒருவருடைய தாயார் நாளை ஈகைச் சுடரேற்றுவார் என துயிலும் இல்லப் பணிக்குழு தெரிவித்தது.

முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த பகுதியில் தற்போதும் இராணுவத்தினர் நிலை கொண்டுள்ளனர். அந்த இடத்தின் ஒரு பகுதி படையினரால் விடுவிக்கப்பட்டிருந்தது. அந்த இடத்தில், படையினருடைய முகாமுக்கு அருகில் மாவீரர் நாளை எழுச்சியாக நினைவு கூறுவது என அந்தப் பகுதி மக்கள் முடிவு செய்தனர். குறித்த இடம் சிரமதானம் செய்யப்பட்டது. இதற்காக நேற்று முன்தினம் 11 பேர் கொண்ட பணிக் குழு நியமிக்கப்பட்டது. உலகெங்கும் நாளைய தினம் மாவீரர் நாள் எழுச்சியாகக் கடைப்பிடிக்கப்பட உள்ள நிலையில் முள்ளியவளையில் இடம்பெறும் நிகழ்வுக்கு மாவீரர் ஒருவரின் தாயாரே ஈகைச் சுடரை ஏற்றிவைப்பார் என அந்தப் பணிக்குழு முடிவு செய்தது. இதற்காக மாவீரர் பசீலனின் தாயர் அழைக்கப்பட்டுள்ளார். அத்தோடு அங்கு விதைக்கப்பட்ட மாவீரர்களின் பெற்றோர்களும் அழைக்கப்பட்டுள்ளனர். இதே வேளை அந்தத் துயிலும் இல்லத்தில் நிலைகொண்டுள்ள படையினர் முகாமினைச் சுற்றிப் புதிய காவலரண்களை அமைத்துள்ளனர். அவ்வாறு நான்கு காவலரண்கள் வேலிக்கு மேலாக உயரத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. இதிலிருந்து அந்தப் பகுதியில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கையிலும் படையினர் ஈடுபட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டது. (21,ரி3)



## மாவீரர் நாளுக்கு தேராவில் துயிலும் இல்லமும் தயார்

முல்லைத்தீவு, நவ.27
மாவீரர் நாளுக்காக முல்லைத்தீவு விஸ்வமடு தேராவில் மாவீரர் துயிலுமில்லம் தயாராகி வருகின்றது.

பரந்தன் முல்லைத்தீவு வீதியில் அமைந்துள்ள தேராவில் கிராமத்தில் கடந்த 1997ஆம் ஆண்டு கரும்புலி மாவீரர் அங்கயற்கண்ணி உட்பட 5 மாவீரர்களின் நினைவு கற்கள் திரைநீக்கம் செய்யப்பட்டதோடு ஆரம்பிக்கப்பட்ட இத்துயிலுமில்லத்தில் சுமார் 10 ஆயிரம் மாவீரர்களின் நினைவுக்கற்கள் வித்துடல்கள் விதைக்கப்பட்டு தொடர்ச்சியாக மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வந்தது. இறுதியாக 2008 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வோடு போர்ச் சூழல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து சென்றனர். மீள் குடியமர்வின்போது துயிலுமில்லம் உடைக்கப்பட்டு இராணுவ முகாமாக காணப்பட்டது. இந்த நிலையில் 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த ஆண்டு மக்கள் உணர்வுபூர்வமாக தேராவில் மாவீரர் துயிலுமில்லத்தில் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர். (21)



# பொது இடத்தில் மதுவருந்திய நால்வர் கைது

வவுனியா, நவ. 25
நெளுக்குளம் பகுதியில் பொது இடத்தில் மதுவருந்திய நால்வரை நேற்று முன்தினம் மாலை(23) நெளுக்குளம் பொலிஸார் கைது செய்துள்ளனர். வவுனியா நேரியகுளம் குளத்துக்குச் செல்லும் பாதையில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் மதுபானம் அருந்துவதாக வவுனியா நெளுக்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலையடுத்து நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி எ.ஸ் அத்தனாயக்க தலைமையிலான குழுவினர் அந்த இடத்துக்குச் சென்று வீதியில் மதுவருந்திய 21, 22, 25 மற்றும் 41 வயதுடைய நால்வரை கைது செய்தனர். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதி மன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)



முல்லைத்தீவு நகர்பகுதியில் அமைந்துள்ள மாவட்ட நீதிமன்றத்துக்கான வீதிகுறியீடுகள் பொறிக்கப்பட்ட கம்பம் வீழ்ந்தும், தூக்கி வீசப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றது. வெளிமாவட்டங்களில் இருந்து வரும் வாகனங்களின் சாரதிகள் நீதிமன்றினை இனம் காணமுடியாதுவாகன ஒலியெழுப்புவதையும் அவதானிக்கமுடிகின்றது எனதெரிவிக்கப்பட்டது. உரிய தரப்பினர் இதில் கவனமெடுத்து சீர் செய்யுமாறும் கோரப்பட்டது. வெளிமாவட்டங்களில் இருந்து முல்லைத்தீவுக்கு வரும் வாகனங்களின் சாரதிகளுக்கு நீதிமன்று அமைந்துள்ளது தெரியாது ஒலி எழுப்புவதால் சட்டச் சிக்கல்களையும் அவர்கள் சந்திக்கக் கூடும் எனவே இந்த குறியீட்டுப் கம்பத்தைச் சீர் செய்ய வேண்டும் என மக்கள் தெரிவித்தனர். (21,ரி3)

# காணிச் சிறப்பு மத்தியஸ்த்தர்களை ஐரோப்பிய ஆணைக்குழு சந்தித்தது

யாழ்ப்பாணம் நவ 26
யாழ்ப்பாண மாவட்ட காணிசம்பந்தமான சிறப்பு மத்தியஸ்த்தர்களை ஐரோப்பிய ஆணைக்குழு அதிகாரிகள் யாழ்ப்பாண செயலகத்தில் சந்தித்துள்ளனர். இந்தச் சந்திப்பு கடந்த வியாழக்ககிழமை இடம்பெற்றுள்ளது. ஐரோப்பிய ஆணைக்குழுவின் மூத்த ஆலோசகர் எஸ். சீதபொன்கலன் தலைமையில் மூன்று பேர் கொண்ட வெளிநாட்டவர்களே நேரடியாகச் சந்தித்து கலந்துரையாடினர். இதன் போது ஐரோப்பிய ஆணைக்குழு மூத்த ஆலோசகர் எஸ்.சீதபொன்கலன் தெரிவித்ததாவது; இலங்கைக்கு 40 மில்லியன் யூரோ நிதி நன்கொடையாக வழங்கவுள்ளோம். இதில் உள்ளூராட்சி சபைகளின் அபிவிருத்தி மத்தியஸ்த சபை (காணி) மற்றும் சனசமூக மத்தியஸ்த சபைகளின் அபிவிருத்திப் பயிற்சி மற்றும்விடயங்களுக்கும்,பால்நிலைசமத்துவத்துக்கும் இந்த நிதி பகிரப்படும் என்றார்.

இதில் கலந்து கொண்ட காணி சம்பந்தமான சிறப்பு மத்தியஸ்தர்கள் தமது கருத்துக்களையும் முன்வைத்தனர். "காணி சம்பந்தமான சிறப்பு மத்திய சபைக்குப் பொருத்தமான கட்டடம் ,தளபாடம் என்பவற்றுடன் பிணக்குக்கு வருபவர்களுக்கான வசதிகளை வழங்க வேண்டும். மத்தியஸ்தர்களுக்கான கொடுப்பனவு அதிகரிக்கப்பட வேண்டும். என்பதுடன் வெளிநாட்டுப் பயிற்சிகளும் வழங்கப்பட வேண்டும். சனசமூக மத்தியஸ்த சபைத் தவிசாளர்களுக்கு மின்னியல் சாதனங்கள் வழங்குவதுடன் மத்தியஸ்தர்களின் கொடுப்பனவும் அதிகரிக்கப்பட வேண்டும்" என்று அந்தக் கருத்துக்கள் அமைந்திருந்தன. யாழ்ப்பண மாவட்டக் காணிசம்பந்தமான சிறப்பு மத்தியஸ்தர்கள் சார்பில் மூத்த ஒருங்கிணைப்பாளர் சனாதன சர்மா மத்தியஸ்த்தர்களது நலச்சேவைகள் குறித்து விளக்கினார். (21,50)

## பெரும்பான்மை இனத்தவரால் அபரிக்கப்பட முன்னர்

# வவுனியா எல்லைக் கிராமங்களில் வாழ்ந்த தமிழர்களை அங்கு மீளக் குடியமர்த்துங்கள்

*பாதிக்கப்பட்டவர்களின் உருக்கமான கோரிக்கை இது*

வவுனியா, நவ.26
வவுனியா மாவட்டத்தின் எல்லைப்பகுதியில் 25 ஆண்டுகளாக மக்கள் மீள் குடியமராது உள்ள தமிழ்கிராமமக்கள்பெரும்பான்மை இனத்தவர்களின் ஆக்கிரப்புக்குள் வந்துவிடும் அபாயம் உள்ளது. அந்தக்கிராமங்களை முற்றாக அழியவிடாது வசதிகளை ஏற்படுத்தி அந்தக் கிராமங்களில் வாழ்ந்த தமிழ் மக்களை மீள்குடியமரத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்ததாவது; வவுனியா வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட எல்லைப்பகுதிக் கிராமங்களான நொச்சிக்குளம்,கோரமோட்டை,நாவர்பண்ணை ஆகிய மூன்று கிராமங்களில் 1997 வரைக்கும் சுமார் 250 குடும்பங்கள் வாழ்ந்தனர். ஆனால் இன்று ஒரு தமிழ்க் குடும்பமும் அங்கு வாழாத நிலைமைக்கு கிராமங்கள் கானப்படுகின்றன. கிராமங்களில் வாழ்ந்த மக்களின் வாழ்விடங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டபோதும் எச்சங்கள் மட்டும் மிஞ்சியுள்ளன. அத்தோடு கிராமங்களில் வாழ்ந்த எமக்கான அடிப்படைத் தேவைகளை ஏற்படுத்தித் தருவதன் மூலம் அந்தப் பகுதியில் எம்மால் மீளக்குடியமர முடியும். எமக்கான வாழ்வாதாரமாக இந்தப் பிரதேசத்தில் 450 ஏக்கர் வயல் நிலமும் உள்ளது. பிரதேசத்தில் போர்க் காலத்திலும் 1992 ஆண்டு முதல் 1996 ஆண்டு வரையில் நாம் விவசாயம் மேற்கொண்டுள்ளோம். இந்தக் காலத்தில் எம்மில் பலரின் தலைகள் வெட்டப்பட்டன. ஆழ ஊடுருவும் படையணியினர் வந்து தலைகளை வெட்டிச் சென்றனர். அந்தக் காலத்தில் கூட அச்சமின்றி விவசாயம் மேற்கொண்ட எம்மால் இன்று அங்கு வாழமுடியவில்லை. யானைகளின் தொல்லையே முதன்மைக் காரணமாகவுள்ளது. கிராமங்களில் காடு படர்ந்து பாரிய அளவில் மரங்கள் காணப்படுகின்றது. அந்த மரங்களை தறித்து குடியமர வனஇலாகத் திணைகளம் தடைவிதிக்கின்றது. இதனையும் தாண்டி 450ஏக்கர் வயல்ப் பகுதியின் விடுவிக்கப்பட்ட பகுதியில் விவசாயம் மேற்கொள்ள முயன்றால் யானைகள் அட்காசம். தென்னிலங்கையில் வயல்கள் குடியிருப்புகளுக்குள் பிடிக்கப்படும் யானைகளை ஏற்றிவந்து கொரவப்பொத்தானைக் காட்டின் ஊடாக எமது பகுதிக் காட்டுகளுக்குள் இறக்கி விடுகின்றனர். தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்களைக் கவனத்தில் எடுக்கும் அதிகாரிகள் எம்மையோ அல்லது எமது வாழ்வாதாரத்தினையோ கவனத்தில் கொள்ளாது இந்த ஈனச் செயலைப் புரிகின்றனர். இதனால் இந்தப் பகுதியில் தற்போது 40க்கும் மேற்பட்ட யானைகள் உலாவுகின்றன. அத்தோடு வீதிகள் அனைத்தும் தாரைக் கண்டே பல தசாப்தங்கள் ஆகின்றன. நெடுங்கேணியில் இருந்து 20 கிலோமீற்றர் தொலைவில் உள்ள எமது பகுதிகளுக்குப் பயணிப்பதானால் சுமார் 2 மணிநேரம் செல்கின்றது. எமது சொந்தக் கிராமத்தில் குடியமர எமது கிராமத்துக்கான வீதிகளை அமைத்து வீதி விளக்குகளைப் பொருத்தி முக்கியமாக யானைகளில் இருந்து பாதுகாக்கும் வேலிகளையும் அமைத்து தர வேண்டும். இந்தக் கோரிக்கையை அதிக தடவைகள் விடுத்துள்ளோம். எதுவுமே நடக்கவில்லை. எஞ்சிய வாழ்க்கைக் காலத்தையும் ஏதிலி வாழ்விலேயே நடத்தும் அவலத்தில் வாழ்கின்றோம். 100 ஆண்டுகளுக்கும் மேல் வாழ்ந்த எமக்கு (யானை) வேலிகளை அமைத்துத் தருமாறு கோரிணால் 50 அல்லது 60 குடும்பத்துக்காக ஆயிரம் ஏக்கர் பிரதேசத்தைச் சுற்றி யானை வேலிகளை அமைக்க முடியாது என்கின்றனர் அரச அதிகாரிகள். கடந்த 7 ஆண்டுகளுக்குள் வந்து குடியேறிய பொபஸ்வேவா சிங்களக் குடியேற்றத்தைச் சுற்றி இரண்டு அடுக்கு யானைப் பாதுகாப்பு வேலிகள் அமைத்துக் கொடுத்த அரசு தமிழ் மக்களின் உயிர்களின் பாதுகாப்பு விடயத்தில் மட்டும் அசட்டை செய்கின்றது. எனவே இவற்றினை சீர் செய்து தமிழர் தாயகப்பகுதிகளைப் பாதுகாக்க முன்வரவேண்டும். அல்லது இந்தக் கிராமங்கள் பெரும்பான்மை இனத்தவரின் ஆக்கிரமிப்புக்குள் சென்றுவிடும். அவ்வாறு ஒரு நிலைமை ஏற்பட்டால் அதனையும் மாவட்ட அரசியல்வாதிகளே பொறுப்பேற்க வேண்டும் -என்றனர் (21,101)



# மீன்பிடிப் படகுகள், இயந்திரங்களை பதிவு செய்ய இறுதித் திகதி

யாழ்ப்பாணம் நவ.26
வடக்கு மாகாணத்தில் மீன்பிடிப் படகுகள் மற்றும் இயந்திரங்களைப் பதிவு செய்யாத மீனவர்கள் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் அந்தந்தப் பகுதிக்குரிய மீன்பிடிப் பரிசோதகர் மூலம் பதிவு செய்து கொள்ளுமாறு கடற்தொழில் நீரியல்வளத்துறையினர் அறிவித்துள்ளனர்.
இவ்வாறு பதிவுகளை மேற்கொள்ளாது உள்ள மீனவர்கள் எதிர்வரும் காலங்களில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட முடியாமல் போகும் என்பதுடன், இவர்களுக்கு எதிராக மாவட்ட நீரியல் வளத்துறை அதிகாரிகள் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல் பதிவு செய்வதற்கு அனுமதி பெற்றவர்கள், பதிவு இலக்கம் பெற்றவர்களும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் தங்களுடைய மீன்பிடிக் கலங்கள் மற்றும் இயந்திரங்களின் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பதிவுகள் எதுவும் மேற்கொள்ளாத மீனவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (21,8)

# கசிப்பு வைத்திருந்த ஐவருக்குத் தண்டம்

கசிப்பை உடமையில் வைத்திருந்த பெண்கள் உள்ளிட்ட ஐவருக்கு 30,000 ரூபா தண்டம் விதித்தது கிளிநொச்சி மாவட்ட நீதிவான் மன்று.
கிளிநொச்சி மாவட்ட மதுவரித் திணைக்களத்துக்கு உட்பட்ட பகுதியில் கசிப்பை உடமையில் வைத்திருந்தார்கள் எனக் கைது செய்யப்பட்ட இரு பெண்கள் உள்ளிட்ட நால்வர் நேற்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அதில் 1 போத்தல் கசிப்பை உடமையில் வைத்திருந்த பெண்ணுக்கு 10ஆயிரம் ரூபா தண்டமும் 360 மில்லி லீற்றர் கசிப்பை உடமையில் வைத்திருந்த பெண்ணுக்கு 5ஆயிரம் ரூபா தண்டமும் 180 மில்லி லீற்றர் கசிப்பை உடமையில் வைத்திருந்த இருவருக்குத் தலா 5 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. அதே போல் கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் கசிப்பை உடமையில் வைத்திருந்தார் எனக் கைது செய்யப்பட்ட நபருக்கு 5000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (எ, 6)

# சமண்டலை, மஞ்சள் கோண் பூச்செடியை உண்ணும் கால்நடைகள் இறக்கின்றன

*அவற்றை வளப்போர் கவனமாக இருக்க வேண்டும் என்றார் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர்*

"சமண்டல மரம் " மற்றும் மஞ்சள் பூ பூக்கும் "மஞ்சள் கோண் பூச்செடி"ஆகியவற்றின் இலைகள் தண்டுகளை உணவாக உட்கொள்ளும் கால்நடைகள் இறந்து விடுகின்றன .ஆடு மாடு வளர்போர் மற்றும் பண்ணையாளர்கள் இது தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும் என யாழ்ப்பாண மாவட்டக் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி வக்சலா அமிர்தலிங்கம் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது; அந்த இரண்டு மரங்களின் இலைகள், தண்டுகளை உணவாக உட்கொள்ளும் கால் நடைகள் இறந்து விடுகின்றன. ஆடு மாடு வளர்போர் மற்றும் பண்ணையாளர்கள் சமண்டலை மரம் மற்றும் மஞ்சள் கோண் பூச்செடி ஆகியவற்றின் இலை மற்றும், தண்டுகளை ஆடு மாடுகளுக்கு உணவாகப் பயன்படுத்துவதை முற்றாகத் தவிர்த்துக் கொள்ளுங்கள். இவற்றை கால்நடைகள் உணவாக உட்கொள்ளும் போது அவை செமிபாடு அடையாமை, மற்றும் நஞ்சுத் தன்மை அடைதல் ஆகிய நிலைமைகளினால் இறந்து விடுகின்றன. இதன்மூலம் ஆடு, மாடுகளை வளர்ப்போர் மற்றும் பண்ணையாளர்கள் பெரும் பொருளாதார இழைப்பை எதிர் கொள்கின்றனர். ஓங்கி உயர்ந்து வளரும் சமண்டலை மரங்கள் மழை மற்றும் காற்றுக்குச் சரிந்து விடும் என்ற அச்சம் காரணமாக வீட்டு உரிமையாளர்கள் அதை வெட்டும் அதே நேரத்தில் வீதி யோரங்கள், மின்னிணைப்புப் பாதையில் உள்ளவற்றை இலங்கை மின்சாரசபைப் பணியாளர்களும் வெட்டி வருகின்றனர்- என்றார் . (21,11)


L B FINANCE
வாகனத்துக்கு சொந்தக்காரர் அப்பாவா? மகனா?
அப்பா லொறி வாங்கியதில் இருந்து அதில் அதிக அக்கறை காட்டுவது மகன் தான். நினைத்த நேரத்தில் ஹோர்ன் அடிப்பதும், ஸ்டியரிங்கை திருப்புவதும், சுருக்கமாக சொன்னால் வாகனம் வீட்டில் இருக்கும்போது அவர் சாப்பிடுவதும் ட்ரைவிங் சீட்டில் இருந்துதான்.
வாகனம் இல்லாத பிரச்சினையை விட வாகனம் இருக்கின்ற போதுள்ள பிரச்சினைகள் அழகானவை. ஆகவேதான் LB லீசிங் உங்களது அனைத்து வாகனப் பிரச்சினைகளையும் தீர்த்து இவ்வாறான பிரச்சினைகளின் சந்தோஷத்தை அனுபவிக்க உதவுகிறது.
பிரச்சினைகளை release செய்யுங்கள், சந்தோஷத்தை lease செய்யுங்கள்
இப்பொழுதே அழையுங்கள் 0112 200 200 | www.lbfinance.com
L B FINANCE
LEASING
• கட்டமைக்கப்பட்ட, இலகுவான கட்டண முறைகள் • சிறந்த வாடிக்கையாளர் சேவை • நாடெங்கும் கிளைகள் • அனைத்து வகை வாகனங்களுக்கும் லீசிங்


HOLMES POLLARD & STOTT
அனைத்து சீட்டிழுப்புக்களிலும் அதிகளவு வெற்றியாளர்கள் – சுப்பர் பரிசுகளை வெல்லும் அதிக வாய்ப்புகள்
மக்களை அதிகளவில் வெற்றி பெறச்செய்யும் லொத்தர்
ராசி அதிர்ஷ்டம்
உங்களை வெற்றியாளராக்கும் தனயோகம்
வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்
அபிவிருத்தி லொத்தர் சபை

# ES Printers

## 2018ஆம் ஆண்டுக்கான கலண்டர்கள்
அனைத்து அளவுகளிலும்,
அனைத்து நிறுவனங்களுக்கும்.



மிகக் குறைந்த விலையில்
பஞ்சாங்க மாதக்
கலண்டர்கள் எம்மிடம்

- தின நாள்காட்டி (கலண்டர்)
- 'டெஸ்க் கலண்டர்'
- 'வோல் கலண்டர்'
- 'நம்பர் சீற் கலண்டர்'
- பஞ்சாங்கக் 'கலண்டர்'
- 'போட்டோக் கலண்டர்'

புதுவருடத்தை
மங்களகரமாக ஆரம்பிக்க
கலண்டர்களை
அன்பளிப்பாக வழங்குங்கள்

மக் பிரிண்ட்
( MUG )
350/=



அன்புக்குரியவர்களின்
அன்பளிப்பாக விரும்பிய
படம், வாழ்த்து பொறித்த
'மக்' வழங்கி வாழ்த்துங்கள்.
குறைந்த விலையில்
குறுகிய காலத்தில்
நேர்த்தியாக செய்து
தரப்படும்.

பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board), மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills), நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்

பிரதான அலுவலகம்:- 357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com

கிளை அலுவலகம்:- நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 492 7432 / 021 492 7472
esprintersjaffna@gmail.com



# SINGER

## உலகத் தரம் வாய்ந்த சலவை இயந்திரங்கள்



5 வருட உத்தரவாதத்துடன்

beko



- Fully Auto - Top Loader 11Kg
- விசேட விலைக்கழிவு 11,200
- மாற்று முறை விலைக்கழிவு 13,000

B-WTL11019G
Rs. 74,499/=

SINGER



- Fully Auto - Top Loader 7Kg
- விசேட விலைக்கழிவு 5,000
- மாற்று முறை விலைக்கழிவு 7,500
- வட்டி இன்றிய தவணைக் கொடுப்பனவு

இலவசம்

SWM-FA70R
Rs. 48,999/=



- Fully Auto - Front Loader 6Kg
- விசேட விலைக்கழிவு 14,000
- மாற்று முறை விலைக்கழிவு 16,000

B-WMY61283MB3
Rs. 111,099/=




- Semi Auto - 6Kg
- விசேட விலைக்கழிவு 2,500
- மாற்று முறை விலைக்கழிவு 5,000
- வட்டி இன்றிய தவணைக் கொடுப்பனவு

இலவசம்

SWM-SAR6
Rs. 27,799/=

SAMSUNG



- Fully Auto - Top Loader 7Kg
- விசேட விலைக்கழிவு 4,000
- மாற்று முறை விலைக்கழிவு 6,000
- வட்டி இன்றிய தவணைக் கொடுப்பனவு


SMGWA70H4000
Rs. 55,999/=



- Fully Auto - Front Loader 6Kg
- விசேட விலைக்கழிவு 5,000
- மாற்று முறை விலைக்கழிவு 8,000
- வட்டி இன்றிய தவணைக் கொடுப்பனவு

இலவசம்

SWM-FLG057R
Rs. 82,999/=



- Fully Auto - Front Loader 7Kg
- விசேட விலைக்கழிவு 11,000
- மாற்று முறை விலைக்கழிவு 20,000

SMGWA70J3283
Rs. 109,999/=

அருகில் உள்ள SINGER Plus காட்சியறையை நாடுங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 5408 | ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 221 6320 | மானிப்பாய் 021 225 5343 | சங்கானை 021 225 1100 | சுன்னாகம் 021 224 0555 |
| | | சாவகச்சேரி 021 227 0197 | கொடிகாமம் 077 785 8232 | கிளிநொச்சி 021 228 0199 |
| நெல்லியடி 021 226 4937 | பருத்தித்துறை 021 226 3411 | முல்லைத்தீவு 021 229 0180 | விற்பனைக்கு பிந்திய சேவைகளுக்கு:- 021 222 4577 | |

# வீதியை சீரமைக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

நுவரெலியா,நவ.26

நுவரெலியா அம்பகமுவ பகுதிக்குட்பட்ட மக்கள் வீதியைச் சீரமைத்துத் தருமாறு கோரி நேற்றுக் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நோர்வூட் அயரபி சந்தியிலிருந்து எலிபடை தோட்டப்பகுதிக்கு செல்லும் சுமார் 5 கிலோ மீற்றர் பிரதான வீதி பல வருடகாலமாக பாவனைக்குதவாமல் குன்றும் குழியுமாக காணப்படுவதால் இப்பிரதான வீதியின் ஊடாக பயணிக்கும் இத்தோட்ட பிரிவை சேர்ந்த 1000 குடும்பங்களைச் சார்ந்த மக்கள் பெரும் அசௌகரியத்திற்கு உள்ளாகியுள்ளதை வெளிக்கொணர்ந்து இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தை நடத்தினர்.

இதன்போது ஆர்ப்பாட்டக்காரர்கள் நிரந்தர வீதியே எமது கோரிக்கை, தெற்கிற்கு அதிவேகம், எமக்கு ஆமை வேகம், போன்ற கோசங்களை எழுப்பியதுடன் அவ்வாசகங்கள் தாங்கிய பதாதைகளையும் தாங்கியிருந்தனர்.

எனவே தோட்ட நிர்வாகமும் இது தொடர்பில் கவனத்திற் கொள்ளாததால் அரசியல்வாதிகள் இந்தத் தோட்டத்தின் நலனில் அக்கறை கொண்டு காலம் தாழ்த்தப் படாத நிலையில் வீதியை சீரமைத்துத் தரும்படி ஆர்ப்பாட்டகாரர்கள் கோரிக்கையை முன்வைத்தனர். (ந.ரி4)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், திருநெல்வேலி வடக்கில் அமைந்துள்ள வீட்டில் இரு அறைகளும் இணைந்த குளியல் அறையும், சமையலறையும், பொது வரவேற்பறையும் வாடகைக்கு உண்டு. சிறு குடும்பம் அரச உத்தியோகஸ்தர்கள் விரும்பத்தக்கது.

**077 113 8513/ 077 025 2341**

மணி விழா நாயகனை
மனம் மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



இன்று (26.11.2017) அகவை அறுபதில் கால் பதிக்கும்

**சொக்கலிங்கம் சிவசுதன்**

(வருமானப் பரிசோதகர் தரம் 11)

வினைத்திறன் சேவைப்பற்று வேண்டிய பணிகள் காத்து
முனைப்போடு சேவை செய்து முற்றிலும்
மேன்மை கண்டு அகவை அறுபதில் ஓய்வு பெறும்
தகைமை பெற்றார் பெருமையுறு இவர் பணிகள் புகழ்ந்து
நாங்கள் பேணுவது நம் கடமை நன்று நீடூழி வாழ்க !!!

நலன்புரி சங்கம் நகராட்சி மன்றம்,
சாவகச்சேரி.

## Yarl International College Of Skills Development

YICSD COLLEGE

மகளிருக்கான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன!

### அழகுக்கலை

*# Certificate in Self Makeup*
*# Diploma in Beauty Culture & Hairdressing*
*# Advance Dip in Beauty Culture & Hairdressing*

### கேக் ஐசிங்

*# Certificate in Cake Making & Decorating*
*# Diploma in Cake Making & Decorating*

### தையல்

*# Certificate in Tailoring*
*# Diploma in Tailoring*

சனி, ஞாயிறு பிரிவுகள் 03.12.2017 அன்று 10.00 மணிக்கு
கிழமை நாள் பிரிவுகள் 04.12.2017 அன்று 10.00 மணிக்கு

பயிற்சிகள் அனைத்தும் செய்முறை விளக்கத்தோடு இடம்பெற்று நிறைவில் அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

#அழகுக்கலை பயிற்சிகள் யாவும் Yarl Beauty உடன் இணைந்து வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

**இல.307 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**(கண்ணாதிட்டி சந்தி Rolex வெதுப்பகத்திற்கும் இடையில்)**

**தற்கால இலங்கையர்கள் நான்கில் மூன்று பங்கினர் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு நோயாக கெஸ்ட்ரைட்டிஸ் இனை குறிப்பிடலாம். அதாவது உடலில் அதிகளவு அமிலம் சுரப்பதனையே இவ்வாறு அழைக்கின்றனர். சிறியோர் முதல் பெரியோர் வரையில் அனைவருக்கும் எவ்வித வயதெல்லைகளும் கிடையாமல் உருவாகும் கெஸ்ட்ரைட்டிஸ் நோயிற்கு இதுவரையில் எவ்வித தீர்வுகளும் கிடைக்கவில்லை.**

**முதன் முறையாக இதற்கு நிரந்தர தீர்வாக இயற்கையான சிகிச்சை முறைகளை வழங்குகிறார் மொனராகலை சிரிகல, ராஜபுர மருந்தகத்தின் வைத்தியர் சுமித் ராஜபுரா அவர்கள்.**

• **ஆயுர்வேதத்தின்படி உடலில் அதிகளவில் அமிலம் சுரக்கப்படும் இந்நோய் இன்றைய சமூகத்தில் பெருகிருப்பதற்கு காரணம் என்ன?**

நம் நாட்டு சனத்தொகையில் நான்கில் மூன்று பங்கினருக்கு இந்நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ளது. இந்நோய் உச்சமடைவது சரியான முறையில் உணவு உட்கொள்ளாமை மற்றும் உரிய நேரத்தில் உணவு உட்கொள்ளாமை போன்ற காரணிகளாலேயாகும். காலை 8 மணி முதல் பகல் 1 மணிக்கு இடையிலும் இரவு 7 மணி முதல் 8 மணிக்கு இடையிலும் சாராசரியாக உணவு உட்கொள்ள வேண்டிய நேரங்களாகும். இந்நேரங்களில் உணவு உட்கொள்ளாமல் தவிர்க்கும் பட்சத்தில் கெஸ்ட்ரைட்டிஸ் அதிகமாகும். அதைப் போலவே பெரும்பாலானோர் போதியளவு நீர் பருகாமையும் ஒருவித காரணமாகும். மற்றும் நீண்ட நாட்களாக துரித உணவுகள் (Fast Foods) உட்கொள்ளலே பிரதான பிரச்சினையாகும். விசேடமாக அதிகளவு மசாலா கலந்த உணவுகள் மற்றும் இரசாயன சுவையூட்டிகள் கலந்த உணவுகளை உட்கொள்ளல், அதிகளவு எண்ணெய் மற்றும் இனிப்பு கலந்த உணவுகள், பானங்களை உட்கொள்ளல், முக்கியமாக மதுபானம் அருந்துதல் போன்ற காரணிகளினாலே இந்நோய் மேலும் மேலும் அதிகரித்துக் கொண்டுச்செல்ல வாய்ப்புகள் ஏற்படுகின்றது. இவ்வாறு பல்வேறுபட்ட தவறான பழக்கவழக்கங்களினாலே இந்நோய் நம் சமூகத்தில் விரைந்து பரவிக்கொண்டு வருகின்றது.

• **இந்நோய் ஒருவருக்கு எவ்வாறு ஏற்படும்?**

இந்நோய் பற்றி தெளிவாகக் கூறினால், பெரும்பாலானோரின் கவனயீனத்தினால் தான் பிரதானமாக இந்நோய் எமது உடலில் ஏற்படுகின்றது. உணவுகள், குடிநீர் என்பவற்றை உரிய நேரத்தில் எடுத்துக் கொள்ளாததன் விளைவே கெஸ்ட்ரைட்டிஸ் ஆகும். இருந்தாலும் அதனைக் குணப்படுத்த சில எளிய வழிமுறைகள் உண்டு. உரிய நேரத்தில் உணவு உட்கொள்ளாமை, தேவையானளவு குடிநீர் பருகாமை, நீண்ட காலமாக மேற்கத்திய மருந்துகளை உபயோகித்தல், மன உளைச்சல், நீண்ட நாட்களாக துரித உணவுகள் (Fast Foods) உட்கொள்ளல், மதுபானம் அருந்துதல், அதிகளவு மசாலா கலந்த உணவுகள் உட்கொள்ளல், அதிகளவு எண்ணெய் மற்றும் இனிப்பு கலந்த உணவுகள், பானங்களை உட்கொள்ளல் போன்ற காரணிகளினாலே இந்நோய் ஏற்படுகின்றது.

• **தற்கால சமூகத்திலுள்ள கெஸ்ட்ரைட்டிஸ் நோயாளர்கள் அதற்காக பல்வேறு சிகிச்சைகளை மேற்கொண்ட போதிலும் அது முற்றாக குணமடையாததன் காரணம் என்ன?**

பெரும்பாலான நோயாளர்கள் வழமையைப் போன்றும் இசைப்படி மருந்து, மாத்திரைகளைக் கொள்வனவு செய்து உபயோகிக்கின்றனரே தவிர முறையான சிகிச்சைகள் பற்றி தெரிந்து உபயோகிப்பது கிடையாது. நோயின் அறிகுறிகளுக்கு சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்கின்றனரே தவிர பிரதான நோய்க்கு சிகிச்சைகளைப் பெறுவதில்லை. அதாவது ஒருவர் வயிற்றெரிவின் காரணமாக ஏதாவதொரு மாத்திரையை எடுத்துக்கொள்வாரே தவிர அதிகளவு உடல் வெப்பமான தன்மை நீங்குவதற்கான நிரந்தர தீர்வினை எடுத்துக்கொள்வது கிடையாது. இது போன்ற தற்காலிக சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்வதனால் நோய்கள் முற்றாக குணமடைவது கிடையாது. ஆனால் உள்நாட்டு ஔடத மூலிகைகளைக் கொண்டு என்னால் தயாரிக்கப்பட்ட பஞ்சபல அமிர்த பானமானது சிறந்த மருத்துவ குணநலன்களை நிரம்பப்பெற்றுள்ளதுடன் ஆயிரக்கணக்கான



எவ்வித பக்கவிளைவுகளுமற்ற
பஞ்சபல அமிர்த பானமானது
கெஸ்ட்ரைட்டிஸ் நோய்க்கு
மிகவும் பொருத்தமானது

உள்நாட்டு மருத்துவத்தினால்
கெஸ்ட்ரைட்டிஸ் நோயினை
முற்றாக குணமாக்கும்
அபூர்வ மருத்துவர்

மொனராகலை சிரிகல ராஜபுர மருந்தகத்தின் ஆயுர்வேத வைத்தியர்

**சுமித் ராஜபுர அவர்கள்**

மக்களின் நோய்க்கு நிரந்தர தீர்வினைப் பெற்றுத்தந்துள்ளதுடன் அதனூடாக எனக்கு பாராட்டுக்கள் கிடைக்கும் பொழுது மனதிற்கு மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது.

• **உங்களுக்கு கெஸ்ட்ரைட்டிஸ் நோயாளர்கள் பெருந்தொகையினரை குணமாக்க முடிந்ததினாலே, அந்நோய் பற்றி எவ்வாறானதொரு அனுபவம் இருக்கின்றது?**

அதனை முற்றாக குணப்படுத்த முடியும். பெரும்பாலானோருக்கு இந்நோய் பற்றி போதிய அறிவு இல்லாததன் காரணத்தினால், நோயாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. ஒருசிலர் நோய் சிறிதளவு குணமாகிக் கொண்டு வரும்பொழுது சிகிச்சைகளை நிறுத்திவிடுகின்றனர். பிற்காலத்தில் அது குடலினுள் காயங்களை ஏற்படுத்தும் அளவுக்கு பரந்து செல்ல வாய்ப்பிருக்கின்றது.

முறையான உணவு பழக்கவழக்கங்களினாலும் பஞ்சபல அமிர்த பானத்தினை முறையாக எடுத்துக்கொள்வதாலும் இந்நோயினை முற்றிலும் குணமடைய வைக்கமுடியும்.

• **தற்பொழுது இந்நோயிற்காக வெவ்வேறு மருத்துவங்களை கையாண்ட போதிலும் அவை வெற்றியளிக்காததன் காரணம் என்ன?**

அது தொடர்பில் உரையாடுவதற்கு நான் விரும்பவில்லை. ஆனால் பஞ்சபல அமிர்த பானத்தினை பருகியதன் பின்னர் நோய் குணமடைகின்றதா? இல்லையா? என்பதை நீங்களே பார்த்துக்கொள்ள முடியும். முறையான உணவு பழக்கவழக்கங்களினாலும் பஞ்சபல அமிர்த பானத்தினை முறையாக எடுத்துக்கொள்வதாலும் இந்நோயினை முற்றிலும் குணமாக்க இயலும் என்பதற்கு நான் உத்தரவாதமளிக்கின்றேன்.

• **சிறந்த பிரதிபலனை அடைவதற்கு இம்மூலிகைப் பானத்தினை எவ்வளவு காலம் உபயோகப்படுத்த வேண்டும்?**

ஒரு மருந்து போத்தலைப் பருகி முடிக்கும் பொழுதே நோயின் அறிகுறிகள் குறைய ஆரம்பிக்கும். முறையாக எடுத்துக்கொள்வதன் மூலம் முற்றிலும் குணமாக்க முடியும். நோய் அறிகுறிகள் குறைந்தாலும் பஞ்சபல அமிர்த பானம் பருகுவதனை நிறுத்தாமல் தொடர்ந்து பல மாதகாலங்கள் எடுத்துக்கொள்வதனால் உடல்வெப்பம் குறைந்து குளிர்ச்சியடையும், நேரத்திற்கு பசியெடுக்கும், உடற்பலம் அதிகரிக்கும். எம்மில் சிலர் உள்நாட்டு மருத்துவங்களை கையாண்ட போதிலும், அதனால் ஏதாவது பக்கவிளைவுகள் ஏற்பட்டு விடுமோ என்கிற பயமும் அவர்களினுள் குடிகொண்டுள்ளது. பஞ்சபல அமிர்த பானத்தினால் அதுமாதிரி பக்கவிளைவுகள் ஏதுவுமே கிடையாது.

• **பஞ்சபல அமிர்த பானம் எடுத்துக்கொள்வதற்கு ஏதாவது வயதெல்லைகள் இருக்கின்றனவா?**

சகல வயதினராலும் இம்மூலிகைப் பானத்தினை பருக முடியும். வேறு நோய்களுக்கு சிகிச்சைகளைப் பெற்றுக்கொண்டிருக்கும் வேளையிலும் பஞ்சபல அமிர்த பானத்தினை எடுக்க முடியும். சீனியுள்ளடக்கப்படாத மூலிகைப் பானமாகையால் நீரிழிவு நோயுள்ளோரும் எவ்வித அச்சமுமின்றி பருகலாம். சிலர் பலவருட காலமாக பல்வேறு மருந்துகளை உட்கொண்டிருந்திருப்பர். ஆனால் அமிலம் அதிகளவில் சுரக்கும் இந்நோய்க்கு உரிய விதத்தில் சிகிச்சைகளைப் பெறும் வரையில் இந்நோயினைக் குணமாக்குவது கடினமான காரியமாகும். ஆகவே மக்கள் கெஸ்ட்ரைட்டிஸ் நோய் பற்றிய பயத்தினை அகற்றிக்கொள்வதற்காக இதுபோன்ற விழிப்புணர்வு மிக்க தகவல்களை நான் உங்களுக்கு கூறுகின்றேன். இம்மூலிகைபானது நூற்றுக்கு நூறு வீதம் ஆயுர்வேத திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. சிங்கள ஆயுர்வேத ஔடதங்களின் ஒன்றிணைப்பாலே இவ்வரிய மூலிகைப் பானம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இதுவொரு கசாயமாகும். அரச தொழில்சாலை தொழில்நுட்ப நிறுவனத்தினால் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டதாகும்.



• **பஞ்சபல அமிர்த பானத்தினை எவ்வாறு கொள்வனவு செய்வது?**

நாடு முழுதும் உள்ள அனைத்து ஆயுர்வேத மருந்தகங்களிலும் கார்கீல்ஸ், ஆர்பிக்கோ, லாப்ஸ் மற்றும் கீல்ஸ் போன்ற சுப்பர் மார்க்கட்டுகளிலும் உள்ள பாமசிகளில் கொள்வனவு செய்ய முடியும். நபரொருவருக்கு என்னை சந்தித்து சிகிச்சைகளைப் பெற விரும்பினால் 0115 727 519 அல்லது 0716 000 250 என்கிற தொலைபேசி இலக்கங்களினூடாக என்னைத் தொடர்பு கொள்ள முடியும். அதுமாத்திரமன்றி www.asthma-rajapura.com என்கிற இணையதள முகவரியிலும்,.youtube இலும், முகப்புத்தகத்தின் ஊடாக ராஜபுர பஞ்சபல அமிர்த பானம் தொடர்பான மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சிகிச்சைகள் பெற விரும்புபவர்கள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் பெலவத்தையிலும் வாரநாட்களில் மொனராகலை ராஜபுர மருந்தகத்திலும் நேரடியாக வந்து என்னிடம் சிகிச்சைப் பெற்றுக்கொள்ள முடியும்.



# சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

### விற்பனைக்கு
நல்ல நிலையிலுள்ள இங்கிலாந்து தயாரிப்பான கம்பிக் கலப்பை (Tiller) மற்றும் சட்டிக் கலப்பை (Disc Plough) என்பன விற்பனைக்குண்டு
**077 077 6182**

### விற்பனைக்கு
TOYOTA Prado(120) Land Cruiser, 2004, GX,Diesal, Manual உடன் விற்பனைக்கு
No Brokers
**077 974 7316**

### காணி விற்பனைக்கு
A9 றோட். கிளிநொச்சி பொது வைத்திய சாலைக்கு அண்மையாக 56ஆம் கட்டையில் 2 பரப்பளவு கொண்ட காணி (மாடிக்கட்டடம் அமைக்கக்கூடியது) விற்பனைக்கு உள்ளது.
**077 835 5965**

### விற்பனைக்குண்டு
வெள்ளவத்தை. காலி வீதிக்கு முன்பாக. 4½பரப்புக் (பேர்ச்சஸ்) கொண்ட பாவனையிலுள்ள 3 மாடிக் கட்டடம் கொண்ட விடுதி. 13 அறைகள். இரண்டு குளியலறையும் கொண்டது.
உடனடியாக விற்பனைக்குண்டு.
Only for Land value
( 5 - 6 லட்சம் வரை வருமானம் கிடைக்கும்)
**072 231 3305**

### தென்னம்பிள்ளை விற்பனைக்கு
எம்மிடம் நல்லினத் தென்னம் பிள்ளைகள் விற்பனைக்கு உண்டு.
**077 659 2044**

### Labrador குட்டிகள் விற்பனைக்கு
லப்றடோர் (Labrador) இன நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
**077 977 5348**

### காணி விற்பனைக்கு
பருத்தித்துறை, தம்பசிட்டி வீதியில் 5¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
**076 342 1246**

### விசேட மலிவு விற்பனை
நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருள்கள் மலிவு விலையில் விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கு விசேட கழிவு உண்டு.
**கவிதாஸ்** (சீமாட்டி புடைவை மாளிகையின் கீழ்)
127/12, யூபிலி பஜார், மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
**077 899 9917**

## தேவை

### வாடகைத் தாய் தேவை
30 வயதுக்குக் குறைவான கருணையுள்ளம் கொண்ட பெண் ஒருவர் IVF மூலம் செய்வதற்கு வாடகைத் தாயாகத் தேவை. சன்மானம் உண்டு. இரகசியம் பேணப்படும்.
**077 906 1406**

### வேலையாள் தேவை
வியாபார நிறுவனம் ஒன்றுக்கு O/L படித்த பெண் வேலையாள் தேவை.
**076 551 8863**

### வேலையாள்கள் தேவை
பருத்தித்துறையில் இயங்கும் சைவ உணவகத்திற்கு சமையலாளர், சமையல் உதவியாளர், ரொட்டி தயாரிப்பாளர் உடன் தேவை.
**076 380 5441**

### Spoken English
Motivation, self confidence, goal setting for success for graduates, under graduates, teachers, group class of six once a week Rs. 500 per lesson.
E-mail - kirtionebiz@gmail.com
or 075 916 4227 and leave message.

### வேலையாள் தேவை
போட்டோ கொப்பி தெரிந்த அல்லது பழக விரும்பும் பெண்பிள்ளை தேவை.
(யாழ் மாநகரசபைக்கு உட்பட்டவர்கள்)
**077 223 1134/ 077 177 1729**

### பணிப்பெண் தேவை
கொக்குவில் வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய 45 வயதுக்கு மேற்பட்ட பணிப்பெண் தேவை.
நாள் தோறும் வந்து போவோரும் தொடர்பு கொள்ளலாம்.
**077 187 7754**

### மணமகள் தேவை
37 வயதுடைய. கிறிஸ்தவ (றோ.க) அரச கட்டட ஒப்பந்தக்காரராக வேலை செய்யும் மணமகனுக்குப் படித்த அழகிய. நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் எதிர்பார்க்கப்படுகின்றார். சாதி. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.
**077 722 7016, 021 224 0796**

### வேலை வாய்ப்புக்கள்
**01) வரவேற்பாளர்கள்**
(A/L சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்கலாம்)
**02) நிர்வாக உதவியாளர்**
(ஆங்கிலம் சரளமாகப் பேசக் கூடியவர்கள். பட்டதாரிகள் விரும்பத்தக்கது)
தகைமையுடையவர்கள் சுயவிவரக் கோவை யினை மின்னஞ்சல் மூலம் அனுப்பி வைக்கவும்.
winstarve@gmail.com
021 300 4641

## ஏனையவை

### வீடு வாடகைக்கு
அச்சுவேலி தியேட்டர் ஒழுங்கையில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட வீடு ஒன்று வாடகைக்கு விடப்படும். றோட்டில் இருந்து இரண்டாவது வீடு. வாகனத் தரிப்பிடத்திற்கு போதுமான இடம் உண்டு. நிறுவனங்களும் விரும்பப்படும்.
**077 346 4756**

### வாடகைக்குண்டு
யாழ்ப்பாணத்தில் வீடு வாடகைக்கு நாள். கிழமை. மாத வடகைக்கு. விவசாய காணி குத்தகைக்கு
**076 435 0881**

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

**மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்**


- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### Canada
**பத்திரிகைகளில் உங்களது**
மணமகன்/மணமகள் திருமண விளம்பரங்கள், தொடர்மாடி மனை, காணிகள் மற்றும் ஏனைய விளம்பரங்களுக்கும்....
**0777 555 026**
No. 4-IBC Road, Wellawatte. E-flexvijay@sltnet.lk

### MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
**கார்கிள்ஸ் ஸ்குவெயர்**
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




விசாரணை ☎ 021- 2227712
facebook MajesticCineplexSL
www.ceylontheatres.lk

### காணி விற்பனைக்கு
கைதடியில் வடமாகாண சபைக்கு எதிராக A-9 (கண்டி) வீதியில் இருந்து இரண்டாவது காணித்துண்டு 12 அடி அகல பாதையுடன் 14 பரப்பு விற்பனைக்குண்டு.
**077 470 7965, 076 333 1365**

### வீடு வாடகைக்கு
91/1. கல்லூரி வீதி நீராவியடி யாழ்ப்பாணத்தில் 3 அறைகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
**077 653 9345**

### வீடு வாடகைக்கு உண்டு
நல்லூர் மணல்தரை சிவன் புதுவீதி என்னும் முகவரியில் புதிய வீடு வாடகைக்கு உண்டு.
**077 104 2125**

### வாடகைக்கு
நல்லூர் கோயிலுக்கு அருகில் ஒரு அறை சமையலறையுடன் அனெக்ஸ் வீடு சிறிய குடும்பத்திற்கு வாடகைக்கு உண்டு.
**077 719 1432**

### வாடகைக்கு
யாழ் திருநெல்வேலிக்கு அருகில் புதிய பங்களாவின் இணைந்த குளியல் அறைகளுடன் கூடிய அறைகள் வாடகைக்கு உண்டு.
**077 810 5102/ 077 301 3659**

### வீடு வாடகைக்கு தேவை
ஓய்வு பெற்ற வங்கி உத்தியோகத்தர் ஒருவருக்கு யாழ்ப்பாணம். கொக்குவில். கோண்டாவில். மானிப்பாய். உடுவில். தெல்லிப்பழை ஆகிய இடங்களில் சுத்தமான வீடு அல்லது அனெக்ஸ் வீடு வாடகைக்குத் தேவை. 10.000/= வாடகை வழங்கவும் முடியும்.
**077 865 1131**

### Luxury Apartment வாடகைக்கு
நாள், கிழமை, மாத அடிப்படையில்
**கொழும்பு 3, 4, 6, மற்றும் தெஹிவளையில்**



0773 540 632 / 0774 440 586
0776 332 580 / 0779 919 388
011 2363991

### வான் விற்பனைக்கு
மாருதி சுசுக்கி வான் (OMINI) விற்பனைக் கு உண்டு.
077 706 6487

### வேலை வாய்ப்பு
கொக்குவில் சந்தியில் இயங்கும் CD விற்பனை நிலையத்துக்கு ஆண்/பெண் விற்பனையாளர் தேவை.
**077 433 7343**

### விற்பனைக்கு
Discover மோட்டார் சைக்கிள். Lumala (புதிய) பெண்களுக்கான சைக்கிள். சிங்கர் 3500watts Audio Set (DVD), சாப்பாட்டு கண்ணாடி மேசை. உடற்பயிற்சி இயந்திரம் (Orbitern Elite) விற்பனைக்குண்டு.
**072 064 6061**

### வீடு விற்பனைக்கு
நவாலி கலையரசி வீதியில் 786 பிரதான வீதியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் இரண்டு பரப்புக் காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு.
**077 795 0165**

### மலிவு விற்பனை (Stock Clearance Sale)
ஹாட்வெயார் சம்பந்தமான பொருள்கள் (Tools . ஸ்குறூரைவர். குறடு. சுத்தியல். ரில்பிட் மற்றும் பல) மலிவு விற்பனைக்கு. 235.K.K.S.வீதியில் உண்டு.
புதிதாக வியாபாரம் ஆரம்பிப்பவர்களுக்கும். விஸ்தரிக்க விரும்புபவர்களுக்கும் விசேட அதி உயர் விலைக்கழிவு கொடுக்கப்படும்.
**நேரில் வந்து பார்ப்பதற்கும் தொடர்புகளுக்கும்:**
**077 741 7525**
31.12.2017 வரை மட்டுமே.
முதல் வருபவர்களுக்கு முன்னுரிமை.

### வாடகைக்கு
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வரும் யாழ்தேவி A/C ரயில் தரித்து நிற்கும் வெள்ளவத்தை ரயில் நிலையத்துக்கு முன்பாக இல.8 புகையிரத வீதி. வெள்ளவத்தையில் அமைந்துள்ள லொட்ஜில் தனி அறைகள். இணைந்த குளியலறையுடன் கூடிய அறைகள் நாள், கிழமை. மாத வாடகைக்குண்டு.
**011 250 4281, 071 299 1256**



# பரிசளிப்பு விழா

கிளிநொச்சி, நவ. 26

கிளிநொச்சி வேம்பொடுகேணி தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா கடந்த வாரம் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது.

பாடசாலை மண்டபத்தில் காலை 10 மணிக்கு ஆரம்பமாகிய நிகழ்வில் கோட்டக் கல்வி பணிப்பாளர் ஐயாத்துரை குகானந்தராசா, பளை மத்திய கல்லூரியின் அதிபர் எஸ். பாலகிஸ்ணன், ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்வின்போது பாடசாலைகள் மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்களுக்கும் பாடசாலையில் இருந்து ஜி.சி.ஈ சாதாரணப் பரீட்சையில் சித்தியடைந்து உயர்தரத்துக்குத் தெரிவான மாணவர்களுக்கும், பாடசாலையில் ஆரம்பக் கல்வியை முடித்து அயற் பாடசாலையில் உயர்தரம் கற்றுப் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். (21,6)

## உடனடி வேலைவாய்ப்பு

கட்டட நிர்மாணத் துறையில் ஈடுபட்டிருக்கும் எமது நிறுவனத்தின் குழுவோடு இணைந்து பணிபுரிவதற்கு

✓ தொழில்நுட்ப உத்தியோகத்தர்
(NDT,HNDE,NCT (Civil) or Equivalent)

தேவை. ஆர்வமுள்ளவர்கள் 7 நாள்களுக்குள் விண்ணப்பிக்கவும்

**Sarukaya Construction (Pvt)Ltd**
Address - No.9, Nanthavil Lane, Thavady.
Email: vacancynsc@gamil.com




## ST.ANTONY'S COMPUTER

187, K.K.S Road, Jaffna. 021 222 4865 / 075 069 8608



WE CAN REPAIR
NO POWER
NO DISPLAY
NO CHARGING
NO BOOTING

**COMPUTER REPAIR**
PROFESSIONAL SERVICES FOR HOME AND OFFICE

கணனி திருத்தம்

கணனி மற்றும் கணனி உதிரிப் பாகங்கள் விற்பனை

கண்காணிப்பு கமரா பொருத்துதல்



கணனிகள் யாவும் உடனுக்குடன் திருத்திக்கொடுக்கப்படும்.

## வெள்ளிவிழா ஒன்றுகூடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 1992 ஆம் ஆண்டு பதிவினை மேற்கொண்டு முகாமைத்துவ. வணிக மற்றும் கலை பிரிவுகளில் (91/BAD, 91/Com,91/Arts) கல்வி கற்று வெளியேறியவர்களிற்கான மீளிணைவு (Rejoining) ஒன்றுகூடல் நிகழ்வு ஒன்றினை எதிர்வரும் 16.12.2017 சனிக்கிழமை அன்று யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த ஒன்றுகூடலில் கலந்து சிறப்பிக்குமாறு மேற்குறித்த பிரிவில் கல்விகற்றவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**குறிப்பு: 30.11.2017 இற்கு முன்னர் தங்களது பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

மேலதிக விவரங்களுக்கும் தங்களது பதிவுகளுக்கும் தொடர்பு கொள்ள:

கண்ணன் : 077 730 6162
ரவிகரன் : 077 704 6968
ஜெனின்ஸ் : 077 698 2900

## STUDY IN CANADA

2018 May / June கனடா செல்ல விரும்புபவர்களுக்கான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

- ✓ Business Management
- ✓ Computer Science
- ✓ IT
- ✓ NURSING
- ✓ Bio Science

- நீங்கள் விரும்பும் பாடநெறித் தேர்வு
- ஆகக்குறைந்த தகைமை O/L அனைத்துப் பாடங்களிலும் சித்தி
- IELTS இல் சிறந்த புள்ளி பெற விசேட பயிற்சிகள்
- 100% விசா பெற்றுக் கொள்ள சிறந்த ஆலோசனைகள்
- எங்குமில்லாத மிகக் குறைந்த கட்டணங்கள்.
- வயதெல்லை 16 - 25

விண்ணப்ப முடிவு திகதி:- 30.11.2017

**WIN STAR VISA CONSULTANTS**
106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி.
www.winstarjaffna.com

## திருமண சேவை

www.thaalee.com என்பது website இல் இயங்கும் ஒரு திருமண சேவை. இந்த website இல் பல்லாயிரக்கணக்கான Unmarried, Divorce. Widow, nullified போன்றவர்களுடைய படங்கள். ஜாதகங்கள் மற்றும் முழுமையான விவரங்கள் உண்டு. இதில் ஆண்கள். பெண்கள். உள்நாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டவர்களும் உண்டு. ஆகவே திருமணம் செய்ய விரும்புபவர்கள் எமது www.thaalee.com என்பதைப் பார்த்து நீங்கள் விரும்புபவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். மேலும் நீங்களாகவே அதில் பதிவு செய்து கொள்ளவும் முடியும். நீங்கள் எங்கும் போகாமல் வீட்டில் இருந்து கொண்டு திருமணத்தை முடித்துக் கொள்ள முடியும்.

விவரங்களுக்கு - S.Sarma, Phone - 077 539 3728, Viber - 077 829 7351

## நீங்கள் அழகாக தோன்ற வேண்டுமா?

• முகக்கருமையா? • பருக்களா? • கண்கருவளையாமா? • உதட்டு கருமையா? • கழுத்து கை. கால் முதுகு கருமையா?

**கவலை வேண்டாம்! எம்மிடம் கேர்வல் கிறீம், கேர்வல் குறிசை** பெற்று அழகிய நிறத்தைப் பெறுங்கள்.

**மேலும்**

- உடன் கருமை, பரு நீக்கும் பேசியல்
- முக மினுமினுப்பை தரும் கோல்ட் பேசியல் செய்து ஒரே தடவையில் அற்புதமாற்றம் பெற்று மற்றும் உடல் எடை கூட்ட/குறைக்க குளிசை. பால்மா
- தலைமுடி வளரச்செய்யும். புதிதாக முடி முளைக்க புழுவெட்டு. பேன் நீக்கும் ஆயுள்வேத எண்ணை
- காய்கள். தேவையற்ற ரோமம் அகற்றும் கீறீம் என்பன பெற்று அழகிய தோற்றத்தையும் நிறத்தையும் பெற்று பயனடையுங்கள்.

பதிவு இல.: 16168
077 314 9386
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

## குறுகிய, காலத்தில் நீங்களும் ஒரு பட்டதாரியாகலாம்

**BA, BBA, BCOM, BSC, MA, MSC, MBA, ETC**

உங்களின் கடந்தகால தகைமைகளையும், அனுபவங்களையும் வைத்து RPL எனப்படும் சர்வதேச முறையினால் பட்டங்கள் பெற்றுத்தரப்படும்.

**Can be Used for :**

| | |
|---|---|
| Government / Private Jobs | Promotions |
| Migrations | Higher Studies, etc |

(UGC & Foreign Ministry Approved)

**Amazon College**
294, 2nd Floor, Galle Road,
Peoples Bank Building, Bambalapitiya,
directdegree2017@gmail.com
www.amazoncollege.lk

Hotline : 077 567 0202




**We need someone with all the Skills to deliver outstanding IT Support in Kilinochchi.**

The first IT company in Sri Lanka to earn ISO 20000 certification, Eureka Technology Partners delivers world-class managed IT services to clients around the globe.

### IT SUPPORT SPECIALIST

**An ITIL & ISO 20000 Environment • Multiple Platforms • A World Class IT Company**

We are currently in the process of recruiting highly motivated, IT savvy individuals for our Continuous Service and Technical Improvement teams. Should you join us, you'll have the opportunity to shadow our experienced professionals and learn on the job as well as through our in-house technical trainings. You'll also be exposed to world-class remote management tools.

**Qualifications & Experience:**

- Bachelor's Degree in IT
- Level 01 Remote/Onsite Technical Support for Clients
- Analyzing and Resolving End User Workstation Problems including Network Printers
- Provide End User Training where required
- Windows Desktop, Remote/On desk Maintenance
- Maintenance of Vendor Contracts and SLAs of Devices & Service's
- Exposure to a Desktop/Server Environment
- Exposure to Cloud & Virtualization technologies
- Basic knowledge of Linux and Windows Server technologies
- Good Decision-making, Communication, Documentation and English Writing Skills

*If you think you have what it takes and would like to join our team, please logon to http://careers.eureka.lk and upload your CV without delay.*

*Please call 077 7568282 for more Details / Interview*

EUREKA TECHNOLOGY PARTNERS
Eureka Technology Partners (Pvt.) Ltd
3rd Floor, 321 Galle Road, Colombo 03, Sri Lanka
T : +94 11 2564277 | F : +94 11 2564278 | W : www.eurekamsp.com

**உங்கள் வாகனத்தின் நடமாட்டங்களை தொலைபேசி ஊடாக அவதானியுங்கள். 22 மேலதிக வசதிகள் உண்டு.** 077 888 7051

**உங்கள் வீட்டு மின் கட்டணம் 3000.00 இலும் அதிகமா? இலகுவாக 250.00 ஆக குறையுங்கள். சூரிய சக்தியின் ஆற்றலை அனுபவியுங்கள்.** 077 888 7051

## ஹெரோயினுடன் ஒருவர் கைது



களனி, பட்டியவல சந்தியில் ஹெரோயின் வர்த்தகத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் சந்தேகநபர் ஒருவரை பொலிஸார் கைது செய்தனர்.
பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போது இவர் கைதுசெய்யப்பட்டார்.
சந்தேகநபர் முச்சக்கர வண்டி ஒன்றில் பயணித்துக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.
சந்தேகநபரிடம் இருந்து 105 கிராம் ஹெரோயின் ரக போதைப் பொருளும் 3 லட்சத்து 63 ஆயிரத்து900 ரூபா பணமும் மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

## இதயம் மறவாத
## 12ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி பாக்கியம் இராசரத்தினம்

திதி: பூர்வபக்க அட்டமி
(26.11.2017 ஞாயிற்றுக்கிழமை)



கார்த்திகை திங்கள் மலரும்
10 ஆம் நாள் ஞாயிறு
பூரவபட்ச அட்டமித் திதியில்
அன்னையின் திருப்பாத கமலங்களில்
மோட்ச தீபம் ஏற்றி
பிரார்த்தனை செய்கின்றோம்

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!
என்றும் உங்கள் நினைவுடன் வாழும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
" மலர் வாசம் "
மகாஜனக் கல்லூரி வீதி, தெல்லிப்பழை.

மலர்வு 07.08.1932 — உதிர்வு 08.12.2005

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 27.10.2017 வெள்ளிக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்
**முத்தன் தம்பித்துரை**
அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்கவும்

காந்திஜி அருகாமை, உரும்பிராய் கிழக்கு. — குடும்பத்தினர்.

## நண்பனின் மரணம் நட்பின் மரணம் அல்ல...

பாலசிங்கம் பிரசன்னா



பாலசிங்க (ம்) பிரசன்னா !
வாழ வந்த எம் நண்பா !!
நட்பின் உருவாய் வாழ்ந்தவனே
நட்பின் ஆழத்தை உணர்ந்தவனே !
அதிராத பேச்சினால்
அத்தனை உள்ளங்களிலும் நிறைந்தவனே
அதிர்ந்து தான் போனோமே நாம் இன்று..
நெடிய வேதனை
நெஞ்சை வாட்டுகிறது நண்பா....
நீ ஒருமுறை தான் மரணித்தாய் நண்பா.....
இனி உன் நினைவுகள் வரும் நேரங்களில்...
நாம் ஒவ்வொரு முறையும் மரணிப்போமே..
அழத்தெரியாதவன் கூட அழுததும் இன்று தான்
அதில் நானும் ஒன்று தான்
உன் உடலுக்கு மரணம் வந்தது உண்மை தான்...
உன் பெயருக்கு என்றுமே மரணமில்லை
எங்கள் நினைவிருக்கும் வரை
நண்பனின் மரணம் நட்பின் மரணம் அல்ல....

நண்பனின் பிரிவால் துயருறும்
**பாடசாலை நண்பர்கள்.**
**சென்ஜோன்ஸ் கல்லூரி (SJC 98)**

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04.01.1969



மறைவு 26.11.2013

**அமரர் தானியல் றெக்ஸ்சியன் (றஜீவ்)**

எமக்கும் நீதி வேண்டும்

தீவகத்தின் ஞான ஒளியே
எமது மண் பெற்றெடுத்த
மாவீரனே - நீ சென்ற
பாதை யெல்லாம் புல்லும்
மலரும் கண்ணீர் வடிக்கின்றன

நெடுந்தீவில் உன் குரல்
கேட்ட மக்கள் இன்னும்
அழு குரல் ஓயவில்லை
ரஜீவ் என்று பேர் சொன்ன
மகிழ்ச்சி வெள்ளத்தில்

மிதந்த மக்கள் இன்னும்
கண்ணீரில் இருந்து மீளவில்லை

ஆண்டுகள் நான்கு என்ன
40 ஆண்டுகளானாலும் எம் துயர்
அண்ணா அண்ணா
என்று கேட்டுக் கொண்டே
இருக்குது அண்ணா
உன்னைக் கொன்ற கயவர்களுக்கு
நீதி தேவதையே உன் நீதியை வழங்கு

உன் நினைவில்
**றெஜினா குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி மகேந்திரன்



நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வவுனியா மகாரம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மகேந்திரன் 24.11.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி மற்றும் கேசவன் தில்லைவனம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கணேசு - கண்மணி தம்பதிகளின் அன்பு மருமகனும், ரோகினியின் ஆருயிர்க் கணவரும், சந்திரிக்கா, யசோதரன், மோகனா, கேதீஸ், துவாரகா ஆகியோரின் அன்புத் தந்தையும்,பரமேஸ்வரன், கிருஷ்ணவேணி, மகேந்திரன், ரஜனி, இராசகுமார் ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்ற தியாகராசா மற்றும் மகேஸ்வரி, ரட்ணசிங்கம், சரோஜினிதேவி, தேவராணி, சுகுமார், சிவஞானம், மகாதேவன், சுசீலா, பாஸ்கரன், வாசுகி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்ற தில்லையம்பலம் மற்றும் கனகம்மா, காலஞ்சென்றவர்களான தில்லைநடேசு, புவனேஸ்வரி மற்றும் மகேந்திரன், இராதாகிருஸ்ணன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரியந்தன், மேனுஜா, துஷாந், பவித்திரா, ஹரிஷாந், யதுஷன், அபினேஷ், வர்ஷன், றுபிஷன், ஹன்சிகா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.11.2017) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் வவுனியா மகாரம்பைக்குளத்தில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூந்தோட்டம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

A.P.R.கொமினிகேஷன் ஒழுங்கை,
மகாரம்பைக்குளம், வவுனியா.

தகவல்:
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 24 . 10 . 1924



இறைவன் அடியில் 28 . 10 . 2017

### அமரர் அப்பையா இராசமணி

எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு எமக்கு பல்வேறு வழிகளில் உதவியும் ஆறுதலும் அளித்த அனைவருக்கும் நேர்முகத்திலும், தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் வெளியிட்டோருக்கும், தொலைதூரங்களில் இருந்து அன்னாரைத் தேடி வந்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், போசனமளித்து உதவியோருக்கும் மற்றும் சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கியவர்களுக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 31 ஆம் நாள் நினைவு தினமான இன்று (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

இருபாலைச்சந்தி,
கோப்பாய் தெற்கு.

முருகேசு குடும்பம்
(முருகேசு களஞ்சியம்)

## மாவீரர் தினம் தொடர்பிலான கலந்துரையாடல்

திருகோணமலை, நவ.26
தேசிய மாவீரர் தினம் எதிர்வரும் கார்த்திகை 27 ஆம் திகதி வடக்கு- கிழக்கு மாகாணங்களில் உள்ள அனைத்து துயிலுமில்லங்களிலும் மிக உணர்வுபூர்வமாக கடைப்பிடிக்க உள்ளனர். இது தொடர்பான தெளிவூட்டல் மாநாடு நேற்று திருமலையில் வாடி வீட்டில் நடைபெற்றது.
மாநாடானது மாவீரர் நாள் செயற்பாடுகளுக்கான ஜனநாயகத் தமிழர் அமைப்பின் ஒருங்கிணைப்பின் ஏற்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்றது.
மாவீரர் நாளுக்கான ஏற்பாடுகள் மற்றும் துயிலும் இல்லத்தில் நடைபெற்ற சிரமதானப் பணிகள் அதன்போது நடைபெற்ற சவால்கள் தொடர்பாகவும் கார்த்திகை 27 ஆம் திகதி நடைபெற ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நினைவேந்தல் நிகழ்வுக்கான ஒழுங்கமைப்புக்கள் மற்றும் போக்குவரத்து அமைப்புக்கள் சம்மந்தமாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ற-ரி5)

## மணல் லொறி விபத்து இருவர் படுகாயம்



ஹற்றன், நவ.26
நானுஓயா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குறுக்கு வீதியின் வளைவுப் பகுதியில் நேற்று லொறி ஒன்று வீதியை விட்டு விலகி குடைசாய்ந்தது.
மஹியங்கனை பகுதியிலிருந்து ஹற்றன் நோக்கி மணல் ஏற்றிச் சென்ற லொறியே இவ்வாறு விபத்துக்குள்ளானது. விபத்தில் லொறி சேதமடைந்ததுடன் லொறிச் சாரதியும், உதவியாளரும் காயங்களுக்குள்ளானர் எனத் தெரிவிக்கப்பட்டது.
லொறியின் வேகத்தை கட்டுபடுத்த முடியாமலும், தடுப்புக்கட்டை செயலிழந்ததாலும் இந்த விபத்து ஏற்பட்டது எனப் பொலிஸார் தெரிவித்தனர்.
இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நானுஓயா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(ற-ரி5)


சொவ்ட்லொஜிக் வழங்கும் உலகப் புகழ்பெற்ற
நுகர்வோர் இலத்திரனியல் சாதனங்கள்
softlogic MAX
10 நாட்கள்
மாபெரும் சேல்
70% வரை
விலைக்கழிவு
SAMSUNG LED TV | UA32FH4003RMSG
• Triple Protection (lightning, humidity and power surges)
• Hyper Real Engine | • Connect Share Movie
HD Ready
ரூ.53,999/-
ரூ.27,000/-
ரூ.27,000/- தள்ளுபடி
SAMSUNG LED TV | UA32K51000ARLSG
• Ultra Pix | • Integrated Sound Station
• Story Replay | • Wide Color Enhancer (Plus)
Full HD
ரூ.59,999/-
ரூ.35,999/-
ரூ.24,000/- தள்ளுபடி
Panasonic 4K UHD TV | TH-40DX650
4K ULTRA HD TV
Web Browser
ரூ.189,999/-
ரூ.123,499/-
ரூ.66,500/- தள்ளுபடி
DELL
Inspiron 3552
Intel® Celeron® N3060 Processor
•15.6-inch HD Truelife LED-Backlit Display
•4GB RAM | •500GB HDD
1 வருட உத்தரவாதம்
ரூ.53,899/-
ரூ.48,509/-
ரூ.5,390/- தள்ளுபடி
SAMSUNG
SM-C900F | Galaxy C9 Pro
• 6.0" Super AMOLED Touchscreen
• 6 GB RAM | 64 GB Storage | • 16 MP Camera
1 வருட உத்தரவாதம்
ரூ.84,650/-
ரூ.59,255/-
ரூ.25,395/- தள்ளுபடி
SAMSUNG
2 கதவு
குளிரூட்டிகள்
RT30K3322S8/IG
• Convertible Freezer
• Freezer Cool Pack (12 Hrs)
• Dual Fan Technology
272
DIGITAL INVERTER
10 WARRANTY
ரூ.105,999/-
ரூ.84,799/-
ரூ.21,200/- தள்ளுபடி
Panasonic
Top Loading
சலவை இயந்திரம்
NA-F70B5HRG
• Cassette Lint Filter | • Foam Wash
• Digital Display
7 kg
ரூ.66,999/-
ரூ.50,249/-
ரூ.16,750/- தள்ளுபடி
VEGO ஏயார் கூலர்
AIRATK20 | லீட்டர் 20
• Motorized Louvers
• Pump Protection Technology
• Works on Inverter
• Power Consumption 95 Watts
ரூ.15,999/-
ரூ.4,800/-
ரூ.11,199/- தள்ளுபடி
Panasonic
எலீட் இன்வர்டர் எயார் கண்டிஷனர் - Sky Series
CS / CU-VS18SKH — 18,000 BTU
SKYWING INVERTER XTRA QUIET 18dB nanoe-G DUST SENSOR
ரூ.279,999/-
ரூ.181,999/-
ரூ.98,000/- தள்ளுபடி
PHILIPS
மிக்சர் கிரய்ண்டர்
HL1606
• Auto Shut-off | • Vacuum Suction | • 3 Speed
ரூ.12,999/-
ரூ.5,200/-
ரூ.7,799/- தள்ளுபடி
அனைத்து முன்னணி வங்கிகளிடமிருந்தும் 0% வட்டி திட்டம்
விசேட சேவை
அழைப்பு 011 5 541 900
உடனடி அழைப்பு
011 5 705 705
உத்தரவாதம்
சகிதம்
WESTERN UNION WU
moving money for better
softlogic
சொவ்ட்லொஜிக் மெக்ஸ் ஸ்டோர் - யாழ்ப்பாணம் - 021 5678989
சொவ்ட்லொஜிக் ஸ்டோர் - யாழ்ப்பாணம் - 021 5671108

# கையா? வெற்றிலையா? மதில்மேல் பூனையாக சு.க.

## டிசெ.5 க்குப் பிறகே இறுதி முடிவு

கொழும்பு, நவ. 26

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டணி அமைத்து கைச் சின்னத்தில் களமிறங்குவதா அல்லது வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடுவதா என்பது தொடர்பில் எதிர்வரும் 5ஆம் திகதிக்குப் பின்னரே சிறிலங்கா சுதந்திரக் கட்சி இறுதி முடிவெடுக்கவுள்ளது.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தலைமையில் கடந்த புதன்கிழமை இரவு நடைபெற்ற மையச் செயற்குழுக் கூட்டத்தின் போதே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியானது கடந்த தேர்தல்களின்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியாக வெற்றிலைச் சின்னத்திலேயே தேர்தலை எதிர்கொண்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, சுதந்திரக் கட்சியின் கைசின்னத்திலேயே போட்டியிடும் என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன ஆரம்பத்தில் அறிவித்திருந்தார். சுதந்திரக் கட்சியின் இந்த முடிவுக்குப் பங்காளிக் கட்சிகள் சில கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தன.

வெற்றிலைச் சின்னத்தில் களமிறங்கினால்தான் கூட்டணி சாத்தியமாகும் என்றும் சுட்டிக் காட்டியிருந்தன.

அத்துடன், மகிந்த அணியை இணைத்துக்கொண்டு களமிறங்குவதாக இருந்தாலும் பொதுச்சின்னமொன்று அவசியம் எனச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. இவ்வாறானதொரு பின்புலத்திலேயே எந்தச் சின்னத்தில் போட்டியிடுவது என்பது பற்றி ஆராயச் சுதந்திரக் கட்சி கூடவுள்ளது. (5)

உங்களுக்கும், உங்கள் வியாபாரத்திற்கும் உங்கள் சேவைக்கும் ஒரு உதவிக்கை!

உங்கள் தொடர்பு இலக்கத்தினை எங்களுக்கு கொடுங்கள்

உங்கள் வியாபாரத்திற்கு வாடிக்கையாளர்களை நாம் பெற்றுத்தருவோம்

உங்கள் வியாபாரத்தினை மேம்படுத்த SLT RAINBOW PAGES உடன் இலவசமாக பதிவு செய்து கொள்ளவும்

Sri Lanka Telecom



இப்புதிய சேவையின் மூலம் நாம் பலதரப்பட்ட வாடிக்கையாளர்களை நாம் உங்களுடன் இனைப்போம்

உங்கள் தகவல்களை எங்களுக்கு அனுப்பி வைக்க கூடிய வழிகள்:

- த.பெ இல. 2233, கொழும்பு என்ற முகவரிக்கு ஒரு தபால் அட்டையை அனுப்பி வைக்கவும்,
- rainbowpages.lk Log செய்து "Register Your Business" ஐ க்ளிக் செய்யவும்,
- info@rainbowpages.lk க்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி வைக்கவும்,,
- 0712399399 என்ற இலக்கத்திற்கு SMS, Viber or WhatsApp message ஒன்றை அனுப்பி வைக்கவும்,
- 0112391888 என்ற இலக்கத்திற்கு Fax ஒன்றை அனுப்பி வைக்கவும்,

SLT RAINBOW PAGES
Print & Digital Directories

உங்கள் வியாபாரத்திற்கு ஸ்ரீ லங்கா டெலிகொம்மிடருந்து ஒரு உதவிக்கை!

# வவுனியா சம்பவம் தற்செயலானதே!

*நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்*

கொழும்பு, நவ. 26

வவுனியாவில் தற்செயலாக ஏற்பட்ட மின்னொழுக்கினாலேயே கடைகள் தீப்பற்றின. இதனைப் பூதாகரமாக்கித் தமிழ் - முஸ்லிம் மக்களிடையே இனமுறுகலை ஏற்படுத்துவதற்குச் சில அரசியற்சக்திகள் திட்டமிட்டுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றஞ் சுமத்தினார்.

நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை குழுநிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வவுனியாவில் அண்மையில் சில கடைகள் தீப்பற்றியிருந்தன. அந்தக் கடைகளில் திடீரென ஏற்பட்ட மின் ஒழுக்கின் காரணமாகவே அவை தீப்பற்றியதாகப் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த விடயத்தைப் பூதாகரமாக்கித் தமிழ் இளைஞர்கள் சிலர் தான் இந்தச் சம்பவத்தின் பின்னணியில் இருப்பதாகப் பரப்புரை முன்னெடுக்கப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் தமிழ்-முஸ்லிம் மக்கள் மத்தியில் பதற்றமான நிலைமை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் உள்ள தமிழ் - முஸ்லிம் மக்கள் மத்தியில் இனமுறுகலை ஏற்படுத்துவதற்குச் சில சக்திகள் எடுத்துள்ள முயற்சிகளுக்கு இடமளிக்க முடியாது.

அந்தச் சக்திகளின் நிகழ்ச்சி நிரலின் கீழ் அப்பாவித் தமிழ் இளைஞர்கள் சிலர் விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவ்வாறான நடவடிக்கைகளுக்குப் பொலிஸ்மா அதிபர் இடமளிக்கக்கூடாது. தமிழ் -முஸ்லிம் மக்கள் உண்மைகளைப் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். வவுனியாவில் அமைதியான சூழலைக் குழப்புவதற்கு இடமளிக்க முடியாது.

**வடக்கில் கல்வியின் நிலைமை**

30 ஆண்டு காலப் போர் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்த தமிழினத்தின் இருப்பே தற்போது கேள்விக் குறியாகியுள்ளது.

பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவைக் கூட சிறுவர் இல்லங்களில் இருக்கும் சிறுவர்களுக்கு வழங்காத நிலைமைகள் வடக்கில் இருக்கின்றன.

வடமாகாணத்தில் உள்ள தேசியப்பாடசாலைகளில் உள்ள விஞ்ஞான ஆய்வு கூடச் சிற்றூழியர்கள், ஆய்வு கூட உதவியாளர்கள் சிங்களவர்களாக இருக்கின்றனர். குறிப்பாக யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மானிப்பாய், இந்துக் கல்லூரிகளில் இவ்வாறு நியமனம் வழங்கப்பட்டுப் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் எவ்வாறு மாணவர்களுக்கு விளக்கம் கொடுப்பார்கள்.

நல்லிணக்கம், சமாதானம் பற்றிப் பேசினாலும் நடைமுறையில் எதுவுமே மாறவில்லை. சிங்களப் பெரும்பான்மைத்துவத்தின் மன நிலையில் மாற்றம் ஏற்படவில்லை.

2 லட்சத்து 52ஆயிரம் மாணவர்களும், 13 ஆயிரத்து 650 ஆசிரியர்களும் வடக்கில் இருக்கின்றனர். இவர்களுக்குத் தளபாடப் பிரச்சினை உள்ளது. விஞ்ஞானம், தொழில்நுட்பம் எங்கோ சென்று விட்டாலும் எமது பகுதிகளில் மரத்துக்குக் கீழே இருந்து கல்வி கற்பிக்கும் கற்கும் நிலைமை தொடர்ந்த வண்ணமே உள்ளது.

வடக்கு மாகாணத்தில் உள்ள தொண்டர் ஆசிரியர்கள் கடந்த பத்து வருடங்களாகப் பணியாற்றி வருகின்றனர். போர்க் காலத்தில் தொண்டர் ஆசிரியர்கள் தான் வடமாகாணக் கல்வியில் பெரிய பங்களிப்பைச் செய்திருக்கின்றனர். ஆயிரத்து 44 தொண்டர் ஆசிரியர்கள் இருக்கின்ற நிலையில் அண்மையில் 675பேர் தெரிவு செய்யப்பட்டு அவற்றில் 182 பேருக்கு மட்டுமே ஆசிரிய நியமனம் வழங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறில்லாமல் 675 பேருக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்பட வேண்டும் - என்றார். (5)

## கொழும்பு நகரில் ஆணுறைகளை பெற்றுக்கொள்ள தானியங்கி இயந்திரம்

பிறிதொரு நபரின் தலையீடில்லாமல் ஆணுறைகளைப் பெற்றுக் கொள்வதற்குக் கொழும்பில் பல இடங்களிலும் தானியங்கி இயந்திரங்களை அமைக்கும் பணிகளை, குடும்பக் கட்டுப்பாட்டு அமைப்பு ஆரம்பித்துள்ளது. முதலாவது தானியக்க இயந்திரம் கொழும்பு புலர்ஸ் வீதிக்கு அருகில் அமைக்கப்பட்டது. ஆணுறைகளைப் பெற்றுக்கொள்ள முதலில் அலைபேசி இலக்கத்தை இயந்திரத்தில் பதிவு செய்யவேண்டும். பின்னர் அந்த அலைபேசி இலக்கத்துக்கு ஒரு இரகசிய எண் அனுப்பப்படும். அந்த இரகசிய எண்ணை இயந்திரத்தில் உள்ளீடு செய்யும் போது தேவைப்படும் ஆணுறைகள் கிடைக்கப் பெறும்.

தற்போது இலங்கையில் ஒரு அலைபேசி வலையமைப்பு ஊடாக மட்டுமே இந்தச் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு ஆணுறைக்கு அலைபேசியில் 50 ரூபா அறவீடு செய்யப்படும்.

பல நாடுகளில் இத்தகைய ஆணுறை பெற்றுக்கொள்ளத்தானியக்க இயந்திர முறைகள் வழக்கத்தில் உள்ள நிலையில் இலங்கையில் முதன் முறையாகத் தற்போது அறிமுகம் செய்யப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் இந்தியாவிலும் சமூகப் பாதுகாப்புக் கருதி, மூன்றாம் நபர் தலையீடு செய்யாமல் ஆணுறைகளைக் கொள்வனவு செய்ய, ஒன்லைன் முறைமை ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5,31)




எந்தவொரு "கம" வில் நீங்கள் வாழ்ந்தாலும்

தற்போது இலங்கையில் முதல் தடவையாக மொபிடெல் mCash மீள் விற்பனை நிலையத்திலிருந்து NSB i SAVER சேவையினூடாக பணத்தை NSB சேமிப்பு கணக்கில் வைப்பிலிடலாம்.

நாட்டின் அனைத்து மக்களுக்கும் | mCash 16,000க்கு மேற்பட்ட மீள் விற்பனை நிலையங்களில் | விரும்பிய நேரத்தில்

NSB i SAVER
mCash ஊடாக உங்கள் கணக்கில் உடனடியாக வைப்பிலிடுங்கள்

SMS பணம் வைப்பிலிடப்பட்டதும் உறுதிப்படுத்தலுக்கான SMS ஐ பெற்றுக்கொள்வீர்கள்

NSB
Sri Lanka Telecom Mobitel

புத்தம் புதிய உற்பத்திகள்

65% வரை தள்ளுபடி

# வருந்துகிறோம்!

உலகத் தரமான உற்பத்திகளை வேறு எப்போதும் இல்லாத விசேட விலைக்கழிவில் பெறக்கூடிய அரிய வாய்ப்பை இழக்கப்போகும் அனைவரும் எம்மை மன்னித்துவிடுங்கள்.

முந்துங்கள்! இந்த வாய்ப்பு இன்று மட்டுமே!
நாடளாவிய சகல அபான்ஸ் காட்சியறைகளிலும்..!
கையிருப்பு சொற்ப அளவே உள்ளன!




ரூ. 5,499/- இலிருந்து

0115999000 | BuyAbans.com | நாடளாவிய அபான்ஸ், அபான்ஸ் எலைட் மற்றும் அபான்ஸ் அங்கீகாரம் பெற்ற முகவர்களிடம் பெறலாம்.

Abans

# தேவையுடன் வந்து திருப்தியுடன் செல்லுங்கள்

## 4 மணி நேரத்தில் கடன் அங்கீகாரம்

முன்கூட்டிச் செலுத்தினால் மேலதிக கட்டணம் இல்லை




Softlogic Finance
Flexi
LEASING
සොෆ්ට්ලොජික් ෆිනෑන්ස් ෆ්ලෙක්සි ලීසිං

ஆரம்பக் கொடுப்பனவு எதுவுமின்றி வாகனத்தை எடுத்துச்செல்ல முடியும்

Softlogic Finance | இன்றே அழையுங்கள் 072 7 880 880

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## பிரபாகரன் எனும் ஆளுமை!

பலசரிபிழைகளுக்குஅப்பால்தமிழ் இனத்தின்ஒப்பற்ற தலைவன்பிறந்தநாள் இன்று. இதற்கு முன்னும் இனியும்அவனைப்போன்றதலைவன்ஒருவன்தமிழர்களுக்குக் கிடைப்பானா என்பது சந்தேகம்தான். சாத்தியமானவற்றைச் சாத்தியமாக்கும் அரசியல் கலையைப் பயிலும் அரசியல் தலைவர்கள் மத்தியில் தனக்கு வேண்டியதைச் சாத்தியமாக்குவதே அரசியல் என்று பயின்றவர் அவர். அதனை30வருடங்களாகவெற்றிகரமாகநடத்திக்காட்டிய ஒரே தலைவன். தான் கொண்ட கொள்கையில் கடைசி வரைக்கும் அசையாத பற்றுறுதியோடு நின்ற தலைவன். இன்று அவனுக்கு 63ஆவது வயது.

வரலாற்றின் பல இடங்களில் அவர்களது மறைவு பற்றிய மர்மங்களால் சாகா வரம் பெற்ற தலைவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அத்தகைய உன்னத இடத்தைப் பெற்றவர்களின்பெயர்ப்பட்டியல்மிகச்சிறியது. அதற்குள்தமிழர்கள் முதன்மைப்படுத்தக்கூடிய பெயர் வேலுப்பிள்ளை பிரபாகரன்.

உலகின் ஆதி மொழிகளில் தமிழுக்கு முக்கிய இடம் உண்டு. அதன் வழி அறியப்படும் தமிழர்களுக்கும் தனி வரலாறு உண்டு. மேற்குலகமும் அதன் வழி மொத்த உலகும்போற்றும்கிரேக்க, ரோம வரலாறுகளுக்குநிகராகவும், அதைவிடவும்மேம்பட்டதாகவும்தமிழர்களுக்கும் பெருமையும்அதிகாரமும் இருந்தது. ஆனால், 12ஆம்நூற்றாண்டில் ஆட்சி அதிகாரத்தைத் தமிழ் இழந்தது முதல் சுமார் 800 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இனம் தொடர்ந்து அடிமைப்பட்டே கிடக்கின்றது. இந்த காலம் முழுவதும் தன்னைத் தக்கவைத்துக்கொள்ளும் தற்காப்புப் போராட்டத்திலேயே தமிழ் இனம் காலங் கடத்தி வந்தது.

அந்தநிலையில் இருந்து வலிந்து முன்னேறித்தாக்கி இழந்தவற்றை மீளப்பெறும் மனோ நிலையைத் தமிழ் இனத்திற்கு ஏற்படுத்திய ஒரே தலைவன் என்றால் அது பிரபாகரன்தான்என்பதைத்துணிந்து சொல்லலாம். பிரபாகரனின் போராட்ட வழிமுறைகள் மீது ஆயிரம் விமர்சனங்கள் இருக்கலாம். அவரதுவிடாப்பிடியானகொள்கையால்தான் தமிழர்கள் இவ்வளவு பெரிய அழிவைச் சந்தித்தார்கள் என்று விமர்சிப்பவர்கள் இருக்கலாம். ஆனால், எல்லாச் செயல்களுக்கும் ஒரு காரண காரியம் உண்டு என்பதைப் போல பிரபாகரனும் தமிழர்களுக்கு அவர்களது ஆன்ம பலத்தைமீட்டுக்கொடுப்பதற்குவிட்டுக்கொடுக்காதஅந்த கொள்கைப்பற்றும்பிடிப்பும்தான்காரணம்என்பதைஅவர்கள் உணராது விட்டுவிட்டார்கள்.

எல்லாப் போராட்டங்களிலும் வெற்றியும் தோல்விகளும் உண்டு. அவற்றைக் கொண்டு நடத்தும் தலைவர்களின் ஆளுமையில்அதன்விரைவுதங்கியிருக்கும். தமிழர்களின் போராட்டத்தில் பிரபாகரன் தனது வகிபங்கை மிகச்சரியாகவே நிகழ்த்திச் சென்றிருக்கிறார். 30 ஆண்டு காலப் போராட்டத்தில் எதிர்வரும் 10 தசாப்தங்களுக்குத் தமிழர்களுக்குத் தேவையானஉறுதியைக்கொடுத்துவிட்டுச்சென்றிருக்கிறார்.

ஒருவேளைபிரபாகரன் இந்தத்தினத்தில் பிறக்காமலேயே போய் இருந்தால் இன்று இலங்கையில் தமிழர்கள் வாழ்ந்தார்கள், பின்னர் குவேனியுடன் சேர்ந்து விஜயனும் அவனுடன்சேர்ந்தபாண்டியநாட்டு இளவரசிகளாலும்முகிழ்த்தெழுந்தசிங்களஇனத்திற்குள்கரைந்துபோனார்கள்என்று வரலாறு கூறியிருக்கக்கூடும். பிரபாகரன் இல்லாத காலத்தில் வடக்கு கிழக்கில் பலவந்தமாக ஊன்றப்படும் விகாரைகளையும் குடியிருப்புக்களையும் பார்க்கையில் அத்தகைய ஒரு வரலாறு எழுதப்பட்டிருக்காது என்பதற்கு எந்த நிச்சயமும் இல்லை.

அண்மையில் நாடாளுமன்றத்தில் பேசிய உறுப்பினர் ஒருவர் இத்தனை வருட காலப் போரில் அரசுக்கு நிகராக விடுதலைப் புலிகளும் பணத்தைச் செலவிட்டிருக்கிறார்கள் என்று தெரிவித்திருந்தார். 75சதவீத மக்களினால்கட்டியெழுப்பப்பட்ட, உலகின்மற்றைய நாடுகளால்அங்கீகரிக்கப்பட்டு ஒரு நாட்டின் அரசுடன் வெறும் 12 சதவீத மக்கள் கூட்டத்தின் தலைவன் சரிக்குச் சமமாகப் போரை நடத்தினான்என்றால்அவன்அரசியல், பொருளாதார, ராஜதந்திரம் அனைத்திலும் சிறந்து விளங்கினான் என்பதுதானே பொருள்.

அதுதான்பிரபாகரனின்பலம். தன்மக்களை ஆழ நேசித்த, தன்மக்களுக்காக மட்டுமே வாழ்ந்த ஒருதலைவனால் மட்டுமே அது சாத்தியம்.

துரதிர்ஷ்டவசமாகஒட்டுமொத்தஉலகநாடுகளும்சேர்ந்து தங்கள்தங்கள் நலன்களுக்காக அந்தத்தலைவனை அவன் படைகளை அழித்து ஒழித்துவிட்டன. தமிழ் இனம் நட்டாற்றில் நிற்கின்றது. எத்தனை தலைவர்கள் வந்தாலும் இட்டுநிரப்ப முடியாத பெருவெளியாகக் கிடக்கிறது பிரபாகரன் என்கிற ஆளுமை நிரப்பிவிட்டுப்போன இடம்.

# சிங்கள ஆட்சியாளர்களை கதிகலங்கவைத்த ஈழத் தமிழ் மக்களது பாதுகாவலன் பிரபாகரன்

**ஈழத் தமிழ் மக்களைச் சிங்கள ஆட்சியாளர்களது அராஜக ஆட்சியலிருந்து மீட்டெடுக்கப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாரகனது 63ஆவது பிறந்த தினம் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் பிரசுரமாகிறது.**

ஈழத்தமிழ்மணி

தந்தை செல்வநாயகத்திற்குப் பின்னர் இந்த நாட்டுத் தமிழ்மக்களது தேசியத்தலைவராகப் பிரபாகரன் இருந்தார். 1983 ஆம் ஆண்டுக்குப்பின்னர் உலகத்தமிழர்களின் அடையாளமாகவும், தமிழர்களின் தலைநிமிர்வுக்கும், பலத்திற்கும் உயர்வுக்கும் காலம் தந்த சரித்திரத் தலைவனாகவும் விளங்கிய பிரபாகரனது 63ஆவது பிறந்த நாளாகிய இன்று அவரது போரியல் சிந்தனைகள், சாதனைகள் அவரின்சிறப்புகள், தனித்துவங்கள் பற்றி நினைவுகூருதல் பொருத்தமானது.

ஈழத்தமிழினத்தை வழிநடத்த உருவாகிய தலைவனான பிரபாகரன் ஒரு தமிழ்த்தேசிய இனத்தின் அடையாளம். இன்றும் கூட ஒரு கணம் பிரபாகரன் என்ற பெயரை உச்சரிப்பதன் மூலம் எந்தவொரு தமிழனும் புத்துணர்வு பெறுகிறான்.

தமிழினத்தின் விடுதலையை வென்றெடுப்பதற்காக தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பை உருவாக்கி ஆயுதப்போராட்டத்தை 30 ஆண்டுகாலம் வரை நடத்திய பிரபாகரன் எதிரிகளாலும், மாற்றுக்கட்சியினராலும் இலங்கையின் முப்படையின் சில உயரதிகாரிகளாலும் கூட விதைந்துரைக்கப்பட்டதொரு தலைவராவார். இந்திய இராணுவத்திலிருந்த உயரதிகாரிகள் சிலராலும், ஐரோப்பிய நாடுகளைச்சேர்ந்த பல இராஜதந்திரிகளாலும் இன்றும் விதந்து விமர்சிக்கப்படும் வீரத் தலைவராகவே பிரபாகரன் விளங்குகின்றார்.

1983ஆம் ஆண்டு ஜூலை மாதம் 23 ஆம் திகதியன்று நள்ளிரவு வேளை பலாலி வீதி திருநெல்வேலியில் வீதிப் பாதுகாப்புக்கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இராணுவ வாகனம் மீது நிலக்கண்ணி வெடித் தாக்குதலை மேற்கொண்டதன் மூலம் ஆயுதப்போராட்டத்துக்கு அடியெடுத்துக் கொடுத்த நாளிலிருந்து, வன்னி முள்ளிவாய்க்காலில் 2009 மே 18 ஆம் திகதி இறுதிப்போர் முடியும்வரை பிரபாகரன் இலங்கையர்களாலும், பன்னாட்டுத் தரப்புகளாலும் அதிகம் பேசப்பட்ட மனிதராக இருந்து வந்துள்ளார்.

### பிற இனத்தவர்களின் பாராட்டுதல்களுக்கு உள்ளானவர் பிரபாகரன்

இலங்கையில் சிங்கள முஸ்லிம், தரப்புகளிலிருந்தும் பலர் பிரபாகரனைப் போற்றிப் பாராட்டியுமுள்ளனர். "பிரபாகரனை தமிழ் சமூகம் ஒரு போதும் மறக்கப்போவதில்லை. தமிழ்மக்கள் மனங்களில் ஆகக் கூடிய செல்வாக்குடன் இறுதிவரை மதிக்கப்பட்டவர் பிரபாகரன் மட்டும் தான்" என கிழக்கு மாகணத்தைச் சேர்ந்தவரும் முஸ்லிம் காங்கிரசின் முக்கிய தலைவர்களில் ஒருவருமானபசீர்சேகுதாவுத்துணிச்சலான கருத்தை சில ஆண்டுகளுக்கு முன்னர் தெரிவித்திருந்தார் "தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டின் எந்தப் பாகத்திலும் எந்தத்தாக்குதலையும் நடத்தக்கூடிய வல்லமையைப் பெற்றிருந்தார்கள். தமிழ் மக்களின் தேசிய விடுதலைச்சின்னமாக விடுதலைப்புலிகளும் அதன் தலைவர் பிரபாகரனும் இருந்தார்கள்" என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

முப்பது ஆண்டுகளில் நான்கு ஈழப்போர்களை வழிநடத்திக் காட்டிய தேசியத்தலைவரான பிரபாகரன் இலங்கைப் படைகளாலோ, இந்தியப்படைகளாலோ தன்னை உயிரோடு பிடிக்கமுடியாதவாறு தனது பாதுகாப்பு கட்டமைப்பை பலமாக வைத்திருந்தார். தமிழீழமே தமிழ் மக்களுக்கான இறுதிவழி என்ற கொள்கைநிலைப்பாட்டில் அவர் மாறாமல் இறுதி வரை சிங்கள அரசுகளை எதிர்த்துப் போராடினார்.



### சிறு வயதிலும் தனித்துவச் சிந்தனை கொண்டவராயிருந்தார் பிரபாகரன்

வேலுப்பிள்ளை பார்வதி தம்பதியினருக்கு கடைசி மகனாகப் பிறந்த பிரபாகரன் வல்வெட்டித்துறை ஊரிக்காடு என்ற இடத்திலுள்ள சிதம்பராக்கல்லூரியில் 10 ஆம் வகுப்பு வரை கல்வி கற்றார். பாடசாலையில் கல்வி கற்கும் காலப்பகுதியில் பிரபாகரனின் சித்தனை யோட்டமும் செயற்பாடுகளும் தனித்துவம் மிக்கதாகவே இருந்தன. தந்தையுடன் பிற இடங்களுக்குச் செல்லும் போது இலங்கைப்படையினர் அப்பாவித் தமிழ் மக்களைத் தாக்குவதைக்கண்டு பல சந்தர்ப்பங்களில் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தார். பிரபாகரன் சிறுவனாக இருந்த காலப்பகுதியில் 1958 ஆம் ஆண்டு முதன் முதலில் அப்போதைய தலைமை அமைச்சரான எஸ்.ஆர்.டி.பண்டாரநாயக்கவின் அரசினால் தமிழ்மக்களுக்கு எதிரான் இன வன்முறை தூண்டி விடப்பட்டு நூற்றுக்கணக் கான தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவமும் அவர் மனதில் மிகவும் ஆழமாகப் பதிந்திருந்தது.

தென்னிலங்கையில் சிங்களக் குண்டர்களால் இனவன்முறையின்போது தமிழ்மக்கள் ஈவு இரக்கமில்லாது கொடூரமாகக் கொல்லப்பட்ட நெஞ்சை உறுத்தும் பலசம்பவங்களை பிரபாகரன் நன்கு அறிந்திருந்தார். தமிழ் மக்களுக்கு இந்தகைய இன்னல்கள் எதற்காக ஏற்பட வேண்டும்? அப்பாவித்தமிழ் மக்களுக்கு ஏன் இந்த நிலை தமிழனாக இலங்கையில் பிறந்த குற்றத்துக்காக இப்படித்துயரங்களை அனுபவிக்கவேண்டுமா? என்று பிரபாக

ரன் மனதில் தமிழ் மக்கள் மீது அனுதாபமும் பரிவும் ஏற்பட்டிருந்தது.

இனவெறிகொண்ட சிங்கள அரசுகளின் பிடிக்குள்ளிருந்து தமிழ் மக்களை மீட்டெடுக்கவேண்டும். என்ற உத்வேகம் பிரபாகரன் மனதில் உருவாகியது. தனது வாலிப வயதை எட்டும் பருவத்தில் ஆயுதப்போராட்டத்தின் மூலமாகவே இதனைச் சாதிக்க முடியும் என்று உணர்ந்தார். பிரபாகரனின் காலில் கைக்குண்டு எரிகாயம் ஏற்பட்டது. மருத்துவசிகிச்சைகளுக்குப்பின்னர் அந்த இடத்தில் கருமையாக இருந்தமையினால் கரிகாலன் என்ற புனைபெயரும் ஏற்பட்டிருந்தது.

தமிழ் மாணவர்கள் பாடசாலைக் கல்வியை முடித்தபின்னர் மேற்படிப்புக்காக பல்கலைக் கழகம் செல்வதற்கு சிங்கள அரசின் தரப்படுத்தல் கொள்கை ஒரு தடையாக இருந்தது. 10 ஆம் வகுப்பு வரையிலும் கல்வி கற்ற பிரபாகரன் விடுதலைப் போராளியாக செயற்படத்தொடங்கியபடியினால் மேற்கொண்டு படிப்பை அவரால் தொடரமுடியவில்லை.

பிரபாகரனினது போக்கு அவரது பெற்றோருக்குப் புரியவில்லை. மகன் புரட்சி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறார் என்பதை அறிந்து கொள்ளும் சந்தர்ப்பம் தானே தேடி வந்தது. ஒரு முறை பிரபாகர னைத் தேடிபொலிஸார் அதிகாலை வேளை 3 மணிக்கு அவரது வீட்டுக்கதவைத் தட்டினர் பொலிஸார் தன்னைத் தேடி வந்ததையறிந்த பிரபாகரன் ஒருவாறாக எவரும் அறியாமல் தப்பி விட்டார்.

அப்போதுதான் தமது மகன் இரகசிய இயக்கத்தில் செயற்பட்டு வருகிறார். என்பதை பெற்றோர்களால் உணர முடிந்தது. பிரபாகரனைக் கைது செய்ய வந்த பொலிஸாருக்கும் பெருத்த ஏமாற்றமாகவே முடிந்தது. இதன் பின்னர் பிரபாகரன் தனது சொந்த வீட்டுக்குத் திரும்பவேயில்லை.

தப்பிச்சென்ற பிரபாகரனை பெற்றோர்கள் சமாதானப்படுத்தித் தமது வீட்டிற்கு அழைத்துச் சென்றனர். வீட்டிற்கு வந்த பிரபாகரன்" நான் ஒருபோதும் உங்களுக்குப் பயன்பட மாட்டேன். என்னால் உங்களுக்கு எந்தத்தொல்லையும் வேண்டாம். என்னை என் போக்கில் விட்டு விடுங்கள். இனி எதற்கும் என்னை எதிர்பார்க்காதீர்கள்" என்று கூறிவிட்டு வீட்டிலிருந்து வெளியேறினார்.


### படையினர் மீதான தாக்குதல்களுக்கு உரிமை கோரினர் புலிகள்

1978ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில் வன்னி முருங்கன் காட்டுப்பகுதிக்குள் இன்ஸ்பெக்டர் பஸ்தியாம் பிள்ளை உட்பட 04 இலங்கை புலனாய்வுப்படையினர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் நாடெங்கும் காட்டுத்தீயாகப் பரவியது. பிரபாகரனால் உருவாக்கப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகள் அக்காலகட்டத்தில் நடத்தப்பட்ட இராணுவ நடவடிக்கைகளுக்கு பகிரங்கமாக உரிமை கோரி அறிக்கை விட்டிருந்தனர். இதன்பின் தமிழ்மக்களின் விடுதலைக்கான போராட்டம் தொடர்ந்து பிரபாகரனால் முன்னெடுக்கப்பட்டு வந்தது. ஐக்கியத்தேசியக்கட்சி ஆட்சியில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்ந்தன. புலிகளை ஒழிப்பதற்கு கடும் நடவடிக்கைகளையும் அரசும் படைகளும் மேற்கொண்டிருந்தன. புலிகள் அமைப்பை அழிப்பதற்கு சகல நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள முனைந்தபோது ஆயுதப்போரட்டத்தையும் அரசியல் போராட்டத்தையும் உறுதிப்படுத்தி விரிவாக்க வேண்டும் என்ற நோக்கில் பிரபாகரன் அரசாங்கத்தின் அடக்கு முறை நடவடிக்கைகளை முறியடிப்பதற்காக கெரில்லா போர் முறையைப் பலப்படுத்தி அரசியல் பிரிவையும் விரிவாக்க முடிவு செய்தார்.

முப்பது ஆண்டுகள் வரை தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடிய புலிகளின் தலைவர் பிரபாகரனின் சாவு பற்றிய செய்திகள் இன்று வரையில் ஓர் மர்மம் நிறைந்ததொன்றாகும். 2009ஆம் ஆண்டு மே மாதம் 17 ஆம்திகதி அல்லது 18 ஆம் திகதி பிரபாகரன் கொல்லப்பட்டு விட்டார் என்ற செய்தியை இலங்கை அரசு அறிவித்திருந்தது. உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்ற வாதப்பிரதி வாதங்கள் தென் இலங்கையிலும் தமிழ் மக்கள் மத்தியிலும் எழுந்த வண்ணமே இருக்கின்றன. இந்திய அரசு ராஜீவ்காந்தி கொலை வழக்கை முடிவுக்கு கொண்டுவரும் பொருட்டு பலதடவைகள் பிரபாகரனது இறப்புச் சான்றிதழை வழங்குமாறு கோரியும் இலங்கை அரசு பிரபாகரனது இறப்புச் சான்றிதழை இதுவரை கையளிக்கவில்லை.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வழங்காது ஆட்சியாளர்கள் காலத்தை இழுத்தடித்தமையாலேயே வடக்கில் ஆயுதப்போராட்டம் தலை தூக்கியது. பிரபாகரன் என்ற இளைஞர் ஆயுதப் போராட்டத்தை ஆரம்பிக்க காரணமாகியது என இராஜாங்க அமைச்சரான டிலான் பெரேரா கடந்த வருடம் தெரிவித்திருந்தார்.

தமிழர்கள் மத்தியில் பிரபாகரன் இல்லாத நிலையில். இன்று அவரது போராட்டத்தையும் விடுதலையுணர்வையும். வீரத்தையும் அவர்கள் பாராட்டுவதிலிருந்து. பெருந்தலைவராக பிரபாகரன் தமிழ் மக்கள் மத்தியில் எத்தகைய மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவராகியிருந்தார் என்பது தெட்டத் தெளிவாகிறது.



அதேவேளை தமிழ்த்தேசியத்தையும். பிரபாகரனையும் மக்கள் ஒருபோதும் மறந்துவிடப் போவதில்லை. உலகின் எந்தவொரு விடுதலை இயக்கமும் சந்தித்திராத பல சரிவுகளை. பல திருப்பங்களை பல நெருக்கடிகளை பிரபாகரன் சந்தித்திருந்தார். இவ்வாறான துணிச்சல் மிக்கவீரனாக செயற்பட்டு வந்ததுடன் கொண்ட கொள்கையில் உறுதியாகவேயிருந்தார்.

இலங்கையில் தமிழினம் நிம்மதியாக வாழவேண்டும் என்பதற்காக தனது தமழீழக் கனவை எடுத்தியம்பினார். இதன் காரணமாகவே தமிழ் மக்கள் போராட்டத்தை நேசித்தனர். இப்போராட்டத்தால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தனர். அப்படியிருந்தும் பிரபாகரனுடைய போராட்டம் சரியானதேயென இன்றும் பெரும்பாலான மக்கள் கருதுகின்றனர்.

### இலங்கை அரசிடம் விலை போகாத தமிழ் மக்களது தலைவர் பிரபாகரன்

நோர்வே நாட்டின் முன்னாள் வெளிவிவகார அமைச்சரும் தூதுவருமான எரிக் சொல்ஹெய்ம் பிரபாகரன் குறித்த தனது கருத்தை சில ஆண்டுகளுக்குமுன்னர் பதிவுசெய்திருந்தார். தனது தாயக விடுதலை குறித்த உறுதியிலிருந்து இலங்கை அரசுக்கு விலைபோகாத பிரபாகரன் இறுதி நிமிடம்வரை மாறவில்லை. என்றும் குறிப்பிடுகின்றார்.

தேசியத்தலைவர் என்று கூறத்தக்க ஒரே ஒரு தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். அவருக்கு முன்பும் அப்படி ஒரு தேசியத்தலைவர் இருந்ததுமில்லை. இனியும் இன்னுமொரு தேசியத் தலைவர் உருவாகப் போவதுமில்லை என தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தவரும் வடக்கு மாகாண சபையின் தவிசாளருமான சீ.வே.கே. சிவஞானம் தெரிவித்திருந்தார்.

பிரபாகரன் போரில் ஈடுபட்டது பகவத்கீதையை அடிப்படையாகக் கொண்டுதான் எனவும். கீதாசார தர்மம் போர் எனவும் ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக வரலாறு மற்றும் தொல்லியற்துறை பீட பேராசிரியர் ரி.ஜீ.குலதுங்க 2013ஆம் ஆண்டு தெரிவித்திருந்தார்.

### பிரபாகரனது பிறந்தநாள் தமிழினத்தின் எழுச்சிநாள்

நவம்பர் மாதம் 26ஆம் நாள் பிரபாகரனின் பிறந்தநாள் என்பது ஈழத் தமிழர்களின் மனதிலிருந்து எழுகின்ற எழுச்சிநாள். நவம்பர் 27ஆம் நாள் மாவீரர் நாளாக உணர்ச்சி பூர்வமாக கொண்டாடப்படுகின்ற நாள்களாகும். தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய வீரத் தலைவனாக - காவியநாயகனாக போற்றப்படுபவராக என்றும் மனக் கண்முன்னால் வலம் வருகின்ற தலைவர் பிரபாகரன்.

தமிழினம் தோற்றுப் போகின்ற இனமல்ல. தோற்கடிக்க முடியாத இனம் என்று வீர முழக்கமிட்ட தலைவரான பிரபாகரனது புகழுக்கு அழிவென்பது கிடையாது என்பது வரலாறு கூறும் செய்தியாகும்.

தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஜெனிவாவரை கொண்டுசெல்லப்பட்டு இன்று அதி முக்கியத்துவம் பெறுவதற்கும் இப்பிரச்சினை தொடர்ந்தும் தீர்க்கப்படாததால் இலங்கை அரசுக்கு பன்னாட்டு அழுத்தங்களும், நெருக்கடிகளும் உருவாகிக்கொண்டிருப்பதற்கும் தலைவர் பிரபாகரன் என்ற சக்தி மிக்க மாவீரனே காரணமாகும். அந்த சக்தி மிக்க வீரத் தலைவனின் பிறந்தநாள் தமிழர்களுக்கு எழுச்சி நாள் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.




## பண்பான சமுதாயம் உருவாக பெற்றோர்களது பங்களிப்பு முக்கியம்

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று. அது நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும். அன்னை வளர்ப்பதிலே. நாடும். வீடும். அமைதிப் பூங்காவாய் அமைய வேண்டுமானால் நற்பண்புகளுடன்பாசத்தைக்கொட்டிதமதுபிள்ளைகளை வளர்ப்பது பெற்றோரது கடமை. தற்போது யாழ். குடாநாட்டில் வாள் வெட்டு,திருட்டு,போதைவஸ்துபாவனை, பாலியல் துஷ்பிரயோகம் போன்றவன் செயல்கள் அடிக்கடி இடம்பெறுகின்றன. வழிதவறிய இளைஞர் தரப்பொன்று நாட்டை சீரழித்து கொண்டிருப்பதோடு, எதிர்கால சந்ததியினரது வாழ்க்கையைக் கேள்விக் குறியாய் இருள் சூழ்ந்திருப்பதும் விசனத்தைத் தருகிறது. வன்முறையை தூண்டும் அயல் நாட்டு சினிமா 'த்ரில்' காட்சித் தொடர்கள் என்பவற்றால் பெரியவர் முதல் சிறியோர் வரை கவரப்பட்டு பொன்னான தமது நேரத்தை வீண்விரயம் செய்வதை விடுத்துநல்லவற்றைப்பார்த்துரசிப்பதற்கும் கேட்டு ரசிப்பதற்கு சிறியவர் களுக்கும் பெரியோரே முன் உதாரணமா கச் செயற்பட வேண்டும் அம்மாக்கள். சிறுவர் விளையாடு வதற்கு விளையாட்டுத் துப்பாக்கியைத்தெரிவுசெய்வதுதுர்ப்பாக்கியமே. பெற்றோரின் அலட்சியப் போக்கால் 4 வயது சிறுவன் கையில் கத்தியுடன்தனதுவீட்டுமுற்றத்தில் மற்றவரைத் தாக்கும் பாவனையில் விளையாடிய அனுபவம். அந்த இளம் கன்று பயம் விலகி வாள்வெட்டுக் கலாசாரத்தில் இணைவானோ என்ற அச்சமும் அங்கலாய்ப்பும் பல பெற்றோரை இன்று வாட்டுகின்றன. பெற்றவர்கள் விழிப்புணர்வுடன் அன்பால் அரவணைத்து பாசத்துடன் தமது பிள்ளைகளை வளர்ப்பதில் அக்கறைகாட்டுதல்இன்றையகாலத்தில் தேவை. சூடு வைத்து சிறுவர்களைத் தண்டிப்பதும் கொடுமைப்படுத்தி தமது செயற்பாடுகளால்அந்தப்பிஞ்சுகள்மனத்தளவில் பாதிப்படைவதும், வாழவேண்டிய இளம் மொட்டுகள் விரக்தி காரணமாக தவறான முடிவெடுத்து தமது உயிரைப் போக்கிக் கொள்வது குறித்தும் கேள்விப்படுகிறோம். "கத்தியைத் தீட்டாதே" என்ற நற்சிந்தனையோடு நல்ல பிள்ளைகளை நம்பி நாடே இருக்கிறது என்ற நம்பிக்கையுடன் மனிதனாய் வாழ வழி அமைத்துக் கொடுப்பது பெற்றவர்களின் கடமை.

செல்வா சுப்பிரமணியம்.
சாவகச்சேரி.

உதயன்
நித்திய சுகம்
345
உடலே கோயில்

# மருந்து வகைகளின் பயனுறுதி

## ஆலோசனையும் வழிகாட்டுதலும்

■ கு.நிஸாந்தி




## 'லிவோத்றொக்ஸின்' Levothyroxine

**பயன்**
தைறொயிட் ஓமோன் சுரப்பைக் கூட்டுவதற்கு இந்த மருந்தைப் பாவிக்கலாம்.

**பாவனை**
இந்த மருந்தை தினமும் வெறு வயிற்றில் உள்ளெடுத்தல் வேண்டும். குறிப்பாக காலை உணவு அல்லது தேநீர் வேளைக்கு அரை அல்லது ஒரு மணத்தியாலங்களுக்கு முன்பாக உள்ளெடுக்க வேண்டும் என்பதை கருத்தில் கொள்ளவும். ஒரு குவளை தண்ணீருடன் மருந்தை உள்ளெடுக்கவும்.
இந்த மருந்தை உள்ளெடுக்கும் 2 மணத்தியால காலப்பகுதிக்கு வேறெந்த மருந்துகளையும் உள்ளெடுக்கக்கூடாது. குறிப்பாக, கல்சியம், இரும்பு, அலுமினியம் கொண்டுள்ள அமில நீக்கிகள், விற்றமின் குளிசைகளை உள்ளெடுப்பதைத் தவிர்க்கவும்.
மருத்துவ ஆலோசனைப்படி குறிப்பிட்ட மாதங்களுக்கு ஒரு தடவை குருதிப் பரிசோதனையை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் நன்று. இந்த மருந்தின் அனுகூலத்தைப் பெறுவதற்கு தொடர்ச்சியாக நேரம் தவறாமல் மருந்தை எடுக்க வேண்டும். மருத்துவரின் ஆலோசனை இன்றி மருந்துப் பாவனையை நிறுத்த வேண்டாம்.
வேறு நோய் குறித்து மருத்துவரை நாடிச் செல்வீர்களாயின், இந்த மருந்துப் பாவனை குறித்து மருத்துவருக்கு தெரியப்படுத்தவும். இந்த மருந்தை மென்று விழுங்க முடியாத பிள்ளைகளாயின், மருந்தை பொடியாக்கி 1 அல்லது இரண்டு தேக்கரண்டி (5 தொடக்கம் 10அட) தண்ணீர் விட்டு கலக்கிக் கொடுக்கவும்.

**பக்க விளைவுகள்**
இவ்வகை மருந்துப் பாவனையால் இதுவரையான காலப்பகுதியில் எந்தவிதமான அபாயகரமான பக்க விளைவுகளும் ஏற்படவில்லை. கூடுதலான வியர்வை சுரத்தல், நடுக்கம், வெப்பத்துக்கு உணர்திறன், நித்திரை அல்லது மன ரீதியான குழப்பங்கள், களைப்பு, சுவாசிக்கக் கஸ்டப்படும் நிலை, தசைப் பலவீனம் இருப்பின் மருத்துவ ஆலோசனையைப் பெறவும்.

**களஞ்சியப்படுத்தல்**
சூரியஒளி படாதவாறு 25 பாகை செல்சியஸ் வெப்பநிலையிலும், சிறுவர் கைகளுக்கு எட்டாதவாறும் மருந்துச் சிட்டையுடன் மருந்து சேகரித்து வைத்துள்ள போத்தலை பாதுகாத்து வைத்துக்கொள்ளவும். முறையான மருந்துப்பாவனை மூலம் தைறொயிட் பிரச்சினைகளில் இருந்து விடுபடுவோம். உடல் ஆரோக்கியம் பெறுவோம்.

உள்ளக மருந்தக பயிலுநர்,
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை.

## 'பிறீட்ரிசோலோன்' Prednisolone

**பயன்**
என்பு வலி, தோல் நோய்கள், ஆஸ்துமா நிலை போன்ற நோய்நிலை அறிகுறிகளுக்கு இவை பயன்படுத்தப்படுகின்றன.


**பாவனை**
இந்த மருந்தை சாப்பாட்டுக்குப் பின்னர் தண்ணீருடன் எடுக்க வேண்டும். அதி உச்ச பலனைப் பெறுவதற்கு நேரந் தவறாது தொடர்ச்சியாக மருந்தை உள்ளெடுக்க வேண்டும். நீண்ட காலமாக இந்த மருந்தின் பாவனை உடையவராக இருப்பின், வைத்திய ஆலோசனைப்படி குறித்த கால இடைவெளியில் குருதிப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம் குருதிக் குளுக்கோஸ் அதிகரிப்பு, குருதி இலிப்பிட்டின் அதிகரிப்பு, முகம் வீங்கிய நிலை, என்புகளின் தேய்மானம், உடல் நிறை அதிகரிப்பு போன்றவற்றை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். தடுப்பூசி போடும் சந்தர்ப்பத்தில் இந்த மருந்துப் பாவனையை மேற்கொள்பவராயின் அது பற்றி மருத்துவருக்குத் தெரியப்படுத்துங்கள்.
சின்னமுத்து அல்லது கொப்புளப் புண்கள் உடையவருடன் நெருக்கமாக பழகுவதைத் தவிர்க்கவும். அவ்வாறு நடந்திருப்பின் அது குறித்து மருத்துவருக்கு அறியத்தாருங்கள்.
வேறு ஏதாவதொரு நோய்க்கு வைத்திய ஆலோசனை பெறச் செல்லும் போது, இந்த மருந்து பாவிப்பது குறித்து தெரியப்படுத்துங்கள்.
மருந்துச் சிட்டையுடன் உரிய கொள்கலனை சூரியஒளி படாதவாறும், சிறுவர்களின் கைகளுக்கு எட்டாதவாறும் வைத்து பயன்படுத்துதல் நன்று.

**மருந்தை பாவிக்கத் தவறின் செய்ய வேண்டியவை**
இவ்வகை மருந்தை ஒருமுறை பாவிக்கத் தவறின், ஞாபகம் வரும் போது அதனை உள்ளெடுத்துக் கொள்ளவும். அடுத்த தடவை வழமையான நேரத்துக்கு மருந்தை உள்ளெடுத்துக் கொள்ளவும். ஆனால் இரண்டு முறை பாவிக்கும் மருந்தை ஒரே தடவையில் உள்ளெடுப்பதை தவிர்த்துக் கொள்ளவும். மருந்து உள்ளெடுத்து மூன்று நாள்களுக்கு மேலாயின் அது தொடர்பில் மருத்துவரின் ஆலோசனையை மீண்டும் பெறவும்.

**பக்கவிளைவும் உடனடி வைத்திய ஆலோசனையும்**
வலிப்பு, நெஞ்சு நோ, தாங்கமுடியாதளவு வயிற்றுவலி, வயிற்று வீக்கம் போன்ற நோயின் குணங்குறிகள் ஏற்படின் உடனடியாகவே மருத்துவரை நாடி சிகிச்சை பெறவும். இந்த மருந்தை வலியுள்ள போது மட்டும் பாவிப்பதை நிறுத்துங்கள். மருத்துவ ஆலோசனைப்படி பொருத்தமான வேளையில் உரிய அளவு மருந்தை உள்ளெடுத்தல் சிறப்பு. அதேபோன்று பாவிக்கும் மருந்தின் அளவு, குறித்த கால இடைவெளியில் குறைக்கப்படு வதன் மூலம் பக்க விளைவுகள் குறைக்கப்படுவதோடு, உடலின் நோய்த் தடுப்பாற்றல் சரியான விதத்தில் நடைபெற உதவுகிறது. நீண்ட காலமாக மருந்தைப் பாவித்து அதனைச் சடுதியாக நிறுத்தும் போது, குருதி அமுத்தத் தாழ்வு, காய்ச்சல், தசைவலி, மூட்டுவலி, நாசியழர்ச்சி, தோல் அரிப்பு போன்ற நோய்கள் ஏற்படலாம்.




> மருந்துவகைகளின் பயனுறுதியை சிறந்த முறையில் பெற்றுக் கொள்வதற்கும் நோய்க் காணிகளில் இருந்து பூரணமான தீர்வைக் கண்டுகொள்ளவும் மருத்துவ ஆலோசனையை நன்முறையில் பேணவும்.


பூசா சிறைக்குள்
மாவீரர் நாள்
சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு அம்சம் 26.11.2017

கட்டுரை

கனடாவிலிருந்து சசி

> எது நடந்தாலும் தீபத்தை பாடல் முடியும் வரை அணைப்பதில்லை என்பதில் உறுதியாக இருந் தோம். சிறை அதி காரிகள் பலர் நடந்து வருகின்ற சப்பாத்துக் காலடி ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. எங்கள் அறையைக் கடந்து அவர்கள் நடந்து செல்வதை உணர முடிந்தது.

**2000** ஆம் ஆண்டு பிற்பகுதியில் களுத்துறை 'சீ 3' பிரிவில் ஒரு கைதி கழுத்துவெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. இது சிறைச்சாலை நிர்வாகத்தை நிலைகுலைய வைத்தது மட்டுமல்லாமல், கைதிகளாகிய எங்களையும் அதிகம் அச்சுறுத்தியிருந்தது. சிறைச்சாலை நிர்வாகம் இது விடயத்தில் பல்வேறு விசாரணைகளை நடத்தியபோதிலும், விடுதலைப் புலிகளின் உளவுத்துறைத் தலைவர் பொட்டு அம்மானின் நெறிப்படுத்தலில் மேற்கொள்ளப்பட்ட கொலை அது என்ற முடிவுக்குச் சிறைச்சாலை நிர்வாகம் வந்ததால், ஏனைய கைதிகளுக்குப் பிரச்சினை இருக்கவில்லை. திடீரென ஒருநாள் நாம் அனைவரும் எங்களிடமிருந்த பைகள், பொருள்களை எடுத்துக்கொண்டு சிறைச்சாலைக்கு வெளியில் வருமாறு பணிக்கப்பட்டோம். நானும் இன்னும் பலரும் புதிதாக அங்கு தடுத்து வைக்கப்பட்டவர்கள் என்பதால், அங்கு ஏற்கனவே இருந்த கைதிகள் பற்றி எதுவும் தெரிந்திருக்கவில்லை.

## களுத்துறைச் சிறையிலிருந்து பூசாவுக்கு மாற்றப்பட்டோம்

சிறைச்சாலை அதிகாரிகள் பலர் அங்கு வந்து ஏற்கனவே சில விடயங்களில் சிறைச்சாலை நிர்வாகத்துக்குத் தொல்லை கொடுத்தவர்கள், சண்டைக்காரர், வேறு வழிகளில்... எனத் தரம் பிரித்து, 200க்கும் மேற்பட்ட கைதிகளைத் தனியாக நிலத்தில் அமர விட்டனர். அதில் நானும் எனது நண்பர்கள் சிலரும் அடங்கியிருந்தோம். பின்னர் தான் தெரியவந்தது எங்கள் அனைவரையும் களுத்துறையிலிருந்து பூசா சிறைக்கு மாற்றப்போகிறார்கள் என்பது. பகல் பொழுதிலிருந்து சிறைச்சாலை பஸ்களில் கைதிகள் ஏற்றப்பட்டனர். எம்மை ஏற்றும்போது இரவு 9மணிக்கு மேலாகிவிட்டது. மிக நீண்ட சங்கிலியில் அனைவரையும் பிணைத்து ஒரு கைக்கு மட்டும் விலங்கிடப்பட்டு, மறு கையில் எமது உடமைகளை எடுத்துக்கொண்டு பஸ்ஸில் ஏறி இறங்குவது மிகவும் சிரமமாக இருந்தது. பூசாவில் இறங்கியதும் உள்ளே கொண்டுபோய் விட்டார்கள். ஒரு தொடருந்தை இரவு நேரத்தில் நிறுத்தி வைத்திருப்பது போன்று மிக நீண்ட சிறைக்கூடமாக அது இருந்தது. ஓர் அறைக்குள் நாங்கள் எட்டுப்பேர் அடைக்கப்பட்டோம். தூசு படிந்து மிகவும் அசுத்தமாக இருந்த அந்த அறையை எம்மிடமிருந்த பழைய துணிகளால் நிலத்தைத் துடைத்துவிட்டுப் படுத்தோம்.

## கொழும்புக்கு அருகில் ஒரு கொலை வலயம்

நாங்கள் அடைக்கப்பட்ட சிறை அறைக்குள் நிலத்தில் இருந்து இரண்டு அடி உயரத்தில் நடுத்தூணில் இரும்பு வளையம் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. 4 அங்குல விட்டமுள்ள காப்புப் போன்ற இரும்பு வளையம் இன்னோர் இரும்பில் பொருத்தி, சுவரில் உறுதியாகப் பொருத்தப்பட்டிருந்தது. அருகில் இரு அறைகளுக்குள்ளும் பூட்டப்பட்டிருந்த அயல் கைதிகளிடம் "உந்த அறைக்குள் இரும்பு வளையம் ஒன்று இருக்கா?" என்று கேட்டபோது அவர்கள் "ஆம்" என்றார்கள்.

மறுநாள் காலை 6 மணிக்கு எண்ணிக் கணக்கிட்டபோதுதான் தெரிந்தது நாங்கள் பூட்டப்பட்ட அறைகளைப்போல அங்கு 31 அறைகள் உள்ளன என்றும், அரைச் சுவருள்ள 6கழிப்பறைகள், ஒரு கிணறு, தண்ணித் தொட்டி என்பன இருப்பதும். சுற்றிவர மதில், மதிலின்மேல் கம்பிவேலிகள் அதையும் தாண்டி இராணுவத்தின் காவற்கோபுரங்கள் ஆயுதம் தாங்கிய இராணுவத்தினர் அவற்றில் நின்றார்கள். களுத்துறையைவிட மிக இறுக்கமான ஒரு கொலை வலயத்துக்குள் மாட்டியிருக்கிறோம் என்பது புரிந்தது.

அதைவிட, பூசா முகாமில் ஏற்கனவே பல தமிழ்க் கைதிகள் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட செய்திகளும் நினைவுக்கு வந்து போயின. நான் பல சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டிருக்கிறேன். ஆனால் பூசா சிறைச்சாலையைப் போன்றதொரு அமைப்பு வேறெங்குமில்லை. கொழும்பிலிருந்து காலி நகரம் நோக்கிச் செல்கையில் காலி நகரத்துக்கு 5 கிலோ மீற்றர் முன்னதாக கடற்கரையிலிருந்து கிழக்காக ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் அந்தச் சிறைச்சாலை இருந்தது. அதன் அருகில் இலங்கையின் தென்பகுதிக்குரிய மிகப்பெரிய இராணுவ முகாம் ஒன்றும் இருந்தது.

## "இஞ்ச சேட்டை விடேலாது..."

பூசாவில் இறக்கப்பட்ட அன்றிரவு எம்மைப் பதிவு செய்து எடுத்த சிறை அதிகாரி, "எல்லோருக்கும் சொல்றன் களுத்துறையிலோ ஏனைய சிறைச்சாலைகளிலோ விட்ட சேட்டைகள் இங்கு சரிவராது. உங்களை ஏன் இங்க மாற்றினார்கள் என்று ஞாபகமிருக்கும் என நினைக்கிறேன்" என்று ஒரு கடுப்பான வரவேற்புரையை நிகழ்த்தினார். சிறைச்சாலைகளில் ஒவ்வொரு கைதியும் தனது குடும்பத்தையும், ஊரையும், நண்பர்களையும், நல்ல சாப்பாடுகளையும் நினைவுகூர்ந்தவாறு எப்போதும் பேசிக்கொண்டும், யோசித்துக்கொண்டும் இருப்பார்கள். ஆனால் இங்கோ ஆளுக்காள் ஆறுதல் கூறுவது மட்டும்தான் ஒவ்வொரு கைதிகளுக்கும் சாத்தியமாக இருந்தது. ஏற்கனவே பல வருடங்களை சிறைக்குள் கழித்துவிட்ட கைதிகள், மாவீரர் நாள், அன்னை பூபதி, திலீபன், கரும்புலிகள் நாள் என முக்கிய தினங்களை நினைவுகூரும் வழக்கம் இருந்தது. அன்றும் மாவீரர் நாளை எவ்வாறு சிறைக்குள் இருந்து கடைப்பிடிப்பது என்று அவர்கள் ஏற்கனவேதிட்டமொன்றை வைத்திருந்தார்கள். அதற்கான பொருள்களைத் தேனீக்கள், பூக்களிலிருந்து தேன் சேர்ப்பதுபோல கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்து வைத்திருந்தார்கள். இது புதியவர்களாகிய எமக்குத் தெரிந்திருக்கவில்லை. மாவீரர் நாள் விளையாட்டுப் போட்டிகளாக டாம், செஸ், கிளித்தட்டு, கரம் போன்ற பல விளையாட்டுக்கள் நடத்தப்பட்டன. அன்று மாலையில் எம்மை அடைப்பதற்கு முன்னர் பழைய கைதிகள் எதையோ சைகைமூலமும், காதுகளுக்குள்ளும் கடத்துவதை அவதானிக்க முடிந்தது. மாலை 6மணிக்குக் கைதிகள் ஒவ்வொருவராக எண்ணப்பட்டு அந்தந்தச் சிறை அறைக்குள் பூட்டப்பட்டனர்.

## 2001ஆம் ஆண்டு, நவம்பர் 27 இரவு 6.05மணி.

அன்று மாவீரர் நாள் என்பது கைதிகளின் எண்ணத்தில் உறைந்திருந்ததே தவிர, பூசா சிறைச்சாலை அதிகாரிகளின் எண்ணத்தில் இது பற்றிய எந்தவித சலனமும் இருக்கவில்லை. ஏறத்தாழ 200 கைதிகள் வரை அங்கு அடைக்கப்பட்டிருந்தோம். சிறை பூட்டப்பட்டதும் எமது அறைக்குள் நான்கு பேர் இருந்தோம். அதில் அருள் என்பவன் தான் போட்டிருந்த ரீசேட்டை உயர்த்தி, நான்கு சிறிய குச்சிகளையும் வெள்ளைத் துணியால் சுற்றப்பட்ட பந்தங்களையும் இடுப்புச் சாரத்திலிருந்து பிடுங்கி எடுத்தான். சிறைச்சாலைக்குள் கைதிகள் தலைக்கு வைப்பதற்காக வழங்கப்படுகின்ற தேங்காய் எண்ணெய்யை ஒரு பிளாஸ்ரிக் பவுடர் போத்தலுக்குள் விட்டு வைப்பது வழக்கம். அந்த எண்ணெயை ஒரு தட்டில் ஊற்றிவிட்டு அவசரமாகப் பந்தங்களைத் தோய்த்து எடுத்தான்.

'6.05க்குக் கதவில் தட்டியவுடன் பந்தத்தைக் கொழுத்தவேணும்' என்றான் அருள். சிறைச்சாலைக்குள் தீப்பெட்டியோ, லைற்றரோ வைத்திருப்பதற்கு அனுமதியில்லை. எம்மை இரவு பூட்டுவதற்கு முன் அறைகளைப் பரிசோதிக்கும்போது அவ்வாறு ஏதாவது இருந்துவிட்டால் அதிகாரிகள் எடுத்துச் சென்று விடுவர். அன்றைய தினம் 31 அறைகளிலும் (32 ஆவது அறை முடி வெட்டுவதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது) எரியூட்டும் ஏற்பாடு இருந்திருக்கிறது. சகல அறைகளையும் பூட்டிவிட்டுச் சிறைச்சாலை அதிகாரிகள் சென்றவுடன் உரிய நேரத்தில் சிறைக்கூடத்துக்கு நடுவில் இருந்த அறைக் கதவில் அடித்துச் சத்தம் கேட்டது. சகல பந்தங்களும் கொழுத்தப்பட்டன.

## 'தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே!'

அங்கிருந்த எல்லாக் கைதிகளும் ஒவ்வொரு பந்தங்களைக் கையில் எடுத்து கதவுப் பக்கமாக முதுகைக் காட்டியபடி நிற்க, சேரனும், பிறேமும் "தாயகக் கனவுடன் சாவினைத் தழுவிய சந்தனப் பேழைகளே...." என்ற பாடலை உச்சமான சத்தத்தில் பாடினார்கள். அது ஒரு மிக நீண்ட பாடல், வழக்கமாகச் சிறைச்சாலை பூட்டப்பட்டதும் அதிக சத்தம் கேட்பது வழக்கம். அன்று வழமைக்கு மாறாக சிறைக்கைதிகள் அமைதியாயிருந்தமை சிறைச்சாலை ஊழியர்களுக்குச் சந்தேகத்தை ஏற்படுத்தியது.


எது நடந்தாலும் தீபத்தை பாடல் முடியும் வரை தீபத்தை அணைப்பதில்லை என்பதில் உறுதியாக இருந்தோம். சிறை அதிகாரிகள் பலர் நடந்து வருகின்ற சப்பாத்துக் காலடி ஓசை கேட்டுக்கொண்டிருந்தது. எங்கள் அறையைக் கடந்து அவர்கள் நடந்து செல்வதை உணர முடிந்தது. பந்தம் அணைந்ததும் குச்சிகளை அறையின் பின்புறமாக இருந்த சிறிய யன்னல் வழியாக எறிந்துவிட்டு எதுவும் நடக்காததுபோல் இருந்தோம். மறுநாள் விடியற்காலையில் கதவு திறக்கும்போது தாக்கப்படுவோம் அல்லது அடுத்தநாளே நாங்கள் அனைவரும் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றப்படக்கூடும் என்ற எதிர்பார்ப்பில் இருந்தோம். ஆனால், பூசா சிறைச்சாலை நிர்வாகம் இதுவிடயத்தில் எதுவும் பேசவில்லை. யார் மீதும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்தக் கைதிகள் எதையும் செய்யத் துணிந்தவர்கள் என்ற முடிவுக்கு நிர்வாகம் வந்திருக்கவேண்டும்.

## மாவீரர் குடும்பங்கள் மதிக்கப்பட வேண்டியவை

பொதுவாக அங்கு அடைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் என்று பார்த்தால் வடகிழக்கைச் சேர்ந்த புலிப்போராளிகள், ஆதரவாளர்கள், உத்தியோகத்தர்கள், மாணவர்கள், மத போதகர்கள், வயோதிபர்கள், நோயாளர்கள் எனப் பல்வேறுபட்டவர்கள் தான் இருந்தார்கள். அங்கிருந்த கைதிகளில் யாராவது ஒருவர் நிர்வாகத்திடம் "மாவீரர் தினத்தைக் கொண்டாட இருக்கிறார்கள்" என்று தெரிவித்துவிட்டால் நிலமை மோசமாகிவிடும் என்பதால், இதை ஒழுங்கு செய்தவர்கள் அதிஉச்சமான இரகசியமாக அதைக் பேணிக் கச்சிதமாக நடத்தி முடித்திருந்தார்கள்.

மிக இரகசியமாகச் திட்டமிடப்பட்ட இந்த மாவீரர் நாள் முற்றுமுழுதாக எதிரிகளின் வியூகத்துக்குள் நின்று நிறைவேற்றப்பட்ட ஒன்றாகும். இறுக்கமானதொரு பயங்கரச் சூழலில் புலிக் கைதிகள் எனச் சந்தேகிக்கப்பட்ட நிலையில் அதை மேற்கொண்டதை நினைத்தால் இன்றும் மெய் சிலிர்க்கிறது. மாவீரர்கள் என்போர் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் என்று மட்டும் அர்த்தப்படாது. தமது ஊரை விட்டு, வீட்டைவிட்டு, சுகபோக வாழ்க்கையை உதறிவிட்டு நாட்டுக்காக இறந்த அனைவரும் மாவீரர்களே. அவர்களின் உயிர்கள் மிகவும் பெறுமதிமிக்கவை. பேணப்படவேண்டியவை. மாவீரர்களை இழந்த குடும்பங்கள் எப்போதும் மதிக்கப்படவேண்டியவை.






# முகாபேக்கு முற்றுப்புள்ளி

பிரகாஸ்

## ரவுண்ட் தி வேர்ள்ட்

சிம்பாப்வேயில் இராணுவப் புரட்சியின் மூலம் சர்வாதிகார ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு ஜனநாயக முறைப்படி ஆட்சியை நடத்துவதற்கான, நடைபெறுவதற்கான அத்திபாரத்தை அமைத்துள்ளது சிம்பாப்வே இராணுவம். பிரித்தானியாவிடம் இருந்து கடந்த 1980ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றது சிம்பாப்வே. அன்று முதல் அந்த நாட்டின் அதிபராக செயற்பட்டு வந்தார் முகாபே. கிட்டத்தட்ட 38 ஆண்டுகள் அவர் சிம்பாப்வேயின் அதிபராகப் பதவி வகித்தார். பிரித்தானியாவுக்கும் ஏனைய மேற்குலக நாடுகளுக்கும் சிம்மசொப்பனமாகத் திகழ்ந்த முகாபே, தனது அதிகாரத்தைத் தக்கவைக்க காலப்போக்கில் சர்வாதிகாரத்தைக் கையிலெடுத்தார்.

துணை அதிபர் எமர்சனுக்கு சிம்பாப்வேயில் ஆதரவு இருந்தது. முகாபே தனக்குப் பின்னர் தனது மனைவியை ஆட்சிப்பீடம் ஏற வைக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார். இதனால் எமர்சனை பதவிநீக்கம் செய்தார். இராணுவத் தலைமைத் தளபதி சிவெங்கா முகாபேயின் இந்த நடவடிக்கைக்குக் கண்டம் தெரிவித்தார். கடந்த முதலாம் திகதி இரவோடு இரவாக தலைநகர் ஹராரேயைச் சுற்றி இராணுவம் குவிக்கப்பட்டது. சத்தமில்லாமல் கைமாறியது ஆட்சி. இராணுவம் நினைத்திருந்தால் ஆட்சியைத் தமது கட்டுப்பாட்டில் வைத்திருக்கலாம். ஆனால் ஜனநாயக ரீதியான அணுகுமுறைகளால் ஆட்சி எமர்சனிடம் கொடுக்கப்பட்டுள்ளது. சிம்பாப்வே இராணுவமும் பொதுமக்களும் மகிழ்ச்சிக் கொண்டாட்டங்களில் ஈடுபடும் படங்கள் பன்னாட்டு ஊடகங்களால் வெளியிடப்பட்டுள்ளன.



'குருதி சிந்தாமல் ஏற்பட்ட மாற்றம்...'

## பாசக்கார நாய்!

தனது உரிமையாளரைக் காணாது உணவு ஒறுப்பில் ஈடுபட்டு உயிரிழந்துள்ளது ஒரு நாய். இந்தச் சம்பவம் கொலம்பியாவில், வானூர்தி நிலையமொன்றில் இடம்பெற்றது. கடந்த மாதம் உரிமையாளருடன் வானூர்தி நிலையத்துக்கு வந்தது இந்த இரண்டு வயது நாய். உரிமையாளர் ஏனோ இந்த நாயை அழைத்துச் செல்லாமல், தனியே சென்றுவிட்டார். நாள்கள் நகர்ந்தன. ஆனால் உரிமையாளர் திரும்பி வரவேயில்லை. மனமுடைந்து போன நாய், வானூர்தி நிலைய ஊழியர்களும் பயணிகளும் கொடுத்த உணவுகளைச் சாப்பிடாமல் புறக்கணித்தது. தண்ணீர் பருகுவதையும் கைவிட்டது. நாளுக்கு நாள் உடல் மெலிந்தது. மன அழுத்தத்துக்கு உள்ளானது. நடக்கக்கூடத் தெம்பு இல்லாத நிலையிலும் உரிமையாளர் வந்துவிட மாட்டாரா என்று ஏங்கிக்கொண்டிருந்தது. இறுதியில் தனது சாவை தானாகவே அது தேடிக்கொண்டது.



'ம்ம்ம்... பாசக்கார நாய்தான்...'




## வடகொரியாவுக்கு தீவிரவாத முத்திரை

தீவிரவாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் வடகொரியாவையும் சேர்த்து நடவடிக்கை எடுத்துள்ளது அமெரிக்கா.

வடகொரியா தொடர்ந்து தீவிரவாதத்தை ஆதரித்து வருகிறது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப், கருத்துத் தெரிவித்ததைத் தொடர்ந்தே தீவிர வாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் வடகொரியாவை இணைத்தது அமெரிக்கா. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அண்மையில் ஆசிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தார். இந்தப் பயணத்தின் போது, 'அத்துமீறி ஏவுகணைச் சோதனை நடத்திவரும் வடகொரியாவின் நடவடிக்கைகளைத் தடுக்க வேண்டும்' என்று ஜப்பான், சீனா, வியட்நாம், பிலிப்பைன்ஸ் நாடுகளை வலியுறுத்தியிருந்தார். இதன் தொடர்ச்சியாக அமெரிக்காவில் வைத்தும் வடகொரியாவுக்கு எதிராக நீண்ட உரையாற்றிய அவர், தீவிர வாதத்தை ஆதரிக்கும் நாடுகளின் பட்டியலில் வடகொரியாவையும் இணைத்துள்ளார்.

'இது எங்கபோய் முடியப்போகுதோ...'

## சாட்சியம்



மியன்மார் அரசின் பிடியில் இருந்து பங்களாதேஷுக்குள் தப்பித்து வந்த பைசல் என்ற 13 வயதுச் சிறுவன் மியன்மார் இராணுவத்துக்கு எதிராகச் சாட்சியமளித்துள்ளான்.

இதன்படி, மியன்மார் இராணுவத்தின் தாக்குதல் ஒன்றில் தனது கை துண்டாடப்பட்டது என்று அவன் தெரிவித்துள்ளான். கடந்த ஓகஸ்ட் மாதம் முதல் மியன்மார் இராணுவம் ரொஹிங்யர்களுக்கு எதிராக கடுமையான போக்கைக் கடைப்பிடித்து வருகிறது. இதனால் தனது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு பங்களாதேஷுக்குள் அடைக்கலம் தேடியுள்ள ரொஹிங்யர்களின் எண்ணிக்கை சுமார் 6 லட்சத்தைத் தொட்டுள்ளது.

'பிஞ்சுகளும் வதைபடுகின்றன...'



## விடுவிப்பு!

2008ஆம் ஆண்டு மும்பையில் நடத்தப்பட்ட தாக்குதலுக்கு மூளையாகச் செயற்பட்ட ஹபீஸ் சயீத்தை விடுவிக்க லாகூர் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. மும்பையில் 2008ஆம் ஆண்டு நடந்த தாக்குதலின் மூளையாகச் செயல்பட்ட ஹபீஸ் சயீதை ஐ.நா., மற்றும் அமெரிக்கா பயங்கரவாதி என்று ஏற்கெனவே அறிவித்துள்ளன. பாகிஸ்தானில், கடந்த ஜனவரி முதல் வீட்டுக்காவலில் ஹபீஸ் சயீத் இருந்து வருகிறார். அவரது வீட்டுக்காவல் நேற்றுமுன்தினத்துடன் முடிவடைந்த நிலையில் அவர் விடுவிக்கப்பட்டுள்ளார்.

'இது போதுமே பதற்றம் மீண்டும் தோன்ற...'



# ஒரு கிராமத்தின் கதை...

கட்டுரை

நடராசா லோகதயாளன்

வாராந்தம் 500வரையான லொறிகளில் தன்னுடைய விவசாய உற்பத்திகளைத் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்த ஒரு விவசாயக் கிராமம் இன்று தன்னுடைய விவசாயத் தேவைகளை நிறைவு செய்துகொள்வதற்கு இன்னொரு கிராமத்தைத் திரும்பிப் பார்க்கும் நிலையில் இருக்கிறது. அந்தக் கிராமம் எதிர்கொண்டிருக்கும் இந்த மாற்றத்தை வெளிக்கொண்டுவர விரும்பிக் குறித்த கிராமத்துக்குள் நுழைகின்றேன்.

வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் இருக்கும் திருவையாறு விவசாயக் கிராமமே இது. நகரின் மத்தியில் இருந்து 3 கிலோ மீற்றர்கள் தொலைவில் உள்ளது. இந்தக் கிராமம் யாழ்ப்பாணத்திலிருந்த வேலையற்ற இளைஞர்களை அழைத்துச் சென்று காடுவெட்டி, கட்டை பிடுங்கி, வேலிகள் அமைத்து முதன் முதலாக உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்ட கிராமம் இன்று திருவையாறு 1ஆம், 2ஆம், 3ஆம், 4ஆம் பகுதிகள் எனப் பரந்துபட்ட கிராமமாக மாறியுள்ளது. இந்தக் கிராமத்தினை உருவாக்கிய காலம் முதல் இன்றுவரை அங்கு வாழ்ந்துவருகின்றமையால் வீழ்ச்சியடைந்திருந்தமை, அந்தக் கிராமத்தின் வரலாற்றை அறிந்தவராகவிருக்கும் ஓய்வு பெற்ற கூட்டுறவுப் பொதுமுகாமையாளரும் மூத்த விவசாயியுமான 71வயதுடைய சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை அந்தக் கிராமத்தின் விவசாய உற்பத்திகள் தொடர்பில் இப்படிக் கூறுகிறார்.

### சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை

'திருவையாறுக் கிராமத்தில் 1967ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்காவின் ஆட்சிக் காலத்திலை முதன் முதலாக ஒருவருக்கு 3ஏக்கர் என்ற விகித்திலை 100பேருக்குக் காணி வழங்கப்பட்டன. அதுக்குப் பிறபு 2ஆம் பகுதியிலை 1972 ஆம் ஆண்டிலை ஆளுக்கு 3ஏக்கர் படி 267 பேருக்குக் காணிகள் வழங்கப்பட்டன. பிறகு1973 ஆம் ஆண்டிலை 3ஆம் பகுதி இடத்திலலை ஆளுக்கு 2ஏக்கர்படி 164பேருக்குக் காணிகள் வழங்கப்பட்டன. இது கிராமிய விஸ்தரிப்புத்திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அதுக்குப் பிறகு படிச்சிட்டு வேலையில்லாமல் இருந்த 176வரையான பெண்களுக்கு 1அரை ஏக்கர்படி 4ஆவது பகுதியிலை காணிகள் வழங்கப்பட்டது. இப்பிடியாகக் கிராமத்தின் 4 பகுதிகள் முழுவதுமாக 707குடும்பங்களுக்கே முதன் முதலாக அரசால் நேரடியாகக் காணிகள் வழங்கப்பட்டன. இதில் குடியேறிய மக்களில் நெடுந்தீவில் இருந்து வந்த நானும் ஒருவன். அந்தக்காலம் எனக்கு இப்பவும் ஞாபகம் உள்ளது. இந்த மண்ணில்... இந்தக் காட்டில் நான் கால் வைக்கும்போது எனக்கு 24வயது. இளமைக் காலம் நான் 2ஆம் பகுதி குடியேற்றத் திட்டத்தில் வந்தவன். நானே காடுவெட்டி, கட்டை புடுங்கி இந்த வேலி அமைத்தேன். அதன் பின்பு ஒரு கிணற்றையும் வெட்டி ஒரு கொட்டிலையும் அமைத்துத் தங்கினேன்.



அப்போது எமது விவசாயத்துக்கு நம்பிக்கையைத் தந்தது இரணைமடுக்குளம் மட்டும் தான். இரணைமடுக் குளத்தின் மூலம் எமக்கு ஏற்று நீர்ப்பாசண வசதி ஏற்படுத்தி நீர் வசதியைச் செய்து தந்தார்கள். எனக்குத் தந்த 3ஏக்கரிலை வீட்டையும் வான் பயிர்களையும் ஒரு ஏக்கரிலையம், ஒரு ஏக்கர் நிலமளவிலை ஏற்று நீர்ப்பாசண நீரில் விவசாயமும், மற்ற ஒரு ஏக்கர் நிலத்திலை கிணற்று நீரில் விவசாயமும் மேற்கொள்ள வேண்டும் என்பதே நிபந்தனை. நாம் காடுவெட்டிக் குடியிருப்பு அமைப்பதற்கு மண்வெட்டி உள்ளிட்ட சில உபகரணங்களும் சில மாதங்களுக்கான உலர் உணவுகளும் வழங்கப்பட்டன.

அதிகாலை 5 மணிக்கு எழுந்து தோட்டச் செய்கையில் ஈடுபட ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் சந்தைப்படுத்தல் பிரச்சினையாக இருந்தபோதும் பின்னர் வாரத்தில் இரண்டுநாள் சந்தையின் மூலம் நிறைவான முறையில் சந்தைப்படுத்த ஆரம்பித்தோம். அந்தச் சந்தை வெள்ளி இரவு ஆரம்பித்து சனிக்கிழமை இரவு வரைக்கும் இடம் பெறும். அதேபோன்று புதன் கிழமையிலும் இடம்பெறும். இதில் சனிக்கிழமைச் சந்தைக்கு கிளிநொச்சியில் இருந்து 350க்கும் மேற்பட்ட லொறிகளிலை தெற்குக்கும், யாழ்ப்பாணத்துக்கும் மரக்கறிகள் மற்றும் வாழைக்குலைகள் ஏற்றப்படும். அதேபோன்று புதன் கிழமைகளில் 150க்கும் மேற்பட்ட லொறிகளிலும் இப்படியாக விவசாயப் பொருள்கள் ஏற்றப்படும். வாராந்தம் 500க்கும் மேற்பட்ட லொறிகளை நிரப்பி அனுப்பியிருந்தது எமது விளைநிலம். ஆனால், இன்று வாரந்தம் 100 லொறிகளுக்கு மேலாக மரக்கறிகளைத் தம்புள்ளையில் இருந்து எதிர்பார்க்கும் நிலமைக்கு வந்துவிட்டது. எமக்குரிய ஏற்று நீர்ப்பாசண நீரில் தடங்கல் ஏற்பட்டதால், நிலத்தடி நீரை விவ சாயத்துக்குப் பயன்படுத்தினோம். இதனால் 15தொடக்கம் 20 அடிக்குள் காணப்பட்ட நிலத்தடி நீர் 35தொடக்கம் 40அடிக்குக் கீழ் சென்றது. நிலத்தடி நீர் ஆழத்துக்குச் சென்றதால் தேங்காய் விளைச்சலும் குறைவடைந்தது. இதனால் 1983ஆம் ஆண்டுக்குப் பின்னர் மாற்றுத் திட்டங்களையும் கைக்கொண்டோம். இதன்போது அயல் கிராமங்களான மகிழங்காடு, மருதநகர், முரசுமோட்டைப் பகுதிகளில் நெற்செய்கைகளில் ஈடுபட நேர்ந்தது" என்று தனது கதையை இடையில் முடித்தார் அவர். அன்று செழித்திருந்த விளைநிலம் தகுந்த கவனிப்புக்களை, செயற்றிட்டங்களை அரசு மேற்கொள்ளாமல் விட்டதால் இன்றைக்குச் சோபையிழந்து கிடக்கிறது.


### கணபதிப்பிள்ளை தொடர்ந்தார்...

"விவசாயத்தோடை கால் நடை வளப்பிலையும் ஈடுபட்டன். அதிகமான வீடுகளில் தமது தேவைக்கும், வயல் உழவுகளுக்கும் என கால் நடைகளும் வளர்க்கப்பட்டன. 300, 400மாடுகள் வளர்த்தேன். 6 பட்டிகள் இருந்தன. என்ர மாடுகளுக்கு இரணைமடுக் குளத்தின் கரைப்பகுதிகளே மேச்சல் தரையாக விளங்கியது. அந்தக் காலத்து வருமானமே என்னுடைய 3பிள்ளைகளையும் வளர்க்க உதவியது. அப்போது என்னிடம் சிந்து, கந்தாயம், காங்கி, தார்ப்பகார், கிளாறி இன மாடுகளும் ஒண்டிரண்டு உள்ளூர் இன மாடுகளும் காணப்பட்டன. இப்பிடியாக அல்லும் பகலும் உழைத்துக் கட்டியெழுப்பிய எமது கிராமம் போர்க் காலத்தில் பல்லாயிரக்கணக்கானோரின் அடைக்கல பூமியாகவும் திகழ்ந்தது. இறுதிப்போரில் பொரிய அழிவுகளையும் சந்தித்தது" என அவர் கூறி முடித்தார்.

தற்போது திருவையாறு 1ஆம் பகுதி சுமார் 500காணிகளாகவும், 2ஆம் பகுதி 1200காணிகளாகவும், 3ஆம் பகுதி 1100வரையிலான காணிகளாகவும் பிரிந்துவிட்டன. அதாவது 531குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிலப் பகுதிகள் 2ஆயிரத்து 800 துண்டுகளாகிவிட்டன. இதனால் அதிகமானோர் விவசாயத்தைக் கைவிட்டனர். உற்பத்திகள் குறைந்தன. கிராமத்தின் 3ஆம் பகுதியில் குடியமர்ந்த இன்னோருவர் இவர். விவசாயத்தின் மூலமும் ஆசிரியர் தொழிலின் ஊடகவும் வருமானத்தைத் தேடித் தனது 3 பிள்ளைகளை வைத்தியர்களாக உருவாக்கியிருக்கிறார். ஓய்வு பெற்ற அதிபராகவிருக்கும் க. இராசேந்திரத்தை அணுகியதில் அவர் இவ்வாறு தனது கருத்தைப் பகிர்ந்து கொண்டார்.

### ஓய்வுபெற்ற அதிபர் க.இராசேந்திரம்

'அன்று நாம் குடியமர்ந்த காலத்தில் எந்த விதமான வசதிகளுமே கிடையாது. 1973ஆம் ஆண்டு குடியேறியிருந்தாலும் 1980ஆம் ஆண்டிலேயே மின் சாரத்தைக்கண்டோம். அதேபோன்று 1985ஆம் ஆண்டில் கிளிநொச்சி மாவட்டம் தனி மாவட்டமாகப் பிரியும் வரை யில் யாழ்ப்பாணத்துக்கே மாவட்டச்செயலகத்துக்குச்செல்ல வேண்டும். சிறப்பான பொருளாதார ஈட்டம் கிடைத்தது எமக்கு வாய்ப்பாய்ப் போனது. இன்று முயற்சி இருந்தாலும் பழைய நிலமை கிடையாது. இன்று திருவையாறில் 1ஆம் பகுதியில் 400 குடும்பங்களும், 2ஆம் பகுதியில் 300குடும்பங்களும், 3ஆம் பகுதியில் 265குடும்பங்களும், 4ஆம் பகுதியில் 40குடும்பங்கள் அளவிலேயே வசிக்கின்றன. இந்தக் குடும்பங்களுக்கு விவசாயம் மேற்கொள்ள நில வாய்ப்புப் போதுமானதாக இல்லை. பங்கீட்டால் காணிகள் குறைந்து விட்டன. அதேபோன்று வான் பயிர்களும் அதிக இடங்களைப் பிடித்து விட்டன. கிளி நொச்சியை மீண்டும் விவசாய, சிறுதானிய, தோட்டச் செய்கையில் தன்னிறைவான மாவட்டமாக மாற்றிப் பழைய சந்தை வாய்ப்பையும் பெறுவதற்கு ஒவ்வொரு விவசாயிகளுக்கும் தன்னிறைவளிக்கக்கூடிய அளவுக்கு நிலம் தேவை. விவசாய நிலம் போதாதுள்ளமையே தற்போதுள்ள பிரச்சினை. குடிமனைகள் அதிகரிக்கக் காணி துண்டாடப்படுகிறது" என்றார்.



இதேநேரம் இந்தக் கிராமத்துக்கு அருகில் வீதியோரமாக ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பை விவசாயத் தேவைக்காகப் படையினர் அடாத்தாகப் பிடித்து வைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

> தற்போது திருவையாறு 1ஆம் பகுதி சுமார் 500காணிகளாகவும், 2ஆம் பகுதி 1200 காணிகளாக வும், 3ஆம் பகுதி 1100 வரையிலான காணி களாகவும் பிரிந்துவிட்டன. அதாவது 531 குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட நிலப்பகுதிகள் 2ஆயி ரத்து 800 துண்டுகளாகிவிட்டன.

கட்டுரை

பழனித்துரை தர்மகுமாரன்

# தமிழர்களின் வரலாற்றில் கார்த்திகை மாதம்

தமிழர்களின் வரலாறானது நீண்டது நொடியது. அழிவுகளைக் கண்டு அஞ்சி நடுங்கி வாழ்ந்த சரித்திரமும் இல்லை. அந்த வகையிலே எமது முன்னோன், கடவுள் முருகன் எதிரியை வேல் கொண்டு வீழ்த்தினான். எமது பாட்டன், முப்பாட்டன் எதிரியை வாள்கொண்டு வீழ்த்தினார். எமது மன்னர்கள் (எல்லாளன், சங்கிலியன்) முப்படைகள் அமைத்து எதிரியை வீழ்த்தினார்கள்.

இந்த வரலாற்றைத் தாண்டி உலகத் தமிழினத்தின் ஒப்பற்ற தலைவன் உலகப் படைகளுக்கு நிகராக (கடல், தரை, விமானம்) முப்பரிமாண அமைப்புகளையும் அதையும் தாண்டி உயிரையே ஆயுதமாகப் பயன்படுத்தித் தாக்கும் பிரிவையும் உருவாக்கி எதிரிகளை வீழ்த்தினான்.

"பப்பாளி மரம் பலகையாகாது பயந்த உள்ளம் உலகை ஆழாது" என்னும் மொழியியலுக்கு ஏற்ப உலக வரலாற்றில் தமிழினத்தைத் தூக்கி நிறுத்தி, அவர்களின் சுய நிர்ணயம், மரபு வழித் தாயகம், அடிப்படை அபிலாசைகள் என்பன இலங்கையிலே வாழும் தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும் என ஆயுதம் ஏந்திப் போராடினான். ஆயுதப் போராட்டத்தில் தமது உயிர்கள் எப்பொழுதும் பிரியலாம் என்று தெரிந்துகொண்டும் தலைவன் வழியில் தமிழினதுக்காக உயிரைக் கொடுத்தவர்கள் எம் உறவுகள். அவர்களைக் கார்த்திகை மாதம் வந்தால் எல்லாத் தமிழ் உறவுகளும், மனதில் இருத்தி நினைவு கூருகின்றன. அதை எவராலும் தடுத்துவிட முடியாது.

## தமிழனாக வாழவிடு இல்லையேல் தனித்து வாழவிடு

காந்திதனது "சத்தியசோதனை" என்னும் சுயசரிதையில் "21வயது என்னைப் படாய்ப்படுத்தியது. அதனைக் கட்டுக்குள் கொண்டுவரக் கடினப்பட்டேன்" எனக் குறிப்பிட்டுள்ளார். ஆனால் எமது மாவீரர்கள் தமிழினம் அழிந்து விடக் கூடாது என்பதற்காகத் தமது உயிர்களை அழித்தவர்கள். மாவீரர்கள் யார்? எமது உடன் பிறப்புக்கள். உணர்வுகள், உறவுகள், தாயகக் கனவை நனவாக்க வேண்டும் என்பதற்காகத் தமது ஆசாபாசங்களைத் திறந்து கழுத்தில் நஞ்சைக் கட்டித் தமிழினத்துக்காக எப்பொழுதும் உயிரை திறப்போம் என்ற இலட்சியத்துடன் வாழ்ந்து மடிந்தவர்கள்.

"சாகத் துணிந்தவன் சரித்திரமாகி விட்டன்
சாகப் பயந்த நாம் தரித்திரமாகி விட்டோம்"

சாவினைத் தோளில் சுமந்து இரவு பகல் பராது தமிழினத்தைப் பாதுகாத்து வந்தார்கள். இதனால் தமிழினத்தின் மீது தூசு துணிக்கைகள் கூட விழுவதற்குப் பயந்தன அந்த அளவுக்குப் பலமாகவும் ஒழுக்கமாகவும், கட்டுக்கோப்பாகவும் போராட்டத்தில் ஈடுபட்டு தமிழனுக்குப் பலமாக இருந்ததுடன் எதிரிக்குப் பயத்தையும் ஏற்படுத்தியவர்கள்.

புரட்சியாளன் சேகுவாரா கூறியது போல "எவன் பெயரைச் சொன்னால் எதிரி நடுங்குகிறானோ அவனே அந்த இனத்தின் தலைவன்" அதுபோலவே தமிழினத்தின் தலைவன் காணப்பட்டான். ஏனெனில் இருக்கும் போதும் பயந்தான். இல்லாத போதும் பெயரை நினைத்து நினைத்து எதிரி ஏங்குகிறான்.

எனவே இருக்கும்போது அவன் தலைவன் இறந்த பின்னர் அவன் இறைவன் என்னும் அளவுக்கு தமிழினத்துக்கு ஒப்பற்ற அளப்பரிய தனித்துவத்தை ஏற்படுத்தித் தமிழனைத் தமிழனாக வாழவிடு, இல்லையேல் தனித்து வாழவிடு. இரண்டும் இல்லையேல் இலங்கை அமைதியாக இருக்காது என்று கூறியவன் தன்மானத் தமிழன் அந்தத் தலைவன்.



> "வேரை இழந்த மரமும் வரலாற்றை இழந்த இனமும் வாழ்ந்ததாக சரித்திரமில்லை" எனவே வரலாறுகள் பாதுகாக்கப் படவேண்டும் அது எமது அடுத்தடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டும்

## புனிதமான மாதத்தில் நல்லதையே செய்வோம்

இலங்கை அமைதியற்றே காணப்படுகின்றது. அமைதிக்கான ஒலிக்கீற்று இன்னும் தென்படவில்லை. அதாவது பொருளாதாரத்தில் வீழ்ச்சி, ஏற்றுமதியில் வீழ்ச்சி, பிறப்பு வீதம் குறைவு, இறப்பு வீதம் அதிகம் இதற்குக் காரணம் தமிழினத்தின் எதிர்பார்ப்புகள் பூர்த்தியடையாமையே. எனவே தமிழினத்துக்கான தீர்வு ஏற்றுக்கொள்ளத்தக்க சுதந்திரம், சுயநிர்ணயம் சமத்துவத்துடன் இருத்தல்வேண்டும். தாயின் கருவறையில் இருந்து வெளிவரும்போது அன்பு, பாசம், அரவணைப்பு, உணவூட்டல், இயற்கை புத்துயிர்ப்பு, படைப்பை பார்த்து இரசித்து வரும் எந்த மானிடனும் கல்லறை பற்றிச் சிந்திக்கமாட்டான்? ஆனால் தமிழன் தமிழனாகவும் தன்மானத்துடனும் வாழவேண்டும் என்பதற்குக் கல்லறையை நேசித்தவர்கள் மாவீரர்கள்.

அவர்கள் தமது பருவ நிலை உணராதவர்களாக இலௌகீக வாழ்க்கையை உணராதவர்களாக வாழ்ந்தார்கள். ஏன்? தமது இனத்தவன் மற்ற இனத்தவனிடம் அடிமைப்பட்டு விடக்கூடாது என்பதற்காக. ஆனால் துரதிஷ்டம் மாவீரர்களின் குடும்பங்கள் சமூகத்தில் நாதியற்று காணப்படுகின்றன. அவர்களை இனம்கண்டு சமூகத்தில் முன்னேற்ற வேண்டும்.

சங்க காலத்தில் நடுகைத் தெய்வ வழிபாடு உருவானது போல இன்றைய காலகட்டத்தில் நாம் கார்த்திகை மாதத்தில் கல்லறை வழிபாட்டினை உருவாக்கி, இந்தப் புனித மாதத்தில் புலால் உண்பதைத் தவிர்த்து, மரநடுகை, சமூக முன்னேற்றச் செயற்பாடுகள் போன்றவற்றில் ஈடுபடுதல் நல்லது.

போராடியவர்கள் வன்முறையாளர்கள் அல்லர். போராடத் தூண்டியவனே வன்முறையாளன். இதற்கு அமையவும் தேசியத் தலைவர் கூறியதுபோல ஓர் இனத்தின் மீது தொடர்ந்து அகிம்சை வழியிலான அடக்குமுறை பயன்படுத்தப்படுமானால் அதுவும் வன்முறையே. அதற்கு எதிரான புரட்சி வன்முறையல்ல; விடுதலையே"

தமிழினம் அறவழி, அகிம்மைவழி, ஆன்மீகவழி, அரசியல்வழி, ஆயுத வழி என எல்லா வழிகளிலும் எமது நாட்டின் பெரும்பான்மை இனத்துடன் பேசிச் செயல்படுத்திக் காட்டியபோதும் இதுவரையில் எந்தவிதமான தீர்வுகளும் தமிழினத்துக்கு கிட்டவில்லை. இனி அறிவு வழியில் பயணித்துப் பெரும்பான்மையுடன் பேரம்பேசல் வேண்டும். "நான் சாகலாம். நாங்கள் சாகக் கூடாது" என்னும் தலைவனின் கூற்றுக்கு இணங்க நான் என்ற தனிமனிதன் எப்பொழுதும் சாகலாம் நாங்கள் என்கிற தமிழினம் எப்பொழுதும் சாகக்கூடாது. எனவே அறிவியலைப் பயன்படுத்தி இலங்கை பூகோள அரசியலை முன்னமர்த்திப் பன்னாட்டுப் பிடியில் உள்ள இலங்கை இந்தத் தருணத்தில் பேரம்பேசித் தீர்வைப் பெறவேண்டும்.

## தாயகம் அவர்களின் தாகம்

தாயகக் கனவுடன் தன்மானத்தைச் சுமந்து, ஆசாபாசங்களைத் துறந்து இன விடுதலையே ஒரே இலட்சியம் அதைத் தவிர என் இதயத்தில் ஒரு இம்மியளவு கூட பிற எண்ணம் இல்லை என்று கூறி உயிர்திறந்த மறத்தமிழன், மானத் தமிழன் மாவீரர்களுக்குக் கார்த்திகை மாதத்தில் நினைகூருதலே நாம் செய்யும் தியாகம்.

இன்றைய இளைய தலைமுறைகளுக்கு தமிழினத்தின் வரலாறு அறிவதற்கோ அல்லது அறியப்படுத்துவதற்கோ வாய்ப்புக்கள் போதியளவு இல்லை. அத்துடன் வரலாற்றைத் தெரியப்படுத்த அறியப்படுத்தக்கூட அச்ச நிலையிலேயே பலர் காணப்படுகின்றனர்.

"வேரை இழந்த மரமும் வரலாற்றை இழந்த இனமும் வாழ்ந்ததாகச் சரித்திரமில்லை" எனவே வரலாறுகள் பாதுகாக்கப்படவேண்டும். அது எமது அடுத்தடுத்த தலைமுறையினருக்கு கொண்டு செல்ல வேண்டும். அதற்கான அடித்தளங்களை இப்பவே உருவாக்குதல் வேண்டும்.

"செய் அல்லது செத்துமடி" என்னும் கொள்கையை உள்ளத்தில் இருத்தித் தமது தாயகத் தாகத்தை உதட்டில் உச்சரித்து, தமிழினத்தின் எதிர்காலத்தை உடலில் சுமந்து ,எதிரியிடம் மண்டியிடாது வீரத்துடன் உயிர் திறந்தவர்கள் மாவீரர்கள். அவர்களின் உடல் அழிக்கப்பட்டிருக்கலாம். உயிர் பிரிக்கப் பட்டிருக்கலாம்.

ஆனால் அவர்களின் கொள்கை, இலட்சியம் ஒவ்வொரு தமி ழனிலும் செதுக்கப்பட்டுள்ளது. அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை பஞ்சு மெத்தையும் அல்ல நாவுக்குச் சுவையான உணவும் அல்ல. பருவத்துக்கேற்ற பாடசாலைக் கல்வியும் அல்ல. தாய் தந்தையின் அரவணைப்பும் அல்ல உறவுகளின் உரசலும் அல்ல. இவை அத்தனையும் இழந்து தன் பெற்றவன், இனத்தவன் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காகத் தன் உயிரை மண்ணுக்காக மாய்த்தவர்கள்.

இப்படிப்பட்ட உயர்ந்த தியாக எண்ணம் கொண்டு செயற்பட்டவர்களின் கல்லறைகளைத் கார்த்திகை மாதத்தில் புனிதப்படுத்தினாலும் மற்றைய மாதங்களில் மனத்தில் இருத்திக் காக்க வேண்டும். இதற்கு அரசியல் பாகுபாடு இன்றி எல்லோரும் ஒற்றுமையாக ஒன்று திரண்டு ஒருமித்து நினைவு கூரலை ஏற்படுத்திக்கொண்டால் இவர்களின் ஆத்மா சாந்தியடைந்து அமைதி பெறும்.

அதைவிடுத்துத் தனித்தனியாக ஒவ்வொருவரும் செயற்படுவது மாவீரர்களை மாசுபடுத்துவதுடன் நாம் ஒருபோதும் ஒற்மைப்படமாட்டோம் என்ற செயலையே எடுத்துக் காட்டும் என்பதை எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். காலையில் மலரும் பூக்கள் மாலையில் மடிகின்றன என்பதற்காக நாளை மலரப்போகும் மொட்டுக்கள் மலராமல் விடப்போவதில்லை. மாவீரர்கள் உடல், உயிர் இல்லாமல் இருக்கலாம். அவர்களின் இலட்சியம் புதைக்கப்பட்ட இடத்தில் இருந்து முளைக்கும். அதற்காகவே தமிழர் வரலாறு தொடர்ந்தும் வளர்பவர்கள் மனதில் விதைக்கப்படவேண்டும்.



# வாள் ஏந்திய சிங்கங்கள்



கட்டுரை

வி. அருணாசலம்

**1983** ஆம் ஆண்டு, இனக்கலவரம் நடந்தேறிய காலத்தில், சிங்களவரின் அடக்குமுறைக்கு உதாரணமாக ஒரு தமிழ்ப் பற்றாளன் இவ்வாறு கருத்துக்கூறினார், “இலங்கைத் தேசியக் கொடியில் சிங்கம் வாளுடன் நிற்கும் படம் வரையப்பட்டுள்ளது. அந்த வாள் சாதாரண வாள் அல்ல. அது தமிழ் இனத்தை நோக்கி ஓங்கப்பட்ட வாள். சிங்களவர் தொடர்ந்தும் தமிழரைக் கொல்லுவார்கள்” என்பதே அது.

ஏறத்தாழ 34வருடங்களுக்குப் பிறகு, இப்போது வாளை ஏந்திய தமிழ் இளைஞர்கள் தமிழ் மக்களை வெட்டிச்சரிக்கின்ற நிலை தோன்றியிருக்கிறது. ஆரம்பத்தில் வன்முறையை எதிர்த்த தமிழ் மக்கள் இன்று அதற்கே ஆளாகிவிட்டனர். வடக்குமாகாணத்தமிழர்முனைப்புள்ளவர்களாகவும், முயற்சி உள்ளவர்களாகவும், கல்வி, சேமிப்பு, ஒழுக்கம் என எல்லா மட்டங்களிலும் சிறப்புற்றும் விளங்கினர். இந்தச் சூழல் தொடர்ந்தும் பேணப்பட்டால், தமிழ் இளைஞர்கள் எப்போதும் சிங்கள ஆட்சியாளர்களுக்குத் தொல்லை கொடுப்பார்கள் என்பது சிங்கள ஆட்சியாளர்கள் நன்கு தெரியும்.

புலிகள் 2009இல் வீழ்த்தப்படும் வரைத் தமிழ் இளைஞர்களைத் திசை திருப்பக்கூடிய வாய்ப்புகள் சிங்கள ஆட்சியாளர்களுக்கு அமையவில்லை. ஆனால், போர் முடிவுற்றதன் பின்னர் அதற்கான அறுவடையைச் சிங்கள ஆட்சியாளர்கள் பெற்றுக்கொண்டனர்.

### புலிகளை அழித்தாலும் அழியாத பயம்

தென்னிந்தியத் திரைப்பட நாயகர்களான விஜய், அஜித் ஆகியோரின் துடியாட்டம் பல தமிழ் இளைஞர்களைக் கவர்ந்துவிட்டது. இந்தக் கதாநாயகர்கள் சைக்கிளில் சென்று வாளால் யாரையும் வெட்டியதாகக் காட்சியில்லை. ஆடம்பர உயர்ரக மோட்டார் சைக்கிள்களில் சென்று இன்னொரு மனிதனை வெட்டி வீழ்த்தும் காட்சிகளே காட்டப்படுகின்றன.

2009ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின் தமிழ் இளைஞர்களை இப்படியாக ஆக்கிவிட வேண்டுமென்ற எதிர்பார்ப்பு இலங்கை ஆட்சியாளர்களிடமும், புலனாய்வுத் துறையினரிடமும் அதிகமாகவே இருந்தது. பல நாடுகளில் ஆயுதப் போராட்டங்கள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டதன் பின்னர் 20வருடங்கள் கழிந்தும் தாக்குதல்கள் நடைபெற்றவண்ணம் உள்ளன. அத்தகைய சூழல் இங்கும் தொடருமானால், இலங்கை





ஆட்சியாளர்களால் அல்லது சிங்கள மக்களால் அவற்றுக்கு முகம் கொடுப்பது சிரமமாக இருக்கும்.

ஆனால் அதற்கு வாய்ப்பு இருக்கவில்லை. 15.5.2009 அன்று போரின் இறுதிக்கட்டத்தில் பெரியளவில் கரும்புலித் தாக்குதல்கள் நடந்தன. இராணுவத்துக்குப் பெரிய இழப்பு ஏற்பட்டது. இந்தப்போர் இன்னும் நீடிக்கும் எனும் எண்ணப்பாட்டையும் தோற்றுவித்தது. ஆனால் அந்தத் தாக்குதல் நடைபெற்ற மூன்று நாள்களில் 12ஆயிரத்துக்கும் மேற்பட்ட புலிப் போராளிகள் சரணடைந்தார்கள். புலிகள் அழிக்கப்பட்டதன் பின் பொரிய அதிர்வு ஒன்று இலங்கையில் இருக்கும் எனும் பீதி ஆட்சியாளர்கள் மத்தியில் இல்லாமலில்லை. உடனடியாக எல்லாம் அணைந்துவிட வாய்ப்பிருப்பதில்லை. போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதன் பின்னர் தொடர்ச்சியாக ஆயுதங்கள் மீட்கப்பட்ட துடன், புலிகளின் அடுத்த கட்டச் செயற்பாடுகள் பூச்சிய நிலையில் இருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டது. அதன் விளைவாகவே ஆயுதப் பயிற்சிபெற்ற 12ஆயிரத்து 600 வரையான போராளிகளை மகிந்த அரசு மறுர்வாழ்வு அளித்து விடுதலை செய்தது.

இவ்வளவு பெருந்தொகையில் புலிகளை விடுதலை செய்வது தொடர்பில் ஆட்சியாளர்களுக்கும், புலனாய்வுத் துறையினருக்கும் இராஜதந்திர மட்டத்தில் இருந்தோருக்கும் இடையில் பல முரண்பட்ட கருத்துக்கள் நிலவியிருந்த போதிலும், அவ்வளவு பெரும் தொகையில் அவர்களை விடுவித்தது என்பது பன்னாட்டு மனித உரிமை நிறுவனங்கள் எழுப்பவிருந்த கேள்விகளின் பெரும்பகுதிக்குச் சாதகமான பதிலாக அமைந்தது.

### புலனாய்வாளர்களின் அதீத நடவடிக்கைகள்

இலங்கைப் புலனாய்வுத் துறையின் தொடர் செயற்பாடுகளே தமிழ் இளைஞர்கள் வேறு பல விடயங்களில் தமது கவனத்தைச் செலுத்தக் காரணமாய் அமைந்தன. தமிழ் இளைஞர்களுக்கு 2009வரை புலிகளால் மறுக்கப்பட்ட பல விடயங்கள் திறந்துவிடப்பட்டன. இதனால் தமிழ் இளைஞர்கள் படிப்பு, உழைப்பு என்பவற்றைக் கைவிட்டு வேறுதிசையில் செல்லத் தொடங்கினர். 30 வருடகாலமாக இலங்கை இராணுவம், பொலிஸ் ஆகியவற்றில் தமிழ் இளைஞர்கள் கொண்டிருந்த வெறுப்புத் தற்போதுள்ள இளைஞர்களுக்கு இல்லாது போய்விட்டது.

இன்னும் சில ஆண்டுகளில் ஒரு பெரும் போர் இழப்பைச் சந்தித்த மக்கள் என்பதை உணரவே வாய்ப்பிருக்காது. சிங்கள ஆட்சியாளர்கள் விடுதலைப் புலிகளை வழிக்குக் கொண்டுவர 30வருடங்களாக இராணுவம், பொலிஸ் படை என்பனவற்றைப் போராட வைக்கவேண்டி இருந்தது. தற்போது அதன் வளர்ச்சியையே அரசு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

### கேள்விக்குள்ளாகும் தமிழர்களின் இருப்பு

விபத்து, தற்கொலை, வாள்வீச்சு என்பவற்றால் பெருமளவு தமிழ் இளைஞர்கள் இறந்து போவதும், ஊனமுற்றவர்களாக மாறி வருவதும் தமிழ்ச் சமூகத்துக்குப் பெரும் சுமையாக ஆகிவிட்டது. வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் அதிகளவு பணம் அனுப்புகின்ற நிலை இருந்தபோதிலும், கோயில் கட்டுவதிலும், ஆடம்பர மோட்டார் சைக்கிள்கள், அதிநவீன தொலைபேசிகள், ஆடம்பரக் குடிவகையின் பாவனை போன்றவற்றால் சமூக மேம்பாட்டுக்கான எதையும் தமிழ் மக்கள் பெறமுடியாத நிலை ஏற்பட்டுவிட்டது.

இந்தப் பணத்தைப் படிப்பிலும், உழைப்பிலும் செலவிட்டால் எதிர்காலத்தில் அது சிங்கள மக்களுக்கு நெருக்கடியைக் கொடுக்கலாம். தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் வெளிநாடு செல்வதிலேயே அதிக ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இதுவும் சிங்கள ஆட்சியாளர்களுக்குச் சாதகமாக அமைந்துள்ளது. இந்தப் போக்கு வடக்குக் கிழக்கில் தமிழரின் இனப்பெருக்கத்தையும், நிலை பேற்றையும் இல்லாது செய்துவிடுகிறது.

### நம்மிடையே ஒற்றுமை தேவை

மாணவர்கள் மத்தியில் போதைப் பாவனை அதிகரித்திருப்பது என்பது எதிர்காலச் சந்ததிக்கு ஏற்பட்டிருக்கும் புற்றுநோயாகும். கட்டிளம் பருவத்தைச் சோர்ந்தவர்கள் எதை நோக்கிச் செல்கிறார்களோ அதுவே அந்த மக்களின் வாழ்வொழுக்கமாக வந்துவிடும். வடக்குக் கிழக்கில் ஆயிரம் மதுபானச் சாலைகளையும், கஞ்சாவையும், ஹெரோயினையும் அறிமுகப்படுத்தினாலும் இறுக்கமாக இருந்து அதற்கு ஒத்துழைக்காவிட்டால் தமிழ் இனத்துக்கு எதிராகச் செயற்பட நினைப்பவர்கள் தமது முயற்சிகளைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படும். ஆனால், ஆட்சியாளர்களின் இந்தத் திட்டத்துக்குத் தற்போது பலத்த ஆதரவு தமிழ்ச் சமூகத்திடமிருந்து கிடைத்திருக்கிறது. ஆரம்பத்தில் இதை அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

### இளைஞர்களும் பெற்றோர்களும்

சமூக ஒழுக்க நெறி, மூத்தோருக்கு மதிப்பளிப்பது, கோயில் தலைவர்களுக்கும் மதகுருமாருக்கும் மதிப்பளிப்பது, ஆசிரியருக்கு மதிப்பளிப்பது என எல்லா மட்டங்களிலும் வயதானவர்களும், சிறுவர்களும் சம்பந்தப்படுகிறார்களே தவிர, அந்த இடங்களில் இளைஞர்களின் பங்குபற்றுதல்கள் குறைந்து வருகின்றது.

இதற்குத் தென்னிந்திய சினிமாக்களும், தொலைக்காட்சி நாடகங்களும் முதன்மையான காரணங்களாக உள்ளன. விவசாயம், கடற்றொழில், மற்றும் தொழில்சார் குடும்பங்களில் பிறந்த இளைஞர்களுக்கு அந்தத் தொழிலில் ஈடுபாடு குறைந்து வருகின்றது. இதனால் பாரம்பரியத் தொழில்கள் பல வீழ்ச்சியடைந்து வருகின்றன. இவ்வாறான இளைஞர்கள் விரைவாக முன்னேற்றம் காண்பதற்கும், ஆடம்பர வாழ்க்கையொன்றை நாடி நிற்பதற்கும், சிரமப்படாது பணம் உழைக்கும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

பல ஏழைக் குடும்பத்து இளைஞர்கள் நிரந்தரத் தொழில் எதுவுமின்றித் திடீரெனப் பணக்காரராக மாறுவது, ஆடம்பர மோட்டார் சைக்கிள், ஆடம்பர வாழ்க்கை என்று செல்வதை அவர்களின் குடும்பத்தினர் பொலிஸாருக்குத் தகவலாக வழங்குவதில்லை. இந்த விரைவுப் பணம் சம்பாதிப்பதற்காக போதைவஸ்துக் கடத்தல், வட்டிக்குப் பணம் பெறல், சீட்டுக் கட்டி ஏமாற்றுதல், கொள்ளை, ‘லீசிங்’ வியாபாரம் போன்ற பல்வேறுபட்ட நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இதில் வாள்வெட்டு விடயத்தில் சிங்கள ஆட்சியாளர்களுக்கு கைமேல் பலன் கிடைத்திருக் கிறது. தமிழ் இளைஞர்களைத் தாம் தண்டித்தால், பல்வேறுபட்ட சட்டச் சிக்கல்களையும், பன்னாட்டு அழுத்தங்களையும் சந்திக்க வேண்டி இருப்பதால் ஒருவரை வெட்டுவதற்காக இன்னொருவர் வாளைத் தூக்கினால் அதுபோது மானது. மற்றவரும் விரைவில் வாளைத் தூக்கியே ஆகவேண்டும். தமிழ் இளைஞர்கள் தாமாகவே முன்வந்து தம்மையே தாம் அழிப்பது ஆட்சியாளர்களுக்குச் சாதகமாகப் போயிற்று.

### வருங்காலம் மந்தமாகும்

‘ஸ்பிரிட்’ கலந்த மதுபானம், இரசாயனம் கலந்த உணவு வகை, போதைப் பயன்பாடு காரணமாக இளைஞர்களின் இனப்பெருக்கத் தொகுதிகள் பாதிக்கப்படுவதால் தமிழரின் இனப்பெருக்கம் மிகச் சாதாரணமாகவே இல்லாது செய்யப்படுகிறது. அதேவேளை, இவ்வாறான இளைஞர்களை யுவதிகள் திருமணம் செய்யப் பின்னிற்பதும், திருமணம் செய்த குறுகிய காலத்தில் பிரிவதும், தற்கொலை செய்வதும் இதன் தொடர் விளைவுகளே. உடல் உழைப்பில்லாத இளைஞர்களுக்குப் பெருத்த உடலும், அதன்பால் பல்வேறு நோய்களும் தொற்றிவிடுவதால் இதுவும் தமிழ் சமூகத்துக்குப் பெரும் சுமையாக ஆகிவிட்டது. இந்த சமூக இயல்பின்மையைத் தமிழ் மக்களிடத்தில் ஏற்படுத்துவதில் கடந்த 8 ஆண்டுகளாகச் சிங்கள ஆட்சியாளர்கள் எடுத்த பிரயத்தனங்களை அரசியல்வாதிகளோ, மதத் தலை வர்களோ, பல்கலைக் கழகம் சார்ந்தவர்களோ, தெரிந்திருந்தும் இதற்கு எதிராகக் குரல் கொடுக்கவில்லை என்பதையும் கவனத்தில் எடுக்கவேண்டும். அவர்களுக்கு முதலில் வாள்வெட்டில் ஈடுபடும் இளைஞர்களின் பெற்றோரிடம்சென்று “வாள் வெட்டிலும், அடாவடித்தனத்திலும் உங்கள்பிள்ளை சம்பந்தப்பட்டிருக்கிறான்” என்று கூறிப்பாருங்கள்... அவர்களின் தாய்கூட “என்ர பிள்ளையோ? என்ர பிள்ளை அப்பிடி இல்லை?” என்று உரத்துச் சொல்லுவார்கள். அவ்வாறென்றால், அவற்றைச் செய்தது யார் பெற்ற பிள்ளைகள்?

> மாணவர்கள் மத்தியில் போதைப் பாவனை அதிகரித்திருப்பது என்பது எதிர்காலச் சந்ததிக்கு ஏற்பட்டிருக்கும் புற்றுநோயாகும்.

# கார்த்திகை எனும் 'கார் ஈகை'



இளம் குருதி கொதிக்க எதிரியை அழிப்பதற்கு நெஞ்சில் குண்டேந்தி மடிந்த உறவுகளே மாவீரர்கள்

கட்டுரை

ப்ரியமதா பயஸ்

கார்த்திகை எப்போதும் தமிழருக்குப் புனிதமான மாதம். தமிழீழப் பகுதிகளில் வாழ்ந்த தமிழர்கள் ஒவ்வொருவரும் மறக்க முடியாத மாதம் இந்தக் கார்த்திகைதான். கார்த்திகை முதலாம் திகதி வந்துவிட்டால் எல்லோரும் பரப்பரப்பாகிவிடுவார்கள். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு அலுவலகத்தினர், இயக்க நிறுவனத்தினர் எனப்போட்டி போட்டுக்கொண்டு துயிலும் இல்லங்களைத் துப்புரவு செய்யத் தொடங்கி விடுவார்கள். சில சமயங்களில் பாடசாலை மாணவர்கள் கூட துயிலுமில்லத் துப்புரவுப் பணிகளுக்காகச் சுழற்சி முறையில் வருவார்கள்.

வற்றாப்பளைப் பொங்கல், புளியம்பொக்கணைப் பொங்கல், மாவீரர்நாள் இவைகள் எல்லாம் நமக்குத் தெய்வீகமான நிகழ்வுகள்தான். புதிய ஆடைகள் வாங்கி அதற்கென்று சிறப்பாக ஒழுங்கமைத்து இந்த நாள்களைக் கடைப்பிடித்திருந்தோம் என்பதை யாராலும் மறுக்க முடியாது. வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் என்றாலும் சரி மாவீரர் நாள் என்றாலும் சரி வன்னிமண்ணின் ஒரு வீட்டிலும் ஒரு மனிதரைக்காண முடியாது. போட்ட பொருள்கள் போட்ட இடத்தில் கிடக்கும். கிடுகுப் படலைகளும், தடிகள் போட்ட கண்டாயங்களும் ஆடு, மாடுகள் உள்ளே போகாமல் கட்டப்பட்டிருக்கும். ஆனால் ஊர் பாதுகாப்பாக இருக்கும். எல்லோரும் துயிலும் இல்லங்களில் கூடி விடுவார்கள். தாத்தாக்கள், பாட்டிகள், பெண்கள், சிறுவர்கள், சிறுமிகள், குழந்தைகள் உட்பட அனைவருமே துயிலும் இல்லத்துள் அடைக்கலமாய்ச் சென்று தம்மை மறந்து தேம்பி அழுது கொண்டிருப்பர். மெல்லியதாய் உடல் நனையாமல் தூறும் மழையும் உள்ளம் சிலிர்த்துத் தேம்பி அழும் தினைவும் இப்போதும் ஒரு தெய்வீகப் பரவசத்தைத் தருகிறது.



**புனிதம் நிறைந்த நாள்கள்**

தேராவில் துயிலும் இல்லத்தில் அந்த வட்டக்குளம் மின்குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு படையணியும் தமது பாசறைகள் அமைந்துள்ள இடங்களைச் சிறப்புற அலங்கரித்திருப்பர். தம் தோழர்கள், தோழியர் நினைவாக, அவர்களை நினைவுகூரும் விதமாக அவர்களுக்குப் பிடித்த போரியல் விடயங்களைக் காட்சிப்படுத்துவர். எழுச்சிப் பாடல்களை இசைக்கவிட்டிருப்பர். வீரச்சாவு நிகழ்வைத் தவிர வேறெந்த நிகழ்வுக்கும் சோக கீதத்தை ஒலிக்கவிடார் புலிவீரர். மற்றைய நாள்கள் எல்லாம் எழுச்சிக் கீதங்களே ஒலிக்கும். மாவீரர்களை மறவர்களாகத் துதிக்கும் தருணங்களை எழுச்சியாகவே துதித்தனர் என்பது யாவரும் அறிந்ததே. ஆனையிறவு கடல்நீரேரி அலங்கரிக்கப்பட்டு, அலங்கரிக்கப்பட்ட கொட்டகைகளில் மாவீரர் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு, மலர்களும் மலர் மாலைகளும் அணிவித்துத் துதிக்கப்படும். அப்படியே ஒவ்வொரு பிரதான இடங்களிலும் மாவீரர் மண்டபங்களிலும் திருவுருவப்படங்கள் வைக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்படும். அந்த நாள்கள் புனிதத்தைவிட வேறு எதையும் நினைத்துப் பார்க்காத நாள்கள்.

**கண்ணீர்ச் சங்கமம்**

நவம்பர் 27காலையேஎல்லா வீடுகளும் ஆராவராமாக இருக்கும். தங்கள் குடும்ப, குல தெய்வமாகத் தம் மாவீரச் செல்வங்களுக்குப் பிடித்த உணவுகளைச் செய்வார்கள். மழைத்துளியில் நனைந்த பூக்களைக் கொய்து மாலைகள் கட்டுவர். வாழைத் தண்டுகளை வெட்டி மடல்களை உரித்துப் பூமாலைகளை அவற்றுள் வைப்பர். வாழைக் குற்றிகளை வீட்டு முன்றலில் நட்டுக் கொப்பராத் தேங்காய்களை வெட்டி இரண்டையும் ஒன்றாக அடுக்கித் தீபம் ஏற்றத் தயார் ஆவர்.

மாலை ஆறுமணியை நோக்கியே மனம் இருக்கும். கிழக்கு மாகாணப் போராளிகளின் கல்லறைகளுக்கு அவர்களின் உறவினர்கள் பெருமளவில் வருவதற்கு சந்தர்ப்பம் இருக்காது. அந்த மாவீரர்களின் கல்லறைகளுக்குமாகச் சேர்த்து பூமாலைகளும், உணவுப்பண்டங்களும் அதிகமாகவே செய்து கொண்டு செல்வர். உறவினர்கள் சமூகமளிக்காத கல்லறைகளுக்குப் போராளிகளும் மக்களும் தீபம் ஏற்றி அஞ்சலிப்பர். அவர்கள் விடும் கண்ணீர்த்துளிகள் கணக்கிலடங்காதவை. வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வைத்த அந்த வீரன் துயிலும் மண் முழுதும் அவை சுவறும். இதை நேரில் பார்க்கும்போது மனது சிலிர்த்து, நெஞ்சம் கனக்கும். உடைப்பேடுக்கும் கண்ணீரை எந்த மடை போட்டு ம் மறித்திடமுடியாது?

**விதைக்கப்படும் மண் பற்று**

ஒவ்வொரு வீரனின் உறவும் உருகி அழும் தருணங்களைச் சொல்லிமாளாது. அங்கே உறங்கும் ஒவ்வொரு உயிரும் இளமையின் இலக்கணமான உயிர்கள். ஆயுள் முடித்துச் சாவைத் தழுவிய உயிர்கள் அல்ல அந்த உயிர்கள். நாள் குறித்து, நேரம் குறித்து, இளம் குருதி கொதிக்க எதிரியை அழிப்பதற்கு நெஞ்சில் குண்டேந்தி மடிந்த உறவுகள். அவர்கள் இளமையையும் கனவுகளையும் இப்போது நினைத்தாலும் உடல் சில்லிடும். இன்றைக்கும் எவராலும் முடியாத உயிர்த்தியாகம் அது. தாயும், தாரமும், சகோதரனும், சகோதரியும், களமாடிய நண்பர்களும் மாவீரர்கள் கல்லறையில் உருகி அழும் தருணங்கள் நெஞ்சைப் பதறவைக்கும். நமக்குள் மண் பற்றை விதைத்து நிற்கும்.

**அவர்கள் உறங்கும் உலகு ஆலயத்திலும் உயர்வு**

தன் பிள்ளையின் கல்லறையைத் தழுவி அழும் தாய், அவன் மேனி நோகுமோ என அஞ்சி மென்மையாய் வருடித் தன் கைகளைத் தன்தலையில் ஓங்கி அடித்து கதறும் தருணம் மற்றோர் நெஞ்சம் சிதறுண்டுபோகும். கொடிகளை ஏற்றித் தீபத்தை ஏற்றி அங்கே விடும் கண்ணீரே அந்த ஆண்டில் அந்த வீரர்கள் சார்ந்து அடக்கி வைத்த அத்தனை துக்கங்களையும் கலைத்திடும் கண்ணீர். கைகளைக் கூப்பி வணங்கும்போது தெய்வங்கள் எல்லாமே கண்முன் தோன்றும் உண்மையை யார் அறிவர்? இப்படியாக இளமையும், வீரமும் நிறைந்த புனிதர்களை அஞ்சலிக்கும் மாதமே கார்த்திகை.

வேதத்திலும் ஆகமத்திலும் இல்லாத உயர்ந்த விதிகளைச் சொல்லி அமைக்கப்பட்ட புனித ஆலயங்களே அவர்கள் உறங்கும் உலகு. காற்றோடு கலந்த வீரர்களின் உடல்கள் மண்ணோடு கலந்து மறையாது இருப்பவையே துயிலும் இல்லங்கள். வென்றெடுக்காத விடுதலைக்காய் மாண்டவர்கள் அல்ல அவர்கள். தாம் மடியும்வரை எம்மைத் தலைகுனியாது வாழவைத்து மடிந்தவர்கள். அவர்கள் களமாடும்போது நாம் கல்லூரிகளில் கல்விகற்றோம், திடமாக நடைபயின்றோம். அவர்களே எமக்குக் காவலாக இருந்தனர்.

## புரியவில்லை....

கவிதை

பா.பாலாஜினி

நேற்றைய பொழுதுகள்
நிறைவாகிப் போனபின்னும்
நினைவுகள் இங்கே
நீண்டுகொண்டே
போகின்றன
போர்ச் சுவட்டின் வழி
சத்தமின்றி நடக்கின்றேன்
மீதிச் சன்னங்கள் என்னை
மிச்சமின்றிக் கொல்கின்றன
மனிதக் கழுகுகள் இன்றும்,
மரிக்காது வாழ்கின்றன
மழைநீர் வந்து
கழுவிக் கழுவிப்
போனாலும்
குருதித் திட்டுக்கள் இன்னும்
காயவில்லை மண்ணில்
ஈனக் குரல்களும்
மறையவில்லை இங்கே
பிய்ந்த பிண்ட நாற்றங்கள்
மனக்கிடங்கில் இருந்து
மறுபடியும் எழுகின்றன
மறக்கத்தான் முடியவில்லை
மன்னிக்கவும் தெரியவில்லை
மறக்கடிக்கப்படுவது
தமிழினமே!



கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும், சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தருவது வழமை. அந்த வகையில் ஈழப்போராட்டத்துக்கு வலுச்சேர்த்த கவிஞர் புதுவை இரத்தினதுரையின் 'பூவரசம் வேலியும் புலினிக் குஞ்சுகளும்' -எனும் கவிதைத் தொகுதிக்குப் பேராசிரியர் கா.சிவத்தம்பி வழங்கிய முன்னுரையிலிருந்து சில பகுதிகள் இதில் தரப்படுகிறது.


பேராசிரியர் கா.சிவத்தம்பி

தொகுப்பு
தி.இராஜநாயகி

# கலை, இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்

இலக்கியம், அரசியல் சார்ந்தததாக இருப்பதுதவிர்க்கமுடியாதஒன்று. மக்களின் ஒருமைப்பாட்டுக்கோ அல்லதுஒருங்குநிலைப்பாட்டுக்கோ இலக்கியம் தொழில்படுவது அதன் தோன்று நிலை இயல்புகளில் ஒன்று. இலக்கியம் வாய்மொழியாக இருந்த காலங்களில், இடங்களில் இச் செயற்பாடு காணப்பட்டமையை அறிகிறோம். கலை, இலக்கியத்தின் வனப்பு மனிதர்களிடையே உணர்வு நிலை, உந்துதல்களை ஏற்படுத்த. அந்த வனப்பியல்காரணமாக மக்கள் ஒன்றாகக் குழுமுவர். அந்த ஒருங்குசேர் நிலையைப் பேணவும் விரும்புவர். வாய்மொழி நிலையில் வரும் முன்னிலைப் புகழ்ச்சி, அவற்றிலும் பார்க்கப்பிரதானமாக அந்த அந்தக் குழுமங்களின் வரலாறுகள், உறவுகளைப் பற்றிய ஐதீகங்களைக் கருப்பொருளாகக் கொண்ட கதைகள் இவ் உண்மையை நிலைநாட்டும். வாய்மொழி எழுத்துமொழியாக மாறத்தொடங்கியதும் (அந்நிலையில் சமூகம் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டதா இருக்கும்) இலக்கியம் கல்வியோடு, கல்வியைநிறுவனமயப்படுத்துவதோடுசம்பந்தப் படத்தொடங்கி அறநிலைப்பட்டதாக மாறும். இத்தகையதொரு வளர்ச்சி ஆள் புலத்துள் வரும் மக்களை எழுத்தறிவுப் பண்பாட்டுக்கு உள் வருபவர்கள் - அதற்கு வெளியே நிற்பவர்கள் என்ற இரண்டு நிலைக்கு இட்டுச்செல்லும். ஆனால், இந்த இரண்டு நிலைகளிலும் அவ்வச் சூழலுக்கேற்ப கலை, இலக்கியப் படைப்புக்கள் வந்துகொண்டே இருக்கும்.

* * *


ஏறத்தாழ 1970களின் தொடக்கத்திலிருந்தே, தமிழர் வாழும் பிரதேச அரசியலில், சமூக வாழ்க்கையில் படிப்படியாக மாற்றம் ஏற்பட்டது. முற்போக்கு இலக்கியச் செல்நெறியின் வேகத்தளர்வு ஏற்பட்ட அக்காலச் சூழலில் சமூக - அரசியல் போக்கில் அளவுநிலைப்பட்ட அதனோடிணைந்துதர நிலைப்பட்ட மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. 1972ஆம் ஆண்டின் புதிய ஆட்சியாப்புப் பிரகடனம், அரச படையினரின் அட்டூழியங்கள் ஆகியன காரணமாகவும், இடதுசாரிக் கட்சிகள் 1964முதல் தனிச் சிங்களத்தை ஏற்றது மாத்திரமல்லாமல் பண்டாரநாயக்கா அரசின் ஓர் அங்கமாகி மௌனித்துப் போனமையாலும் தமிழ்ப் பிரதேச அரசியலில் உருவ, உள்ளடக்க மாற்றம் ஏற்பட்டது. இதனூடாக ஒரு புறத்தில் அரசை எதிர்ப்பனவாகவும் மறுபுறத்தில் அப்போது நிலவிய தமிழ் அரசியலை நிராகரிப்பனவாகவும் அதேவேளையில் பின்காலனித்துவப் போராட்ட நாடுகளில் மார்க்சிய முனைப்புடன் செயற்பட்ட தளை நீக்கக் கோட்பாட்டை (liberation) ஏற்றுக் கொண்டனவாய் இளைஞர் இயக்கங்கள் தோன்றின. இவற்றுள் 1970களின் பிற்கூற்றில் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டவையாக இருந்த போர் முனைப்புடையனவாய் விளங்கிய இளைஞர் இயக்கங்கள் தமிழ் மக்களிடையே நிலவிய அரசியலில் ஒரு தள மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. இது காரணமாக ஈழத்துத் தமிழ் இலக்கியக் களத்திலும் பெரு மாற்றம் ஏற்படுகிறது. அரச ஒடுக்கு முறைகளின் பலாபலனாகத் தமிழ்ப்பிரதேசத்தின் சூழல் எத்தகைய நிலைப்பட்டது என்பதை 1980களின் தொடக்கப்பகுதியில்வந்தமிகமுக்கியமான கவிதைத்தொகுப்பான 'மரணத்துள்வாழ்வோம்' என்ற தொடர் ஒரு தொடர் பொதுத் தலைப்பாக அமைந்தது. தீவிரவாத இளைஞர்களை அடக்கவெனப் புறப்பட்ட அரச படை தமது எதிர்ப்பை முழுத் தமிழ் மக்கள் மீதும் பாய விட்டது. சூடு என்றாலும் சரி குண்டு என்றாலும் சரி சிவில் சமூகம் என்ற ஒன்று தமிழ் மக்களிடையே இருப்பதாக அரச படையினராலும் அவற்றின் ஏவுதற் கர்த்தாக்களாலும் கருதப்படவேயில்லை. உண்மையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இந்த அரசியல் குறைபாடு முழுச் சமூகத்தையுமே பாதித்தது. 1977இல் ஜே.ஆர். ஜயவர்த்தனா தலைமையில் u.n.p பதவிக்கு வருவதும், யாழ்ப்பாணத்துக் களியாட்ட விழாவென்றில் தொடங்கிய பொலிஸ் பொதுமக்கள் கைகலப்பு இனக் கலவரமாக மாறியதும், குறிப்பாக மாகாண நகரங்களாகிய இரத்தினபுரி போன்ற இடங்களில் ஏற்பட்ட கலவரங்களால் பெருந்தொகையான தமிழர்கள் கடல் மார்க்கமாகவும், ஆகாய மார்க்கமாகவும் யாழ்ப்பாணம் மட்டக்களப்பு அனுப்பப்பட்டதும் தமிழ்ப் பிரதேசங்களில் பதற்றத்தை அதிகரித்தது. அரசியலிலும் 1977இன் பின்னர் பகிரங்க அரசியற்பேச்சுவார்த்தைக்கான வாய்ப்புக் கூட அற்றுப்போயிற்று. இந்தச் சூழலிலே தான் தீவிரவாத இளைஞர் இயக்கங்கள் மிகுந்த உத்வேகத்துடன் எழத் தொடங்குகின்றன. இந்த நிலை படிப்படியாக வளர்ந்து 1983 கலவரமாக வெடித்துச் சிதறுகிறது. இந்நிலை இளைஞர் இயக்கங்களின் நிலைப்பேற்றுக்கு முக்கியமான காரணியாகின்றது. 1980களின் தொடக்கத்தில் கிடைத்த இந்திய உறவுகள் இளைஞர் இயக்கங்களின் பலத்துக்குக் காரணமாகின்றன.

பின்னர் 1984,85 திம்பு மாநாட்டுடன் இளைஞர் இயக்கங்கள் பிராந்திய உலக அங்கீகாரம் பெற்ற அரசியல் சக்திகளாகின்றன. வரன் முறையான பாராளுமன்ற அரசியல் தொழில்பட முடியாத சூழல் ஏற்பட்டமையும் (ஆட்சியாப்புக்கான 6ஆவது திருத்தம்) தீவிரவாத இளைஞர் இயக்கங்கள் அரசியல் அங்கீகாரம் பெற்றமையும் இந்த இளைஞர் இயக்கங்களின் ஆழ, அகலமான செயற்பாடுகளுக்கு இடமளித்தது. இவ்வியக்கங்கள் ஒவ்வொன்றும் தத்தம் செயற்பாடுகளை அதிகரிக்கத் தொடங்கின. இயக்கங்களுக்கான ஆள்சேர்ப்பு ஒருபுறமாகவும் தமது கருத்து நிலைப் பரம்பலுக்கும் ஆள்சேர்ப்பு உந்துதலுக்கான ஊக்குவிப்பு மறுபுறமாகவும் பல தளங்களில் இவர்கள் தொழில்படத் தொடங்கினர். இக்கால கட்டத்தில் 'மரணத்துள் வாழ்வோம்' தொகுப்புடன் நுஃமானின் பாலஸ்தீன கவிதை மொழி பெயர்ப்பும் முக்கியமான ஒன்றாயிற்று. பல்கலைக் கழக அரங்குக்காக குழந்தை சன்முகலிங்கத்தின் 'மண் சுமந்த மேனியர்' சிதம்பரநாதன் நெறியாள்கையுடன் வெளிவந்தது. ஒட்டுமொத்தமான ஓர் அடக்குமுறைச் சூழலில் அச்சுக்கு இல்லாத தொடர்பியல்வலு அரங்க ஆற்றுகைகளுக்கு உண்டு என்பது இக்காலத்தில் நிறுவப்பட்டது. இளைஞர் இயக்கங்கள் கலைகளை இயக்க வளர்ச்சிக்குப் பயன்படுத்தும் ஒரு செல்நெறி இதன்மூலம் பெறப்படுகிறது.

* * *

'இந்த மண் எங்களின் சொந்தமண்' என்ற பாடலில்ஓர்அரசியலியக்கக்கருத்தொன்றை வற்புறுத்துகின்ற அதேவேளையில் அக்கால ஈழத்தமிழர் வாழ்க்கையில் காணப்பட்ட இன்னல்களையும் வெளிக்கொணர்கிறது. புலிகளின் இயக்கத்தில் சேருவதற்குப் பிள்ளைகளை அனுப்புமாறு கோரும் வேண்டுகோள் இப்பாடலில் காணப்படுகிறதெனினும், அதற்கான காரணம் பற்றிக் கூறும்போது தமிழ்மக்கள் படும் இன்னல்களும் வெளிக்கொணரப்படுகின்றன. இவ்வாறு செய்வதால்தான் புதுவை இரத்தினதுரையால் ஒரு குறிப்பிட்ட இயக்கத்துக்கான ஒரு கவிஞன் என்ற நிலைக்கு அப்பாலே, மேலே சென்று தமிழர் படும் இன்னல்களை எடுத்துக்கூறும் கவிஞனாக மக்கள் நிலையில் மதிக்கப்பட முடிந்தது.

இவ்வாறு ஏற்பட்டமைக்குப் பிரதான காரணம் பாடல்களின் இசைக் கவர்ச்சியும் தான். பாடலின் இசைக் கவர்ச்சியுடன் பாடுபவர்களின் நெகிழ்ந்த குரலும் இணைகின்றபோது கவர்ச்சி அதிகமாயிற்று. இசை, உணர்ச்சிபாவத்தினை குரல்கள் நெகிழ்வுடன் காட்ட அவற்றினூடே புதுவையின் வரிகளின் கவித்துவம் முன்னிறுத்தப்பட்டது.




இயக்கத்தின் செயற்பாடுகளை உணர்ச்சி பூர்வமான முறைமையில் பொது தமிழ் மக்களுக்கு தொடர்புறுத்தும் இந்தப் பணி முக்கியமானது. ஏனெனில் அந்த இயக்கத்தின் போராளிகள் பற்றிய ஒரு விருப்புப் படிமம் மக்கள் மனதிலே உணர்ச்சி சூழ் விம்பங்களாகநிலைநிறுத்தப்படுவதற்கு இந்தப் பாடல்களே உதவுகின்றன. இதற்கு இணையாக ஏறத்தாழ இதே அளவு முக்கியத்துவத்துடன் அமைவது அவர் இயக்கத்தைச் சார்ந்தவர்களிடையே தமது எழுத்தினால் ஏற்படுத்திய ஒரு சுய மதிப்பீட்டுப் படிமமாகும். 'உலைக்களம்' என்ற இவரது தொகுதிக்கு எழுதப்பட்டுள்ள முன்னுரைகளை நோக்கும்போது, பிரதானமாக இயக்கநிலை நின்ற வாசகர்களுக்கென வெளியிடப்படும் உத்தியோக பூர்வ ஏட்டில் வந்த இவரது எழுத்துக்கள் எவ்வாறு இயக்கத்துக்குள்ளேயே மதிக்கப்பட்டன என்பதைக் காட்டுகின்றன. இயக்கத்தினருக்கு அவர்தம் நடவடிக்கைகளை ஒரு குறிப்பிட்ட அளவுக்குத் தொலைநிலைப்படுத்தி அந்த நடவடிக்கைகளின் முக்கியத்து வத்தைக் காட்டுகின்ற புதுவையின் சித்திரிப்பு மிக முக்கியமான ஒன்றாகவே படுகின்றது. தொடர்பியலில் உள்ளூடு தொடர்பு முறைமை (intrapersonal), ஆளுக்காள் தொடர்புமுறைமை (interpersonal) என்று இரண்டு நிலைப்படுத்திக் கூறுவார்கள். சற்று உன்னிப்பாக நோக்கும்போது, புதுவையின் எழுத்துக்களுக்கு இத்தகையதொரு இரு கிளைப் பரிமாணம் நிலவியுள்ள மையை எளிதில் புறக்கணித்து விட முடியாதுள்ளது. இவ்வாறு நோக்கும்பொழுதுதான் நவீன தமிழ்க் கவிதை வரலாற்றில் அல்லது அதற்கு முன்னரும்கூட இவ்வாறு ஒரு அரசியலுக்கான சமூக ஒருங்குசேர்ப்பு இயக்கமொன்றுக்காக அதன் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில் கவிதை பயன்படுத்தப்படுகின்ற ஒரு முறைமை தமிழில் முன்னுதாரண மற்றதாகவே உள்ளது. இங்கு கவிதை அல்லது இலக்கியம் ஒரு சமூக இயக்கத்துக்கான தேவையாகிறது. அவ்வாறு கூறுவதிலும் பார்க்கப் புதுவையின் கவிதை அவர் புலிகள் இயக்கத்தில் சேர்ந்ததன் பின்னர் அத்தகைய ஒரு பயன்பாட்டுக்கு உதவுகின்றது என்பது முக்கியமான ஒரு விடயமாகவே படுகிறது. இதைக் கூறும்பொழுது உண்மையில் கவிதையின் பயன்பாடே முக்கியப்பட்டு நிற்கிறது. ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் புதுவையின் கவிதைகள் இந்த வகிபாகத்தைப் பெறுகின்றன என்பதுவே இலக்கிய வரலாற்று நின்றுபார்க்கும்பொழுது முக்கியமானதாகப் படுகின்றது.

மக்களின் ஒருமைப்பாட்டுக்கோ அல்லது ஒருங்கு நிலைப்பாட்டுக்கோ இலக்கியம் தொழில்படுவது அதன் தோன்று நிலை இயல்புகளில் ஒன்று. இலக்கியம் வாய்மொழியாக இருந்த காலங்களில், இடங்களில் இச் செயற்பாடு காணப்பட்டமையை அறிகிறோம்.

அந்தக் கால நினைவுகள்

மிருசுவில் தமிழ்தாசன்

# முனியடிச்சு செத்த சின்னத் தங்கமக்கா... 5

"ஒருதரும் அழக்கூடாது. அழுதால் அந்தச் சீவனுக்கு அந்தரமாயிருக்கும். அழுறதை விட்டிட்டுத் தேவாரம் படியுங்கோடி." அடிக்காத குறையாகக் கடுந்தொனியில் கூறிய அன்னம்மாச்சியின் எச்சரிக்கையுடன் அங்கே சற்று அமைதி பிறந்தது. என்ன நினைத்தாளோ பக்கத்து வீட்டுப் பசுபதியரின் கடைக்குட்டி கனகமணி! "தோடுடைய செவியன்" என்று தேவாரத்தை ஆரம்பித்து பச்சைப் பிழையாகப் பாடத்தொடங்கினாள். அவளைப்பார்த்து குண்டுப் பெட்டை குணநாயகியுடன் பராசக்தியும் சேர்ந்து கீச்சுக்குரல்களில் கோஷ்டி காணம் நடத்திக் கொண்டிருந்தனர். இத்தனைக்கும் அந்த மாம்பலகை வாங்கிலில் மல்லாந்து படுத்திருந்த சின்னத்தங்கமக்கா சிவலோகப்பயணத்துக்குத்தன்னைத் தயார்ப்படுத்திய நிலையில் தனது இறுதி மூச்சுக்களை எண்ணிக்கொண்டிருந்தாள்.

"எடிபெட்டை சிவகாமி! எப்பன் எப்பனாய் பாலைப் பருக்குங்கோடி. பங்கை கடைவாயெல்லாம் பால் வழியுது."

மீண்டும் அங்கே அன்னம்மாச்சியின் அதிகாரக்குரல் ஆட்சி செய்தது. சும்மாயிருந்த சின்னத்தங்கமக்காவுக்கு நேர்ந்த கேட்டினை நினைத்து அந்த ஊர்மக்கள் அனைவரும் மிகவும் பரிதாபப்பட்டனர். பின்னே இருக்காதா! அறுபது வயதுக்கு மேலாகியும் சின்னத்தங்கமக்காவுக்கு இதுவரை ஒரு நோய்பிணியென்று எந்தப் பொல்லாப்புக்களும் வந்ததில்லை. காலை உணவாகப் பனாட்டும் பழந்தண்ணியும், மதிய உணவாகக் கைக்குத்துக் கறுப்பன் அரிசிச்சோறு, ஒடியல்பிட்டு, மரவள்ளிக்கிழங்கு, சொந்தத்தோட்டத்தில் ஆய்ந்த முளைக்கீரை, தோட்டத்துவெள்ளைக்கத்தரிப்பிஞ்சில் ஒரு பாற்கறி. எல்லோரும் பொதுவாகக்கால் ரூபா, மிஞ்சிப் போனால் முப்பது சதத்துக்கு மீன் வாங்க அந்த ஊரிலே சின்னத்தங்கமக்கா மட்டும்செலவைப்பாராது அரை ரூபாவுக்கு ஒரு உமல் நிறைய மீன் வாங்கி வந்து சரக்கு அரைத்து கறி கூட்டிச் சமைத்துச் சாப்பிடுவாள். இரவு குரக்கன் பிட்டோ, நல்லெண்ணை ஊற்றிய உழுத்தங்களியோ. படுக்கும்போது ஒரு லோட்டா பசும்பால். இத்தனை ஊட்டம் மிக்க உணவுகளை உண்ணும்வழக்கத்தைக் கொண்ட சின்னத்தங்கமக்காவுக்கு நோய் பிணியென்று எப்படிவர முடியும்!

"எட மோனை பாலசுப்புறு! உந்தக்குத்து விளக்குக்குக் கொஞ்சம் எண்ணை விடன்ராப்பா. திரி எரியப்போகுதெல்ல!"

சிவசம்பர் சொன்னதும் பாலசுப்பிரமணியம் அவரின் உத்தரவை உடனடியாக நிறைவேற்றினான்.




❋ ❋ ❋

சின்னத்தங்கமக்காவின் கடைக்குட்டி மகளுக்குப் பிள்ளை பிறந்திருப்பதால் வெந்நீர்வைத்துக் குளிப்பாட்டுவது, மகளுக்குப் பத்தியச்சோறு கொடுப்பது, பிறந்துவிட்ட பேரப்பிள்ளைக்கு எண்ணை பூசி, கால்களை எண்ணை தடவி இழுத்து மூக்குப்பிடித்து…அத்துடன் குழந்தையை முழுக வார்த்து… இப்படி எத்தனையோ காரியங்கள் பார்க்கவேண்டும். வீட்டிலே நடந்த பிரவசம். மருத்துவிச்சி மாணிக்கம் தான் பிரசவம் பார்த்தவள். ஆனால், இந்தப்பத்திய விடயங்களெல்லாம் ஒரு பெற்றதாய் பார்ப்பதுபோல மருத்துவிச்சி பார்ப்பாளோ! என்றதொரு பயம் காரணமாக சின்னத்தங்கம் அக்காவே இவைகளை முன்னின்று நடத்தவேண்டும். இயல்பாகவே மகள் மனோன்மணி ஒரு நோடாலம் பிடித்தவள். பத்தியச்சாப்பாடு கொடுத்து அவளைச் சாப்பிடவைக்கின்ற அளவில் சின்னத்தங்க மக்காவுக்குப் போதும் போதும் மென்றாகிவிடும். மனோன்மணி பக்குவப்பட்ட வேளையில் வேப்பங்குருத்து நல்லெண்ணை, முட்டைகள் போன்றவைகளைச் சாப்பிடவைப்பதற்குச் சின்னத்தங்கம் பட்டபாடு கொஞ்சநஞ்சமா! அது தெரிந்துதான் மருத்துவிச்சி இருந்தும் கூட ஒரு மைல் தூரம் நடந்து வந்து மகளின் பிரசவக் கடமைகளை முடித்துப் போகவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் அவளுக்கு. அதெல்லாம் சரி! செய்ய வேண்டிய கடமைகளை நேரத்துடன் செய்து முடித்து விட்டு இருட்டுவதற்கு முன்பே வீடு திரும்பியிருக்கலாம் தானே! அப்படி வேளைக்கே திரும்பியிருந்தால் சின்னத்தங்கமக்காவுக்கு இப்படியொரு பொல்லாப்பு வந்திருக்குமா! வழமைக்குமாறாக இரவு எட்டு மணிவரைக்கும் மகள் வீட்டில் நின்று விட்டு அந்தப் பயங்கரமான ஆட்கள் அரவமற்ற ஒழுங்கையால் வீடுதிரும்பிய படியால்தான் இன்று இந்த நிலை அவளுக்கு. அந்தப் புளிய மரத்தில் ஒரு பொல்லாத முனியொன்றிருப்பது ஊர் முழுவதுமே அறிந்த சங்கதி. கடந்த பத்து வருடங்களுக்கு முன்பு முத்தையர், பின்பு பகவதிக் கிழவி! இப்படி இவர்களெல்லோரும் முனியடித்து இறந்தது சின்னத்தங்கமக்காவுக்குத் தெரிந்திருந்தும்… சே! இப்படியாகிவிட்டது.

"ஏனப்பா ! மனிசிக்கு உந்தக் காய்ச்சல் அடிக்குது. ஒருக்கால் ஆசுப்பத்திரிக்கும் கொண்டு போய் பாத்திருக்கலாமே!"

கந்தவனம் வாத்தியார் ஒருவர் மட்டுமே இப்படிக்கூறினார். அவர் வேற்றூரிலிருந்து இங்கே வந்து திருமணம் முடித்தவர். சற்று விவரம் விளங்கியவர்.

எங்கடை வேலுப்பிள்ளைப்பரியாரியார் நல்ல கசாயம் குடுத்திருக்கிறார். அவர் கைபிடிச்சு, நாடி பார்த்தால் வருத்தம் பறக்கும். அதோடை உவன் பூசாரி கட்டாடி கணபதியும் திருநீறு போட்டிருக்கிறான். இதுக்கு மிஞ்சி என்ன ஆசுப்பத்திரி. இது முனிபிடிச்சிருக்குது வாத்தியார். ஆசுப்பத்திரியிலை வேலையில்லை.

"
வழமைக்குமாறாக இரவு எட்டு மணிவரைக்கும் மகள் வீட்டில் நின்று விட்டு அந்தப் பயங்கரமான ஆட்களரவமற்ற ஒழுங்கையால் வீடுதிரும்பிய படியால் தான் இன்று இந்த நிலை அவளுக்கு. அந்தப்புளிய மரத்தில் ஒரு பொல்லாத முனியொன்றிருப்பது ஊர்முழுவதுமே அறிந்த சங்கதி.

❋ ❋ ❋

சின்னத்தங்கமக்காவும் கண்களைத் திறப்பதாயில்லை. நிலமையோ வர வர மோசமாகிக் கொண்டு போனது. நோயா பேயா? யாரறிவார்!

"மெய்யே ஆறுமுகக் குஞ்சி! நான் போய்கட்டாடிக்கும் மேளத்துக்கும் சொல்லிப் போட்டு வரட்டே!"

சைக்கிள்கடைச் சண்முகன் அநியாயத்துக்கு அவசரப்பட்டான். "பொறடாப்பா பொறு! நீயென்னவோ ஆடறுக்கமுந்தி என்னவோ…எண்டமாதிரி அந்தரப்பட்டுக்கொண்டுநிக்கிறாய்." சீறிப்பாய்ந்தார் ஆறுமுகத்தார் சூழ்நிலை புரிந்து மெதுவாக ஒதுங்கிக்கொண்டான் சண்முகம். அவனும் தான் என்ன செய்வான் பாவம்! குடித்து விட்டு வந்த பனங்கள்ளின் போதை அவனைக் கொண்டெழுப்பிக் கொண்டு நிற்க அவனும் ஏதாவது செய்ய வேண்டும் போன்ற உணர்வுக் காட்பட்டு விட்டான்.

"அண்டைக்கும் அவன் தங்கராசன்ரை வட்டன் உந்த ஒழுங்கையுக்கை பொழுதுபட்ட நேரம் மாடு சாய்ச்சுக்கொண்டு வரயுக்கை மேகத்திலையிருந்து ஏதோ எரிஞ்சு விழுந்துதாம். ஆனால் நிலத்திலை பாத்தால் ஒண்டையும் காணயில்லையாம். அவனுக்கும் காய்ச்சல் வந்து வேலுப்பிள்ளையர் தான் சுகமாக்கிவிட்டவர்."

"அதுவந்து பாருங்கோ! அவனுக்கு முனி அடிக்கயில்லை. சும்மா வெருட்டியிருக்குது போலை. இதென்னடா எண்டால் இந்த மனிசிக்கு அடிச்சுப்போட்டுதே! இல்லாட்டில் இப்ப மூண்டு நாலு நாளாய் இப்படிக் காச்சல் காயுதே! வேலுப்பிள்ளையருக்கும் அடங்காதாமே! ஆளும் நல்லாய் உருகி கண்ணும் உள்ளுக்குப்போய்."

"அது இரத்தத்தை உறிஞ்சியெடுத்துப் போட்டுதப்பா. முனியின்ரை வேலை உதுதான்."

❋ ❋ ❋

சின்னத்தங்கத்தின் படலையிலிருந்த தென்னம் குற்றியில் அமர்ந்திருந்தபடி வாரித்தம்பியரும், செல்லப்பரும் ஏதேதோ பேசிக்கொண்டிருந்தனர்.

"பங்கை மனிக்குச்சேடமிழுக்கத் துவங்கீட்டுது இனிச்சரிவராது."

தலைவாசல் கிடுகுச்செத்தையைத் திறந்து முற்றத்துக்கு வந்த கடைக்கனா் வெறுப்புடன் சொல்லி விட்டு வெளியேறினார்.

" டேய் பெடியன்! உங்கை பூநரிப்பக்கம் முனியைக்கட்டி அடக்கக் கூடிய நல்ல மாந்திரீகன் ஒருதனிருக்கிறானாம். செலவு கொஞ்சம்கூட வரும்."

"கனக்கவே அம்பலவாணியப்பா"

"எப்படியும் ஒரு ஆயிரமெண்டாலும் கேப்பனாம்"

"அதுக்கென்ன ஊருக்கை எங்கடை ஆக்களிட்டை இரண்டோ, மூண்டோ ரூபா எண்டு தண்டியெண்டாலும் இதை உடனடியாய்ச்செய்ய வேணும். நான் நாளைக்கே அஞ்சு ரூபா போடுறன். சரியே!"

அம்பலவாணியப்பாவின் விழிப்புணர்வுக் கூட்டம் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க மறுபுறம்,

"ஆச்சி! எங்கடை ஆச்சி! எங்களை விட்டுப்போட்டியேனை. பாழ்பட்டுப் போன அந்த முனியடிச்சு அநியாயமாயப் போட்டியேணை."

சின்னத்தங்கமக்காவின் இளைய மகள் மனோன்மணியின் ஏக்கக் குரல் ஓங்கியொலிக்க அத்துடன் இன்னும் பல குரல்கள் சோகத்தில் துவண்டு குரல் எழுப்பின. சின்னத்தங்கமக்கா பயணத்துக்குத் தயாராகிவிட்டாள்.

"சின்னத்தங்கமக்கா முனியடிச்சுச் செத்துப்போனவாம்" ஊரெல்லாம் இதே செய்தி. இதே பேச்சு.

சூரியகாந்தி
Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# தங்கப் பறவை

4



## சிறுவர் நவீனம்

செல்லையா குமாரசாமி

தனது நாட்டிலும் வீர வாலிபர்கள் இல்லையோ எனக் கலங்கினார் அரசர். சேந்தனுக்கு அரண்மனை வளாகத்தில் மாளிகை கொடுத்ததையும் அவர் குடும்பத்தோடு அவர் மாளிகையில் குடியேறியதையும் நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.

சேந்தனுக்கு ஒரேயொரு மகன். பார்த்தீபன் அவனுக்கு வயது பதினெட்டு. தன் மன ஆறுதல் வேண்டி அரச குமாரியின் திருமணம் தடைப்பட்டுக் கொண்டே போவது பற்றிச் சேந்தனுடன் அரசர் அடிக்கடி பேசுவார். சேந்தனுக்குக் கேட்கக் கேட்கக் கவலைதான். மனைவி, மகன், தாயார் கூடியிருந்த வேளை ஒன்றில் அரசரின் கவலையை எடுத்துக் கூறினார் சேந்தன்.

கேட்டிருந்த பார்த்தீபன், "ஏன் அப்பா, இந்தப் பெரிய மதனாபுரி நாட்டில் இழந்த வைரத்தையும் தங்கப் பறவையும் கண்டு, மீட்டுவரக் கூடிய ஒருவன் இல்லையா?" என வினவினான்.

"போனவர்களில் சிலர் இன்னும் திரும்பி வரவில்லை. அவர்களும் எப்படியோ? அரசர் மிகவும் மனம் வாடிப் போனார் என்பது எனக்கு மட்டுமே தெரியும். ஆனால் இராச குமாரி அதையிட்டுக் கவலைப்படுபவராகத் தோன்றவில்லை. அவர் தோழிகளோடு சேர்ந்து பூங்காவில் பந்து விளையாடிக் கொண்டிருக்கிறார். சின்னப் பெண்தானே?"

தான் முயற்சித்துப் பார்த்தால் என்ன என்னும் எண்ணம் பார்த்தீபன் மனதில் எழுந்தது. பெற்றவருக்குக் கூறினால் அனுமதி கிடைக்காது என்பது அவனுக்குத் தெரியும். பாடி ஆறுதலாக அமர்ந்திருந்து பாக்கிடித்த சமயம் ஒன்றில் பக்கத்தே வந்தமர்ந்தான் பார்த்தீபன்.

"பாட்டி உங்களுக்குப் பாக்கிடித்துத் தரட்டுமா?" என்று கேட்டான்.

"உனக்குப் பாக்கிடிக்கத் தெரியாது பக்குவமாக இடிக்கவும்மாட்டாய்" எனக் கூறினாள் பாட்டி.

"என்ன பாட்டி கூறுகிறீர்கள்? எனக்குப் பாக்கு இடிக்கத் தெரியாதா?" கேட்டுச் சிரித்தான் பார்த்தீபன்.

"உங்களுக்குத் தெரியாது பாட்டி, நானொரு வீரனெண்டு. ஒரு வீரவீரம் கொண்ட என் தந்தைக்கு உங்களுடைய பிள்ளைக்கு மகனாகப் பிறந்திருப்பது தெரியாதா?"

பாட்டி சிரித்துச் சொன்னாள். "என் மகன் சேந்தன் மகாவீரன் என்பது இந்த உலகத்துக்கே தெரிந்த சங்கதி. உனக்கு வயது பதினெட்டாகுது. இதுநாள் வரை மற்றவர்கள் உன்னையும் ஒரு வீரன் என்று சொல்லக் கூடியதாக என்னத்தைச் செய்து முடித்திருக்கிறாய் சொல்லு பாப்பம்...?"

"என்னுடைய திறமையை இனித்தான் பாட்டி காட்டப் போறன்"

"வானத்தில் பறந்து வட்டநிலாவைப் பிடித்துக் கொண்டு வரப் போறியா?" கேலியாகக் கேட்டாள் பாட்டி.

"எனக்குச் சிறகுகள் இருந்திருந்தால், சந்திரனை என்ன மின்னும் நட்சத்திரங்களையும் வாரிக் கொண்டு வந்து அரசர் மெச்சத்தக்கதாக அரண்மனை முன் கொட்டியிருப்பேன் பாட்டி"

பாட்டி பாக்கிடிப்பதை நிறுத்திவிட்டுச் சிரித்தாள். பின்னர் சொன்னாள். "சிறகுகள் இருந்திருந்தால் என்று நடக்க முடியாததைச் சொல்லாமல் சிறகுகள் இல்லாது செய்யக் கூடிய காரியங்கள் இருக்கிறபோது, சிறகுகள் பற்றிப் பேசாதே"

"துணிந்துவிட்டேன் பாட்டி. நீங்கள் மனம் வைத்தால், இந்த உலகமே பாராட்டக் கூடிய ஒரு செயலைச் செய்யலாம் என்று நினைக்கிறேன்"

"நான் மனம் வைத்தாலா?"

"ஆமாம்"

"அதென்னடா பேரா அந்தக் காரியம்?"

"எனது தந்தையார் எடுத்து வந்து அரசரிடம் கொடுத்த வைரத்தை எப்படியாவது தேடிக் கண்டு பிடித்துக் கொண்டு வரப்போறேன்"

இரண்டு கைகளையும் கொட்டிச் சிரித்தாள் பாட்டி. "நீயும் அரசகுமாரியை கல்யாணம் செய்ய ஆசைப்படுகிறாய் போல..."

"நான் ஒண்டும் எழில்நிலாவைத் திருமணம் செய்ய ஆசைப்படேல்லை. அரசகுமாரியைக் கண்ணாலை கண்டதும் இல்லை"

"அப்படியானால்?"

"அப்பா எடுத்ததை எங்கள் வளவில் இருந்ததை எங்கிருந்தோ வந்த பறவை கவ்விக் கொண்டு போனது. அதனால் சுயம்வரம் தடைப்பட்டதை, வைரத்தையும் தங்கப் பறவையையும் தேடி, முடியாதுபோய் அரச குமாரர்கள் திரும்பியதை எமது மதனாபுரி நாட்டு வாலிபர்களுக்கு அவற்றை மீட்டுவரச் சந்தர்ப்பம் வழங்கியும் அவர்கள் ஒருவரால் கூட இயலாது போனதையும் நினைத்தால் எங்கள் நாட்டுக்கே அவமானம் இல்லையா பாட்டி?"

"அதற்காக?"

"உயிர் போனாலும் பாதகமில்லை. நானும் முயற்சி செய்து பார்க்கலாம் என நினைக்கிறேன்...."

"உனக்கென்னடா பேரா பித்தம் தலைக்கேறி விட்டதா? ஆளான ஆள்களெல்லாம் ஆட்பட்டா நேரத்திலை காக்காய் வியாதி கஞ்சிக் கலைந்ததாம் எண்டு என்ரை அம்மா அந்தக் காலத்திலை சொல்லுறவ. நீ என்னடா என்றால் தலையாலை மலையை உடைக்கிறன் எண்டு நிக்கிறாய்?"

"உடைக்கிறேனோ இல்லையோ இருந்து பாருங்கோ பாட்டி. பெற்றோரிடம் சம்மதம் பெற்றுத் தாருங்கோ நான் முயன்று பார்க்க... இதிலே வெற்றி பெற்றுத் திரும்பி வந்து..."

பார்த்தீபன் முடிக்கவில்லை "அரசகுமாரி எழில்நிலைவைத் திருமணம் செய்ய" என முடித்துச் சிரித்தாள் பாட்டி.

"எனக்கு எழில்நிலா வேண்டாம். வைரத்தையும் உயிருடன் தங்கப் பறவையையும் அரசரிடமோ அரச குமாரியிடமோ ஒப்படைப்பேன். மகிழ்ந்து அரசர் எனக்கொரு பதவியை தரட்டும்"

"நல்லது... சேந்தனிடம் பேசி அனுமதி பெற்றுத் தருவேன்"

மகிழச்சியடைந்த பார்த்தீபன் பாட்டியைக் கட்டியணைத்து அவளுடைய உச்சியில் முத்தமிட்டான். வைரத்தையும் தங்கப் பறவையையும் தேடி வரத் தன் மகன் தானாகக் கிளம்பினாலே தவிரத் தான் சொல்லி அவன் போகக் கூடாது என எண்ணியிருந்த சேந்தனுக்குப் பாட்டி பார்த்தீபனின் விருப்பத்தைத் தெரிவித்ததும் உள்ளூர மட்டற்ற மகிழ்ச்சி. வெளியே காட்டிக் கொள்ளவில்லை.

அம்மா அழுது வடித்தாள்.

"அயல் நாட்டு அரசகுமாரர்களும், எங்கள் நாட்டு வீரர்களும் தம்மால் முடியவில்லை எனத் திரும்பி வந்துவிட்டார்கள். பார்த்தீபனை அனுப்ப நான் சம்மதிக்க மாட்டேன்"

"புலிக்குப் பிறந்தது பூனையாகாது. சிங்கக் குட்டி செம்மறி ஆகாது. பயப்படாதே மருமகளே. பார்த்தீபன் என் பேரன். வீரப்பரம்பரையில் வந்தவன். அவன் வெற்றியோடு திரும்புவான் என்று நம்பு. அழாதே?" எனத் தேறுதல் வார்த்தைகள் சொன்னாள் பாட்டி.

பாட்டியின் வார்த்தைகளைக் கேட்டு ஒருவாறு தன் சம்மதத்தையும் தெரிவித்தபோது மகிழ்வில் புறப்படுவதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்தான் பார்த்தீபன். "அரசருக்குத் தெரிமா?" தந்தையை மகன் கேட்டான்.

"அரசர் காதில் போட்டு வைத்திருக்கிறேன். உங்கள் மகனை அழைத்து வாருங்கள். அவனை நான் கண்டதில்லை. நான் ஆசீர்வதித்து அனுப்பி வைக்க" என்று கூறினார். அவரிடம் போகும் முன்னர் என் தந்தை உபயோகித்த வாளை இடுப்பில் கட்டிக் கொள். குத்துவாளினையும் மறந்திடாதே. மாற்றிக் கொள்ள ஆடைகள் எடுத்து வை"

"நீ காடு கரைம்பையெல்லாம் போக வேண்டியும் வரலாம். குடுவையொன்று தருகிறேன். தண்ணீர் கிடைக்கும் இடங்களில் குடுவையை நிறைத்து வைத்துக் கொள்" எனக் கூறிச் செம்பினாலான குடுவை ஒன்றினைக் கொடுத்தாள் அம்மா.

அரசரிடம் வந்து அவருடைய பாதங்களைத் தொட்டு வணங்கினான் பார்த்தீபன்.

"வெற்றியோடு திரும்பி வா. உன் புகழ் எங்கள் நாடு எங்கும் பரவட்டும்" என ஆசீர்வதித்தவர் "இதனை வைத்துக் கொள்" என பொற்காசுகள் நிறைந்த பை ஒன்றை அவனுடைய கைகளில் வைத்தார்.

"தந்தையாரும் தந்திருக்கிறார்" என்றான் பார்த்தீபன்.

"இருக்கட்டுமே இதையும் வைத்துக் கொள்" எனக் கூறிய அரசர் "உனக்குக் குதிரை ஏற்றம் தண்ணீ பட்டபாடு என உன் தந்தையார் சொன்னார். உனக்குப் பிடித்தமான குதிரை ஒன்றினை லாயத்திலிருந்து எடுத்துச் செல்" என்றும் உரைத்தார்.

"நான் எப்போது திரும்பிவந்து தங்களைக் காண்பேன் என்று சொல்ல முடியாது. மூன்று நான்கு திங்கள் கூட எடுக்கலாம். அனால் ஒரு முடிவோடும் வெற்றியோடும்தான் திரும்புவேன்" என்று சிரித்துச் சொன்னான் பார்த்தீபன்.

"வெற்றியோடு வா. அதனைத்தான் நானும் என் மகள் அரசகுமாரியும் எதிர்பார்க்கிறோம். மக்களும் எதிர்பார்க்கிறார்கள்"

"குதிரை தருவதாகச் சொன்னது என் காதுகளில் இனிமையைத் தந்தது. நான் குதிரையை விரும்பவில்லை. ஏனென்றால் இதுவரை போனவர்கள் எல்லோரும் குதிரைகளும் ரதங்களும் செல்லக் கூடிய இடங்களுக்கு மட்டுமே போயிருப்பார்கள். குதிரைகளும் ரதங்களும் போக முடியாத இடங்களுக்குப் போயிருக்க மாட்டார்கள். இவர்கள் தேடிப் போன இடங்களில் தங்கப் பறவை இருந்திருக்கும் என்று சொல்ல முடியாது. அது எப்படியும் மக்கள் புகமுடியாத ஓர் இடத்திலே தான் மறைந்திருக்கும். நான் காடுகள் கடக்க வேண்டி வரலாம். மலைகளில் ஏற வேண்டியகட்டாயமும் எற்படலாம். ஆறுகளை நீந்திக் கடக்கும் நிர்ப்பந்தமும் எனக்கு வரலாம். குதிரையோ ரதங்களோ எனக்கு அவ்வேளைகளில் பெரும் இடையூறாக அமையலாம். எனவே வேண்டாம்.

கால்நடையாகவே போகத் தீர்மானித்த விட்டேன்."


"காலம் அதிகம் எடுக்குமே?"

"அதனாலேதான் மூன்று நான்கு திங்களும் எடுக்கலாம்" .

"சென்று வா, வென்று வா" என்ற அரசர் திரும்பிப் பார்த்தார். அங்கே உப்பரிகையில் இவர்களின் சம்பாசனையைக் கேட்டு நின்றாள் அரச குமாரி. பார்த்தீபனின் பார்வையும் உப்பரிகைப் பக்கம் திரும்பியது. கம்பர் இராமயாணத்தில் கூறியது போல "அண்ணலும் நோக்கினான்.

அவளும் நோக்கினாள்" அரசகுமர்ரின் மென்காந்தாள் விரல்கள் மேலெழுந்து மெல்ல அசைந்தன. பார்த்தீபனுக்கு இடை கொடுத்தனவோ வாழ்த்தினவோ என்னவோ, தெரியவில்லை. இரவு அரசரும், இராணியும், அரச குமாரியும் நிலாமுற்றத்தில் அமர்ந்திருந்தபோது "நான் இன்றுவரை உங்களுக்குக் கூறாது விட்டதைக் கூறப் போகிறேன். என்னை இருவரும் மன்னிக்க வேண்டும். எனக்கு விவரம் தெரிந்த நாள்களிலிருந்து சுயம்வரத்தன்று அணிந்த ஆடைகள் உட்படச் சில காணாது போகின்றன. எப்படி என்று புரியவில்லை" என்றாள் அரச குமாரி.

(தொடரும்)



நீ காடு, கரைம்பையெல்லாம் போக வேண்டியும் வரலாம். குடுவையொன்று தருகிறேன். தண்ணீர் கிடைக்கும் இடங்களில் குடுவையை நிறைத்து வைத்துக் கொள் எனக் கூறிச் செம்பினாலான குடுவை ஒன்றினைக் கொடுத்தாள் அம்மா.

தொடர்

# போர் உலா...

01



கப்டன் மலரவன்



**1990** கார்த்திகை 9ஆம் திகதி

பனிக்காற்று ஊ ஊ என வேகமாக வீசி அடித்துக் கொண்டிருந்தது. பால்போலத் தெறித்த வெண்ணிலவை முகில் கூட்டங்கள் வெட்டியோடின. விரைவாக அவற்றைக் கலத்து விட்டு நிலவு வெளியே வந்து சிரித்தது. கிழக்கு வான ஓரத்தில் கொஞ்சம் கருமுகில்கள் தொட்டந் தொட்டமாய்ச் சிதறிக்கிடந்தன. நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாய்த் தூங்கித் தூங்கி விழித்துக் கொண்டிருந்தன. வானில் இடையிடையே இராக் குருவிகள் பறந்தன. ஆட்காட்டி ஒன்று அவலமாய்க் கத்தியபடி கடந்து போனது.

"உது கத்துறது கூடாது எங்கிறவ. அங்கட அப்பு நெடுகச் சொல்லுவார். அவற்ற தேப்பன் வண்டிலில வெளிக்கிடேக்க உது குறுக்கால போனதாம். அப்பவும் ஆத்தை-சொல்லச் சொல்ல நல்ல வெறியில வெளிக்கிட்டுப் போனவராம். விடியக்காத்தால பக்கத்து ஊராக்கள் சவத்தைதான் கொண்டு வந்தவையாம். ஏதோ வண்டிலால இழுத்துப் போட்டு அடிச்சிட்டுதாம்" என்று வலு 'சீரியசாய்' சொன்னான் வசந்தன்.

"நீ ஒரு பேயனெண்டு தெரிஞ்சு கொப்பர் நல்லா கயிறு விட்டிருக்கிறார். நீயும் கேட்டுக்கொண்டு வந்தனியே. எங்களுக்குச் சொன்னமாதிரி வேறாக்களுக்குச் சொல்லிப் போடாத. பிறகு உருப்படியா வரமாட்டாய்"என வசந்தனைச் சீண்டினான் இதயன்.

"டேய் அவன் எனக்குச் சொன்னவன். நீ ஏன் கத்திறாய்?" என இடையில் வெட்டினேன் நான். வசந் கையில் எடுத்த தடிக்குச்சியால் இதயனுக்கு ஒரு குத்து விட்டுத்தான் அடங்கினான்.

உழவியந்திரம் வெளியை (வெட்டையை) விட்டு காட்டுப் பாதையில் இறங்கியது. எல்லோரும் வயிற்றைப் பிடித்துக் கொண்டார்கள். "இனிக் கொஞ்சத் தூரம் தண்டவாளத்திலதான் போகும்" ரைவர் சேது கூறிச் சிரிப்பது கேட்டது.

"இவன் ஒரு மூதேவி. இப்படி இடங்களில வேணுமெண்டு ஓடுவான். நாங்கள் கத்திறதப் பாத்தா இவனுக்குச் சந்தேகம் போல" தன் இயலாமையைக் கொட்டினான் வசந்தன்.

காட்டுப்பாதை என்பது காட்டுக்குள்ளேமரங்களை வெட்டி பாதைபோல அமைத்துப் பின் நீரில் அள்ளுப்படாமல் மரக் கட்டைகளை வெட்டிச் சிலிப்பர் கட்டைபோல வரிசையாய் அடுக்கிப் பின்னர் மண்போட்டு இறுக்குவதே இது வருடா வருடம் மழை முடிந்தவுடன் சீரமைக்கப்படும். கேட்டவுடன் சுலபமாகக் கூறிவிடலாமே தவிர இது மிகக் கடினமான வேலை. காட்டை வெட்டிச் சீராக்குவதே பெரும்பாடு. பின்பு மரங்களைச் சிலிப்பர் கட்டைபோல துண்டு துண்டாக்கி சுமந்து வரவேண்டும். பின் சிவந்த மண்ணை குன்றாய்க் குவிந்திருக்குமிடங்களில் வெட்டி அள்ளி, கடகங்களில் சுமந்து வரவேண்டும். இவ்வளவிற்கும் கோல்சரும் ஆயுதமும் உடலில் தான் இருக்கும். வியர்வையில் எல்லாப் போராளிகளும் குளித்து விடுவார்கள். அனல் தெறிக்கும் வெயிலில் இந்த வேலை செய்வதென்றால் மிகக் கடினம். என்ன செய்யிறது. எங்கட றோட்டு, நாங்கள்தானே செய்யோணும் என 'தளபதி' உற்சாகமூட்டுவார். அவர்கூட பல இடங்களில் தானும் நின்று செய்வார்.

இளம் போராளிகள் தாங்கள் வெட்டிய வீதியை துப்புரவு செய்வார்கள். அந்த நேரத்தில கூட நண்பர்களை வம்புக்கிழுக்கும் இதயன் மற்றவர்களைச் சீண்டுவான். சிலவேளை இவனை யாராவது மண்ணால் குளிப்பாட்டி விடுவார்கள். வியர்வைச் சேற்றில் மண்பட பார்ப்பதற்குப் பரிதாபமாக இருக்கும். 'டடெங் டாங்' என உழவியந்திரம் பெரிதாய்க் குலுங்கியது.

"ஐயோ! என்ரா இப்படி ஓடுகிறாய்? மெல்லமாப் போவான்" என வசந்தன் கேட்பதும் சேது அட்டகாசமாய்ச் சிரிப்பதும் தெளிவாகக் கேட்டது.

"உவன் சிரிக்கிற சிரிப்பைப் பாத்தா இண்டைக்கு பிரட்டி எடுப்பான்போல கிடக்குது" என்று இதயன் எரிச்சலுடன் கூறினான்.

எம்மைத் தொடர்ந்து வரும் உழவியந்திரங்கள் மிகத் தொலைவில் வருவது தெரிந்தது. டேவிட் அண்ணர் ஓட்டி வருவதற்கு ஒற்றை லைற்தான் எரிந்தது. அது தூரத்தில் தெரிந்தது.

பெரிய பெரிய பாலை, வீரை மரங்களைப் பார்க்கையில் ஏனோ துக்கமாக இருந்தது. "எங்களை விட்டு எங்க போறியள்" எனக் கேட்பதைப் போல அவை காற்றுக்கு அசைந்து இரைந்தன.

"எவ்வளவு நல்ல காடு. தாய் மாதிரி இவ்வளவு காலமும் எங்களைக் காத்தது இதுதானே. இனி எப்ப வரப்போறம்" என மனதில் எண்ணிக்கொண்டேன். ஆவலை அடக்க முடியாமல் கையை உயர்த்தி மரங்களிற்கு "டாட்டா" காட்டினேன்.

"டேய் என்னாட செய்யிறாய்?" என வசந் கேட்டான். ரைக்ரர் குலுக்கி மண்டை பிசகிட்டுதோ என எண்ணினான் போலும்!

"சும்மாதான்" என்று விழியில் திரையிட்ட நீரைத் தட்டிவிட்டேன். முத்தாய் உருண்டு அது செம்மண்ணில் விழுந்தது; எமது வியர்வையூறிய மண்ணில். இதயன் இப்போது லைற்றைப் பிடித்தபடி நித்திரை தூங்கினான்.

நான் கோல்சரை கொஞ்சம் தளர்த்தி விட்டு ரி.81ஐ உயர்த்திப் பிடித்துக்கொண்டேன். முகில்கள் வேகமாய் தலைக்கு மேல் விரைந்தன.

காட்டின் ஆரம்பமுகாமில் ஒரு கணம் குலுங்கி நின்ற ரைக்ரரை, சலாம் சென்றியுடன் கதைத்து விட்டு வேகமாக வெளியே எடுத்தான். ரைக்ரர் மணல் வெளியூடாகப் பாயத்தொடங்கியது. உற்சாகமாகஓடினான்.

"சலாம், ரைக்ரரை நிற்பாட்டு வசந்தன் கீழே விழுந்திட்டான். என்ன கண்டறியாத ஓட்டம் ஓடுறாய். பேயா!" எனத் திட்டிக்கொண்டு இதயன் இறங்கி முன்பக்கமாக ஓடினான். சலாம் நல்லாப் பயந்து போனான். என்னடா, என்னடா எனக் கேட்பதற்குள் ரைக்ரரின் 'மட்காட்டில்'ஏறிய இதயன் "இனி எடடா" என்றான். சலாமிற்கு நொடியில் விளங்கியது, இவன்தன்னை ஏமாற்றி விட்டான் என்று. இல்லாவிட்டால் சலாமாவது நிற்பாட்டி ஏறுஎன்று சொல்லுறதாவது. தோல்வியுடன் சலாம் சித்தபடி அக்சிலேற்றரை ஊன்றி மிதிக்க ரைக்ரர் ஜீப் மாதிரிப் பாய்ந்தது.

"இனி இவங்கள் இரண்டுபேரும் சேர்ந்து எங்களைக் கொல்லப் போறாங்கள்" என்று வசந் ஆற்றாமையால் எரிந்தான். தன் பெயரைப் பாவித்த கோபம் அவனுக்கு இருந்தது. தூரத்தில் நாயாற்றுப்பாலம் பெரிய மிருகம் போலக் குந்தியிருந்தது.

"இந்தியன் இருக்கேக்க மச்சான் இதிலையெல்லாம் வர ஏலாது. மண்டை சிதறும்!" என்று பழையதை நினைவு கூந்தான் வசந்தன்.

"இவ்விடத்தில்தான் ஒருக்கா நல்லாக் குடுத்தனாங்கள்" என்று ஞாபகப்படுத்தினேன்.

"ஏராளமான ஆமி செத்தல்லே?" என வினாவாக எழுப்பினான்.

"ஓ. 26ஆமி செத்தது. 21 ஆயுதம் எடுத்தனாங்கள். 'கால்கஸ்ரோ' பிறன் எல்லாம் எடுத்தது" என்று நினைவுகூர்ந்தேன்.

ரைக்ரர் வீதியில் ஏற முன், நீர்க்கிடங்கினுள் விட்டு எடுத்தான் சலாம். என்னிலும் வசந்திலும் அதன் பெரிய ரயர் நீரை வாரி எறிந்தது. சலாம் சிரிக்க எனக்கு உண்மையில் கோபம் வந்தது. "விசரா.ரைபிளல்லே நனைஞ்சு போச்சு" என்று கோபத்தைக் கொட்டினேன். "சரி நானினி அப்படி ஓடேல்ல" என்று சலாம் சொன்னான். வாய்க்குள் போன நீரைத் துப்பியபடி வசந் இருந்தான்.

பெரிய கருமுகில் ஒன்று சந்திரனைத் திரையிட்டு மறைத்தது. வெள்ளிகள் கூடக் குறைந்துவிட்டன. வானவெளி வெறிச்சோடிக் கிடந்தது. "அங்கற்றா" என்று வசந் காட்டினான். ஒரு வெள்ளி பால்வெளியில் ஓடி எரிந்து மறைந்தது. என்னடா அது என வசந்தன் வாயைக் கிண்டினேன்.

"மச்சான் உதைத்தான் வெள்ளி விழுகிறது என்கிறவை. பார்க்கக் கூடாதாம். பாத்தா உடனே பால்மரத்தைப் பார்க்க வேணுமாம்" என்று சுழலவிட்டான் கண்ணை. கண்ணுக்கெட்டிய தூரம்வரை மரமேயில்லை.

"உதப்பாத்தா ஆறாவதுக்கும் என்னமும் நடக்கும் எண்டு அய்யா சொல்லுறவர்" என்றான் அவன். கிராமத்தில் வளர்ந்தவன். அந்த ஆசாரங்கள் இருக்கத்தானே செய்யும்.

"உதெல்லாம் வெறும் கட்டுக்கதையடா, அது வெள்ளியில்லை. ஆகாயக்கல் எண்டு சொல்லுறது" என சிந்து விளக்கம் கூற, அவன் ஏற்றுக் கொள்வதாகத் தெரியவில்லை. சரி கதையை விடு எனப் பேச்சை மாற்றினேன்.

என்னவென்று கதைமாறியது என எனக்குத் தெரியவில்லை. எப்படியோ வீட்டுக்கதை வந்துவிட்டது.

(வளரும்)

காட்டின் ஆரம்பமுகாமில் ஒரு கணம் குலுங்கி நின்ற ரைக்ரரை, சலாம் சென்றியுடன் கதைத்து விட்டு வேகமாக வெளியே எடுத்தான். ரைக்ரர் மணல் வெளியூடாகப் பாயத்தொடங்கியது. உற்சாகமாகஓடினான்.
"சலாம், ரைக்ரரை நிற்பாட்டு வசந்தன் கீழே விழுந்திட்டான். என்ன கண்டறியாத ஓட்டம் ஓடுறாய். பேயா!" எனத் திட்டிக்கொண்டு இதயன் இறங்கி முன்பக்கமாக ஓடினான். சலாம் நல்லாப் பயந்து போனான். என்னடா, என்னடா எனக் கேட்பதற்குள் ரைக்ரரின் 'மட்காட்டில்' ஏறிய இதயன் இனி எடடா என் றான். சலாமிற்கு நொடியில் விளங்கியது, இவன் தன்னை ஏமாற்றி விட்டான் என்று. இல்லாவிட்டால் சலாமாவது நிற்பாட்டி ஏறுஎன்று சொல்லுறதாவது. தோல்வியுடன் சலாம் சித்தபடி அக்சிலேற்றரை ஊன்றி மிதிக்க ரைக்ரர் ஜீப் மாதிரிப் பாய்ந்தது.



"சலாம், ரைக்ரரை நிற்பாட்டு வசந்தன் கீழே விழுந்திட்டான். என்ன கண்டறியாத ஓட்டம் ஓடுறாய். பேயா!" எனத் திட்டிக்கொண்டு இதயன் இறங்கி முன்பக்கமாக ஓடினான். சலாம் நல்லாப் பயந்து போனான்.

# மனிதனைச் சபித்த பறவைக் கதை 2



## கவிதை

வானவன்

அலைந்து களைத்த
அந்தப் பறவை ஆறியிருக்கத்
தெருவோரம் ஒரு
இலை சடைத்த கிளையைத்
தேடிற்று.

பட்டுப்போனதொரு
மொட்டைமரத்தையாவது
கண்டு பிடிப்பேன்
என்றலைந்து
தோற்றுப்போயிற்று.

பயிருக்கென்று
குடியிருக்கவென்று
தொழிலகத்துக்கென்று
ஆயிரங் காரணங்கள்
அனேக மரங்களை
அடியோடு வீழ்த்தின.
என்பதை நம்ப மறுத்தபடி
பறந்தது.

ஒருபோதுமில்லாத
பெருஞ்சோர்வு வாட்ட,
துணை தேடிக்
குலவி இன்பங் கண்டு
சந்ததி வளர்க்கும்
ஆசை துறந்து
அடுத்தவேளை
பசியிருந்தாலும்
இளைப்பாற ஒரு கிளை
தேடுவதோடு நாள்களைத்
தொலைக்கிறது பறவை.

புழுக்கள்
உணவின்றி அழிந்துபோன
அவலத்தைச் சொல்லி
கோபப்படுகிறது.
பொட்டல் வெளியில்
கருகிக் கிடக்குமொரு
கள்ளிச் செடியருகே
ஏங்கியிருந்து
புலம்புகிறது.

# 'பாடசாலைக் கிராமம்'

## புதிய பாடசாலை பற்றிய எண்ணக் கரு

### கருத்து

வி.சிவனேசன்

'பாடசாலைக்கிராமம்' எனும் எண்ணக்கரு காலத்துக்குப் பொருத்தமாகவும் மாணவர் கல்வி ஆற்றலை வளரக்கூடியதாகவும் அமைவது சிறப்பாகும். நூறுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் இதில் பல்வேறு பிரச்சினைகளைக் கொண்டவையாக அமைகின்றன.

1. ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பான பிரச்சினை
2. பொருத்தமான வகுப்பறை காணப்படாமை
3. விளையாட்டு மைதானம் இன்மை மற்றும் உடலியக்கச் செயற்பாட்டுக்கேற்ற இடம் இன்மை
4. கணனி அறை காணப்படாமை
5. மாணவர் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுவதால் இணைபாடவிதான செயற்பாடுகளில் முழுமை இன்மை

இவ்வாறான குறைபாடுகளுடன் இயங்குவதால் நகரப்புறப் பாடசாலைகளுக்கும் நூறுக்கும் குறைவான மாணவர்கள் உள்ள பாடசாலைகளுக்கும் அடைவு மற்றும் வளர்ச்சியில் பொரியளவு வேறுபாடுகள் காணப்படுகின்றன. இதனால் ஒரு சில பாடசாலைகள் தமது தெரிவை அல்லது பெற்றோர் விருப்பை அதிகரித்து வைத்துள்ளன. மறுவளமாகக் கூறுவதானால் வளப்பற்றாக்குறையுடன் இயங்கும் நூறுக்குக் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகள் மாணவரை அடைத்து வைக்கும் சிறைக்கூடங்களே. இத்தகைய பூரணத்துவமற்ற கற்பித்தலின் விளைவாகவே எழுத வாசிக்க இடர்ப்படும் கனிசமான தொகைப் பிள்ளைகளை இடைநிலைப் பிரிவுகளில் சுமக்க நேரிடுகிறது. இதை விளங்கிக் கொள்ளாது, 20பிள்ளைகள் தரம் 5புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றியிருந்தால் சித்திமட்டத்தை எட்டாத 19பிள்ளைகளைப் பற்றிச் சிந்திக்காது சித்தியடைந்த ஒரு பிள்ளையை ஒஸ்கார் விருதுக்கு மேலாகக் கருதும் அபத்தம் அரங்கேறுகிறது. இவற்றுக்கு மாற்றீடாகப் பன்னாட்டுத் தரத்துடன் இருக்கக் கூடியதும் எல்லாப்பிள்ளைகளும் சித்திமட்டத்தை எட்டக்கூடியதுமான எண்ணக்கருவே பாடசாலைக் கிராமம். மாணவர் எண்ணிக்கை குறைந்த பத்து அல்லது பதினைந்தாக ஆரம்பப்பாடசாலைகளில் இருந்தால், அந்தந்தப் பாடசாலைகளில் இருந்து பேருந்துகள் மூலம் ஏற்றிச் சென்று பாடசாலைக்கிராமத்தில் சேர்த்து மிகவும் உச்சமான கற்றல் அனுபவங்களுடன் உயர்தரமான கல்வியை வழங்க முடியும். இதுவே பாடசாலைக் கிராமத்தின் இலக்கு.

**பாடசாலைக் கிராமத்தின் சிறப்பியல்புகள்**

1. சகல விதமான வளங்களை ஒன்றிணைத்த கூட்டுத்தொகுதியாக இருக்கும்
2. நவீன வகுப்பறைகள், கணணி வளநிலை, நூலகம், கற்றல் வளநிலையம், வழிகாட்டல், ஆலோசனை போன்ற பாடசாலை ஒன்றுக்குத் தேவையான சகல கட்டமைப்புக்களும் சிறப்பாகச் செயற்படும்.
3. ஆசிரியர் விடுதி, நவீன மைதானம், குடிநீர், நவீன கழிப்பறைகள் மற்றும் சுகாதாரத்தைப் பேணும் இடமாக அமையும்.
4. பூங்கா மற்றும் மாணவர் திறன் விருத்திச் செயற்பாட்டுக் களங்கள் இருக்கும்.
5. பேருந்துத் தரிப்பிடம், வங்கி, கடைத்தொகுதிகள் உள்ளடங்கிய நவீன கிராமத்தின் சாயலைக்கொண்டிருக்கும்.

**பாடசாலைக்கிராமத்தால் கிடைக்கக்கூடிய அனுகூலங்கள்**

20பாடசாலைகளை ஒன்றிணைக்கும்போது அதிகூடிய ஆயிரத்து 500இலிருந்து 2 ஆயிரம் வரையான மாணவர்கள் கிடைப்பார்கள். ஒரு வகுப்பறையில் 35மாணவர்களை உள்ளடக்கினால் 55 முதல் 60 வரையான ஆசிரியர்கள் போதுமானதாகும். அதுபோல அதிபர், உப அதிபர் உள்ளடங்கலாகக் கூடியது 8அதி பர்கள் போதுமானதாகும். எனவே அரச நிதி வீண்விரயமாவது குறைக்கப்படும். மாணவர்களுக்கு முழுமையான கற்றல் அனுபவம் கிடைக்கும். பாடசாலைகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வு இல்லாது போகும். சிறுவர் உரிமை, கல்வியில் சம வாய்ப்பு, எல்லோருக்கும் கல்வி என்ற எண்ணக்கருக்கள் அர்த்தமுடையனவாகும். பன்னாட்டுத் தரத்தை எட்டக்கூடிய கல்வி கிடைக்கும். பாடசாலைக் கிராமம் எனும் எண்ணக்கரு நம் நாட்டின் இன்றைய தேவை. இதை நம்மவர்கள் சரியாக விளங்கிக்கொள்வார்களா…? எப்படியிருப்பினும் அடுத்த இருபது வருடங்களில் பாடசாலைத் துறையில் இதுபோன்ற மாற்றம் ஒன்று தேவை. இது கட்டாயம் என்பதைக் காலம் நிரூபிக்கும்.

# நூல் அறிமுகம்




**நூல்: வட்டுக்கோட்டையில் இருந்து முல்லைத்தீவு வரை**
**ஆசிரியர்: சி.கா.செந்திவேல்.**
**வெளியீடு- புதிய நீதி வெளியீட்டகம்.**
**விலை - 300 ரூபா**

இந்த நூலின் ஆசிரியர் சி.கா.செந்திவேல் இலங்கையின் இடதுசாரி இயக்கப் பரப்பின் மாக்சிச லெனினிசப் போராளியாக நன்கு அறியப்பட்டவர். கடந்த 52 வருடங்களாகப் புரட்சிகர கம்யூனிஸ்ட் இயக்கத்தில் முழுநேர அரசியல் ஊழியராகப் பணியாற்றி வருபவர். புதிய ஜனநாயக மாக்சிச–லெனினிசக் கட்சியின் பொதுச் செயலாளராகச் செயலாற்றி வருபவர். கட்சிப் பத்திரிகைகளாக வெளிவந்த தொழிலாளி, பாட்டாளி, செம்பதாகை புதிய பூமி ஆகியவற்றின் ஆசிய குழுக்களிலும் புதிய பூமியின் பொறுப்பாசிரியராகவும் பணியாற்றியவர். புதிய நீதி பத்திரிகையின் ஆசிரியராக இருந்து வருபவர். இந்த நூல் அவரது பத்தாவது வெளியீடாகும். இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை ஆயுதப் போராட்டமாகவும் போராகவும் முன்னெடுக்கப்பட்ட 33 வருடகாலப் பகுதியில் அடக்குமுறைகள், நெருக்கடிகள், உயிரெடுப்புக்கள், உயிர் அச்சுறுத்தல்கள் மத்தியில் மாக்சிசம் லெனினிசம் மா ஓ சேதுங் சிந்தனையை இறுக்கப்பற்றி நின்று புரட்சிகர வெகுஜனப் போராட்டப் பதாகையை உறுதியாக உயர்த்தி முன் நின்ற தோழர்களில் ஒருவர்.

நூலின் பிற்பகுதியிலிருந்து)

நூலாசிரியர்களே!
இந்தப்பகுதியில் உங்கள் நூல் பற்றிய குறிப்புக்கள் இடம்பெறவேண்டுமாயின் உங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளை 'கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**'சூரியகாந்தி'**
**உதயன் பத்திரிகை**
**இல.361 கஸ்தூரியார் வீதி**
**யாழ்ப்பாணம்.**

### தொகுப்பு

அயக்கிரீவன்

**நூல்: காகிதங்கள் பேசுதடி**
**ஆசிரியர்: செல்வி மிஷாந்தி செல்வராஜா**
**வெளியீடு- கோபால் வெளியீட்டகம்**
**விலை: 220 ரூபா**

யாழ்ப்பாணம் – அரியாலையைப் பூர்வீகமாகக் கொண்ட கவிதாயினி செல்வி மிஷாந்தி செல்வராஜா அவர்களின் எழுத்துக்கள் இம்மண்ணில் தடம்பதிக்கும். சமூகச் சிந்தனையுடனான இவரது பேச்சுக்களைப் போலவே கவிதைகளும் ஆழமானவை.

தொடர்ந்து வரும் காலங்களில் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாவலென அதிகமானவை பெண்களினாலே எழுத்துருவாகி வெளியாகின்றன என்பது பெருமை.

அந்த வகையில், எழுத்துக்களின் மூலம் ஒரு புதுவிடியலைத் தோற்றுவிக்க முடியுமெனும் நம்பிக்கையுடன் அடியெடுத்து வைத்த செல்வி. மிஷாந்தி செல்வராஜா அவர்களின் ஆளுமை பாராட்டப்பட வேண்டியதே. வலிகளுடனும் ஏமாற்றங்களுடனும் போராடி மீட்சி பெற்றுக் 'காகிதங்கள் பேசுதடி' எனும் இரண்டாவது நூலை உங்கள் பார்வைக்காய் கோபால் வெளியீட்டகத்தின் வெளியீடாக கொண்டு வந்துள்ளார். ஏற்கனவே தனது முதல் நூலான 'மூன்றாம் முத்தம்' எனும் குறுநாவலை வெளியிட்டிருந்த நூலாசிரியர்.

சர்வோதயமும் தேசோ தயமும் இணைந்து நடத்திய மக்கள் திலகம் எம்.ஜி.ஆர் அவர்களின் 100 ஆவது பிறந்தநாள் நிகழ்வின் போது கலைமாமணி என்ற கௌரவப் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தக் காகிதங்கள் நிச்சயம்பேசும், பேசப்படும் என்பதில் எவ்வித ஐயப்பாடுகளுமில்லை. தொடர்ந்தும் படைப்புக்களை மக்கள்மத்தியில்கொண்டு வருவார் எனும் நம்பிக்கையுடன்.

(காவலூர் அகிலன்)



# கார்த்திகைப்பூ அல்லது காந்தள் மலர்



காந்தள் எனும் தாவரத்தின் மலரே கார்த்திகைப் பூ. இது ஆபிரிக்கா, ஆசியா ஆகிய இடங்களைத் தாயகமாகக் கொண்டது. கார்த்திகைத் திங்களில் முகிழ்விடும் இந்த மலர்க் கொடி வேலிகளிலும், பாதையோரங்களிலும், காட்டோரங்களிலும்படர்ந்து நிமிர்ந்து அழகிய விரல்கள் போலவும், சுடர்கள் போலவும் காட்சியளிக்கும்.

இந்தக் கொடியின் தண்டு பசுமையானது. வலுவில்லாதது. இலைகளின் நுனிகள் நீண்டு சுருண்டு பற்றுக்கம்பிகள் போல பக்கத்தில் உள்ள மரம், செடி முதலியவற்றைப் பற்றுக்கோடாகப் பிடித்துக்கொண்டு 10தொடக்கம் 20அடி வரை வளரும். கோடை காலத்தில் மண்ணுக்குள் உறங்கு நிறையில் கிடக்கும் கிழங்குகள் மாரி காலத்தில் துளிர் விடுகின்றன. இலைகளுக்குக் காம்பில்லை எனலாம். 3 அங்குலம் தொடக்கம் 6 அங்குலம் வரையான நீளமும், 0.75 அங்குலம் தொடக்கம் 1.75 அங்குலம்வரை அகலமும் உடையதாக அவை இருக்கும். கணு இடைகள் வளராமல் வட்ட ஒழுங்கில் அமைந்திருப்பதும் உண்டு. இலை அகன்று நுனி கூராக நீண்டு பற்றுக்கொம்பு போலச் சுருண்டிருக்கும். பூக்கள் பெரியவை. இலைக்கக்கத்தில் தனியாக இருக்கும். அல்லது கிளைகளின் நுனியில் இலைகள் நெருங்கியிருப்பதால் சமதள மஞ்சரி போலத் தோன்றும். அகல் விளக்குப் போன்று ஆறு இதழ்கள் கொண்டவை இதன் பூக்கள். 6தொடக்கம் 7செ. மீற்றர்கள் நீளம் வரை இருக்கும். குறுகி நீண்டு ஓரங்கள் அலைபோல நெளிந்திருக்கும். பூவின் காம்பு 3தொடக்கம் 6அங்குல நீளமிருக்கும்.

மொட்டவிழ்ந்த மலர் ஏழு நாள்கள் வரை வாடாமல் இருக்கும். இதழ்களில் நிறம் முதலில் பச்சை, பிறகு வெண்மை கலந்த மஞ்சள். பிறகு மஞ்சள், பிறகு செம்மஞ்சள், பிறகு துலக்கமான சிவப்பு நீலம் கலந்த சிவப்பாக மாறிக்கொண்டு போய் வாடும். இது தீக்கொழுந்து போல காணப்படுவதால் அக்கினிசலம் எனவும், இதன் கிழங்கு கலப்பை வடிவமானதாக இருப்பதால் கலப்பை எனவும், இலாங்கிலி எனவும், இலைகளின் முனை சுருண்டு காணப்படுவதால் தலைச்சுருளி என்றும், பற்றி ஏறும் செடி ஆதலால் 'பற்றி'யென்றும், வளைந்து பற்றுவதால் கோடல், கோடை என்றும், கார்த்திகை மாதத்தில் மலர்வதால் கார்த்திகைப் பூ என்றும் அழைக்கப்படுகின்றது.

மாரிகாலம் முதல் வனப்பாய்த் தோன்றுவதால் 'தோன்றி' என்றும் அழைக்கப்படும். மருத்துவர்கள் இதை வெண்தோண்டி எனவும் அழைப்பர். பூவின் நிறம் இருவேறாக மாறுபடுவதால் வெண்காந்தள், செங்காந்தள் என்ற இரு வேறு வகைகளாக வர்ணிப்பார்கள். கிழங்கு பிரிந்து கணுக்கள் உள்ளதை ஆண்காந்தள் என்றும் கணுக்களில்லாததைப் பெண்காந்தள் என்றும் குறிப்பிடுவர். இது சிம்பாவே நாட்டின் தேசிய மலராகவும். இந்தியா தமிழ்நாட்டின் மாநில மலராகவும் மாத்திரமன்றி தமிழீழத்தின் தேசிய மலராகவும் இருக்கிறது.

காந்தள் செடியின் அனைத்துப் பகுதிகளும் 'கோல்சிசைன்' எனும் நச்சுக்கள் நிறைந்தவை. பண்டார வன்னியனின் காதலி என்று குறிப்பி டப்ப டும் குருவி நாச்சி இதன் கிழங்குகளை உண்டு தன் உயிரை மாய்த்தாகவும் ஒரு வாய்வழிக் கதையுண்டு. அத்துடன் இவை மருத்துவத்துக்கும் பயன்படுகின்றன. கண்வலிக்கிழங்கு எனும் ஒரு வகை மூலிகையானது காந்தள் மலர்ச் செடியிலிருந்துப் பெறப்படுகிறது. இதன் பல்வேறு மருத்துவப் பயன்பாடுகள் ஆபிரிக்காவிலும் இந்தியாவிலும் மருத்துவத்துறையில் பயன்படுத்தப்படுகிறது.





## மாரி மழை

மாரி மழை பெய்ததடா தம்பி
மாரிமழை பெய்ததடா தம்பி
ஊரில் உள்ள குளம் நிறைய
மாரி மழை பெய்ததடா தம்பி (மாரிமழை)

ஏர் எடுத்து வயல்கள் உழ
உழவர் கூடி வயல்விதைக்க
சீர்பெற்று நெல் வளர
மாரிமழை பெய்ததடா தம்பி (மாரிமழை)

ஊர்க் குளத்து நீர்ப் பரப்பில்
நீந்தித் துள்ளும் மீன் பிடிக்க
நாரை கொக்கு சேர்ந்து வர
மாரிமழை பெய்ததடா தம்பி (மாரிமழை)

விளைந்த நெல்லை அடித்துக் கட்டி
நிறுத்து விற்று பணமும் ஆக்கி
பழைய கடன் தீர்த்து மகிழ
மாரிமழை பெய்ததடா தம்பி (மாரிமழை)

நல்ல தாள்கள் தேடி எடுத்து
நாங்கள் கப்பல் செய்து முடித்து
வெள்ளத்தில் போய் விளையாட
மாரிமழை பெய்ததாடா தம்பி (மாரிமழை)

-செ.குமாரசாமி



ச.சேயோன்,
தரம் - 6,
யா/யாழ்ப்பாணக் கல்லூரி.



சி.மதுராங்கன்



## பண்டார வன்னியன்

பண்டார வன்னியன் 1785ஆம் ஆண்டிலிருந்து 1803ஆம் ஆண்டுகாலப் பகுதி வரை வன்னியை ஆண்ட அரசனாவார். இவரே வன்னியின் இறுதித் தமிழ் மன்னன் என்றும் அறியப்படுகிறார். இவர் வன்னியனார் பரம்பரையைச் சேர்ந்தவர் என்றும், வன்னிப் பிரதேசத்தவர் என்றும், வன்னியனார் எனும் பதவி முறையில் இருந்தவர் என்றும் பலவாறான கருத்துக்கள் உள்ளன. இவரின் போர்த் திறமை மிகவும் வியக்கத்தக்க வகையில் இருந்தது என்பது பல வரலாற்றுக் குறிப்புக்களில் இருந்து தெரியவருகிறது. ஒரு குறிப்பில் 'நாங்கள் உலகில் எங்கெங்கெல்லாமோ போரிட்டோம். இத்தகைய மாபெரும் வீரத்தை, இந்த மாவீர மன்னனைத் தவிர்த்து வேறொரு அரசனிடமும் கண்டதில்லை' என எழுதப்பட்டிருக்கிறது. பிற்காலத்தில் பண்டாரவன்னியன் இலங்கையில் ஏற்பட்ட பிரித்தானியக் காலனித்துவத்தை எதிர்த்துப் போராடி மடிந்தார். 1803ஆம் ஆண்டு ஒக்ரோபர் 31ஆம் திகதி லெப். வொன் டிரிபெர்க்கினால் இவர் தோற்கடிக்கப்பட்டார். தோற்கடிக்கப்பட்டதை நினைவுகூர்ந்து முல்லைத்தீவு - கற்சிலைமடுவில் நினவுக்கல் வைக்கப்பட்டது.

## இரு படங்களுக்கும் இடையேயும் 7 வேறுபாடுகள் உள்ளன; கண்டு பிடியுங்கள்





## அறிவுக்கு விருந்து

- குருதிச் சுற்றோட்டத்தை கண்டறிந்தவர் வில்லியம் ஹார்வே ஆவார்.
- இதயத்தை மூடியுள்ள உறையின் பெயர் பெரிகார்டியம் என்பதாகும்.
- நெப்போலியன் விதியின் மனிதன் என்றழைக்கப்படுகின்றான்.
- பூமியில் மேற்பரப்பில் அதிகமுள்ள உலோகம் சிலிக்கன் ஆகும்.
- நெருப்புக் கோழி கற்களையும் இரும்புகளையும் சாப்பிடும்.

பா.டர்னிகன்,
தரம் - 6

# “உங்களை எப்படி அழைப்பது…?”

சிறுகதை

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

பத்துவருடங்கள் இருக்குமா? இப்போதுதான் போல இருக்கின்றது. எங்கேயோ எஸ்.எஸ்.சி. வரை படித்துவிட்டு அட்வான்ஸ் லெவலுக்காகக் கல்லூரியில் சேர்ந்து கொண்டது.

முன்னரே தெரிந்த ஞானாவும் வரதனும், ராஜ்குமாரும் ஒரே வகுப்பில் இருந்த படியால் புதிய இடமாகத் தெரியவில்லை.

எப்போதும் பகிடி விடும் ஞானாவும் ராஜ்குமாரும் ஒரே வகுப்பில் பெண்களும் இருந்தால் எப்படி இருக்கும்? தெருவில் சைக்கிளில் போகும் போதே கிண்டல் செய்யும் ராஜ் வகுப்பில் அவர்கள் இருந்தால் சும்மா விடுவானா?

முதல்நாளே பொன்னம்பலம் மாஸ்டர் சொன்னார்.

“தம்பி நீ கலவன் பாடசாலைக்கு உதவாத ஆள்”

வகுப்பில் எல்லோரும் சிரிக்க ராஜ்குமாரும் சிரித்தான். பின்னுக்கு இருந்து கைகளை குவித்து யாரோ சங்கு ஊதி மாஸ்டர் சொன்னதை ஆமோதித்தார்கள்.

சங்கு ஊதிய ரவியும் கிரிக்கெட்டில் சாதனை செய்த சுந்தரும் இங்கிலீஸ் படங்களுக்கு என்னோடு துணைவரும் சிவகுமாருமாக.

இப்போது நினைத்தாலும் நெஞ்சில் இனம் தெரியாத ஏக்கம். அந்த நினைவுகள் அப்போதைய மன உணர்வுகள் இனிமேல் எப்போதாவது வருமா? கடைசி கனவாவது?

வெகு நாள்களுக்குப் பிறகு ஏன் இந்த் பழைய காலத்து நினைவுகள் வருகின்றன? என்னையே கேள்விகேட்க வேண்டியதாகின்றது.

தெருவில் வரும் போதே நிம்மதியாக வரமுடியாத இந்தக் காலத்தில் மனம் எப்படிப் பழைய நினைவுகளில் ஆழ்ந்து போகும்.

கந்தோரில் பின்னேர ரீக்கு கன்டீனுக்குப் போய்விட்டு வரும் போது என் மேசைக்கு அருகில் எனக்காக எஸ்.பி.காத்திருந்தான்.

எஸ்.பி.என்றால் தவராசாவை நாங்கள் அப்படித்தான் அழைப்போம். அந்த எஸ்.பி.தான் இப்ப கொஞ்சம் பூரிப்புடன் நின்றான்.

“என்ன மச்சான் ஆளில வித்தியாசம்” என்று நான் தான் கேட்டேன்.

அவன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தான்.

“என்னடாப்பா விசேசம் சோடி ஏதாவது பிடிச்சிட்டியோ”

அவன் பழையபடி சிரித்தான்.


“கலியாணம் முடிஞ்சிட்டுது மச்சான். போன மாதம் அவசரத்தில் நடந்ததால சொல்லி செய்யேலாமல் போட்டுது”

இன்பமான அதிர்ச்சி என்றாலும் ஆத்திரம்

“நீங்கள் எல்லாம் ஏனடா பிரன்ட்ஸ் என்று இருக்கிறியள்”

அவன் சமாளித்தான்.

இருக்கின்ற கல்லூரிக் காலத்து நண்பர்களுக்குள் எஸ்.பி. யைத்தான் அடிக்கடி சந்திப்பது. ஏனையவர்களை? பிரான்சுக்குப் போன ராஜ்குமாரா, லண்டனில் உள்ள வரதனா சிவகுமாரா? எந்த இடம் போனானோ என்று தெரியாத ரவியா? கொழும்பில் உள்ள சுந்தரா? இரண்டு வருடத்துக்கு மேலும் சந்திக்காத ஞானாவா? வெகு காலமாக விலாசமில்லாத கணநாதனா? கடைசியில் எஸ்.பியும் கலியாணத்துக்குச் சொல்லாமல் ஒதுங்கி விட்டான்.



முதலாம் வருடத்துக் கடைசி தவணையின் போது நாங்கள்? நாங்கள் என்றால், எங்கள் வகுப்பு ரூர் புறப்பட்டோம்.

ஆண்களும் பெண்களுமாக ஒரே கொண்டாட்டம். இப்போது இருக்கின்ற மாதிரி எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற மனக்கிலேசமோ, தெருவிலே தலைவிதி நிர்ணயமாகும் தன்மையோ இல்லை.

மகிழ்ச்சியான மனத்தை மயக்கும் மாலை நேரம் போல இதமான இனிய காலைப் பொழுதினை ஒத்த பனியடர்ந்த நேரத்தில் பசும் புல்வெளியில் பாதங்கள் புதைய நடப்பதைப் போன்ற சுவையான மன உணர்வுகளை ஒத்ததாக அந்த ரூரின் ஆரம்பம் இருந்தது.

பாட்டுப்பாட ஞானாவும் தாளம் போட ரவியும் ராஜ்குமாரும் பைலாவுக்கு ஏனையவர்களுமாக.

ஆனால், கணநாதன் இதில் கலந்து கொள்ள மறுத்துவிட்டான். பொதுவாகவே அவன் ஒரு மாதிரி. சிலவேளை அவனைப் பார்த்தால் ஒரு பைத்தியக்காரனைப் போல நாங்கள் சேர்ந்து அவனை நக்கல் அடிப்போம்.

உண்மையில் அந்த நக்கல்களை அவன் பெரிது படுத்துவதில்லை. எப்போதும் போல ஒரு மாதிரியாகவே இருப்பான். யோசித்துக் கொண்டு தொடர்ந்து சிந்தனை வயப்பட்டவனாக

எங்கள் உள்ளுணர்வுகள் அவனுக்கு ஒரு விதமான மரியாதையைக் கொடுக்க முனைந்தன. என்றாலும் நாங்கள் அதனை வெளிக்காட்டவில்லை.

அவன் வகுப்பில் இருந்தாலே பாடங்களில் அக்கறை காட்டுவது குறைவு. ஓய்வான நேரங்களில் எங்களைப் போல வம்பளக்கமாட்டான்.

எப்போதடா நேரம் கிடைக்கும் என்று காத்துக் கொண்டிருந்து எங்கள் வகுப்புப் பெண் களோடு கதைப்பதற்கும் ஏனைய வகுப்பு பெண்களுக்கு 'சூ' அடிப்படிதிலும் பொழுதைப் போக்கிய எங்களை அவன் விநோதமாக பார்க்கவும் இல்லை. பங்காளியாக சேரவும் இல்லை.

“ஏண்டா மச்சான் இப்பிடி இருக்கிறாய்?” என்று கேட்டால்

மெதுவாக ஒரு புன்னகை. அதுதான் முதல் பதில். பிறகுதான் சொல்லுவான். “நான் சொல்லுறதை விளங்கிக்கொள்ளுற நிலையில் நீங்கள் இல்லை. சொன்னாலும் ஏதோ பைத்தியகாரன் என்று தான் நினைப்பீங்கள்.”

“அதென்னடாப்பா விசியம்”

“இப்ப நீங்கள் சந்தோசமாக இருக்கிறீங்கள். நெடுக இப்பிடிச் சந்தோஷமாக இருப்பீங்களா?” என்றான்.

“அதுக்கென்ன எக்ஸாம் பாஸ்பண்ணி யூனிவேர்சிட்டிக்கு போகாட்டிலும் என்னவோ சந்தியில் நின்று தம் அடிச்சுக் கொண்டு தன்னும் சந்தோஷமாக இருக்கலாம்” என்று எங்களில் ஒருவன் சொன்னான்.

“பெரிய தொழில் கிடைக்க நல்ல சீதனத்தோடை கலியாணம் செய்து சந்தோஷமாக இருக்கேலாதே”

ஒவ்வொருத்தர் ஒவ்வொன்றைச் சொல்ல கணநாதன் சிரித்தான். அந்தச் சிரிப்பு எங்களைக் கேலி செய்வதைப்போல இருந்தது.

“ டையன்களே” என்று பேசினான்.

“இப்ப எல்லாம் உங்களுக்குப் பகிடியாகத் தான் இருக்கும். இப்ப நான் இருந்து யோசிக்கிறதைப் பார்க்க விசராகவும் தெரியும். ஆனால் என்றைக்காவது ஒருநாள் என்னைப் பற்றி யோசிப்பியள்” என்று சொன்னான்.

எங்களுக்குப் பகீர் என்று இருந்தது. அவனைத் தொடர்ந்து விசரன் என்று நினைக்கத் தோன்றவில்லை. அவன் சொல்லுறதிலையும் என்னவோ விசயம் இருக்கு என்றது போலவும் இருந்தது. என்றாலும் பூரணவிளக்கமில்லை.

எதையுமே வடிவான விளக்கத்துடன் அவன் சொல்லவும் இல்லை. கேட்டால் “நீங்களாக எப்ப புரிந்து கொள்ளுகின்றீர்களோ அப்பதான் நல்லது. இல்லையெண்டால் காலம் உங்களுக்குப் புரியவைக்கும்” என்றான்.

கடைசியில் அவனை அந்த ரூறுக்கு கூட்டிக்கொண்டு போக நாங்கள் பட்டபாடு இறுதியாக எங்களுக்காக வந்தான். “பார்மச்சான் பார் இதெல்லாம் எங்கடை இடங்கள் எவ்வளவு சந்தோஷமான பகுதிகள். இப்படியான இடத்துக்கு வரமாட்டன் என்று சொல்லி வராமல் நிற்கப் பாத்தியே” என்று நாங்கள் கேட்டோம்.

அவன் வழக்கம்போல புன்னகைத்தான். அந்த சோகமான புன்னகையில் ஒரு கவர்ச்சி இருந்தது.

“இதெல்லாம் எங்கடை இடங்கள் என்று எதை வைச்சு சொல்லுறீங்கள்”

அவன் கேள்வியின் அர்த்தம் எங்களுக்கு அப்போது விளங்கவில்லை.

“என்னடாப்பா நீ எந்த கதை கதைச்சாலும் ஒரு மாதிரியாகத்தான் கதைக்கிறாய். எங்கடை இடங்களை நாங்கள் எங்கடை இடம் என்று எதை ஸ்வத்துச் சொல்லுறது?”

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை.

“என்னவோ தெரியவில்லை எனக்கு எதிலும் மனம் ஒட்டவில்லை. ஒரே ஒரு யோசினைதான் மனத்தில் நின்று குடையுது” என்றான் அவன்.

நாங்கள் அவனைப் பரிதாபமாகப் பார்த்தோம். ரூர் முடிந்து திரும்பி வரும்போது நாங்கள் பைலா அடித்துப் பாடிக்கொண்டும் வரும்போது அவன் வழக்கம்போல ஒரு மாதிரியாக இருந்தான். இரண்டாவது வருடத்தில் நாங்கள் எக்ஸாமுக்காகப் படிக்க ஆரம்பித்தோம். பனிக்குளிர் நிறைந்த அதிகாலைப்பொழுதிலும் மாலையிலும் எங்கள் ரியூசன் ஒழுங்காக நடக்கும் கணநாதனும் வருவான்.




**பிழையைச் செய்து போட்டு அதை மறைக்கிற தோடை பாதிப்புக்கு உள்ளான கார்க்காரரையும் வெருட்டுறீங்கள் நீங்கள் செய்தது சரியோ என்று வடிவாய் யோசித்துப் பாருங்கோ என்று சொன்ன அவனின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை.**

43



# தென் கிழக்கு திசையில் இருந்து



தொகுப்பு
அனார்கலி

## வருகிறார் சம்பந்தன்!

எதிர்க்கட்சித்தலைவரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன், அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சம்மாந்துறைக்கு இன்று 26ஆம் திகதி வருகை தரவுள்ளார். கிழக்கிலங்கையின் சிரேஷ்ட அரசியல்வாதியும், முன்னாள் அமைச்சருமான மர்ஹூம் எம்.ஏ. அப்துல் மஜீதின் ஆறாவது ஆண்டு நினைவு தின நிகழ்வில் அவர் இன்று முதன்மை அதிதியாகக்கலந்து கொள்கின்றார்.

சம்மாந்துறை அப்துல் மஜீத் நினைவு மண்டபத்தில், 'அப்துல் மஜீத் பவுண்டேசனின்' தலைவர் ஏ.ஆர். முஹம்மட் அலி தலைமையில் இந்த நினைவு தின நிகழ்வு நடை பெறுகின்றது.

புதிய அரசமைப்புக்கான இடைக்கால அறிக்கை, வடக்குக் கிழக்கு இணைப்பா? அல்லது பிரிப்பா? போன்ற முக்கிய விவகாரங்கள் பேசப்படும் நிலையில், முஸ்லிம் பிரதேசமொன்றில் நடைபெறும் நிகழ்வில் சம்பந்தன் கலந்து கொண்டு கருத்துக்களை வெளியிடுவது முக்கியத்துவமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.




## ஹரீசுக்கு எதிராக..!

பிரதி விளையாட்டுத்துறை அமைச்சரும், முஸ்லிம் காங்கிரஸின் பிரதித்தலைவருமான எச்.எம்.எம். ஹரீசுக்கு எதிராக அச்சிடப்பட்ட சுவரொட்டிகள் பல சாய்ந்த மருது பிரதேசமெங்கும் ஒட்டப்பட்டுள்ளன. பிரதி அமைச்சர் ஹரீசின் உருவப்படம் பின்னணியில் உள்ளதுடன் அதன் மேல் "எம்.பி.கொடுத்தோம், நகரசபை இழந்தோம்.- சாய்ந்த மருதை ஏமாற்றிய முனாபிக், சாந்தமான ஊரின் தலைமைச் சைத்தான்" என்ற வாசகங்களும் காணப்படுகின்றன.

சாய்ந்த மருது ஜும் ஆ பள்ளிவாசலுக்கு முன்பாகவுள்ள சுவரிலும் இந்தச் சுவரொட்டிகள் சில தினங்களாகக் காணப்படுகின்ற போதிலும், பள்ளிவாசல் நிர்வாகத்தினரோ, வேறுஎவரோ அதனைக் கண்டு கொள்ளாத நிலைமையும் இருக்கிறது. எது எப்படியிருப்பினும் இது நாகரீகமான, ஏற்றுக் கொள்ளத் தக்க செயலல்ல என இந்தச் சுவரொட்டி தொடர்பில் விமர்சிப்போரும் உள்ளனர்

*"எலி அறுக்கும், தூக்கமாட்டாது" என்றொரு பழமொழியும் உண்டு!"*




## சுயேச்சைக்குழு

அம்பாறை மாவட்டத்தின் முக்கிய தமிழ்ப் பிரதேசமான காரைதீவில் எதிர்வரும் உள்ளூராட்சி சபைத்தேர்தலில், பிரதேச இறமை கருதி சுயேச்சை அணி ஒன்றைக் களமிறக்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது. காரைதீவு விபுலானந்தர் அறங்காவலர் சபை ஒன்றியம் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. பொதுமக்களின் கருத்தறிந்து இதற்கான தீர்மானம் நிறை வேற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அறிக்கை மேல் அறிக்கை விட்டு மக்கள் ஆதரவு பெற முனைந்து வரும் வேளையில் தேர்தல் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருக்கின்ற வங்குரோத்து அரசியல்வாதிகளின் கதிதான் என்னவாகுமோ?

## மற்றொரு போராட்டம்?

தென் கிழக்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திவிட்டுச் சற்று ஓய்ந்திருக்கு சாய்ந்தமருது பிரதேசத்துக்கான தனி உள்ளூராட்சி சபைக் கோரிக்கை தொடர்பான மக்கள் போராட்டம் திரும்பவும் வெடிப்பதற்கான சாத்தியங்கள் தென்படுவதாக முஸ்லிம் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

முஸ்லிம் காங்கிரசின் தலைமையால் உறுதியளிக்கப்பட்ட அட்டாளைச் சேனைக்கான தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் விவகாரம் அந்தப் பிரதேச மக்களைக் கொதிப்படையச் செய்துள்ளதுடன், அது மக்கள் போராட்டமொன்றுக்கு அடிகோலும் காலம் வெகு தூரத்தில்லை எனவும் கட்டியம் கூறப்படு கின்றது.

அளித்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் தலைமையின் மௌனம், இலவு காத்த கிளியின் நிலைக்கு அட்டாளைச்சேனைப்பிரதேச மக்களைத் தள்ளியுள்ளதாம்

*"தலைமையின் சாணக்கியம் தெரியாததா என்ன?"*



## ஐயா உதவவேண்டும்!

கல்முனையில் மக்கள் போராட்டமாக விஸ்வரூபமெடுத்துள்ள, சாய்ந்தமருதுக்கான தனி உள்ளூராட்சி மன்றக் கோரிக்கையை வென்றெடுப்பதற்கு எதிர்க்கட்சித்தலைவர் இரா. சம்பந்தன் உதவ வேண்டுமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சாய்ந்த மருது மாளிகைக்காடு ஜும் ஆபள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத்தலைவர் அல்-ஹாஜ்வை.எம்.ஹனிபா இந்தக் கோரிக்கையைப் பகிரங்கமாக விடுத்துள்ளார்.

சாய்ந்த மருது கடற்கரை ஹூதா திடலில், மீனவ சமூகத்தின் ஏற்பாட்டில் .டம்பெற்ற தனி உள்ளூராட்சி மன்றத்தை வலியுறுத்தும் மக்கள் எழுச்சிக்கூட்டத்தில் உரையாற்றும்போதே தலைவர் ஹனிபா மேற்கூறிய இந்தப் பகிரங்கக் கோரிக்கையை விடுத்தார்.

*கல்முனை மாநகரில் வைத்து "தமிழ் பேசும் மக்களின் தலைவன்" என மகுடம் சூட்டப்பட்ட வரல்லவா சம்பந்தன் ஐயா!*

*த்மது தலைமைகளால் ஏமாற்றப்பட்டு அரசியல் குரலற்ற மக்களாக நடுவீதிக்குக் கொண்டு வரப்பட்டுள்ளோம் எனக் கூறும் தலைவர் ஹனிபாவின் இந்தக் கோரிக்கை நியாயமானதே!*

## தொடரும் மீன்பிடி

அம்பாறைமாவட்டத்தின் கரையோரப்பிரதேசக் கிராமங்களில் கடல் மீன்பிடி தொடர்ச்சியாக அமோகமாக இடம் பெற்றுவருகின்றது. குறிப்பாகக் கரை வலை மீன்பிடியாளர்களுக்குத் தினமும் பெருமளவில் மீன்பிடி இடம் பெற்று வருவதுடன், அவற்றை வாகனங்களில் ஏற்றி வீதி, வீதியாக மீனை விற்பனை செய்யும் நிலையும் ஏற்பட்டுள்ளது.

பெருமளவாகக் கீரி இன மீன்களே இப்படி விற்கப்படு கின்றன. அதில் ஒரு தொகையளவு கருவாடாக உலர்த்தப்பட்டு வெளி இடங்களுக்கு அதிகளவில் விற்பனை செய்யப்படுகின்றன. அத்துடன் உள்ளூரில் மீன் விலை பெருவீழ்ச்சியும் கண்டுள்ளது.





Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ‘நீறு பூத்த நெருப்பின் மேல்’



கட்டுரை

முருகேசு சச்சிதானந்தன்

மகாவம்சம் என்ற பாளிநூல் சிங்கள பௌத்தர்களின் பூர்வீக வரலாற்றுக் குறிப்பாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. இந்த நூலின் கதாநாயகனான துட்டகைமுனு 44வருடங்கள் அனுராதபுரத்தைச் சிறப்பாக ஆண்டு வந்த எல்லாளன் என்ற தமிழ் மன்னனை வெற்றிகொண்டதாகவும், படைத்தளபதிகளாகத் தமிழர்கள் இருந்தாகவும், மற்றும் பிராமணர்கள் பற்றிய குறிப்புக்களும் உண்டு. ஆனால் அதில் எந்த இடத்திலும் இதில் முஸ்லிம்கள் பற்றிய குறிப்பு இல்லை. இது சிங்களவரின் அடி மனதில் முஸ்லிம்களின் பூர்வீகம் இலங்கை அல்ல என்பதை எப்போதும் நினைவுபடுத்துகிறது. இந்த அடிப்படையிலேயே முஸ்லிம்கள் சிங்களவர்களால் பார்க்கப்படுகின்றனர்.

### மாட்டிறைச்சி உண்பது சிங்களவருக்குப் பிடிப்பதில்லை

முஸ்லிம்களுக்கு எதிரான வேலைத்திட்டங்கள் மகிந்தவின் ஆட்சிக்காலத்தில் பெருமளவு முடுக்கிவிடப்பட்டன. அதன் எதிரொலியாகவே மகிந்தவுக்கு எதிராக முஸ்லிம்கள் வாக்களித்தனர். அதன் பின்னரும் மாளிகாவத்தைப் பள்ளிவாசல் தாக்குதல், காலித் தாக்குதல் என முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன. பௌத்த பிக்குகள், அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் என எல்லா மட்டங்களிலும் முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால், சாதாரண சிங்கள மக்களின் மனநிலையும், முஸ்லிம்கள் பற்றி வேறுபட்ட வகையிலேயே அமைந்துள்ளது.

முஸ்லிம்கள் மாட்டைக் கொல்லுகின்ற விடயமே சிங்கள பௌத்தர்களுக்கு இருக்கின்ற பிரதான அதிருப்தியாகும். சிங்கள பௌத்தர்களில் பலர் மாமிசம் உண்ணாதவர்கள். நீதிபதி இளஞ்செழியன் வேள்வி என்ற பெயரில் மிருகங்களைக் கொல்லக்கூடாது என வழங்கிய தீர்ப்பை இதனாலேயே பௌத்த பீடங்களும் சிங்கள அமைப்புக்களும் பாராட்டின. அந்தத் தீர்ப்பினைத் தமது பகுதிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமெனக் கோரியும் வருகின்றன.

அதேவேளை, பல சந்தைகளில் மாட்டிறைச்சிக் கடைகளை மூடுவதற்காகப் புத்த கோயில்களில் பிரத்தியோகமாக உண்டியல் ஒன்றை வைத்து ‘மாடு வெட்டுவதற்கு எதிராக உங்கள் பணப் பங்களிப்பைச் செய்யுங்கள்’ எனப் பணம்சேர்த்து, அந்தப்பணத்தைக் கொண்டு மாட்டிறைச்சிக் கடைக்கான கூறுவிலைக் கோரலை அவர்கள் கைப்பற்றிக் கடைகளைத் திறக்காது வைத்துள்ளனர். இத்தகைய நடவடிக்கையில் இந்து மதத் தலைவர்களும், இந்து நிறுவனங்களும்கூட எதிர்காலத்தில் இறங்கக்கூடும்.

### இனப்பெருக்கமும் சிங்களவருக்குப் பிடிப்பதில்லை

முஸ்லிம்கள் ‘இஸ்லாமிய மார்க்கம்’ என்ற பெயரில் குழுமமாகத் தனித்து வாழவே விரும்புகின்றனர். தமது பகுதியைப் பிரித்துக் காட்டுவதற்காகப் பொரிய தெருவளைவுகளையும், பள்ளிவாசல்கள் இறைச்சிக்கடை என்பனவற்றையும் அமைத்திருப்பார்கள். இது அடிப்படையில் சிங்களவருக்குப் பிடிப்பதில்லை. கி.பி. 6ஆம் நூற்றாண்டின் பின்னர் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் வந்து குடியேறிய அராபிய, யாவா வர்த்தகர்களில் ஆண்கள் மட்டுமே இங்கு வந்து குடியேறினர். அவர்கள் சிங்கள, தமிழ்ப் பெண்களை மணந்து, அவர்களை இஸ்லாத்துக்கு மாற்றினார்கள். யாழ்ப்பாணத்தில் யாவகர்கள் தங்கியிருந்த இடம் யாவகர்சேரி ஆகும். இது பின்னர் சாவகச்சேரி என அழைக்கப்படுகிறது. இஸ்லாமிய மார்க்கத்தில் ‘தீனைப் பெருக்குதல்’ என்ற விடயத்துக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. அதாவது முஸ்லிம்களின் சனத்தொகையைப் பெருக்குவது. இந்த விடயத்தில் பலதார மணமும், வேகமாக இனப்பெருக்கம் செய்வதும் அவர்களை வேறுபடுத்தியுள்ளது. குடும்பக்கட்டுப்பாடு போன்ற மத்திய அரசின் குடும்பத்திட்டமிடல் விடயங்களில் முஸ்லிம்கள் பங்கெடுப்பதில்லை. இந்த அதிகரித்த சனத்தொகைப் பெருக்கமும் சிங்களவருக்குப் பிடிப்பதில்லை.

### காணி, நிலம் விடயத்திலும் முரண்பாடு

முஸ்லிம்கள் தொடர்பில் சிங்களவரிடம் இருக்கின்ற இன்னோர் பிரச்சினை நிலங்களைக் கபளீகரம் செய்வது. முஸ்லிம்கள் தாம் வாங்கும் நிலைத்தை விற்கமாட்டார்கள். இன்னொரு முஸ்லிமுக்கு இலவசமாகக் கொடுப்பார்கள். இதன் வெளிப்பாடே காணி விடயத்தில் சிங்கள ஆட்சியாளரும், பௌத்த பிக்குகளும் முஸ்லிம்கள் விடயத்தில் காட்டமாக உள்ளனர். கிண்ணியாப் பகுதியின் விரிவாக்கம், காத்தான்குடியின் விரிவாக்கம், தீகவாபியின் விரிவாக்கம், வில்பத்து சரணாலயப் பகுதியைக் கைப்பற்றியமை, முல்லைத்தீவு கூழாமுறிப்பு, முள்ளியவளை காணிப் பிரச்சினைகள் போன்றன மிகவும் முக்கியத்துவம் பெறுகின்றன. முஸ்லிம்களுக்கு அவர்களின் இஸ்லாமியத் மதத் தலைவர்களும், அரசியல்வாதிகளும் பக்கபலமாக உள்ளனர். அதேவேளை இஸ்லாமிய நாடுகளின் நிதியுதவியும் இந்த விரிவாக்கத்துக்குக் கிடைக்கின்றது.

> சிங்கள, தமிழ் மக்கள் முஸ்லிம்கள் தொடர்பில் ஏற்படுத்தியிருக்கும் மனப் பதிவுகளை மாற்றுவதற்கு முஸ்லிம்கள் நீண்ட காலம் பாடுபடவேண்டி இருக்கும். இந்த ஐயுறவு நிலையே எல்லாத் தளங்களிலும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுவதற்கு வழிவகுத்துள்ளது.



### முஸ்லிம் தலைமைகளின் முன்னேற்றகரமான நடவடிக்கைகள்

பாக்கீர் மாக்கார் அரசியலுக்கு வந்ததன் பின்னர் பேருவளைப் பகுதியும், ஏ.சி.எஸ். ஹமீட் அரசியலுக்கு வந்ததன் பின்னர் கண்டி அக்குறணைப் பகுதியும், எம்.எச்.எம். அஷ்ரபின் அரசியல் பிரவேசத்துடன் கிழக்கு மாகாணமும், றிஷாத் பதியுதீனின் வருகையுடன் வடக்கு முஸ்லிம்களும் அதிக முன்னேற்றம் அடைந்தார்கள்.

இந்தத் தலைவர்கள் தமது சமூக முன்னேற்றத்தில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். முஸ்லிம்களின் அரசியல் என்பது சிங்களவருக்கு எதிராகச் சண்டையிடும் அரசியல் அல்ல. 1915ஆம் ஆண்டில் இடம்பெற்ற கண்டிக் கலகத்துடன் இந்த நாட்டில் எவ்வாறு வாழவேண்டும் என்ற படிப்பினையை முஸ்லிம் தலைவர்கள் பெற்றுக் கொண்டனர்.

கண்டிக் கலகத்தில் ஈடுபட்ட சிங்களக் குற்றவாளிகளுக்குப் பிரித்தானிய அரசு சாவுத் தண்டனை வழங்கக்கூடாது எனப் பிரித்தானியாவுக்குச் சென்று வாதிட்டு அதைத் தடுத்தவர் சேர் பொன். இராமநாதன். இதனால் தமிழர் விடயத்திலும் முஸ்லிம்கள் வெறுப்படைந்தனர். சிங்களவரும் தமிழரும் இணைந்து தமக்கு எதிராகச் செயற்படுவர் என்பதற்கு எடுத்துக்காட்டான ஆதாரமாக அந்தச் சம்பவத்தை எடுத்துக்கொண்டனர்.

### முஸ்லிம்கள் மாற்றினத்தவரின் உணவைத் தொடார்

பல உணவகங்களை முஸ்லிம்கள் வைத்திருந்த போதிலும் சிங்களவரும், தமிழரும் பாவிக்கின்ற பாத்திரங்களில் முஸ்லிம்கள் தேனீர் அருந்துவதோ, சாப்பிடுவதோ இல்லை. இவ்விரு இனத்தவரும் முஸ்லிம் கடைகளுக்குச் செல்லும்போது ‘ஸ்ரோங் ரீ’ என்பதும் முஸ்லிம்கள் தேனீர் அருந்தச் செல்லும்போது ‘சுல்தானா ரீ’ என்று வேறுபடுத்திக் கூறுவதும் பலருக்குத் தெரிந்திருப்பதில்லை. சிங்கள, தமிழ் மக்கள் முஸ்லிம் உணவகங்களுக்குச் சென்று உணவு அருந்துகின்ற போதிலும், முஸ்லிம்கள் சிங்களக் கடைகளுக்கோ, தமிழ்க் கடைகளுக்கோ சென்று உணவு அருந்துவதில்லை. ஹலால் எனப்படுகின்ற புனிதப்படுத் தாப்பட்ட மாமிசங்களை இவ்விரு இனத்தவரும் சமைப்பதில்லை என்பதே இதற்கு அவர்கள் கூறுகின்ற காரணமாகும்.

### யாழ்ப்பாண இளைஞர்களும் மாட்டிறைச்சியும்

யாழ்ப்பாண இளைஞர்கள் மத்தியில் மாட்டிறைச்சி உண்ணும் பழக்கம் அதிகரிப்பதற்கு முஸ்லிம் உணவகங்களே காரணம் எனவும், யாழ்ப்பாண இந்துக்கள் வீட்டில் மாமிசம் சமைக்காத நாள்களான வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் முஸ்லிம் உணவகங்களில் மாட்டிறைச்சி அதிகளவில் சமைக்கப்படுவதாகவும், அந்த நாள்களில் தமிழ் இளைஞர்கள் வீட்டில் உணவைத் தவிர்த்து இந்தக் கடைகளில் உண்பதாகவும் தமிழர் மத்தியில் அதிருப்தி காணப்படுகிறது.

ஆனால், இதற்கு முஸ்லிம் உணவகங்களைக் குற்றம் சாட்டுவதில் பயனில்லை. ஏனெனில், அவர்கள் வீதியில் போகும் யாரையும் மறித்து மாட்டிறைச்சி சாப்பிடுமாறு வற்புறுத்துவதில்லை.

### முஸ்லிம்கள் வேறுபடும் சந்தர்ப்பம்

சிங்களவரைப் பொறுத்தவரை சிறுபான்மை இனங்களான தமிழரையும், முஸ்லிம்களையும் ஒரேதரத்தில் வைத்திருப்பதில்லை. பௌத்தம் இந்து மதத்திலிருந்து கிளைவிட்ட ஒரு மதமாக இருப்பதால், பல இந்துக் கவுளரை வணங்கி வருகின்றது. அதேவேளை, மாட்டைக் கொல்லுவதற்கு எதிரான போக்கும் இவ்விரு இனங்களின் பொதுவான விடயங்களாகும். இது முஸ்லிம்களுக்கு எதிரானது.

தமிழர், சிங்களவர் விடயத்தில் பௌத்தர்கள் சிவனை ஓர் ஆக்கிரமிப்புக் கடவுளாக அல்லது சோழர்களின் கடவுளாக நினைப்பதால் சிவனை வணங்குவதில்லை. ஆனால், சிவனின் பிள்ளைகளான முருகன், பிள்ளையார் போன்ற தெய்வங்களை வணங்குகின்றனர். அதேவேளை, தென்னிந்திய தமிழர் பற்றிய ஐயுறவு எப்போதும் இருந்து கொண்டிருக்கிறது. ஜே.ஆர். இன் காலத்தில் இது சிறப்பாக வெளிப்பட்டது. மாடு வளர்ப்பு விடயத்தில் சிங்களவரும், தமிழருமே ஈடுபடுகின்றனர்.

### சிங்களவருக்குச் சாதகமாக தமிழ் முஸ்லிம் உறவு

அதிகாலையில் ‘சுபஃ’ தொழுகைக்காக ‘பாங்’ சொல்லப்படும்போது எழுகின்ற முஸ்லிம்கள், தொழுகையைத் தொடர்ந்து தமது அன்றாட முயற்சிகளில் முழுமூச்சாக ஈடுபடுகின்றனர். இதுவே அவர்களை ஒரு முனைப்புள்ள மக்களாக உருவாக்கி இருக்கிறது. சிங்கள ஆட்சியாளரைப் பொறுத்தவரை தமிழ் - முஸ்லிம் சிறுபான்மை இனங்களை வேறுபட்ட அணுகுமுறையில் கையாளுகின்றனர். இதிலுள்ள புறநிலை யதார்த்தம் என்னவெனில், சிறுபான்மை இனங்களான தமிழரும், முஸ்லிம்களும் இணைந்து செயற்படும் நிலை காணப்படவில்லை. ஒருவரை ஒருவர் நம்பத் தயாராக இல்லாதிருப்பது சிங்கள ஆட்சியாளர்களுக்குப் பல வகைகளிலும் சாதகத் தன்மையை ஏற்படுத்தியுள்ளது. சிங்கள, தமிழ் மக்கள் முஸ்லிம்கள் தொடர்பில் ஏற்படுத்தியிருக்கும் மனப்பதிவுகளை மாற்றுவதற்கு முஸ்லிம்கள் நீண்டகாலம் பாடுபடவேண்டி இருக்கும். இந்த ஐயுறவு நிலையே எல்லாத் தளங்களிலும் முஸ்லிம்கள் புறக்கணிக்கப்படுவதற்கு வழிவகுத்துள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக உலகம் முழுவதும் பரவி வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். என்கிற இஸ்லாமியப் பயங்கரவாதம் முஸ்லிம் கள் தொடர்பில் மேலும் அச்சத்தையே எதிர்காலத்தில் இலங்கையில் ஏற்படுத்த வாய்ப்புண்டு.

இலங்கையில் சிங்களப் பெரும்பான்மை இனமும், தமிழ் - முஸ்லிம் சிறுபான்மை இனங்களும் நீண்டகாலம் வாழ்ந்துவருகின்றபோதிலும், ஒவ்வொரு இனமும் தனித்தனியான சில கருதுகோள்களையும், வாழ்க்கை முறையையும் பின்பற்றி வருவதால் அதிக முரண்பாடுகளையே தன்னகத்தில் கொண்டிருக்கின்றன.

காலம் உருண்டது
அண்ணரே
உங்களின் ஞாலம்
இருண்டதேன் ?
காலத்தின் கோலமோ ?

வேடம் விளங்கவே
வேற்றுமை கொட்டுறார்
பாவம் தமிழரை
கூறுகூறாக்கிறார்.

வேகம் கொண்டவர்
தாகமும் தவிப்பும்
ஆக்கும் நல்லெண
ஆறுதல் கொள்வீரே.



# எனது இறையோன்

ந.லோகதயாளன்

# தோற்றவன்

கை.சரவணன்

அறுபட்டாலும்
துண்டுபட்டாலும்
அலுக்காது
நீளப்போகிறது
நினைவு.
இரு என்றாலும்
அடங்க மறுக்கிறது
கூரையிடுக்குப் புள்ளி
ஒளிக்கீலமாய்
நினைவு.
பட்டும் படாமலும்
தொட்டும் தொடாமலும்
தாவியும் குதித்தும்
கிளைதாவுமொரு
மந்தியின்
குதூகலிப்பில்
களைப்பின்றிப்
பயணிக்கிறது
நினைவு.
சிறையிருக்கும் கிளியின்
அடைபடாத குரலில்
மனதிருந்து
பெருகி வழிகிறது.

❋ ❋ ❋

எனது தலையில்
கிரீடம் ஒன்று இருந்தது.
இடையில் நீள வாளிருந்தது.
சூழவும் ஏவலர்
புடையாள்கள்
துதிபாடிகள்
சாமரம் வீசிகள்......

இப்படியாக ஒரு
நினைவு.

❋ ❋ ❋

கூட இருந்தவர்
குறிப்புணர்த்தும் சிரிப்பு
யாருக்கும் புரியாத

சங்கேதத்தினாலான
கண்ணசைவு
கலகலப்பு.....

அப்படியேயானதான
நினைவு.

கூட இருந்தவர்
குழிக்குள் போனதும்
குறிப்புணர்த்திப் பின்
காற்றோடு கலந்ததும்
இன்னும் சிலர்
வயிற்றைத் தொழுவதும்
உறுத்தலான
நினைவு.

❋ ❋ ❋

காலம்
போகிற வேகமும்
காவியது கொண்டு
போகிற
அவசரமும் சிந்தியவை
சித்றுண்டு
சிதிலங்களாலாக
முற்றத்தில்
கொட்டுண்டவை
நெருடலான நினைவு.

❋ ❋ ❋

சத்தியமாய்
நினைவு பொல்லாதது.
ஒட்டிக்கொண்டே
இருக்கிறது
உதறியும் உலுப்பியும்
நிறையமுறை பார்த்துத்
தோற்றாயிற்று.
அங்குமிங்குமாய்த் தாவியும்
குதித்தும்
கூப்பாடு போடுகிறது.
சத்தியமாய்
நினைவைத்
தொலைக்கமுயன்று
தோற்றவர் பட்டியலில்
என்னையும்
சேருங்கள்.
நினைவிடம்
தோற்றுவிட்டவனென்று
எப்போதும் இருப்பேன்.

❋

# அம்மா



என் அன்புத்தாயே
விழி மாற்றும் சிகிச்சை போல
உயிர் மாற்றும் சிகிச்சை இருந்தால்
என் உயிரைக் கொடுப்பேன் உனக்காய்
என் உயிரில் கலந்துள்ள என் தாயே!

பூலோகத்துக்கு எனை
அறிமுகம் செய்து படிப்பு
எனும் படியில் ஏற்றி
மதிப்புத் தந்த என் அன்புத்தாயே
ஏழு ஸ்வரங்கள் எட்டு ஸ்வரங்கள் ஆகாதோ
உன் அன்பின் ஆழத்தை நான் பாடுவதற்கு
என் அம்மா நீ மட்டுமே நான்
கண்ணால் காணும் ஒரே தெய்வம்
உன்னை உருக்கி என்னை
உருவாக்கிய சிற்பியே
அன்பின் அடைக்கலம் நீயே
பண்பின் சிகரம் நீயே
தியாகத்தின் திருவுருவம் நீயே
நீடுழி வாழ்க நீ
என் உயிர்த் தாயே வாழ்க வாழ்க!

க.கரன்ஷிகா

# காலத்தால் அழியாதவர்கள்

ஈழ தேசமே
இங்கே கிடப்பவர்கள் உன் புதல்வர்கள்...
ஆண், பெண்ணோ பேதம்
போண நிலம் காக்கப் புரட்சி செய்தவர்கள்...
இவர்கள் தம் இன்னுயிர் திறந்து
இயன்றளவு உன்னை மீட்டிட முயன்றவர்கள்...
ஈழ மாந்தர் இதயத்தில் குடியிக்கும்
எல்லாச் சரித்திரங்களையும்
தாளில் சித்திரமாக்குவது சாத்தியமன்று
எனினும் விதைக்கப்பட்ட
புதைவிடங்களைக் காண்போர்
ஒன்றை உணர்ந்திடுங்கள்
எதையும் இங்கே மறந்து விடவில்லை!
எவரையும் இங்கே மறந்து விடவில்லை!

விவேகனாந்தனூர்
சதீஸ்



# உனக்குண்டா மனிதம்.....



மனிதன்... மனிதன்...
மனிதன்... என
மார்பினைத் தட்டிடும் மானிடா
மனிதம் உனக்குண்டா...?

உன் மனதைத் தொட்டுக் கேள்
பற்றைகளிலும் பாழடை
மனைகளிலும்
அரும்புகளின்
பிறப்புறுப்புக்களைக்
கிழித்தெறிந்து பசியாறி
களிப்புறும் கடைநிலை மனிதா
உனக்குண்டா மனிதம்.....?

அடுத்தவன் வியர்வை சிந்தும்
உழைப்பினைத் திருடி
உல்லாசமாய் வாழ்ந்திடும்
திருட்டு மனிதா
உனக்குண்டா மனிதம்...?

கடன் தந்தவன் குடும்பம்
கையறு நிலையியில்
தற்கொலையில் தஞ்சம் கொள்ள
புலம் பெயர்ந்து
சொகுசாய் வாழ்ந்திடும்
வஞ்சனை மனிதா
உனக்குண்டா மனிதம்...?

போதையை மென்று
வாளினைக் கரம் தாங்கி
எம்மினத்தைக் கூறு போட்டுக்
குருதிநிறம் கண்டு
எக்காளமிடும் எட்டப்பனே
உனக்குண்டா மனிதம்...?

உடுவிலூர்கலா



# மென்திறன் விருத்தியின் தேவைப்பாடுகள்

கட்டுரை

திருமதி. கோமதி சிவனொளிச்செல்வன்



இன்றைய சூழலில் உலகமயமாக்கல், தனியார் மயமாக்கல் போன்ற புதிய போக்குகள் முனைப்புப்பெற்றுவருகின்றன. இந்த நிலையில் மாணவர்கள் உயர் அறிவாற்றலும், ஆற்றுகைத்திறன்களும் உடையவர்களாக வலுவூட்டப்பட வேண்டியது அவசியமானதாகும். கல்விச் செயற்பாடுகள் ஊடாகக் கிடைக்கப்பெறும் மனித மூலதனங்களைக் கொண்டு நடைமுறை வாழ்க்கை முறைகளுக்கும், நாட்டின் சகல அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கும் தமது அறிவு, ஆற்றல்களைப் பிரயோகிக்கக் கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும். இந்த மனித மூலதனங்கள் தேசிய, பன்னாட்டு ரீதியில் தொழில் உலகுடன் போட்டி போடக்கூடிய இயலுமையைத்தன்னகத்தே கொண்டிருக்க வேண்டும். இவ்வாறான மனித மூலதனங்களை உருவாக்குவதில் பாடசாலைக்கல்வி மிக முக்கியமான பங்கை ஆற்றுகிறது. இதையே எமது நாட்டில் நடைமுறையிலிருக்கும் தேர்ச்சி மட்டக் கலைத்திட்டம் கருப்பொருளாகக் கொண்டுள்ளது.

ஒரு மனிதனைப் பூரண மனிதனாக்குவதற்கு வேண்டிய செயல்பாடுகளுக்கு வழிசமைத்துக் கொடுப்பது பாடசாலைகளே. வளர்ச்சி கண்டு கொண்டிருக்கும் உலகுக்குகேற்ப அறிவு, பல்துறை சார் ஆற்றல்களுடன் மாணவ சமுதாயம் வளர வேண்டியதும், வளர்க்கப்பட வேண்டியதும் அவசியமாகும். அவ்வாறானபல்துறைசார் ஆற்றல்களே மென்திறன்கள் எனப்படுகின்றன. அந்த வகையில் இந்தக் கட்டுரையானது மென்திறன்களின் முக்கியத்துவம், மென்திறன்கள் யாவை? மென்திறன்களும், பாடசாலையும் என்பது தொடர்பான விடயங்களை முன்வைப்பதாக அமைகின்றது.

### மென்திறன்களின் முக்கியத்துவம்

மென்திறன்கள் என்பது மனவெழுச்சி சார் நுண்மதி. அதாவது உணர்வுசார் நுண்மதி எனும் சிந்தனைப்போக்கு வளர்ச்சிபெற்றதன் பின் உருவாகிய எண்ணக்கருவாகும். ஒருவர் தனது தகுதியுடன் வளர்த்துக் கொள்ள வேண்டிய திறன்கள் மிருதுதிறன்கள் அல்லது மென்திறன்கள் என அழைக்கப்படுகின்றன. இவை கல்வியறிவு அல்லது பாட அறிவு என்பதற்கும் அப்பால் ஒரு வேலைத்தளத்தில் செயல்படுவதற்குத் தேவையான விடயங்களையும் கொண்டிருக்கின்றன. பாடசாலையில் மாணவர்கள் தமது ஆற்றல்களை வெளிப்படுத்துவதற்கு இந்த மிருதுதிறன்கள் உதவுகின்றன.

இந்தத் திறன்களை வளர்த்தெடுக்கவேண்டும் என்பது தொடர்பாகக்கல்வியியலாளர்கள் நீண்டகாலமாகக் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். அதன் அடிப்படையில் 2007ஆம் ஆண்டு கல்விச் சீர்திருத்தம், மாணவர்களிடம் மென்திறன்களை வளர்ப்பதையும் கருத்தில் கொண்டு வடிவமைக்கப்பட்டது. கோளமயமாக்கலின்பின் அனைத்து நாடுகளிலும், அனைத்து நிறுவனங்களிலும் வேண்டப்படும் ஒன்றாக இந்த மென்திறன்கள் பார்க்கப்படுகின்றன. அந்த வகையில் மாணவர்களின் உள்ளார்ந்த ஆற்றல்களை வெளிக்கொணர்ந்து சமூக மேம்பாட்டுக் கருமங்களிலும், மாற்றம் காணும் தொழில் உலகிலும் அவர்களை ஈடுபடுத்துவதை நோக்கமாகக் கொண்டே மென்திறன் விருத்திச் செயற்பாடுகள் பாடசாலைகளில் இடம்பெறுகின்றன.

தலைமைத்துவப் பண்பு, முகாமைத்துவத்திறன், நேர முகாமைத்துவம், முரண்பாடுதீர்த்தல், ஆளகத்திறன், நல்ல முறையில் தொடர்பாடலைமேற்கொள்ளல், அணி முகாமை, ஆளிடைத் திறன்கள், இலக்குத்தீர்மானித்தல், நெருக்கிடை முகாமை, தீர்மானம் மேற்கொள்ளல், ஆக்க நிலைச் சிந்தனை, தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன், பொறுப்புக்களை ஒப்படைக்கும் திறன், ஊக்கப்படுத்தல், மதிப்பிடுதல், அறிக்கை செய்தல் ஆகியவற்றை இத்தகைய மிருதுதிறன்களாகக் கொள்ளலாம்.

இன்றைய பாடசாலைக் கலைத்திட்டமும் இத்தகைய பண்புகளை மாணவர்களிடையே வளர்த்து எதிர்காலத் தொழிலுலகுக்கு ஏற்ற வகையில் அவர்களைத் தயார்ப்படுத்தும் நிலையையே முதன்மைப்படுத்தியதாக உள்ளது. இன்றைய தொழில் உலகில் நம்பிக்கை, நேர்மை போன்ற தனியாள் சார் பண்புகளைப் பயிற்சியளித்தல் நிறுவனத்துக்கு நல்ல பயன் விளைவுகளைத் தருவதால், நியாயமான தகைமைகளும், மென்திறன்களும் தொழில் நாடிகளிடம் உள்ளனவா எனத் தொழில் தருநர்கள் இன்று பரிசீலிக்கின்றார்கள். இதனால் மென்திறன்கள் அதிகமாக விரும்பப்படுவனவாகவும், அதிக முக்கியத்துவம் வாய்ந்தனவாகவும் இன்று கொள்ளப்படுகின்றன.




மாணவர்களின் உடல், உளச் சுத்தமும் மென்திறன்களை வளர்த்துச் செல்வதில் செல்வாக்கைச் செலுத்துகின்றன. தலைமைத்துவத் திறனை வளர்த்துக் கொள்ளல் எனும் செயல்பாடானது எந்தச் செயலையும் தலைமைதாங்கி மிகச் சிறப்பான முறையில் நடத்தி முடிக்கும் ஆற்றலைக் குறிக்கின்றது. இதை வளர்த்தெடுக்கத் திட்டமிட்ட வகையில் இணைச்செயற்பாடுகளை வழங்கிச் செயற்படச் செய்தல் வேண்டும்.

### மிருதுதிறன்களும் பாடசாலையும்

மாற்றமுறும் உலகில் எதிர்காலச் சமூகச் சிற்பிகளான பாடசாலை மாணவர்களிடம் மென்திறன்களை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல் பாடசாலையின் முக்கிய பொறுப்பாகும். சமூகத்திறன்கள், சுயதிறன்கள், சிந்தனைத்திறன்கள் என்பன நிறைந்த ஒருவரிடத்தேயே ஒன்றிணைந்த ஆளுமை காணப்படும். பாடசாலைகளின் ஊடாக மென்திறன்களுக்குப் பயிற்சியளித்தலே இன்றைய தேவைப்பாடாக உள்ளது. எழுத்தறிவு மட்டுமன்றி செயலாற்றும் நிலை கொண்டவர்களாக ஒவ்வொரு மாணவர்களும் துலங்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. அந்த வகையில் புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கு அமைவாகத் தேர்ச்சி மையக் கலைத்திட்டம் மிருதுதிறன்களை முதன்மைப்படுத்தியே நடைமுறைப்படுத்தப்பட்டது. மாணவர்கள் வெற்றுப் பாத்திரங்களாகப் பாடசாலைக்கு வருகின்றபோது அறிவுப் பொருளை அந்தப் பாத்திரத்தில் இட்டு நிரப்புவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டும் வழிகாட்டிகளாக ஆசிரியர்கள் காணப்படுகின்றார்கள். இவர்கள் அறிவை மட்டும் நிரப்புவதற்கு வழிகாட்டுவதால் மாணவர்களின் ஏனைய திறன்கள் குன்றி விடுகின்றன. மேற்குறித்த அனைத்திலும் பரவலாக மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டல்கள் கிடைக்கும்போது மென்திறன்கள் வளர்க்கப்படுகின்றன. கற்றல்,கற்பித்தல்நுட்பங்களினூடாக மென்திறன்களைவளர்த்துச்செல்ல முடியும். மேலும் ஒரு மாணவன் எவ்வளவு நுண்ணறிவுடையவனாகக் காணப்பட்டாலும் மென்திறன் இல்லைஎனில் அவனால் வாழ்க்கையில் வெற்றி அடைய முடியாது. அவன் தனது சூழ்நிலைக்கு ஏற்றவாறு பொருந்தி வாழ்தல் என்பது முக்கியமானதாகும். பொருந்தி வாழ்தல் என்பது பிறர் உணர்வுகளை அறிதல், சமூக எதிர்பார்ப்புக்கு ஏற்றவாறு நடத்தை வெளிப்பாடு, சமூக நலன், விமர்சனம் ஏற்றல் என்பனவாகும். இவற்றை வளர்ப்பதில் பாடசாலைகள் தனித்துவம் பெறுகின்றன. இவற்றைப் பாடசாலைகளே வழிகாட்டிவிட வேண்டியுள்ளது. பாடசாலை விழாக்கள், மன்ற நிகழ்வுகள், போட்டிகள், களச் சுற்றுலாக்கள், குழுவேலைகள், சமூகப் பணிகள் போன்ற பல்வேறு இணைப்பாடச் செயற்பாடுகள் மூலம் மேற்கூறிய திறன்களை வளர்க்க வழிகாட்ட வேண்டியது அவசியமாகும். இணைப்பாடச் செயற்பாடுகள் மென் திறன்களை வளர்க்கும் பிரதான ஊடங்களாகும்.

எடுத்துக்காட்டாக தொடர்பாடல்திறனை வளர்க்க வேண்டுமானால் இடம், பொருள், ஏவல் உணர்ந்து சமயோசிதமாக உரையாடும் ஆற்றல் வளர்க்கப்பட வேண்டும். இதன் மூலம் பாடசாலையை விட்டுவெளியேறித் தொழில் தேடும் போது, தொழில் புரியும்போது இந்தத் தொடர்பாடல் திறனைப் பயன்படுத்த முடியும். பாடசாலையில் ஒரு தலைப்பில் உரையாற்ற வழிப்படுத்தல் ஒரு பொருள் பற்றி உரையாற்ற வழிப்படுத்தல், பன்மொழிப் பரிவர்த்தனை, கண் தொடர்புகள், தொனி, புதிய சொல் பயன்பாடு, கலகலப்பு, குறிப்பிட்ட விடயம் பற்றித் தெளிவான விளக்கம் பெறல் போன்ற செயல்பாடுகளில் பாடசாலையில் மாணவர்களை ஈடுபடுத்துவதன் மூலம் மிருதுதிறன்களை வளர்க்கலாம்.

மாணவர்களின் உடல், உளச் சுத்தமும் மென்திறன்களை வளர்த்துச் செல்வதில் செல்வாக்கைச் செலுத்துகின்றன. தலைமைத்துவத் திறனை வளர்த்துக் கொள்ளல் எனும் செயல்பாடானது எந்தச் செயலையும் தலைமைதாங்கி மிகச் சிறப்பான முறையில் நடாத்தி முடிக்கும் ஆற்றலைக் குறிக்கின்றது. இதை வளர்த்தெடுக்கத் திட்டமிட்ட வகையில்



இணைச்செயற்பாடுகளை வழங்கி அதன் படி அவர்களைச் செயற்படச் செய்தல் வேண்டும். ஒவ்வொரு மாணவனும் செயற்பாட்டில் ஈடுபடும்போதே தன்னகத்தே பல்வேறு திறன்களை வளர்த்துக்கொள்கின்றான். அனைத்து மென்திறன்களையும் வளர்த்துச் செல்வதற்கு குழு வேலைகள், மாணவர் மன்ற நிகழ்வுகள், விழாக்கள், விளையாட்டு நிகழ்வுகள், செயற்பாட்டுடன் இணைந்த கற்றல், கற்பித்தல்கள் போன்ற பல்வேறு நிகழ்வுகளைப் பாடசாலைகள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

சுருங்கிவரும் இன்றையஉலகில் கல்வி ஒரு மூலதனமாகும். அந்தக் கல்வியினூடான திறன்களாக மென்திறன்கள் காணப்படுகின்றன. தொடர்பாடல் தொழில்நுட்பத்திறன் உட்பட ஏனைய ஒவ்வொரு திறன்களும் கல்வியினூடாகப் புகட்டப்பட வேண்டியவையாகும். மென்திறன்களுக்கான பயிற்சிக்குப் பாடசாலைகளே அடித்தளமாக அமைகின்றன. இதனால் மாறிவரும் தொழில் உலகுக்குப் பொருந்தக்கூடிய வகையில் திறன்கள் வளர்க்கப்பட வேண்டியது அவசியமாகிறது. அது மட்டுமன்றி அதுவே தேவைப்பாடாகவும் உள்ளது. மாணவர் மென்திறன் விருத்தியில் பாடசாலைகள் முக்கிய பங்கு வகிக்கின்றபோது ஆசிரியர்கள் குறித்த மென்திறன்களில் பயிற்சி பெற்றவர்களாக இருக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது. இதன்மூலம் காலத்தின் தேவைக்கேற்ப ஆசிரியர்கள் தங்களை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படுகின்றது.

# பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுங்கள்



கட்டுரை

அ.அஜந்தன்

பிள்ளைகளுக்கு வீடு, முதல் பள்ளியாகவும் பெற்றோர், முதல் ஆசிரியராகவும் திகழ்வர். உடல், உள, புலன், மொழி, ஆன்மீக விருத்திகள் வீட்டிலேயே ஆரம்பிக்கின்றன. ஆக்கத்திறன், சமூகமனவெழுச்சி, கலாசாரம், கணிதமுன்னெண்ணக்கரு போன்றவற்றை விருத்தி செய்வதற்கு வீட்டில் கிடைக்கும் 'சந்தர்ப்பத்தைக் காட்டிலும் முன்பள்ளிகளில் அதிக சந்தர்ப்பம் கிடைக்கிறது. வீட்டுச் சூழலிலிருந்து முன்பள்ளிக்குப் போகின்றபொழுது ஆசிரியர்கள் இரண்டாவது தாயாகிப் பிள்ளைகளுக்கு அறிவூட்டுவர். பிள்ளையின் ஆரம்பக் கற்றல் வீட்டில் ஆரோக்கியமாக நிகழ்வது அவசியம்.

வீட்டில் எவற்றை? எப்படிக் கற்பிக்கலாம்? என்பதை முதலில் கவனத்தில் எடுக்கவேண்டும். ஏனெனில் முன்பிள்ளைப் பராயத்தின் கற்பது அந்தப் பிள்ளையின் வாழ் நாள்களுக்கான அத்திபாரமாக அமைவதால் அதனைத் திட்டமிட்டுச் செய்வது பிள்ளையின் கல்வி மற்றும் சமூகம்சார்ந்த வளமான எதிர்காலத்துக்கு வழிகோலும்.
கீழ்க் காணும் விடயங்களைப் பெற்றோர்கள் கருத்திலெடுக்கலாம்

**உயிர்களிடத்தே அன்பு செலுத்தக் கற்றுக்கொடுத்தல்**
- பிராணிகளை நேசிக்கவும் அவற்றைத் துன்புறுத்தக் கூடாதென்பதையும் கற்றுக்கொடுத்தல்
- பெற்றோருக்குப் பணிவதற்குக் கற்றுக்கொடுத்தல்.
- முதியோரைக் கனம்பண்ணவும் அவர்களைப் பேணவும் சொல்லிக்கொடுத்தல்.
- பெரியோரை மதிக்கவும் அவர்களுக்குக் கீழ்ப்படியவும் கற்றுக்கொடுத்தல்.

**ஆன்மிகத்தை அல்லது விழுமியங்களை ஊட்டுதல்**
- வீட்டில் உங்களோடு சேர்ந்து வழிபடுவதற்குக் கற்றுக் கொடுங்கள்
- ஆலய வழிபாட்டையும், விதிமுறைகளையும், நம்பிக்கைகளையும் கற்றுக்கொடுங்கள்
- தினமொரு நற்சிந்தனையைச் சொல்லிக் கொடுக்கலாம்
- தேவாரங்கள் அல்லது சமயப் பாடல்களைச் சொல்லிக் கொடுக்கலாம்

**கலாசாரத்தைப் பழக்குதல்**
- ஆடை, அணிகள் தொடர்பான சிந்தனைகளை ஊட்டி அதைப் பின்பற்ற உதவுதல். குறிப்பாக எந்த இடத்தில் எவ்வகையான
- ஆடைகளை அணியலாம். எமது அடையாளமான ஆடைகள் எவை போன்றவற்றைக் கற்பித்தல்.
- எம்மால் கொண்டாடப்படும் ஆடைகள் தொடர்பான விளக்கங்கள், நம்பிக்கைகளை கற்பித்தல்
- விழாக்களில் பின்பற்றவேண்டிய பழக்கவழக்கங்களைக் கூறுதல்.
- சமயச் சின்னங்களையும் அதை மதிக்கவும் சொல்லிக்கொடுத்தல்
- பிறமதங்களை மதிக்கக் கற்றுக்கொடுத்தல்
- நாளாந்தக் கடமைகள் தொடர்பாகக் கற்றுக்கொடுத்தல்

**அறப்பண்புகளை வளர்த்தல்**
- ஏழைகளுக்கு, இல்லாதவர்களுக்கு உதவப் பழக்குதல்
- உண்மை பேசக் கற்றுக்கொடுத்தல்
- பிறர் பொருளில் விரும்பக்கூடாதென்பதைச் சொல்லிக்கொடுத்தல்
- பிறரைத் துன்பம் செய்வது தவறென்று உணர்த்தல்
- இரக்கம் கொள்வதன் நன்மையை உணர்த்தல்
- நேர்மையாக வாழ்வதன் நன்மையை உணர்த்துதல்
- மன்னிக்கச் சொல்லிக்கொடுத்தல்
- உதவிகளுக்கும், நன்மைகளுக்கும் நன்றி கூறப் பழக்குதல்
- எதிரில் மற்றவர்களைக் காண்கின்றபொழுது வணக்கம் கூறுதல்
- செவிக்கும் மனதும் இனிய சொற்களைக் கூறத்தூண்டவேண்டும்

**குடும்பத்தின் கட்டமைப்பை அறிதல்**
- குடும்பத்தின் வகைகளை அறியச் செய்தல்
- ஒவ்வொருவரது உறவுமுறைகளை அறியச் செய்தல்
- அங்கத்தவர்களின் பொறுப்புக்களை புரிந்துகொள்ள உதவுதல்
- விருந்தினரை உபசரிக்கக் கற்றுக்கொடுத்தல்
- குடும்பத்தில் பெரியவர்களை மதிக்கவும் உதவவும் சொல்லிக்கொடுத்தல்
- குடும்ப விடயங்களில் பங்கேற்கச் சந்தர்ப்பம் வழங்கல்
- குடும்பத்தில் தனது நிலையை அறிய உதவுதல்
- உதவியை நாடிப்பெறப் பழக்கிக்கொடுத்தல்
- குடும்பத்தில் தனது மதிப்பை விளங்கிக்கொள்ள உதவுதல்

**உணர்வுகளைக் கையாளப் பழக்குதல்**
- உணர்வுகளை அடையாளம் காணவும் ஆரோக்கியமாக வெளிப்படுத்தவும் கற்றுக்கொடுத்தல்
- மற்றவர்களது உணர்வை மதிக்கக் கற்றுக்கொடுத்தல்

முன்பள்ளிக் கல்விக்கு முன்பே வீட்டில் உதவுவதற்கு சில விடயங்களை கருத்திலெடுத்து கற்பிக்கவேண்டும்.

**படங்களையும் நிறங்களையும் கற்பித்தல்**
- படங்களை நிறம் தீட்டும்பொழுது முதலில் மூலநிறங்களை அறிமுகம் செய்தல் நன்று.
- அவற்றை அவர்களே பயன்படுத்தி உருக்களுக்கு நிறம் தீட்டப்போதிய அறிவுறுத்தல்களை கொடுக்கவேண்டும்.
- அவர்களோடு அருகிலிருந்து வரையுங்கள்.
- அவர்கள் எந்தப் படத்தை வரைகிறார்கள்? என்ன செய்கிறார்கள்? என்பது தொடர்பாகக் கதையுங்கள். அது தொடர்பாக அவர்களே விளக்கம் கொடுக்கவும் சந்தர்ப்பம் கொடுங்கள்.
- பொருந்தக்கூடிய இரண்டு நிறங்களை முதலில் பயன்படுத்தப் பழக்குங்கள். பின்பு நிறங்களைக் கூட்டிக் கொள்ளலாம்.
- எளிமையான உருக்களைப் பயன்படுத்தி வடிவங்களை அமைத்து அதைப்பற்றி கதைத்தல்.
- அதே உருக்களை வெட்டித் துண்டங்களாக வைத்துக் கொண்டு அவர்களிடம் நீங்கள் வரைந்த உருவைப் போல் அமைக்கும்படி கூறலாம்.
- பிள்ளைகள் பொருத்தமான உருவத்தை தேர்ந்தெடுக்க உதவ வேண்டும்.
- அந்த உருவத்தைப்பற்றி மீண்டும் மீண்டும் வினாக்களைக் கேட்க வேண்டும் ( என்ன உருவம் ? எத்தனை உருவங்கள் உள்ளன ? அவை எவை ? என்ன நிறம்?)
- பலபென்சில்களைப் பயன்படுத்தப் பழக்குகின்றபொழுது பெரிய பென்சிலால் புள்ளியிடவும் அல்லது சிறிய பென்சிலால் கீறவும் என்று அளவுகளையும் கற்பிக்கலாம் (3 வேறுபட்ட பென்சில்களைப் பயன்படுத்தலாம்)
- படங்களின் பெயர், நிறம், பயன்பாடு தொடர்பாகக் கலந்துரையாடலாம்.
- பிடித்த நிறம் ? எத்தனை படம் அதே நிறத்தில் உள்ளது? போன்ற வினாக்களைக் கேட்கலாம்.
- எந்தப் பொருள்கள் வீட்டுச் சமையலறையில் உள்ளன? எனக் கேட்கலாம்.

**நீதிக் கதைகளைக் கற்பித்தல்**
- எளிமையான சுவாரஸ்யமான கதைகளைத் தினமும் வாசித்துக் காட்டவேண்டும்.
- புத்தகத்திலுள்ள கதை தொடர்பான படங்களை விளக்கவும்.
- பிள்ளைகளைப் படம் தொடர்பாக மீண்டும் விளக்கச் சொல்லிக் கேளுங்கள்.
- கதை தொடர்பான வினாக்களைக் கேட்கவேண்டும் (என்ன நடந்தது? என்ன பெயர்? இந்தக் கதை மூலம் கற்றுக்கொண்டவை எவை?).
- கதையில் வரும் பாத்திரங்களின் அல்லது விலங்குகளின் ஒலிகளையும் எழுப்பிக் காண்பிக்கலாம்.
- இடையில் கதைகூறுவதை நிறுத்த நேரிட்டால் மீண்டும் தொடங்கும்பொழுது எதில் கதை நிறுத்தப்பட்டதென்று கேட்கலாம்.
- பிள்ளைகளுக்குப் பிடித்த கதையின் பாத்திரத்தைப் பற்றி அவர்களைக் கதைக்க விடலாம்.
- கதை கூறும்பொழுது அந்தக் கதாபாத்திரத்தின் உணர்வுகளை வெளிக்காட்ட வேண்டும் (முகபாவம்).
- வாசித்துக் காண்பிக்கும்பொழுது விரல்களால் சொற்களைத் தொட்டுச் செல்லலாம். அப்பொழுது அவர்களுக்கு எழுத்துக்கள் பரீட்சயமாகும்.
- கதையைச் சொல்கின்றபொழுது கதாபாத்திரங்கள் போல் நடித்தும் காண்பிக்கலாம்.
- படிப்படியாக. நீளமான சிக்கலான கதைகளுக்குள் செல்லலாம்.

குடும்பத்தின் அனைத்து அங்கத்தவர்களும் இவற்றைத் தொரிந்து வைத்திருப்பது பிள்ளைக்கு எழும் வினாக்களுக்குச் சந்தேகங்களுக்கு. பதிலளிப்பதற்கு இலகுவாக இருக்கும். பிள்ளையின் வயதிற்கேற்ற கற்பித்தலும் அவர்களுக்கேற்ற கற்பித்தல் முறைகளும் அவசியம். வீட்டிலுள்ள பெற்றோர்கள் மேற்குறிப்பிட்ட விடயங்களைக் கருத்திலெடுத்துப் பிள்ளைகளின் வளமான எதிர்காலத்தை உறுதிப்படுத்துவது நன்று.

வீட்டுச் சூழலிலிருந்து முன்பள்ளிக்குப் போகின்றபொழுது ஆசிரியர்கள் இரண்டாவது தாயாகிப் பிள்ளைகளுக்கு அறிவூட்டுவர். ஆனாலும் பிள்ளையின் ஆரம்பக் கற்றல் வீட்டில் ஆரோக்கியமாக நிகழ்வது அவசியம்.
வீட்டில் எவற்றை? எப்படிக் கற்பிக்கலாம்? என்பதை முதலில் கவனத்தில் எடுக்கவேண்டும். ஏனெனில் முன்பிள்ளைப் பராயத்தில் கற்பது அந்தப் பிள்ளையின் வாழ் நாள்களுக்கான அத்திபாரமாக அமைவதால் அதனைத் திட்டமிட்டுச் செய்வது பிள்ளையின் கல்வி மற்றும் சமூகம்சார்ந்த வளமான எதிர்காலத்துக்கு வழிகோலும்



## மேடம்



செவ்வாய், புதன், குரு நற்பலன் தருவார். சமயோசிதமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். செயல்களை திட்டமிட்டு நிறை வேற்றுவீர்கள். உடன்பிறந்தவாகளால் உதவி கிடைக்கும். வாகன பராமரிப்புச் செலவு குறையும். புத்திரர்களால் சிறு பிரச்சினை வந்து நீங்கும். வழக்குகளில் இருந்த நெருக்குதல் குறையும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். தொழில், வியாபாரம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தை அனுசரித்துச் செல்வதால் பிரச்சினைகள் குறையும். பெண்கள் ஆன்மிக சுற்றுலா செல்வ[illegible] மாணவர்களுக்குப் படிப்பில் கவனம் வேண்டு[illegible]

## இடபம்



ராகு, சந்திரனால் நன்மை நடக்கும். மனதில் குழப்பம் வரலாம். பெரிய திட்டங்களை நிறைவேற்ற தருணம் வரும் வரை பொறுத்திருக்கவும். உடன்பிறந்தவர்கள் அன்புடன் நடந்து கொள்வர். வீடு, வாகனத்தில் அறிமுகம் இல்லாதவர்க்கு இடம் தர வேண்டாம். புத்திரர்களின் சில செயல்கள் இடைஞ்சல் தரலாம் என்பதால், அவர்களுக்கு அறிவுரை சொல்லவும். உடல்நலத்திற்கு சிகிச்சை தேவைப்படலாம். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். பணியாளர்கள் கவனமாக செயல்பட்டால் தான் சலுகைகளைப் பெற முடியும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம்.

## மிதுனம்



பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளன. பணிகளை முழு முயற்சியுடன் நிறைவேற்று வீர்கள். உறவினர்கள் உறுதுணையாக செயல்படுவார். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. புத்திரர்கள் பெற்றோர் சொல்லை மதித்து நடந்து கொள்வா. உடல்நிலை நன்றாக இருக்கும். கடன்களை செலுத்துவீர்கள். மனைவியின் பாசம் நெகிழ்ச்சி தரும். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி இருக்கும். தொழில், வியாபாரத்தில் வளார்ச்சியும் பணவரவும் கூடும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கு நிறைவேற்றி அதிகாரிகளிடம் நற்பெயர் பெறுவர். மாணவர்கள் நன்றாகப் படித்து பாராட்டு, பரிசு பெறுவார்.

## கடகம்



செவ்வாய், சுக்கிரன், சந்திரன் நற்பலன் தருவர். தாழ்வு மனப்பான்மை விலகும். வளர்ச்சிப் பாதையில் நடைபோடுவீர்கள். குடும்பச்செலவு அதிகரிக்கும். தாய்வழி உறவினர்கள் தேவையான உதவி வழங்குவர். புத்திரர்கள் உங்கள் ஆலோசனையை ஏற்று முன்னேற்றம் காண்பர். மனைவி பாசத்துடன் நடந்து கொள்வார். அதிக உழைப்பால் தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பயணங்கள் ஓரளவு நன்மை தரும். பணியாளர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பும் சலுகையும் கிடைக்கும். பெண்களுக்கு கணவருடன் ஒற்றுமை ஏற்படும். மாணவர்கள் படிப்பில் சிறப்பிடம் பெறுவர்.

## சிங்கம்



புதன், குரு, சுக்கிரன், கேது அளப்பரிய நன்மை வழங்குவர். தாமதமான பணிகளை விரைந்து நிறைவேற்றுவீர்கள். நண்பர்களின் உதவி கிடைக்கும். தாயின் தேவைவயை நிறைவேற்றுவீர்கள். வாகன பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்களின் ஆரோக்கியத்திற்கு மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். மனைவி உங்கள் நல்ல கருத்தை ஏற்றுக் கொள்வார். தொழிலில் இடையூறு விலகி உற்பத்தி விற்பனை சீராகும். சேமிப்பு பணம் அத்தியாவசிய செலவுகளுக்கு பயன்படும். பணியாளர்களுக்கு வேலைப்பளு கூடும்ர்.பெண்கள் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## கன்னி



பெரும்பான்மை கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். புதஆதித்யயோகம் நல்ல கல்வி தரும். உழைப்பிற்கான பலன் முழு அளவில் கிடைக்கும். வாரம் முழுவதும் மகிழ்ச்சி. புதிய வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. பூர்வ சொத்தில் பணவரவு அதிகரிக்கும். புத்திரர்கள் வெகுநாள் விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். வழக்கு, விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். குடும்பத்தில் சுபநிகழ்வு ஏற்படும். கணவன், மனைவி ஒற்றுமை நன்றாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் போட்டி இருந்தாலும் சமாளித்து விடுவீர்கள். பணியாளர்களுக்கு பாராட்டு, வெகுமதி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து நண்பர்களுக்கும் உதவுவர்.

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

### 26.11.2017 தொடக்கம் 02.12.2017 வரை

## துலாம்




சுக்கிரன், சந்திரனால் ஓரளவு நன்மை உண்டாகும். கடந்த கால நற்செயலுக்கான நன்மை தேடி வரும். புதிய திட்டங்களை வடிவமைப்பீர்கள். தம்பி, தங்கை வாழ்வில் முன்னேற்றம் பெற உதவிபுரிவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்கள் உங்களிடம் நண்பருக்கு இணையாக கருத்துக்களை பேசுவர். உடல் ஆரோக்கியம் பலம் பெறும். எதிரிகளால் வரும் சிரம சூழ்நிலை உணர்ந்து செயல்படுவீர்கள். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித் தருவீர்கள். தொழில், வியாபாரத்தில் போட்டியால் அளவான பணவரவு இருக்கும். பணியாளர்கள் அதிக வேலை வாய்ப்பை ஏற்பது நல்லது. மாணவர்களுக்கு படிப்பில் கவனம் வேண்டும்.

## விருச்சிகம்



செவ்வாய், சுக்கிரன், கேது நற்பலன் தருவர். ஆர்வமுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். உதவியவர்களுக்கு நன்றி சொல்வீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். புத்திரர்களின் மனதில் குழப்பம் ஏற்படலாம். அவர்களுக்கு அறிவுரை சொல்லுங்கள். பூர்வ சொத்து பராமரிப்பில் கவனம் வேண்டும். மனைவி உங்களின் எண்ணங்கள் வெற்றி பெற உதவுவார். விருந்து, விழாவில் கலந்து கொள்வீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தி வரும். தொழில், வியாபாரத்தில் இடையூறு இருந்தாலும், அதை சரி செய்து லாபம் பெறுவீர்கள். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். பெண்கள் குடும்பத்தின் எதிர்கால நலனுக்கான திட்டங்கள் வகுப்பர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## தனுசு



குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை ஏற்படும் .திட்டங்கள் எளிதில் நிறைவேறும். இனிய அனுபவம் தரும் சம்பவம் நடக்கும்.செலவில் தாராளம் பின்பற்றுவீர்கள். புத்திரர்கள் மனதில் நல்ல எண்ணங்களை வளர்ப்பீர்கள். இஷ்டதெய்வ அருள்பலம் துணை நிற்கும். எதிர்ப்பு விலகி வாழ்வில் முன்னேற்றம் உருவாகும். மனைவியின் பாசம் குடும்பநலன் சிறக்க உதவும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். பணியாளர்களுக்கு வேலையில் மந்தநிலை இருக்கும். பெண்களுக்கு தாய் வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்.

## மகரம்



சூரியன், புதன், சனீஸ்வரர் தாராள பலன் தருவார். மன தைரியம் சிறப்பாக அமைந்து வாழ்வில் மலர்ச்சியை ஏற்படுத்தும். குடும்பத்தினர் அன்புடன் நடந்து கொள்வர். பயணங்கள் குறையும். புத்திரர்களின் வெகுநாள் விருப்பம் நிறைவேற்ற தாராள பணம் செலவாகும். உடல் ஆரோக்கியம் சீராக இருக்கும். வழக்கு, விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். மனைவியின் அறிவார்ந்த செயல் குடும்ப நலனுக்கு உதவும். தொழில், வியாபாரத்தில் மாற்றுத் திட்டம் வளர்ச்சி தரும். பணியாளர்கள் நிர்வாகத்தின் சட்டதிட்டங்களை தவறாமல் பின்பற்றவும். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் அதிக பயிற்சி தேவைப்படும்.

## கும்பம்



பெரும்பான்மை கிரகங்களால் நன்மை உண்டாகும். சூழ்நிலைக்கேற்ப திட்டங்களை மாற்றிக் கொள்வீர்கள் .புத்திரர்கள் படிப்பு செயல் திறனில் மேம்பட பாடுபடுவீர்கள். பூர்வ சொத்தில் பணவரவு கூடும். இஷ்டதெய்வ வழிபாடு செய்வீர்கள். மனைவி வழிசார்ந்த உறவினர் உதவி உற்சாகம் தரும். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். பயணங்களால் நன்மை ஏற்படும். தொழில், வியாபாரம் செழித்து இலாபம் கூடும். பணியாளர்கள் கேட்ட நிதியுதவி கிடைக்கும். பெண்களுக்கு நகை, புத்தாடை கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

## மீனம்



சுக்கிரன், கேது, சந்திரன் நற்பலன் வழங்குவர். மனதில் புதுமையான கருத்து உருவாகும். உடன்பிறந்தவர்களுக்கு மங்கள நிகழ்ச்சி நடத்த அனுகூலம் உண்டு. வீடு, வாகனத்தை பாதுகாப்பாக வைத்துக் கொள்ளவும். புத்திரர்கள் உடல்நலத்தில் கவனம் வேண்டும். மனைவியை அனுசரித்து செல்வது குடும்பத்திற்கு பலம் சேர்க்கும். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி செய்ய நண்பர்களின் உதவி கிடைக்கும். பணியாளர்கள் ஆர்வமுடன் பணிபுரிந்து நற்பெயர் பெறுவர். பெண்களுக்கு கணவரின் அன்பு, தாராள பணவசதி கிடைக்கும். மாணவர்களுக்கு நட்பு விஷயத்தில் கவனம் தேவை.




# டிசெம்பர் மத்தியில் திரைக்கு வருகிறது பள்ளிப் பருவத்திலே

வாசுதேவ் பாஸ்கர் இயக்கத்தில் நந்தன்ராம் வெண்பா நடிப்பில் உருவாகி இருக்கும் 'பள்ளிப்பருவத்திலே' படம் டிசெம்பர் மாதம் 15ஆம் திகதி திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கே.எஸ்.ரவிகுமார், ஊர்வசி, ஆர்.கே. சுரேஷ், தம்பி ராமையா, கஞ்சாகருப்பு, பொன்வண்ணன் உள்பட பலரும் இந்தப் படத்தில் நடித்துள்ள்னர். வாசுதேவ் பாஸ்கர் இயக்கத்தில் உருவாகி இருக்கும் இந்தப் படம் பள்ளி மாணவர்களையும், கலகலப்பான குடும்ப சூழலைய்யும் மையப்படுத்தி நகைச்சுவை கலந்த காதல் கதையாக உருவாகி இருக்கிறது. வினோத் குமார் ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்தப் படத்துக்கு விஜய் நாராயணன் இசையமைத்திருக்கிறார். ஓரளவு எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்தப் படம் அடுத்த மாதம் 15ஆம் திகதி திரைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நினைத்த செயல் எளிதில் நிறைவேறும். தொழில் வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி ஏற்படும். பெண்கள் விரும்பிய பொருள்களை வாங்குவர்.

**இடபம்:** எதிர்காலம் குறித்த நம்பிக்கை மேலோங்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் மூலதனம் செய்வீர்கள். இலாபம் உயரும். உறவினர் வருகையால் நன்மை உண்டாகும்.

**மிதுனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் கவனமுடன் பேசவும். தொழில் வியாபாரத்தில் இருக்கிற அனுகூலம் பாதுகாப்பது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

**கடகம்:** கிடப்பில் இருந்த திட்டம் நிறைவேறும். தொழில் வளர்ச்சிக்காக கடினமாக உழைப்பீர்கள். வருமானம் அதிகரிக்கும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**சிங்கம்:** பலரும் பாராட்டும் வகையில் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரம் செழிக்க புதிய வாய்ப்பு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும்.

**கன்னி:** யாரிடமும் வீண் விவாதம் வேண்டாம். தொழில் வியாபார நடைமுறை மந்தகதியில் இயங்கும். இலாபம் சுமார். பெண்களுக்கு வீட்டுச் செலவில் சிக்கனம் தேவை.

**துலாம்:** முக்கிய பணி நிறைவேற தாமதம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் தடை குறுக்கிடலாம். சுமாரான ஆதாயம் கிடைக்கும்.

**விருச்சிகம்:** மற்றவர் பாராட்டும் விதத்தில் செயல்படுவீர்கள். தொழில் வியாபாரம் எதிர்பார்த்த வளர்ச்சி பெறும். வருமானம் உயரும். குழந்தைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள்.

**தனுசு:** யாருக்கும் சங்கடம் தராமல் பேசுவது நல்லது. தொழில் சார்ந்த இடையூறுகளை சந்திக்க நேரிடலாம். பணியாளர்கள் சக ஊழியர்களால் பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

**மகரம்:** சமூக அந்தஸ்து உயரும். தொழில் வியாபாரத்தில் வருமானம் உயரும். நிலுவைப் பணம் கிடைக்கும். பெண்கள் ஆடை, ஆபரணம் வாங்குவர்.

**கும்பம்:** தன்னம்பிக்கையுடன் பணிகளில் ஈடுபடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் இலாபம் சராசரியாக இருக்கும். வெளியூர் பயணத்தில் திடீர் மாற்றம் உருவாகும்.

**மீனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் நெருக்கம் வேண்டாம். தொழில் வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்க கூடுதல் உழைப்பு தேவை. மிதமான இலாபம் கிடைக்கும்.



# ஆண்

ஆண் அறிவின் அம்சம்.
ஆண் ஆளுமை விளக்கம்.
ஆண் இயல்பே வீரம்.
ஆண் ஈவின் ஈரம்.
ஆண் உறுதியின் தீரம்.
ஆண் ஊழின் ஊழ்.
ஆண் எரி தீ உழைப்பு.
ஆண் ஏர் முனைக் காப்பு.
ஆண் ஒருங்கு சேர் பிணைப்பு.
ஆண் ஓய்விலா இயக்கம்.
ஆண் ஔவியம் போற்றான்.

அருமை தங்க_ஆண்மகன்

இருவர் வாதிடும்போது
உண்மை காணாமல்
போய்விடுகிறது. வாதத்தை
முதலில் நிறுத்துபவனே
உண்மையான அறிவுள்ளவன்.
ஒரு விவாதத்தில்
உண்மைக்காக நீ
வாதிடுவதில்லை.
உனக்காகவே வாதிடுகிறாய்.



கார்லைல்

கடிதம் எழுதி வைத்துவிட்டு
தற்கொலை செய்து
கொண்டவர்களின் கடைசி
ஆசையெல்லாம்,
'எப்படியாவது இது
படிக்கப்பட்டுவிட வேண்டும்'
என்பதாகத்தான் இருக்கும்.



சுவைக்காகவோ,
பசிக்காகவோ
அருந்தப்படுவ
தில்லை...

தேநீர்
ஒரு போதை!



நீ சுமக்கின்ற நம்பிக்கை, நீ கீழே
விழும்போது உன்னை சுமக்கும்

கல்யாணத்துக்கு வந்து
கைகுலுக்கும் நட்பைவிட, திருட்டுக்
கல்யாணத்துக்கு காதலியைக்
கடத்தும்போது கைகோர்க்கும்
நட்பே சிறந்தது!

# காதல்

நீ டியூசன்
வந்து நோட்ஸ்
எடுத்து செல்கிறாய்
நான் உன்னையே
நோட்டம் விட்டுச்
செல்கிறேன்

நீ வீட்டு கணக்கு
செய்கிறாய்...
நான் வீட்டில் உன்னையே
கணக்கு செய்கிறேன்

நீ செடிக்கு தண்ணீர்
ஊற்றுகிறாய்...
பார்த்து
ஜொல்லு
ஊற்றுகிறேன்...
நான்



# சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 6 | 5 | | 1 | | | | |
| 1 | | | | | | 4 | 6 | |
| | 8 | | | 6 | | | | 1 |
| | | 3 | 9 | | | | | 6 |
| | 1 | | 2 | 3 | 8 | | 9 | |
| 5 | | | | | 6 | 8 | | |
| 7 | | | | 4 | | | 3 | |
| | | 1 | | | | | | |
| | | | | 2 | | 6 | 4 | |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 6 | 4 | 9 | 8 | 5 | 7 | 3 |
| 9 | 7 | 8 | 3 | 5 | 6 | 1 | 4 | 2 |
| 4 | 3 | 5 | 2 | 1 | 7 | 9 | 8 | 6 |
| 2 | 9 | 3 | 1 | 8 | 4 | 6 | 5 | 7 |
| 6 | 5 | 4 | 9 | 7 | 3 | 8 | 2 | 1 |
| 8 | 1 | 7 | 6 | 2 | 5 | 3 | 9 | 4 |
| 5 | 8 | 1 | 7 | 3 | 2 | 4 | 6 | 9 |
| 3 | 6 | 2 | 5 | 4 | 9 | 7 | 1 | 8 |
| 7 | 4 | 9 | 8 | 6 | 1 | 2 | 3 | 5 |

## இது புதுசு



கண்ணாடி வகைகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள் என. இவை ஆயிரத்து 250 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 120 | 80 | 80 | 80 |
| கத்தரி | 160 | 160 | 150 | 160 | 160 |
| மரவள்ளி | 60 | 50 | 80 | 50 | 50 |
| பயிற்றை | 220 | 240 | 300 | 200 | 220 |
| பாகல் | 350 | 360 | 450 | 300 | 360 |
| க.கிழங்கு | 70 | 70 | 70 | 100 | 80 |
| பெ.வெங்காயம் | 150 | 200 | 140 | 160 | 180 |
| சி.வெங்காயம் | 400 | 320 | 350 | 400 | 400 |
| பூசணி | 70 | 80 | 60 | 80 | 60 |
| தக்காளி | 90 | 140 | 200 | 140 | 240 |
| வாழைக்காய் | 70 | 60 | 70 | 70 | 60 |
| கீரை | – | 50 | 60 | 40 | 70 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 30 | 50 |
| ப.மிளகாய் | 800 | 800 | 800 | 800 | 700 |
| புடோல் | 90 | 140 | 120 | 140 | 120 |
| கோவா | 160 | 160 | 140 | 200 | 160 |
| வெண்டி | 100 | 120 | 180 | 140 | 120 |
| போஞ்சி | 130 | 200 | 200 | 160 | 200 |
| லீக்ஸ் | 250 | 280 | 200 | 220 | 240 |
| தேங்காய் | 75 | 90 | 100 | 80 | 70 |
| உ.கிழங்கு | 60 | 70 | 80 | 80 | 70 |
| தேசிக்காய் | 100 | 100 | 50 | 80 | 80 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 15 | 20 |
| [illegible]காய் | 380 | 300 | 250 | 300 | 340 |
| கரட் | 200 | 240 | 200 | 150 | 220 |
| முருங்[illegible] | 120 | 250 | 400 | 120 | 200 |

## தினமும் சைக்கிளில் பயிற்சி செய்வதால் கிடைக்கும் நன்மைகள்



திடமான உடற்பயிற்சியின் பின்பு பிறகு மூளை சிறப்பாக வேலை செய்வதாக ஆய்வுகள் கூறுகின்றன. அநேக பெற்றோர்களின் கவலை அவர்களது பிள்ளைகள் ஓரிடத்தில் சிறிது நேரம் அமைதியாய் அமர்வதில்லை, கவனிப்பதில்லை, முழுக் கவனத்துடன் வீட்டுப் பாடம் செய்வதில்லை என்பதாக அமைகிறது. இவ்வாறு கவலைப்படும் பெற்றோர்கள் என அவர்களுக்கு சைக்கிள் ஓட்டும் பயிற்சியை தினமும் அளித்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படுகிறது என ஆய்வுகள் கூறுகின்றன. ஆய்வுகள் கூறுவது உடல் ஆரோக்கியம் குறையும் போது மூளையின் செயல் திறனும் குறைகிறது என்பது தான்.

- உடற்பயிற்சி மன உளைச்சலை அகற்றும்.
- மனதினை அமைதியாய் வைக்கும்.
- மூளையின் செயல்திறனை கூர்மை யாக்கும்.
- பார்ப்பதற்கு கம்பீர தோற்றம் அளிக்கும்.
- இவர்கள் மற்றவர்கள் மீது நட்புடன் இருப்பார்கள்.
- தங்களைப் பல விதத்திலும் திறமை யானவராக வளர்த்துக் கொள்வர்.
- சைக்கிள் ஓட்டுவது உடற்பயிற்சி மட்டுமல்ல. இதயத்திற்கும் இப்பயிற்சி மிகவும் நல்லது.
- எளிதில் நிறை குறையும்.
- இவர்களின் நோயற்ற தன்மை இவர்களை நீண்ட காலம் வாழ வைக்கிறது.
- சைக்கிளில் தினமும் அரைமணி நேர அளவிலாவது பயணிக்க வேண்டும்.
- வெளி நாடுகளில் கர்ப்ப காலத்தில் கூட சைக்கிள் ஓட்டிச் செல்கின்றனர். ஆனால் அவர்களுக்கு தகுந்த அறிவுரை மருத்துவர்களால் அளிக்கப்படுகிறது. அவர்களும் அதனை முறையாய் பின்பற்றுவர்.
- சைக்கிளில் செல்பவர்களுக்கு நிறைய நல்ல நண்பர்கள் கிடைத்து விடுவார்கள்.
- பலர் தன் குடல் சீராய் இயங்க, மலச்சிக்கல் இன்றி இருக்க சைக்கிள் பயிற்சியினை மேற்கொள்கின்றனர்.
- சைக்கிள் ஓடுபவர்கள் பல நோய்களில் இருந்து காக்கப் படுவதினை ஆய்வுகள் உறுதி செய்கின்றன.

இத்தனை நன்மைகள் நிறைந்த இப்பயிற்சியினை அனைவரும் கடைபிடிக்கலாம். பிள்ளைகள் பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று வரலாம். பெரியோர் அலுவலகம் சென்று வரலாம். ஆனால் வயது, உயரம் இவற்றுக் கேற்ப தகுதியான சைக்கிளையே பயன்படுத்த வேண்டும். முறையான கையுறை, ஹெல்மெட், காலணி அவசியம். பெரியோர் அவரவர் உடல் தகுதி பற்றி மருத்துவ ஆலோசனை பெற வேண்டும். இனி வருங்காலத்தில் பெற்றோல் செலவினை தவிர்க்க, உடல் ஆரோக்கியம் கூட சைக்கிளினை மக்களே நடை முறைபடுத்துவர்.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 780 | 1000 | 800 |
| நண்டு | 400 | 400 | 500 | 400 |
| கணவாய் | 700 | 500 | 900 | 700 |
| பாரை | 500 | 500 | 700 | 600 |
| சுறா | 600 | 700 | 1000 | – |
| சீலா | 400 | 400 | 500 | 500 |
| விளை | 500 | 400 | 500 | 500 |
| முரல் | 300 | 350 | 400 | 400 |
| கும்பிளா | 300 | 400 | 400 | 300 |
| கிளாக்கன் | 800 | – | 600 | – |
| ஓரா | 300 | 300 | 500 | 400 |
| திரளி | 200 | 200 | 200 | 200 |
| நகரை | 200 | 200 | 400 | 250 |
| சூடை | 100 | 120 | 200 | 160 |
| ஒட்டி | 100 | 200 | 300 | 250 |
| திருக்கை | 250 | 200 | 500 | – |
| மதனம் | 150 | 150 | 300 | 300 |
| கொய் | 100 | 100 | 80 | 50 |
| பாலை | 150 | 200 | 500 | 200 |
| வாளை | 100 | 150 | 400 | 250 |



## கோவக்காய் பொரியல்

**தேவையான பொருள்கள்**

மிளகாய் தூள் - 1தேக்கரண்டி
மஞ்சள் தூள் - 1தேக்கரண்டி
எண்ணெய் - 4கரண்டி
கடுகு - 1தேக்கரண்டி
கறிவேப்பிலை -2 கொத்து
உப்பு -சிறிது

**செய்முறை**

கோவக்காயை எடுத்து சிறிதாக வெட்டி அதில் சிறிது உப்பு. மஞ்சள் மற்றும் மிளகாய்த் தூள் சேர்த்து நன்கு கலந்து 30 நிமிடங்கள் ஊற வைக்கவும். ஒரு சட்டியில் எண்ணெய் விட்டு சூடான பின் கடுகு. கறிவேப்பிலை சேர்த்து பொரிந்த பின் கோவக்காய் சேர்த்து நன்றாக வதக்கவும். அடுப்பில் சட்டியை வைத்து பொன் நிறமாக வதக்கினால் கோவக்காய் பொரியல் தயார்.

## சமைக்காமல் உண்ணும் உணவின் பயன்கள்



- சமைக்காமல் உண்பதால், உணவுப் பொருள்களின் உயிர்ச்சத்துகள் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு மருந்தாக மாறுகிறது.
- கழிவுகளின் தேக்கமே நோய். இயற்கையான உணவை உண்பதால், உடலில் உள்ள கழிவுகள் தேங்காமல் முற்றிலும் நீக்கப்படும். இதனால் நோய் வராமல் காத்துக்கொள்ளலாம்.
- உமிழ்நீரை, `உயிர் நீர்' என்பர். இயற்கை உணவை நன்கு மென்று உமிழ்நீரோடு சேர்த்துச் சாப்பிடுவதால் எளிதில் உணவு சமிபாடடையும்.
- உணவுக்கும் குணத்துக்கும் நெருங்கிய நேரடித் தொடர்பு உண்டு. இயற்கை உணவு நாளடைவில் எம்முள் சாத்வீக குணத்தை மேலோங்கச் செய்யும். மனம் அமைதி பெறும். செயல்களில் நிதானம் கைகூடும். நிதானம், பலவிதங்களில் எம்மைப் பண்படுத்தும்.
- எண்ணெயில்லாமல் சமைக்கப்படுவதால், இதயம் தொடர்பான நோய்கள் வரும் வாய்ப்புக் குறையும். இதய நோய் இருந்தால், இந்த இயற்கை உணவே மருந்தாகிக் காக்கும்.
- சமைத்து உண்ணும் உணவின் அளவைவிட, சமைக்காமல் உண்ணும் உணவின் அளவு மிகக் குறைவாக இருக்கும். இது உடல் நிறை அதிகரிக்காமல், சீராகப் பராமரிக்க உதவும்.
- சமைக்கும் நேர அளவு மிகவும் குறைவு.
- நாள்பட்ட நோய்க்கான நீரிழிவு, ஆஸ்துமா போன்ற நோய்களும் உயிர்கொல்லி நோய்களான புற்றுநோய் போன்ற நோய்களும் குணமாக இயற்கை உணவு துணைநிற்கும்.
- உடல் பருமன், மாதவிடாய்ப் பிரச்சினைகள், சிறுநீரகக் கோளாறு, சமிபாடுடின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு இயற்கை உணவின் மூலம் நிரந்தரத் தீர்வு காணலாம்.

# "உங்களை எப்படி அழைப்பது..."

(34ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் பெரிதாகச் சிரித்துக் கும்மாளமடித்துக்கொண்டு நாங்கள் முன்னாலே போவோம். எங்களுடன் தொடர்பு இல்லாதவன் போல பின்னாலே கணநாதன் வருவதைக் காணலாம்.

ஒருநாள் ரியூசன் முடித்துக்கொண்டு சைக்கிளில் வந்து கொண்டு இருந்தோம். பொதுவாக றோட்டில் வாகனங்கள் இல்லாவிட்டால் நாங்கள் றோட்டை மறைத்துக்கொண்டு வருவது வழக்கம். இப்போதும் அது மாறவில்லை. சேர்ந்து கதைத்துக்கொண்டு போவதற்கு அதை விட்டால் வேறு வழியில்லை.

றோட்டின் திருப்பத்தில் எதிரே வந்த கார் ஒன்றுக்கு வழிவிட்டு கொடுப்பதற்காக நாங்கள் சைக்கிள்களை ஓரம் காட்டி, அது முடியாமல் "கீறிச்"என்ற சத்தத்துடன் நின்ற காரோடு மோதி காயங்கள் இல்லை என்றாலும் இரண்டு சைக்கிள்கள் நாசம்.

பின்னாலே வந்த கணநாதனுக்கு ஒன்றுமில்லை. எங்களில் கனபேர். ராஜ்குமாரும் ஞானாவும் தோற்றத்திலும் பரவா யில்லை. அந்த தைரியம் காரணமாகக் கார்க்காரர் தான் ஏதோ பிழைவிட்டது போல அவரோடு சண்டைக்குப் போய் விட்டோம்.

"என்ன தம்பிமார் றோட்டை மறைத்துக்கொண்டு சைக்கிள்க ளில் வந்ததும் இல்லாமல் என்னோடை சண்டித்தனத்துக்கு வாறீங்களே" என்று அப்பாவித்தனமாகக் கார்க்காரன் கேட்க எங்களில் குற்றம் சாட்டப்படுவதைச் சீரணிக்க முடியாமல் "வீண்கதை கதைக்க வேண்டாம். இப்ப இரண்டு சைக்கிள்க ளும் திருத்தக் காசு வேணும்" என்று நாங்கள் வாதாட முனைய. இதுவரை நேரமும் மெளனமாக நின்ற கணநாதன் தனது சைக்கிளை ஓரமாகச் சாத்தி வைத்துவிட்டு வந்து.

"நீங்கள் காரை எடுத்துக்கொண்டு போங்கோ. உங்களில் ஒரு பிழையுமில்லை. என்று சொன்னான்.

"அதில்லைத் தம்பி..."என்று எதையோ கூற முற்பட்ட கார்க்காரரைப் பேச விடாது தடுத்து.

"நான் சொலுறதைக் கேளுங்கோ, உங்களில் ஒருபிழையும் இல்லை. நீங்கள் பேசாமல் போங்கோ" என்று சொல்லிக் கார்க் கதவைத் திறந்து அவரை வழியனுப்ப,

நன்றி கலந்த பார்வையுடன் கார்க்காரர் கணநாதனைப் பார்த்துப் பார்வையால் விடைபெற்றார்.

"டேய் இதென்ன பகிடியே விடுகிறாய். நாங்கள் இவ்வளவு பேர் நிற்கிறோம். நீ எங்களை மடையன் என்றே யோசிக்கிறாய்" என்று கேட்ட எங்களில் ஒருவரை தீர்க்கமான ஒரு பார்வையு டன் நோக்கினான் கணநாதன்.

அவன் பார்வையில் வெம்மை இருந்தது. உறுதியும் தெரிந்தது.

"பிழையைச் செய்து போட்டு அதை மறைக்கிறதோடை பாதிப்புக்கு உள்ளான கார்க்காரரையும் வெருட்டுறீங்கள் நீங்கள் செய்தது சரியோ எண்டு வடிவாய் யோசித்துப் பாருங்கோ" என்று சொன்ன அவனின் கேள்விக்குப் பதில் சொல்ல முடியவில்லை. "எண்டாலும் நீ எங்களோடை சேர்ந்து வந்துபோட்டு எங்களை அவனுக்கு முன்னாலே மானம் கெடுத்துப் போட்டாய்" என்று சொன்னதைக் கேட்ட கணநா தன்.

"இப்ப நான் சொன்னது உங்களுக்கு பிடிக்காமல் இருக்க லாம் ஆனால் எண்டைக்காவது ஒருநாள் உணருவீங்கள். பிழையைப் பிழையாகவும் சரியைச் சரியாகவும் மதிச்சு பழகவேணும்"என்றான்.

பிறகு கணநாதன் எங்களுடன் வரும்நாள்களில் கவனமாக வும் வராத நாள்களில் பழைய கூத்துக்களுடனும் தெருக்கில் பவனிவந்தோம்.

எக்ஸாம் நெருங்க நெருங்க படிப்புடன் ஐக்கியமாகிப் படித்து எக்ஸாமும் எடுத்தோம். ஆனால் கணநாதன் எடுக்கவில்லை.

என்ன காரணம் என்று தெரியவில்லை. எக்ஸாம் முடிந்த பின்னர் நாங்கள் வகுப்புகளுக்கு ஒழுங்காகப் போகவில்லை. என்றாலும் அனேகமாக ஒவ்வொரு நாளும் சந்திப்போம்.

மாலை வேளைகளில் பொழுது நன்றாகக் கழியும். கணநா தன் எப்போதாவது கண்ணில் தென்படுவான். கொஞ்சம் தாடி, கண்களில் ஒருவகைப் பிரகாசம் தெரியும்.

பிறகு கணநாதனை நாங்கள் காணவே இல்லை. "ராஜ்குமார் பிரான்சில் இருந்து கடிதம் போட்டானா? வரதனும் சிவகுமாரும் லண்டனில் இருந்து கடிதங்கள் போட்டான்களா? என்று கந்தோரில் தவராசா கேட்பதற்கு என்ன பதில் சொல்லு வது.

அவர்கள் கடிதங்கள் போட்டாலும் நாங்கள் பதில் போடக் கூடிய மனநிலையிலா... இப்போது இருக்கிறோம்.

எப்போது மகிழ்ச்சி, கூத்து, கொண்டாட்டம் என்று இருந்த அந்தக் கால மனநிலை எங்கே இப்போது சந்தோஷமாக ஒரு நிமிடம் இருக்க முடிகிறதா? கடைசி நிம்மதியாக ஒரு இடத்திற்கு போக முடியுமா? எங்கே சத்தம் கேட்கும் கேட்டால் என்ன செய்வது என்ற யோசினை தானே.

அந்தக் காலத்தில் கணநாதன்

"இப்பிடி நெடுகச் சந்தோஷமாக இருப்பீர்களா?" என்று கேட்டது இப்ப கேட்கிறது போல இருக்கு.

"என்ன மச்சான் இப்பத்தைய நிலைமையில் அவன்கள் கடிதம் போட்டாலும் எழுத மனம் வருமே கிட்டடியில் இருக்கிற ஞானாவுக்கே கடிதம் போடேலாமல் இருக்கு" என்று வேத னையோடு சொல்ல.

தவராசாவும் அதே வேதனையோடு என்னைப் பார்த்தான்.

கந்தோரால் வேலை முடித்து வீட்டை வந்து கோப்பி குடித்து விட்டுப் பத்திரிகையைப் புரட்டி வழக்கமான வேதனைகளான விசி யங்களை வாசித்துப் பொழுது போகாமல் நுட்பமாக வாசித்தால், தோற்றம் மறைவு என்ற குறிப்புடன் தாடியுடன் கூடிய கணநாதனின் படம், பிற்காலத்தில் அவனுக்கு நடந்ததை அறிய முடியவில்லையா?

"அன்பு நண்பனே.... உங்களையெல்லாம் எப்படி அழைப்பது"

நெஞ்சம் இரத்தக் கண்ணீர் வடிக்க ஆரம்பிக்கிறது.

*(நன்றி: மானிப்பாய் இந்துக்கல்லூரிப் பவளவிழா மலர் - 1985)*

## சொற்சிலம்பம் போட்டி இல: 499

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | ■ | 5 | 6 |
| 7 | | ■ | 8 | | | | |
| 9 | | 10 | | | ■ | | ■ |
| ■ | 11 | | | ■ | 12 | | 13 |
| 14 | | | ■ | 15 | | ■ | |
| | ■ | 16 | 17 | | ■ | 18 | |
| 19 | 20 | | | ■ | 21 | | |
| 22 | | | ■ | 23 | | | |

அனுப்புபவர் பெயர்:..........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. அம்பிகாவதி மனம் கவர்ந்தவள்
5. திண்மம், திரவத்துக்கு அடுத்த நிலை
7. வேகம்
8. எரிச்சல் படுதல்
9. மருத்துவம்
11. வழங்கும்
12. அருகி வரும் ஓர் சமையலறை உபகரணம்
14. ஓர் இனிப்புப் பண்டம்
15. ஆற்றும் காரியம்
16. பகிரங்கப் போட்டிக்கு அழைத்தல்
18. ஒளிவு மறைவாக திட்டமிடுவது
19. பதற்றமடை
21. அசைந்து செல்ல
22. திடீரென
23. சிலப்பதிகார நாயகன்

### மேலிருந்து கீழ்

1. வயது
2. உயர்வாக கனம் பண்ணுதல்
3. ஓர் கலை
4. நாள்
5. (அசையா) சொத்து
6. முற்கால ஆயுதமொன்று
10. மாணிக்கவாசக நாயனார் அருளிச் செய்தது
12. இது ஒருபோதும் ஓய்வதில்லை
13. சினேகிதன்
14. தலைவர்
15. ஓர் முற்கால ஆயுதம்
17. இது தண்ணீர் அள்ளப் பயன்படுத்தப்படும்
18. எல்லா
20. மறி
21. புது

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர் கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும் பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வரு வதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக் கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 497 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)உசாவல் (4)உதவி (7)பத்தி (8)உரைகல் (9)வாதி (10)நடு (11)வலை (12)சரிதல் (14)இல்(15)கலவன் (18)கன (19)தறுதலை (21)குடும்பம் (23)கவி (24)கைமை (25) விடுதி

**மேலிருந்து கீழ்**

(1)உபவாசம் (2)சாத்திரி (3)வதி (4)உரை (5)தகவல் (6)வில்லை (8)உடு(10)நல்ல(13)தகணம் (14)இன்று (16)வதம் (17)தலைவிதி (18)கடுமை (20)தகடு (21)குகை (22)பரி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனை களும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டி யில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசு ரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 497இற் கான சரியான விடைகளை எழுதி அனுப் பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**

திருமதி ந.தர்மிக்கா,
இல.04, கல்மடுநகர்,
இராமநாதபுரம், கிளிநொச்சி

**2 ஆம் பரிசு**

சு.பிரபோதரன்,
'கந்தகோட்டம்', மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை.

**3 ஆம் பரிசு**

சு.சுகன்யா,
'மித்திரை', குப்பிழான் தெற்கு,
ஏழாலை.

**4 ஆம் பரிசு**

வி.சுகந்தி,
முதலாம் வட்டாரம்,
கல்யாணவேலவர் கோவிலடி,
முள்ளியவளை.

**5 ஆம் பரிசு**

திருமதி கலாராணி இரவீந்திரன்
இந்துக் கல்லூரி வீதி,
மானிப்பாய்.

**பாராட்டுப் பெறுவோர்**

சி.அன்னலிங்கம்,
நெல்லியான் வீதி,
கல்விளான், சுழிபுரம்.

இ.ஜெயந்தினி,
சோறன்பற்று, பளை.

அமரசிங்கம் சத்தியரூபன்,
'குறும்பன்' ஏழாலை மேற்கு,
ஏழாலை.

**சொற்சிலம்பம் போட்டி இல.499**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (06.12.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.499 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 10.12.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 497 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

படத்தின் நடுவே வருகின்ற பாடல் கதையின் தீவிரத்துக்கேற்ப அமைந்திருப்பது சிறப்பு. உரையாடல்கள் அங்கங்கே ஒட்டாமல் தனித்துத் தெரிவதும் சில இடங்களில் (கராத்தே பயிற்சி) வலிந்து திணிக்கபட்ட வேற்றுச் சினிமாப் பாணியும் சலிப்படைய வைக்கிறது.

நாயகத்தன்மையற்றகதையின்ஊடாகப்பயணம்செய்துவாழ்க்கையைஆவணமாகப்பதிவு செய்த தமிழ்ப்படங்கள் எத்தனை? சுதந்திர காலத்துக்குப் பிறகு நம் புனைவியலில் நிகழ்ந்த மாற்றங்களை, மனித சமூகத்தின் மனச்சூழல்களை எத்தனை படங்கள் நேர்மையாகப் பதிவு செய்தன? தனது படைப்புக்கு உண்மையான சமரசங்களற்ற பங்களிப்பைச்செய்ததாக எத்தனைஇயக்குநர்கள்தங்கள்மனம்தொட்டுச்சொல்லமுடியும்? ஒருகலைப்படைப்புதான்வாழும் காலத்தின் பிரதிபலிப்பு என்றால், நமது திரைப்படங்களைப் பார்க்கிற எதிர்காலச் சந்ததியர் நாம் எவ்விதமான கலாச்சார சூழலில் வாழ்ந்ததாக அர்த்தம் கொள்வார்கள்? – வெற்றிடத்திலிருந்து எழும் குரல் செழியன் கால்சுவடு 2003–

ஈழத்து சினிமா

சிவ. பரமேஸ்வரி

# எல்லாளன்

## நெருப்பிலெழுந்த கலைப்படைப்பு

சினிமா

நாயகத்துதிபாடாத, நமதுவாழ்நிலைக்காலச் சூழலை அடையாளம்காட்டக்கூடியசினிமாக்களை நாம் ஒட்டுமொத்த உலக, தமிழ் சினிமாக்களிலிருந்தேதேடவேண்டியிருக்கிறது. உலகத்தரம் வாய்ந்த பல சினி மாக்கள் மிக யதார்த்தமாகத் தம்முடைய தலைமுறைப்பிரதிநிதியாகவிளங்கியிருக்கின்றன. சினிமா என்பதைவெறும்பொழுதுபோக்குக்கு மாத்திரம் அடையாளப்படுத்திவிடாது காலக்கடத்தலின், ஒரு யுக மாற்றத்தின் பிரதிபலிப்பாக அடையாளப்படுத்துவதற்குவெகுசிலசினிமக்களாலும்வெகு சிலசினிமாக்காரர்களினாலும்மாத்திரமே முடிந்திருக்கிறது.

அந்த வரிசையில் ஈழத் தமிழ் சினிமாவானதுவளர்நிலைக்கேற்ப இதைஎப்படிச் சாத்தியப்படுத்தியிருக்கிறது என்பது கவனிக்கவேண்டிய ஒன்று. சொல்லிவிடக்கூடியளவில்இங்கேபெரும்வளர்ச்சியையோ சினிமாக்கைளையோ நாம் கொண்டிருக்கவில்லையாயினும் இருப்பவற்றை எடைபோட்டுப் பார்த்தால் சில காலப்பிரதிபலிப்புச் சினிமாக்களை நாம் அரைமனத்தோடாவது சொல்லிவிட முடியும்.

ஒவ்வொருகாலகட்டத்திலும்சில, பலஇடைவெளிகளோடு பயணித்துக்கொண்டுவரும் ஈழத்தமிழ் சினிமா போராதிக்கம் கொண்ட காலப்பகுதிகளில் போரின் தீவிரத்தையும் அதன் தேவைகளையும், நியாயப்பாடுகளையும், வெற்றிகளையும் கொண்டுசேர்க்கும்ஒருகடத்தியாகப்பெருமளவில் உருவாகியது. காலத்தில் தேவையின் பொருட்டு உருவாக்கப்பட்ட பல சினிமாக்களே இன்று கடந்த தலைமுறைகளின்அடையாளத்தைப்பிரதிபலிக்கின்றன.

**வரலாற்றின் ஒரு பகுதி திரையில்**

தமிழீழவிடுதலைப்புலிகளின்சினிமாசார் பார்வையும் அதன் மீதான கவனமும் விரிந்தும் வலுப்பெற்றும் வந்த ஒரு காலப் பகுதியில் உருவான திரைப்படம் 'எல்லாளன்'. போரின் இறுதிக்காலத்தை அண்மித்து நிகழ்த்தப்பட்ட, உலகை வியப்பிலாழ்த்திய புலிகளின் ஒரு படை நடவடிக்கையை மையமாக வைத்து உருவாக்கப்பட்ட இந்தச் சினிமா காலங்கடந்தும் ஒரு இனத்தின் பல கூறுகளையும் பேசிக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமுறத்தேவையில்லை.

22.10.2007அன்று சிறிலங்காவிலுள்ள அனுராதபுர வான்படைத்தளத்தைத் தமிழீழவிடுதலைப்புலிகளின்கரும்புலிகளும், வான்புலிகளும் தகர்த்தழித்த வரலாற்றைத்தழுவியஉண்மைக்காவியமாக இது உருவாக்கப்பட்டிருக்கிறது. குறித்த காலங்களில் தமிழர் பிரதேசங்களில் நிகழ்த்தப்பட்ட கோரமான வான்படைத்தாக்குதல்களைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக விடுதலைப்புலிகளால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கையின்ஒட்டுமொத்தநகர்வுகளையும்இந்தப் படம்பேசியிருக்கிறது.

**கதை ஒரு பார்வை**

முகில்கூட்டங்களோடு விரிந்துகிடக்கும் வான்வெளியில் பட்டம்ஏற்றிக்கொண்டிருக்கும் சிறுவனின் வான்மீதான பிரமிப்பையும் பறத்தலின் மீதான அவாவையும் ஒரு நொடியில் சிதைத்துவிடும் குண்டுத் தாக்குதலொன்றுடன் படம் ஆரம்பமாகிறது. ஒரு மிகப்பெரிய தாக்குதலொன்றை நிகழ்த்துவதற்காகப்புலிகளின்ஒருபடைப் பரிவிலிருந்து 21 பேர் கொண்ட குழு தெரிவுசெய்யப்படுகிறது. அவர்களுக்கானசகல பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

பகைவனின் கோட்டைக்குள் சென்று, அவனை நேருக்குநேரே சந்தித்து, தாங்கள் சாகும்வரையிலும் அவர்கள்மீது போர்தொடுத்து வெற்றியைப் பெற்றுக் கொள்ளும் ஒரு திட்டத்துக்காக அத்தனை பயிற்சிகளையும் தெரிவுசெய்யப்பட்ட பேராளிகள் பெற்றுக்கொள்கிறார்கள்.

அவர்களுக்கானமுழுப்பயிற்சிகளும்முடிவுற்ற பின் அனைவரும் அவரவர் வீடுகளுக்கு விடுமுறையில் அனுப்பபடுகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரதும்வீடுகளில்அவர்களுக்குப்பின்னால் கனதியான கதைகள் இருக்கின்றன. செஞ்சோலையில் கண்ணெதிரே சிதைக்கப்பட்ட பள்ளிப் பிஞ்சுகளை மடிகனத்துக்கைகளில்ஏந்தும் இளங்கோவைக்கடைசிக் கணம் கணம்வரை அந்த ரணம் துரத்திக்கொண்டே இருக்கிறது.



தனக்காகக்காத்திருக்கும், ஏங்கும்உறவுக்காரப் பெண்ணை நெருங்கவும் முடியாது விலகவும் முடியாது தவிக்கும் வீமன், தங்கையே உயிராய் கொண்ட பஞ்சீலன் என ஒவ்வொருவருக்குள்ளும் ஒரு இறுக்கங் கட்டிய மென்மையான கதைகள் நீண்டு கிடக்கின்றன.

ஒருதவம்போலதங்கள்நாள்களுக்காய்க் காத்துக் கிடக்கிறார்கள். குறித்த நாள் நெருங்கியதும் தலைவனிடம் விடைபெற்றுத்தாக்குதல்களத்தை நெருங்கி அனுராதபுரம் விமானத்தளத்துக்குள் புகுந்து உயிரைப் பொருட்படுத்தாது சமராடி வெற்றியைக் கண்டபின் நீறாய்ப் போய்விடும் அந்த இருபத்தியொரு தியாகச்சுடர்களையும் அவர்களின் கதைகளையும் அழகாக வலியோடு பேசுகிறது 'எல்லாளன் திரைப்படம்.

**பாத்திரங்களும் காட்சியமைப்பும்**

அணிலுக்குத் தொப்பியைக் கொடுத்துவிட்டு அதற்காக மேலதிகாரியிடம்திட்டு வாங்குவது, நாய்க்குப் படுக்கையைக் கொடுத்துவிட்டுத் தான் தரையில் படுப்பது, மரங்களைமுத்தமிடுவதுஎனப்போராளிகளின் ஈரமான பக்கங்கள்கூட மிக அழகாகப் படமாக்கப்பட்டிருக்கின்றன.

ஆரம்பத்தில்காட்டப்படும்பாடசாலைக்காட்சிகள், வைத்தியசாலைக்காட்சிகள் என்பன ஒரு ஆவணப்படத்தைப் பார்ப்பது போன்ற உணர்வைத் தந்தாலும் அடுத்து வரும்காட்சிகள்படத்தின்போக்கைமாற்றி விடுகின்றன.

படத்தில்வரும் கதாபாத்திரங்கள், பயிற்சிகள், போர்முனைசார் காட்சிகளில் மிக யதார்த்தமானநடிப்புவெளிப்பட்டிருக்கின்றது. மாறாக அவைதவிர்ந்த மற்றைய காட்சிகளில்நடிப்பைத்தவறவிட்டிருக்கின்றனர். ஒளிப்பதிவும் ஒலிப்பதிவும் பார்வையாளனைக் களமுனைக்குக் கொண்டு செல்வதில் பெரும் பங்காற்றியிருக்கின்றன. படத்தொகுப்பு மிக நேர்த்தியாக அமைந்திருந்தாலும் சண்டைக்காட்சிகளில் இன்னும் கூடுதலான அவதானம் செலுத்தியிருக்கலாம்எனஎண்ணத்தோன்றுகிறது.

படத்தின் நடுவே வருகின்ற பாடல் கதையின் தீவிரத்துக்கேற்ப அமைந்திருப்பது சிறப்பு. உரையாடல்கள் அங்கங்கே ஒட்டாமல் தனித்துத் தெரிவதும் சில இடங்களில் (கராத்தே பயிற்சி) வலிந்து திணிக்கபட்ட வேற்றுச் சினிமாப் பாணியும் சலிப்படைய வைக்கிறது.

**அவர்களால் மாத்திரம் முடிந்த காரியம்**

மேலேசெழியன்குறிப்பிட்டதுபோன்றுஒரு கலைப்படைப்பு தான் வாழும் காலத்தின் பிரதிபலிப்பு என்றால், நமது திரைப்படங்களைப்பார்க்கிறஎதிர்காலச்சந்ததியர்நாம் எவ்விதமான சூழலை எல்லாம் கடந்து வந்திருக்கிறோம், எப்படியெல்லாம் வாழ்ந்ததாக அர்த்தம் கொள்வார்கள்? எனும் கேள்விக்கு எமது(ஈழத்தமிழ்) எதிர்காலச் சந்ததியினர் இந்தப்படத்திலிருந்துசரியாக அர்த்தம் புரிந்து கொள்வார்கள் என நம்ப முடிகிறது. ஒருதிரைப்படத்தைப்போர்க்கால நெருக்கடிக்குள் நின்று நிகழ்த்தி அதைப் பெரும் படைப்பாக வெளிக்கொண்டு வந்தமை என்பது வார்த்தையில் கூறிவிட முடியாததொன்று. அதைவிடுதலைப்புலிகளின்திரைப்படஉருவாக்கல்பிரிவுசாத்தியப்படுத்தியிருப்பது சாதனையே.

இந்தத் திரைப்படத்துக்காகக் கொடுத்த விலைகள் மதிப்பிடமுடியாதவை. மாவீரம் என்றஒன்றுபோர்க்களத்தையும்தாண்டிச் சாதித்திருக்கிறது. பல உயிர்களை விலையாக்கி உருவாக்கப்பட்ட இந்தத் திரைப்படம் இனி வருகின்றஎம்எதிர்காலச் சந்தயினரிடையே தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தைச்சரியான முறையில், மிகச் சரியான முறையில் அர்த்தம் கொள்ளச் செய்யும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.





# தமிழ் அரசியல்வாதிகளின் கொடித் துடக்கு!!!


கட்டுரை

ஸ்டோ ஸ்வாமி

"றோயல் கல்லூரியின் சிரேஷ்ட போர்ப் பயிற்சி பள்ளி மாணவன் என்ற முறையில் 1959ம் ஆண்டு சுதந்திரதின விழாவில் கலந்து கொண்டதன் பின்னர் எந்த ஒரு சுதந்திர விழாவிலும் நான் கலந்து கொள்ளவில்லை. நீதியரசர்ாக இருந்தபோது அழைப்பிதழ் கிடைத்தும் நான் கலந்துகொள்ளவில்லை. காரணம் ஆங்கிலேயரிடமிருந்து நாட்டுக்குச் சுதந்திரம் கிடைத்தாலும் சிங்கள ஆதிக்கத்திலிருந்து எமக்கு இதுவரைச் சுதந்திரம் கிடைக்கவில்லை. எனினும் இலங்கை மக்கள் அனைவரையும் மதிக்கும் விதத்தில் தேசியக்கொடியை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தி வருகின்றேன். தேசிய கீதம் இசைக்கும் போது எழுந்து நின்று மரியாதை செலுத்தி வருகின்றேன்'. இவ்வாறு அறிவித்திருக்கிறார் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன்.

வடமாகாணக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன். அண்மையில் நடந்த நிகழ்வில் இலங்கைத் தேசியக் கொடியை ஏற்றி வைப்பதைத் தவிர்த்துக் கொண்ட விவகாரம் விமர்சனங்களை எதிர்கொண்டிருந்தது. அது தொடர்பில் கேள்வியெழுப்பிய போதே இப்படித் தெரிவித்திருக்கிறார் முதலமைச்சர். அறுபது ஆண்டு காலமாகத் தமிழ்த் தலைவர்கள் பின்பற்றி வரும் வழக்கத்தையே தாமும் கடைப்பிடித்ததாகத் தெரிவித்திருக்கிறார் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன். அதாவது தேசியக் கொடியை ஏற்றுவதிலிருந்து விலகியிருந்தேனே தவிர கொடிக்கு மதிப்பளிப்பதிலிருந்தோ, மரியாதை செலுத்துவதிலிருந்தோ தாம் விலகியிருக்கவில்லை என்கிறார் அவர்.


> தேசியக் கொடியை ஏற்றுவதிலிருந்து விலகியிருந்தேனே தவிர கொடிக்கு மதிப்பளிப்பதிலிருந்தோ மரியாதை செலுத்துவதிலிருந்தோ தாம் விலகியிருக்கவில்லை என்கிறார் அவர்.



நடைமுறையிலுள்ள தேசியக்கொடி மீது தமிழர்களுக்கு இருக்கக் கூடிய இடறல் மற்றும் நெருடல் தொடர்பிலான அண்மைய சம்பவமாக சர்வேஸ்வரனின் விவகாரம் நோக்கப்பட்டிருக்கிறது.

### இனி யாவரும் கவனிக்கப்படுவர்

சர்வேஸ்வரன் ஆரம்பித்து வைத்திருக்கின்ற இந்தக் கருமத்தால் தேசியக் கொடி ஏற்ற வேண்டிய சந்தர்ப்பங்களில் வடக்கு அரசியல்வாதிகள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதைக் கண்ணுக்குள் எண்ணெய் விட்டபடி பார்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. முன்னர், 2012 ஆம் ஆண்டில் யாழில் தொழிலாளர் தின மேடையில், சம்பந்தன் ஏந்திய தேசியக் கொடி சர்ச்சையை உண்டுபண்ணியிருந்தது. அதற்குப் பின்னர் அதற்கு மன்னிப்பும் கோரப்பட்டிருந்தது.



### ஆதரவை விஞ்சும் எதிர்ப்புக்கள்!

தேசியக்கொடியின் குறியீட்டு உள்ளடக்கங்கள் தொடர்பில் தமிழர்களுக்கு இருக்கக்கூடிய திருப்தியின்மை தொடர்பில் கொழும்புப் பல்கலைக்கழக முன்னாள் அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர் நடந்துகொண்ட விதத்துக்கு எதிர்ப்புக் குரல்கள் எழுந்த அளவுக்கு ஆதரவுக் குரல்கள் பலமாக ஒலிக்கவில்லை. எனினும் அறுபது ஆண்டுகாலமாகத் தமிழ் அரசியல்வாதிகளால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் சடங்காசாரம் இது என்று வாதிடுகிறார் அவர். இது மாத்திரமல்லாமல், குறித்த விவகாரம் நாடாளுமன்றில் விமர்சனத்துக்குள்ளானபோது தனக்காகப் போதுமான அளவில் யாரும் வாதிடவில்லை என்றும் அவர் கூறுகின்றார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ம.அ.சுமந்திரன், சர்வேஸ்வரனின் நடவடிக்கையைப் போலித்தேசியம் என்று வர்ணித்திருக்கிறார். பிரபா கணேசன் மற்றும் இராதாகிருஷ்ணன் போன்றவர்களும் எதிர்க்கருத்துடனேயே சர்வேஸ்வரனின் நடவடிக்கையை நோக்கியிருக்கின்றனர். தேசிய சுதந்திர தின நிகழ்வைப் புறக்கணிப்பது மற்றும் தேசியக்கொடியை ஏற்றுவதிலிருந்து நழுவிக் கொள்வது என்பவையெல்லாம் நடைமுறையிலுள்ள தேசிய விடயங்கள் தொடர்பில் தமக்குள்ள உடன்பாடின்மையை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்களாகக் காட்டப்படுகின்றன. ஆனால் முதலமைச்சர் கொடி ஏற்றுவது சரி என்கிறார். கல்வி அமைச்சரோ தேசிக்கொடி ஏற்றுவதைத் தவிர்த்திருக்கிறார். இன்னொரு நாடாளுமன்ற உறுப்பினரோ அதைத் தரக்குறைவாக விமர்சித்திருக்கிறார்.

### தேசியக்கொடியில் மாற்றமில்லை

1978ஆம் ஆண்டின் அரசமைப்பிலும் சரி புதிதாக நடைமுறைப்படுத்த எத்தனிக்கப்படும் அரசமைப்புக்கான கட்டிய அறிக்கையிலும் சரி தேசியக் கொடி விடயம் சார்ந்து எந்த மாற்றமும் குறிப் பிடப்படவில்லை. ஆனால் சிறுபான்மையினரைக் குறித்து நிற்கும் அடையாளங்கள் நீக்கப்பட்ட கொடி சிலநிகழ்வு களில் பயன்படுத்தப்பட்டமை அறிக்கையிடப்பட்டிருக்கிறது.

### வாரியபொல சுமங்கல தேரர் போன்று சர்வேஸ்வரன் இயங்க வில்லை.

இலங்கையின் சுதந்திர வரலாற்றினை மனதில் பதிந்து வைத்திருப்போர் வாரியபொல சுமங்கல தேரரை இலகுவில் மறக்கமுடியாது. அவருடைய 200ஆவது நினைவு தின வைபவம் கூட இந்த ஆண்டு அரசதலைவரின் பங்கேற்போடு நடைபெற்றிருந்தது. குறித்த தேரரின் உருவச்சிலை எப்படி அமைந்திருக்கிறது என்றால், பிரித்தானியக் கொடியைக் காலடியில் மிதித்தபடி நிற்கும் வகையிலேயே அமைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தோற்றப் பின்னணிக்குக் காரணம், 1815ஆம் ஆண்டில் கண்டி ஒப்பந்தம் கைச்சாத்தான அன்று நடந்த ஒரு சம்பவமாகும். 1815ஆம் ஆண்டு மார்ச் 2ஆம் திகதியன்று தலதா மாளிகையில் கண்டி ஒப்பந்தம் கைச்சாத்திடத்தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் குறித்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக யூனியன் ஜாக் எனப்படும் பிரித்தானியக் கொடி ஏற்றிவைக்கப்பட்டிருப்பதைக் கண்டு கோபமடைந்தார் இந்தச் சுமங்கல தேரர் என்னும் பிக்கு.

விரைந்து செயற்பட்ட அவர், பிரித்தானியக் கொடியைக் கீழே இறக்கி விட்டு, அந்தக்கால ஆட்சியாளர்களால் பயன்படுத்தப்பட்டு வந்த சிங்கக் கொடியை உடனடியாக ஏற்றிவைத்தார். குறித்த ஒப்பந்தம் கைச்சாத்தாகும் வரை நாட்டினுடைய ஆட்சி இந்த நாட்டு மக்களுக்குரியதென்றும் அதுவரை சிங்கக்கொடியே பறக்கவேண்டும் என்று அவர் வலியுறுத்தியிருந்தார்.

தேசியக்கொடியை அவமதித்தாகக் குற்றஞ்சாட்டப்படும் சர்வேஸ்வரன், சுமங்கல தேரர் நிகழ்த்தியது போன்ற ஒரு காரியத்தைப் பண்ணியிருக்கவில்லை. இந்துக்கள் தீட்டு, துடக்கு விவகாரங்களில் நடந்துகொள்வதைப் போன்ற ஒரு தவிர்ப்புப் பொறிமுறையையே அவர் அங்கு கையாண்டிருந்தார். பின்னர் தேசியக்கொடிக்கும் தேசியகீதத்துக்கும் அவர் அங்கே மதிப்பளித்திருக்கிறார்.

### ஒரு கை ஓசை பயன் தராது

நடைமுறையிலுள்ள தேசியக்கொடியில் நிலவக் கூடிய திருப்தியின்மை தொடர்பில் இப்பொழுதே தமிழ்த்தரப்புக்கள் நியாயமான ஒரு பொதுநிலைப்பாட்டுக்கு வருவது நல்லது. பின்னரே அந்த நிலைப்பாடு தொடர்பான வெளிப்படுத்தல்கள், அந்தந்த விடயம் தொடர்பானவர்களின் காதுக்கும் மனதுக்கும் சென்றடைய வேண்டிய வழிவகைகள் பற்றி ஆராய முடியும். அதை விடுத்து இத்தகைய சர்வேஸ்வரன் நிகழ்த்தியதைப் போன்ற ஒருகை ஓசைகள் எவ்வித பலனையும் தரப்போவதில்லை.

# மாவீரர் அஞ்சலி





> இந்த மாவீரர் அஞ்சலி நிகழ்வுகளை நேரடியாக தடைசெய்தாலோ. இடையூறு விளைவித்தாலோ தமக்கு மேலும் நெருக்கடிகள் அதிகரித்துக் கொள்ளும் என்பதை மனங்கொண்டு தனது இனவன்மத்தைச் சற்றே அடக்கி வைக்க முயற்சிக்கிறது அரசு. எனவே மாவீரர் அஞ்சலி நிகழ்வுகளுக்கு இந்த வருடம் நேரடியான தடைகள் எதுவும் கட்டவிழ்த்துவிடப்படாது என்பதை ஓரளவுக்கு நம்பலாம்.

கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

மாவீரர் நாள். தமிழ் மக்களின் வாழ்வில் விடுதலை உணர்வைக் கொழுந்து விட்டெரியச் செய்யும் அற்புதமான நாள். கொடிய போர்க்களங்களில் பற்றியெரியும் விடுதலை உணர்வுடன் களமாடித் தங்கள் உயிரைக் கொடுத்து வெற்றிகளை எமக்குக் கையளித்த மாவீரர்களின் வீரம். தியாகம். அர்ப்பணம் என்பன பெரும் வீச்சில் எழுந்து எம்மை ஆட்கொள்ளும் நாள். மாவீரர் நாளில் உலகமே எதிர்பார்த்துக் காத்திருக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரனின் உரை நிறைவுபெற்றபின்பு மௌன அஞ்சலி நிகழ்த்தப்படும். அவை அற்புதமான நிமிடங்கள். அந்த நிமிடங்களில் தமிழர் தாயகத்தின் அசைவியக்கம் உறைந்து விடும். நடந்து கொண்டிருக்கும் மனிதர்கள் முதல் ஓடிக்கொண்டிருக்கும். வாகனங்கள் வரை இயக்கத்தை நிறுத்த எங்கும் மாவீரர் நினைவுகள் மேலேழுந்து அஞ்சலியாக மாறும். எங்கும் ஒரு இணையற்ற புனிதம் பொங்கி நிற்கும். அதையடுத்துச் சகல ஆலயங்களிலும் மணியோசை ஒலிக்கும். மாவீரர் அஞ்சலியைக் கலந்து எங்கும் பரவவிட்டு மறையும் அந்த மணியோசை. மாவீரர் துயிலும் இல்லங்களில் சுடரேற்றி மலர் தூவி பெற்றார். உறவினர்கள் கண்ணீருடன் அஞ்சலி செய்வர். வெண்ணிறக் கல்லறைகளின் முன் ஏற்றப்பட்ட சுடர்கள் துயிலும் இல்லமெங்கும் ஒளியைப் பரப்ப மாவீரர் துயிலும் இல்லப் பாடல் மக்களின் உணர்வலைகளாகக் காற்றை நிறைக்கும். 1989ஆம் ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டு வரை.நவம்பர் 27ஆம் திகதியன்று இப்படித்தான் உணர் வெழுச்சியுடன் மாவீரர் நாள் கடைப்பிடிக்கப்பட்டது.

**புலிகள் இல்லாதுபோனாலும் மக்கள் இருக்கிறார்கள்**

2009ஆம் ஆண்டு மே 18ஆம் திகதி விடுதலைப் போராட்டம் தணிந்துபோனதைத் தொடர்ந்து மாவீரர் கல்லறைகள் உடைத்துச் சிதைக்கப்பட்டன. அவர்களின் எலும்புகள் கூடத்தோண்டி எடுக்கப்பட்டு எரியூட்டப்பட்டன. மாவீரர் வாரம் தொடங்கும்போதே அரச படைகளின் கெடுபிடிகள் ஆரம்பித்து விடும். படையினரின் ரோந்து நடவடிக்கைகள் விசாரணைகள் என மாவீரர் அஞ்சலியைத் தடுக்க வெவ்வேறு நடவடிக்கைகள். ஆனால் தமிழ் மக்களின் உணர்வுகளை எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. பல்கலைக்கழக மாணவ. மாணவியர் தடைகளை மீறிச் சுடரேற்றி அஞ்சலித்தனர். அதன்காரணமாகச் சில மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். படையினரின் கண்களில் மண்ணைத்தூவி விட்டுப்பல பொது இடங்களிலும் சுடர்கள் ஏற்றப்பட்டன. தமிழர் தாயகத்தின் ஒவ்வொரு வீடுகளிலும் சுடரெற்றப்பட்டு அஞ்சலிகள் இடம்பெற்றன. அரசுகளின் எல்லாவிதத் தடை நடவடிக்கைகளையும் மீறி மாவீரர் நாள் தனக்கான புனிதத்துடன் ஒளிவீசிப் பிரகாசிக்கின்றது. புலனாய்வுப் பிரிவினரின் கழுகுக்கண்களையும். எந்தக் கணமும் தோட்டாக்களைக் கக்கக் காத்திருக்கும் படையினரின் துப்பாக்கிகளையும் மீறி எமது மக்கள் மாவீரர்களை அஞ்சலித்துச் சுடரேற்றி, மலர் தூவி வருகின்றனர். இந்த வருடமும் வழமைபோலவே வரும் தடைகளை மீறி அஞ்சலி நிகழ்வுகளை மேற்கொள்வதென்ற முடிவுடன் அதற்கான தயாரிப்புகளில் மக்கள் இறங்கி விட்டனர்.

**தடைகள் குறைந்ததன் பின்னணி**

காடுமண்டியும் பற்றைகள் சூழ்ந்தும் காணப்பட்ட மாவீரர் துயிலும் இல்லங்கள் துப்பரவு செய்யப்பட்டன. மாவீரர் வாரத்திலேயே ஆங்காங்கே அஞ்சலி நிகழ்ச்சிகள் ஆரம்பமாகிவிட்டன சுடர்கள் ஏற்றப்பட்டன. ஆனால் தடைகள் போடப்படவில்லை. நெருக்கடிகள் கொடுக்கப்படவில்லை. நம்ப முடியாத சங்கதிதான் ஆனால். இதுவே உண்மை.

அத்துடன் சோழியன் குடுமி சும்மா ஆடுவதில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். ஆட்சியாளர்களின் செயற்பாடுகள்எவையும்உள்நோக்கமின்றிமுன்னெடுக்கப்படுவதில்லை. இது காலம் காலமாகத் தமிழ் மக்கள் பெற்றுவந்த அனுபவம். இலங்கையில் இடம் பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள், மனித உரிமைமீறல்கள் தொடர்பானவற்றுக்கான தீர்மானத்துக்கு இலங்கை அரசும் அனுசரனை வழங்கியிருந்தது. குறிப்பிட்ட காலப்பகுதியில் அது நிறைவேற்றப்படாத நிலையில் மேலும் இரண்டு வருட அவகாசம் வழங்கப்பட்டது. ஒரு வருடம் முடிந்து விட்ட நிலையிலும் இலங்கையால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. எனவே இந்த வருடம் இடம்பெற்ற ஐக்கிய நாடுகள் மனித ஊரிமைகள் பேரவையில் பல நாடுகளினதும், அரச சார்பற்ற நிறுவனங்களினதும் கண்டனங்களுக்கு ஆளாக வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன் ஒரு பகுதியாகவே இந்த மாவீரர் அஞ்சலி நிகழ்வுகளை நேரடியாக தடைசெய்தாலோ. இடையூறு விளைவித்தாலோ தமக்கு மேலும் நெருக்கடிகள் அதிகரித்துக் கொள்ளும் என்பதை மனங்கொண்டு தனது இனவன்மத்தைச் சற்றே அடக்கி வைக்க முயற்சிக்கிறது அரசு. எனவே மாவீரர் அஞ்சலி நிகழ்வுகளுக்கு இந்த வருடம் நேரடியான தடைகள் எதுவும் கட்டவிழ்த்துவிடப்படாது என்பதை ஓரளவுக்கு நம்பலாம்.

**ரணிலின் எச்சரிக்கை தேவை**

முன்னாள் அரசதலைவரும் தலமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் மாமனருமாகிய ஜே.ஆர்.ஜெயவர்த்தன தான் குத்துச்சண்டைகளின் போது எதிரியின் வயிற்றில் குத்தப் போவதாகப் போக்குக் காட்டி விட்டு முகத்தில் குத்தி விடுவதாகப் பெருமைப்பட்டுக்கொள்வார். அவரின் மருமகன் ரணில் விக்கிரமசிங்கவோ அவரை விடப் பலபடிகள் முன்னே போய் அன்புடன் ஆரத்தழுவுவதாகப் போக்குக் காட்டி விட்டு முதுகில் குத்தி விடுவார். அதுவும் கத்தியால்.

விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சை ஒருபுறம் நடத்திக் கொண்டு மறுபுறம் அந்த அமைப்பிலிருந்து கருணாவைப் பிரித்தெடுத்தபோதே அவரின் முதுகில் குத்தும் ஆற்றலைத் தமிழ் மக்கள் புரிந்து கொண்டு விட்டனர். தற்சமயம் கூட அவர் சம்பந்தன் ஐயாவைப் புதிய அரசமைப்பு என்ற இலவம் காயைக் காட்டி அது பழுத்த பின்பு வயிறு நிறைய உண்டு மகிழலாம் என்று கூறி விடுகிறார். இப்படியாகக் கட்டியணைப்பது போல பாவனை காட்டி முதுகில் குத்தும் ரணில் விக்கிரமசிங்க. இந்த முறை மாவீரர் அஞ்சலி நிகழ்வுகளுக்குத் தடைகளை மேற்கொள்ளாமல் விடுவது தமிழ் மக்களை மேலும் எச்சரிக்கையுடையவர்களாக வைக்கச் செய்துள்ளது. அதற்கான சில அறிகுறிகளும் தென்பட ஆரம்பித்துள்ளன. கடந்த வருடத்தில் யாழ் குடாநாட்டில் வாள்வெட்டுக் குழுக்களின் ஆதிக்கம் மேலோங்கியிருந்தது. பொலிஸார் சில கண்டுபிடிப்புக் கைகளைக் கண்டறிந்தபோது மக்கள் பெரும் அச்சத்துடனேயே நடமாட வேண்டிய நிலை இருந்தது. ஆனால் கொக்குவில் பகுதியில் வாள்வெட்டு பொலிசார் மீதே பாய்ந்தபோது பொலிஸார் விழித்துக்கொண்டனர். கடுமையான தேடுதல்கள் சுற்றிவளைப்புகள் மூலம் பலர் கைது செய்யப்பட்டு நிலமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

**ஆவா குழுவுடன் சரா குழு!**

மாவீரர் வாரம் ஆரம்பிக்கவிருந்த சமயத்தில் வாள்வெட்டுக்கள் மீண்டும் அரங்கேற ஆரம்பித்து விடப் பொலிசார் அதிரடிப்படையினருடன் இணைந்து சுற்றி வளைப்புகள். தேடுதல் வேட்டைகளென நடவடிக்கைகளி இறங்கி விட்டனர். மீண்டும் யாழ் குடாநாட்டில் ஒரு அச்ச மூட்டும் சூழ்நிலை உருவாகிவிட்டது. யாழ்ப்பாணத்தில் ஆவா குழுவும் வடமராட்சியில் சரா குழுவும் நடமாடுவதாகக்கூறப்படுகின்றது. இவர்கள் கொள்ளையடிப்பதில்லை. பாலியல் வன்புணர்வில் ஈடுபடுவதில்லை. அரசியல் நோக்கம் கூட இல்லை. அப்படியானால் என் அந்த வாள்வெட்டு? அவை ஏன் இடம் பெறுகின்றன? இவர்களின் நடவடிக்கைகளின் விளைவுகள் குடாநாட்டில் அமைதியைக் குலைத்து அச்சமூட்டும் சூழலை எந்நேரமும் தக்க வைத்திருப்பதே. இனம்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், தொடர் கொள்கைகள். கிறீஸ் மனிதர்களின் அச்சுறுத்தல்கள் என்ற வரிசையில் இப்போது வாள்வெட்டு வந்துள்ளது. முன்னைய குழுக்களையோ நபர்களையோ இயக்கிய ஒரு மையமே இந்த வாள்வெட்டுக் குழுக்களின் பின் நின்று இயங்குகின்றது என்பது தெளிவாகவே தெரிகிறது.



எனவே மாவீரர் நாள் வரும்போது பலமாதங்கள் ஓய்ந்திருந்த வாள் வெட்டு மீண்டும் அரங்குக்கு வந்துவிடுகிறது. மாவீரர் நாளில் இந்தக் கும்பல்களின் அச்சமூட்டும் நடவடிக்கைகளும் அவர்களைப் பிடிப்பதாகப் பொலிஸார் மேற்கொள்ளும் சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளும் மக்களின் நடமாட்டத்தைக் கட்டுப்படத்தலாம்...! சில சமயங்களில் ஊரடங்குச் சட்டத்தைக் கூடப் பிறப்பிக்கப்படலாம்...! ஆனால். விடுதலைக் கனவுகளைச் சுமந்து நிற்கும் மாவீரர் அஞ்சலி நிகழ்வுகளை மக்கள் மனங்களில் இருந்து யாராலும் ஒருபோதுமே தடை செய்துவிட முடியாது.



# ஐவரா மூவரா?

அடுத்த ஐ.பி.எல். தொடரில் ஒவ்வொரு அணியும் ஐந்து வீரர்களையா அல்லது மூன்று வீரர்களையா தக்கவைப்பது என்பது தொடர்பில் அணியின் உரிமையாளர்களிடையே முரண்பாடுகள் உச்சம் தொட்டுள்ளன.

11ஆவது ஐ.பி.எல். தொடருக்கான ஏலத்துக்கு இன்னும் மூன்று மாதங்களுக்கு குறைவான காலப்பகுதியே உள்ளது. இந்த நிலையில் ஒவ்வொரு அணியும் எத்தனை வீரர்களைத் தக்கவைப்பது என்பது தொடர்பான வாதப்பிரதிவாதங்கள் தற்போது உச்சம் தொட்டுள்ளன. சில அணிகளின் உரிமையாளர்கள் தலா மூன்று வீரர்களைத் தக்கவைக்கவும் இன்னும் சில அணிகளின் உரிமையாளர்கள் தலா ஐந்து வீரர்களைத் தக்கவைக்கவும் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர். அப்படி மூவரைத்தான் தக்கவைக்க முடியும் என்றால் சென்னை அணி, டோனி, அஸ்வின், பிளாசிஸ் ஆகியோரைத் தக்கவைக்கவும் ஐவர் என்றால் ரெய்னா மற்றும் பிராவோ ஆகியோரையும் அந்தப் பட்டியலில் சேர்த்துக்கொள்ளவும் திட்டமிட்டுள்ளது என்று தகவல்கள் வந்துள்ளன.



# தென்னாபிரிக்கத் தொடர் தொடர்பாக விவாதங்கள்

விளையாட்டு
லயனல்

இந்திய - இலங்கை அணிகளுக்கு இடையிலான தொடர் நடைபெற்றுவரும் இக்காலத்தில் இந்திய அணியின் அடுத்த தொடரான தென்னாபிரிக்கத் தொடர் தொடர்பில் தற்போதே பரவலாக கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்னாபிரிக்காவிலேயே இந்தத் தொடர் நடைபெறவுள்ளது. தென்னாபிரிக்க ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமானவையாக இருக்கும். எனவே இலங்கைக்கு எதிரான தொடரில் வேகப்பந்து வீச்சுக்குச் சாதகமான ஆடுகளங்களை அமைத்து வேகப்பந்து வீச்சுக்கு தன்னைத் தயார்ப்படுத்தி வருகிறது இந்திய அணி. மட்டுமல்லாமல் தென்னாபிரிக்காவுக்கு எதிரான இந்திய அணியில் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமில் எவர் இருப்பர் என்பது தொடர்பாகவும் கருத்துப் பகிர்வுகள் ஆரம்பமாகியுள்ளன. இதன்படி அஸ்வின், ஜடேயா இருவரில் ஒருவரின் இடம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கப்படுகிறது. வேகப்பந்து வீச்சுக்கு சாதகமான ஆடுகளத்தில் இரண்டு சுழல்பந்து வீச்சாளரைக் கொண்டு களமிறங்க கோக்லி விரும்பமாட்டார் என்பதால் இவர்கள் இருவரும் களமிறங்குவது சாத்தியமற்றதே.



# அனுமதி!

பெண்கள் பளுதூக்கல் தொடரில் கலந்துகொள்ள ஈரான் அரசு அனுமதி வழங்கியுள்ளது.

பளுதூக்கல் தொடரில் ஈரான் ஆண்கள் பெரியளவில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். ஒலிம்பிக் தொடர்களிலும் இவர்களின் ஆதிக்கம் மிகையாக நிறைந்திருக்கும். எனினும் ஈரான் பெண்கள் பளுதூக்கல் தொடர்களுக்கு அனுமதிக்கப்படுவதில்லை. இவ்வாறிருக்க வரலாற்றை மாற்றியமைக்க முயன்றிருக்கிறது ஈரான். இதன்படி பெண்களும் பளுதூக்கல் தொடர்களில் பங்கெடுக்க ஈரான் அரசு அனுமதித்துள்ளது. இதை ஈரான் பளுதூக்கல் சம்மேளனம் உறுதிப்படுத்தியது.

# ஆரம்பமானது ஆஷஸ்

இங்கிலாந்து - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் தொடர் தற்போது ஆரம்பமாகியுள்ளது.

ஏனைய நான்கு ஆட்டங்களும் முறையே டிசெம்பர் 2, டிசெம்பர் 14, டிசெம்பர் 26, ஜனவரி 4 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன.





# தரங்க மீது நம்பிக்கை இல்லை

இலங்கை கிரிக்கெட் சபை தரங்கவின் தலைமைத்துவத்தில் நம்பிக்கை இழந்துள்ளதாக தெரியவருகிறது.

தொடர் தோல்விகள் மற்றும் தொடர் காயங்களை அடுத்து இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மத்தியூஸ் தலைமைப் பொறுப்பில் இருந்து விலகினார். மூன்று வகை ஆட்டங்களுக்கும் தலைவராக இருந்த மத்தியூஸின் விலகலின் பின்னர் டெஸ்ட் ஆட்டங்களுக்கு சந்திமல் தலைவராக்கப்பட்டார். மட்டுப்படுததப்பட்ட ஆட்டங்களுக்கு தரங்க தலைவராக்கப்பட்டார்.

சந்திமலின் தலைமையின் கீழ் இலங்கை அணி சொல்லிக் கொள்ளும் படியான பெறுபேறுகளை வெளிப்படுத்திய போதிலும் தரங்கவின் தலைமைத்துவம் படு மோசமாக அமைந்தது. இந்தியாவுக்கு எதிரான தொடரில் சொந்த மண்ணில் வைத்து தரங்கவால் ஒரு வெற்றியையேனும் பெறமுடியவில்லை. அதன் பின்னர் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரிலும் தரங்க தலைமைத்துவத்தில் சோபிக்கத் தவறினார். இதனால் அவரின் தலைமைத்துவத்தில் இலங்கை கிரிக்கெட் சபை அதிருப்தியில் உள்ளது. மத்தியூஸ் சம்மதித்தால் மீண்டும் அவரிடமே மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களுக்கான தலைமைப் பொறுப்பை ஒப்படைக்க இலங்கை கிரிக்கெட் சபை திட்டமிட்டுள்ளதாக அறியவருகிறது. மத்தியூஸ் தலைமைத்துவத்தை பொறுப்பேற்கச் சம்மதிக்காவிட்டால் அசல குணரட்ன அல்லது திசர பெரேரா தலைவராக்கப்படலாம்.

20/-
இந்த வாரம்

தாயகக் கனவுக்காக வீழ்ந்த முதல் வித்துக்கள்

என்ன கைமாறு செய்வோம்?

துரித உணவுகள்: உணவுப் புரட்சியின் மாயவலை

எங்கள் கல்லறைகளை மிதிக்காதீர்கள்

துயிலும் இல்லங்களை கொச்சைப்படுத்தாதீர்...!

வீரம் விளை வல்வையும் அதில் கம்பர்மலையும்

மற்றும் பல்சுவை அம்சங்களுடன்

விநியோகத் தொடர்புகளுக்கு
021 493 2222

சனிக்கிழமைகளில் அனைத்து முகவர்களிடமும் கிடைக்கும்.




The Best Payroll/HRMS
now in Sri Lanka

Monthly Fee from Rs.9,000/= upwards

Special Introductory
Start-up fee of Rs.300,000/=*




With multiple integrated modules to fulfill every HR function, AenigmA® HRMS Solutions suite provides most powerful on-the-cloud HRMS managing over 500,000 employees across 200+ global clientele, is now available in Sri Lanka.

No startup fee for payroll processing

Need to change your troublesome HRMS?
We will give you an unbeatable offer to migrate to our HRMS solution

- No costly version upgrades,
No annual maintenance fee
- Implementation within 07* days!!!

Call Uthayan - 077 813 69 50
Malinda - 076 745 45 92

Aenigma Holdings (Pvt) Ltd
28, De Fonseka Road
www.aenigma.lk
0114 383 515
info@aenigma.lk

Softlogic Finance
தங்க கடன்

அவசர பணத்தேவைக்கு
உங்கள் தங்கப் பவுணுக்கு
அதிகூடிய முற்பணம்

முன்கூட்டிய அறிவித்தலின்றி தங்கநகைகளை துரிதமாக மீட்கும் வசதி

தங்க நகைகளுக்கு பூரண பாதுகாப்பு

செயற்றிறன் மிக்க சினேகபூர்வமான ஊழியர்கள்

பகுதிக் கொடுப்பனவுகள் செய்யும் வசதி

தெரிவுசெய்வதற்கு முற்பண கொடுப்பனவு முறைமைகள் பல



24 கரட் ரூ. 45,500/-

22 கரட் ரூ. 40,000/-

சுன்னாகம் - 0722 527664, 0212 242775
யாழ்ப்பாணம் - 0722 334596, 0212 219444

கட்டுரை

டயஸ்

“எமக்காக வீழ்ந்த வீரர்களுக்கு உலகெங்கும் வாழும் தமிழீழ மக்கள் யாவரினதும் இதயங்களிலும் தீபங்கள் எரியும். நாளை தேசம் மீளும் போது அவர்களின் கல்லறைகளில் நிச்சயம் கார்த்திகை தீபங்கள் சுடர்விடும்.”



# போராடி உயிர் நீத்தவர்களை போற்றுவது மரபு

மனித நாகரிகத்தின் ஆரம்பம் தொட்டு இன்று வரையான காலத்தில் அதன் வரலாற்றுப் பரிணாம வளர்ச்சி என்பது உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது. இந்த வளர்ச்சிப் பாதைக்கு வழி அமைத்தவர்கள் போர் வீரர்களே. பலத்தின் மூலம் தான் மனித சமூகம் ஒவ்வொன்றும் தன்னை வரலாற்றில் முன்னிலைப்படுத்தியுள்ளது. இந்த நீண்ட வரலாற்றுக் கால ஓட்டத்தில் போர் வீரர்களைத்தான் அன்றிலிருந்து இன்று வரை மனித குலம் போற்றுகின்றது. இவ்வாறு மனித வரலாற்றை அமைத்து எம்மிடம் ஒப்புவித்து மடிந்துபோன மானமுள்ள வீரர்களை உலகெங்கும் பரந்து வாழும் மனித சமூகம் கொண்டாடுகிறது. ஆனாலும் இன்றைய உலகில் அடக்கி ஒடுக்கப்பட்ட வர்க்கங்களின் விடுதலைக்காக போராடி வீழ்ந்த வீரர்களை மதிப்புறுத்துவதில் தமிழ் மக்கள் முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர்.

முதலாம் உலகப்போரிலும், அதன் பின்னரும் ஏற்பட்ட போர்களில் உயிர்நீத்த படை வீரர்களை முதலாம் உலகப் போர் முடிவடைந்த நவம்பர் 11ஆம் திகதியை நினைவிருத்தி, பிரிட்டன், ஆஸ்திரேலியா, கனடா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் இன்று வரை நினைவு கூரு கின்றன. தமிழீழ மக்கள் எவ்வாறு நவம்பர் 27ஆம் திகதியை மாவீரர் தினமாகக் கொண்டாடுகின்றனரோ, அதேபோல் பிரித்தானிய மக்களும் கார்த்திகை 11ஆம் திகதியை முக்கியத்துவம் செய்கின்றனர். 'பொப்பி' எனப்படும் சிவப்புநிறமலர், நினைவு மலராகக் கொள்ளப்படுகிறது.

அத்துடன் ஈழத்தின் விடிவுக்காகத் தம்முயிரை நீத்த வீரர்களின் நினைவு தினமான நவம்பர் 27ஆம் திகதி அன்றே ஆஸ்திரேலியாவில் வாழும் பழங்குடி மக்களான ஒஸ்திரலோயிட் இன மக்களும் தமக்காகப் போராடி உயிர் நீத்தவர்களை நினைவு கூருகின்றனர் என்பது வியப்பான விடயம் மட்டுமல்ல, சிந்திக்கத் தூண்டும் விடயமும் கூட. இது குறித்த மேலதிக விடயங்கள் உண்மையில் ஆராயப்பட வேண்டியவையே.

**உலக விடுதலை அமைப்புக்கள் கொண்ட தியான நினைதல்**

அதே போல் தாமாகச் சுதந்திர அறிவிப்பைச் செய்து தமக்கென ஒரு நாட்டை உருவாக்கி அதற்குப் பன்னாட்டு அங்கீகாரத்தையும் பெற்று இன்று சர்வ வல்லமையும் உடைய நாடாகத்தன்னை முன்னிலைப்படுத்தியுள்ள இஸ்ரேலும் தான் அறிவித்துள்ள சுதந்திர தினத்தை ஆண்டு தோறும் தேசிய வீரர்கள் தினமாகக் கொண்டாடி வருவதைக் காணலாம். இன்று உலகம் முழுவதும் யூதர்கள் பலமாகவும் சக்தி வாய்ந்த இனமாகவும் இருப்பதற்குக் காரணம் அந்த இனத்தின் காவலர்களாக அவர்கள் விளங்கியதோடு மட்டுமல்லாது, பல உயிரிழப்புக்களையும் தியாகங்களையும் செய்த பின் இஸ்ரேல் என்ற நாட்டை அமைத்துக் கொடுத்த 'கானா' என்கின்ற விடுதலை அமைப்பினராக இருந்தமையே ஆகும். அவர்கள் முக்கியமாக இந்த நாளில் நினைவு கூரப்படுகின்றனர்.

450ஆண்டுகளாக இந்தோனேசிய அரசின் கொத்தடிமைத் தனத்தின் கீழ் இருந்த கிழக்குத் தீமோர் ஆனது, கிழக்குத் தீமோரின் தந்தை எனப்படும் 'சனானா குஸ்மாவே' தலைமையில் சிறிது சிறிதாக வளர்ந்து சுதந்திரப்போராட்டமாகமாறி 20.5.2002அன்று சுதந்திரம் அடைந்தது. அந்த நாள் இன்று சுதந்திர தினமாக இல்லாது விடுதலைக்கு வித்தாகிப் போனவர்களின் நாளாக எழுச்சியுடனும், உணர்வு பூர்வமாகவும் கொண்டாடப்பட்டு வருகின்றமையைக் காணலாம். ஒரு தேசத்தின் பிறப்பு அந்த நாட்டு மக்களின் கையில்தான் இருக்கின்றது என்பதைக்கிழக்குத்தீமோர் மக்கள் தம் விடுதலைப் போராட்ட வெற்றியின் மூலம் நிரூபித்துள்ளனர். இவர்களின் வெற்றியையும் விடுதலையையும் உறுதியாய்க் கொண்டு போராடும் மக்கள் எப்படியும் வெற்றிபெற்றுச் சுதந்திரம் பெறுவர் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகும். பிரான்ஸ் மற்றும் அமெரிக்கர்களுக்கு எதிராக சுதந்திரம் பெறுவதற்குப் போராடிய வியட்நாம் படையின் தலைவர் ஹோசிமின் இறந்த நாளான 1969ஆம் ஆண்டு செப்ரெம்பர் 3ஆம் திகதியை வியட்நாமின் தேசிய வீரர்கள் தினமாகக் கொண்டாடி வருகின்றனர். இவர்கள் அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் நாடுகளுடனான விடுதலைப் போரில் கொடுத்த விலைகளும், உயிரிழப்புக்களும், சொல்லொணாத்துயர்களும் எண்ணிலடங்காதவை. இந்தியா கூடத் தனது சுதந்திர நாளில் விடுதலைக்காக உயிரிழந்த வீரர்களை நினைவு கூருகிறது. அதே போல் ஜேர்மனியும் உலகப்போரில் இறந்த வீரர்களைத் தவறாது மதிப்புறுத்தி நினைவு கூருகின்றது.

**தமிழர்கள் நினைந்துருகும் கார்த்திகை -27**

சுதந்திர தமிழீழ விடுதலையை அடிநாதமாகக் கொண்டு, அதற்கான விடுதலைப் போரை முன்னிறுத்திப் போரிலே தங்களுயிர்களைத் தாரை வார்த்து தமிழர் மானம் காத்த மாவீரர் நாளை வர்ணிக்க மனித மொழிகளில் வார்த்தையில்லை. ஏரி நட்சத்திரங்களாக விடுதலையின் விடிவெள்ளிகளாக எரிந்து எமது விடுதலை வானை அலங்கரித்துக் கொண்டிருக்கும் சுதந்திரச் சிற்பிகளை நினைவு கூரும் நாள் கார்த்திகை 27ஆகும். கார்மேகம் கார்த்திகையில் கீழிறங்கி வந்து கல்லறைக்காவல்தெய்வங்களின் கால்களை நனைக்கும் நாள். ஈடிணையற்ற ஈகங்கள் புரிந்தும் அளப்பரிய அற்புதங்கள் செய்தும் மயிர் கூச்செறியும் சாதனைகள் செய்தும் எமது விடுதலைப் போராட்டத்தைப் பூமிப்பந்தெங்கும் விளங்கச் செய்த இந்த மாவீரர்களின் வீரத் திருநாள் நவம்பர் 27ஆகும்.

சங்க காலத்துக்கு முன்பிருந்தே போரில் வீழ்ந்த வீரர்களை நினைவு கூருதல் எனும் மரபு இருந்து வருகிறது. போரில் மாண்ட வீரர்களை புதைத்து அவர்களின் ஞாபகார்த்தமாக நடு கற்களை அமைத்து வணங்குகின்ற நடுகல்வணக்க முறை காணப்பட்டுவந்திருக்கிறது. எனவே போரில் இறந்த வீரர்களை வணங்குகின்ற முறை தமிழர் பண்பாடாகும். தமிழில் ஆரியம் கலப்பதற்கு முன் இறந்தவர்களை புதைக்கின்ற முறையே இருந்தது. தமிழில் ஆரியம் வந்து கலந்து விட்டதன் பின் இறந்தவர்களை எரித்தார்கள். இது ஆரியமும் பிராமணியமும் எம்முள் புகுத்திய கலாச்சாரங்கள். போரில் இறந்தவர்களை 'வீர சுவர்க்கம்' அடைந்தவர்கள் என மரியாதை செய்து நடுகல் நாட்டி வணங்கிய வரலாற்றை புறநானூற்றில் பரவலாகக் காண்கின்றோம். அது பிற்காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டு வந்தமைக்கு இலக்கியங்கள் சான்றாகின்றன. திருக்குறளிலும் போரில் இறந்த வீரர்களுக்கு கல்லறை அமைத்து வழிபடுதல் பற்றிக் கூறப்படுகிறது.

அந்தவகையில் மீண்டும் ஒரு புறநானூற்றுத் தமிழனாக தன்னுடைய விடுதலைக்காக போராடி வீழ்ந்த வீரர்களை கல்லறைகளில் அடக்கம் செய்து, அவர்களின் ஞாபகார்த்தமாக மாவீரர் வாரம் கொண்டாடுகின்ற மரபு விடுதலைப் புலிகளிடம் இருந்து வந்தது. உலகின் வேறு எந்த விடுதலை அமைப்புகளுக்கோ அரசுகளுக்கோ இல்லாத தனிச் சிறப்பாக இது கொள்ளப்படுகிறது.

**மாவீரர் கல்லறைகள் காணும் ஆன்ம வடிவம்**

முதன் முதலில் தமிழீழ விடுதலைப் போரில் வித்தான லெப். சங்கரின் இறந்த நாளான கார்த்திகை 27ஆம் திகதியை இறுதித் தினமாகக் கொண்டு ஒரு வாரம் மாவீரர் வாரமாக 1989 ஆம் ஆண்டு முதல் கடைப்பிடிக்கப் பட்டு வருகிறது. 1989ஆம் ஆண்டு 1307 மாவீரர்கள் மணலாறு மாவட்டத்தில் இந்திய இராணுவத்தின் கெடுபிடிக்குள்ளும் நள்ளிரவு 12.01 இற்கு தீபங்கள் ஏற்றி மலர் தூவி நினைவு கூரப்பட்டனர். அந்த நேரத்திலே மாவீரர்களைப் புதைக்கும் வழக்கம் இருக்கவில்லை. வீரமரணம டைந்த போராளிகளின் உடல்களை அவரவர் குடும்பங்கள் கைக்கொள்ளும் மதச் சம்பிரதாயங்களின் அடிப்படையில், புதைக்கப் பட்டோ அல்லது எரிக்கப்பட்டோ அவர்களது இறுதிக் கிரியைகள் நடந்தன. மாறாக காடுகளுக்குள் சாவடைந்த மாவீரர்கள் மாத்திரம் விதைக்கப்பட்டனர்.

ஆனால் 1991 ஆம் ஆண்டிலிருந்து வீரச் சாவடைந்த மாவீரர்களின் வித்துடல்கள் அனைத்து இனி மேல் எரிக்கப்படாது விதை குழிகளில் புதைக்கப்படும் எனவும் அவ்வாறு விதைக்கப்பட்ட மாவீரர்களின் இடத்தில் கல்லறைகள் எழுப்பப்பட்டு அதில் அவர்கள் பெயர்கள் பொறிக்கப்பட்டு இவை எமது தேசிய நினைவுச்சின்னங்களாக பாதுகாப்படும் எனவும் மேன்மை கொள்ளப்பட்டன. இவை காலங்காலமாக எமது போராட்ட வரலாற்றைச் சொல்லிக் கொண்டேயிருக்கும் வரலாற்றுப் படிமங்கள். இந்த மாவீரர்கள் சாத்திர சம்பிரதாயங்கள் எல்லாவற்றையும் கடந்து இந்த நாட்டின் பொதுச் சொத்தாக பொக்கிசங்களாக இருக்கின்றார்கள்.

பொதுவாக விடுதலைக்காப் போராடிய, போராடிக்கொண்டிருக்கின்ற அமைப்புக்கள் மற்றும் அரசுகளே போரில் இறந்த வீரர்களை ஆண்டுதோறும் நினைவு கூருகின்றனர். மாறாக ஏகாதிபத்தியத்தின் மூலம் நாடுகளை ஆக்கிரமித்த அமெரிக்க அரசு இறந்த வீரர்களை நினைவு கூருவதை பொதுவாகக் காணமுடிவதில்லை. ஆனால் வியட்நாம் போரில் கொல்லப்பட்ட 58ஆயிரத்து 132 அமெரிக்க வீரர்களுக்கு ஜோன் ஸ்ரக்ஸ் என்பவரின் தலைமையில் வியட்நாம் வீரர்கள் நினைவு நிதி என்ற பெயரில் நிதி திரட்டப்பட்ட வொஷிங்டனின் ஆபிரகாம் லிங்கன் நினைவுச் சின்னத்துக்கு அருகில் 75 மீற்றர் உயரமான இரண்டு சுவர்களுடன் கூடிய கல்லறை அமைக்கப்பட்டது. அதில் வியட்நாமில் இறந்த 58ஆயிரத்து 132 அமெரிக்க வீரர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டன. இந்த நினைவு சின்னம் 1982ஆம் ஆண்டு நவம்பரிலேயே திறந்து வைக்கப்பட்டன.

மேலும் தமிழீழ விடுதலைப்புலிகள் ஒவ்வொரு மாவீரனுக்கும் தனித்தனிக் கல்லறை அமைத்து, அவர்களுக்காக விசேடமாக தனித் தனித் தீபங்கள் ஏற்றப்படுவதோடு மாவீரர்கள் பெற்றோரும் கௌரவிக்கப்படுகின்றமை எந்த ஒரு நாட்டிலும் இல்லாத தனிச் சிறப்பாகும். ஆயிரமாயிரம் மாவீரர்களின் கல்லறைகள் அழிக்கப்பட்டாலும் சில துயிலுமில்லங்களில் இம்முறை தீபங்கள் ஏற்ற தமிழீழ மக்கள் தயாராகி விட்டனர். எமக்காக வீழ்ந்த வீரர்களுக்காக உலகெங்கும் வாழும் தமிழீழ மக்கள் யாவரினதும் இதயங்களிலும் தீபங்கள் எரியும். நாளை தேசம் மீளும் போது அவர்களின் கல்லறைகளில் நிச்சயம் கார்த்திகை தீபங்கள் சுடர்விடும்.

(நன்றி - முகநூல்)



# சின்னதா ஓர் அரட்டை

அலசல்
மேரிகிறேஸ் வரதராஜன்

'பேஸ்புக்கிலை' பெரு வரவேற்புப் பெற்றிருக்கிற விசயம் இது. "உத்தேச அரசமைப்பானது தமிழ்மக்களுக்குப் பெரும் தீங்கானது" என்று சுரேஸ் பிரேமச்சந்திரனும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் கூறி வருகிறார்கள். ஆனால், தமிழ் மக்களுக்கு அது ஒரு சிறந்த தீர்வு என்று கூறுவதோடு அது குறித்து விவாதம் செய்யவும் பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார் சுமந்திரன்.

தமிழ் மக்களின் நலன் கருதிச் சுமந்திரனின் இந்த விவாத அழைப்பை எவ்வித நிபந்தனைகளும் இன்றிச் சுரேசும் கஜேந்திரகுமாரும் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் நேரிடையாகக் கலந்துகொண்டு விவாதம் செய்வது அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் வழமையானது. எனவே தமிழர் மத்தியில் இவ்வாறான நேரடி விவாதங்கள் நடைபெறுவது சிறந்தது. ஆரோக்கியமானது.

ஏதாவது ஒரு தொலைக்காட்சி இந்த விவாதத்தை நிகழ்த்துவதற்கு முன்வரலாம். யாராவது ஒரு பல்கலைக்கழகப் பேராசிரியரின் தலைமையில் இதை அவர்கள் நடத்தலாம். இதை உலகில் உள்ள தமிழர்கள் அனைவரும் காண்பதனூடாகப் புதிய அரசமைப்புக் குறித்துத் தெளிவு பெறலாம். அதுமட்டுமல்ல சுமந்திரன், சுரேஸ், கஜேந்திரகுமார் இவர்களின் நிலைப்பாடு என்ன? என்பதைத் தமிழ் மக்கள் அறிந்து கொள்ள முடியும்.

***"விவாதம் நல்லது தான் 'முதல்வனி'ல் ரகுவரன் மாட்டிக் கொண்டு முழிப்பதைப்போல் அமையாவிட்டால் இன்னும் நல்லது"***



## சுமந்திரனின் விவாத அழைப்பு



## செந்தூரனை மறக்காதிருக்கிறது முகப் புத்தகம்

சிறையில் உள்ளவர்களின் விடுதலைக்காகத் தமது உயிர்களை அர்ப்பணித்தவர்கள் தியாகிகள். அவர்கள் நினைவுகூரப்பட வேண்டியவர்கள். தமிழகச் சிறையில் உள்ளவர்களின் விடுதலை வேண்டித் தனது உயிரை மாய்த்துக் கொண்ட செங்கொடி ஒரு தியாகி. அதேபோல் இலங்கைச் சிறையில் உள்ளவர்களின் விடுத லைக்காக ஈழத்தில் உயிர் விட்ட மாணவன் செந்தூரன்...?

செங்கொடி வருடா வருடம் நினைவு கூரப்படுகி றார். ஆனால் செந்தூரனை நம்மவர்கள் மறந்து விட்டார்கள். செங்கொடி தீக்குளித்துச் சாவடைந்த இடத்தில் அவருக்கு நினைவு சின்னம் வைக்கப்பட்டுள்ளது. பேரறிவாளன் தனது வீட்டுக்குச் 'செங்கொடி இல்லம்' எனப் பெயர் வைத்துள்ளார்.

ஆனால் மாணவன் செந்தூரன் உயிர் விட்ட தண்டவாளத்தில் ரயில்கள் தன்பாட்டில் ஓடிக்கொண்டுதான் இருக்கின்றன. அந்த இடத்தில் அவன் நினைவாக ஒரு துண்டுப்பலகைகூட இதுவரை இல்லை.

"நவம்பர் 7ஆம் திகதிக்கு முன்னர் சகல சிறைக்கைதிகளும் விடுதலை செய்யப்படுவார்கள்' 'என்று 2015இலை சம்பந்தர் கூறியிருந்தார். ஆனால் அது நடக்கவில்லை. இந்த நிலையில்தான் நவம்பர் 26ஆம் திகதி சிறைக் கைதிகளை விடுதலை செய்யுமாறு கோரி மைத்திரிக்குக் கடிதம் எழுதிவிட்டு மாணவன் செந்தூரன் ரயில் முன் பாய்ந்து தனது உயிரை மாய்த்தான். சம்பந்தரோ, தமிழர் வாக்கில் பதவிக்கு வந்த மைத்திரியோ மாணவன் செந்தூரனின் சாவு குறித்துக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. ஏன் நம்மில் சிலருக்கும்கூட அது ஞாபகத்தில் இல்லாமல் போய்விட்டது. ஆனால் 'பேஸ்புக்' இதை மறக்கவில்லை எண்டதை இப்பியான அரட்டைகளில் இருந்து தெரிந்து பொறுக்கி எடுக்க முடிந்தது.

அவனுடைய நினைவு எல்லாம் சிறையில் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும் என்பது மட்டுமே. அதற்காக அவன் தேர்ந்தெடுத்த பாதை தவறாக இருக்கலாம்.

ஆனால் இந்தச் சின்ன வயதில் அவன் செய்த அர்ப்பணிப்பு மகத்தானது' என்பதாகவும் செந்தூரனை நினைத்து கருத்துக்கள் குவிகின்றன முகநூலில். 'இனியாவது செந்தூரனை நினைவு கூர்வோம்' என்றும் சிலர் தமது தவறை ஏற்றுக்கொள்கிறார்கள். ஆனால் தலைவர்கள் தான்...?

## சுமந்திரனின் நகர்வு கவனிக்கப்படாமலில்லை...!

'பேஸ்புக்' ஒண்டும் பொழுதுபோக்கு விசயமில்லை எண்டதையும் இடைக்கிடையே அதில் சிலர் சொல்லிக் கொண்டுதானிருக்கிறார்கள்.

"வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்களைக் கோத்தபாயா கொன்றது மிகப் பெரிய குற்றமாகத் தெரியவில்லை. ஆனால், கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தேசியக் கொடியை ஏற்றாதது மன்னிக்க முடியாத மிகப்பெரிய குற்றமாகச் சுமந்திரனுக்குத் தெரிகிறது. விவாதத்துக்கு வரும்படி கோத்தபாயாவுக்குச் சவால் விடவேண்டியவர் சர்வேஸ்வரனுக்குச் சவால் விடுகிறார்" என்கிறார் ஒருவர். இவருக்கு ஏட்டிக்குப் போட்டியாக, "இறுதிக்களத்தில் நடந்தது இனப் படுகொலை அல்ல போர்க்குற்றம் என்றார். பின்னர், பன்னாட்டு விசாரணை தேவையில்லை. உள்ளக விசாரணை போதும் என்றார். அதன்பின்னர், இலங்கை அரசு கேட்காத நிலையிலும் அமெரிக்கா சென்று கால அவகாசம் பெற்றுக்கொடுத்தார். அரச தலைவர் சட்டத்தரணிப் பதவி பெற்றார். அதிரடிப்படைப் பாதுகாப்பையும் பெற்றார். இன்னும் என்னென்ன பண்ணித் தொலைக்கப் போகிறாரோ?" என்கிறார் இன்னொருவர். "இவரைக் கவனிச்சுக் கொண்டுதானிருக்கிறம்...." எண்டும் பலர்...!

## சிரிக்காமல் இருக்க முடியுமா?

"ஜெனிவாத் தீர்மானத்தை நிறைவேற்றாவிடில் வடக்குக் கிழக்கில் கிளர்சி வெடிக்கும்" என்று மாவை சேனாதிராசா அரசுக்குக் கடும் எச்சரிக்கை விடுத்ததாகச் செய்திப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி ஒன்று இந்த முகநூலில் இந்த வாரம் பட்டையைக் கிளப்பியி ருக்கிறது. இதைவைத்து வம்பளக்கும் அரட்டையர்கள் பல ரும் வெளுத்து வாங்கியிருக்கிறார்கள். "ஒருமுறை கே.கே. எஸ் வீதியில் பழுதடைந்த ஒரு லொறியை, மற்றொரு லொறி கயிறைக் கட்டி இழுத்துச் செல்வதை எம்முடைய மாவை சேனாதிராசா பார்த்துக் கொண்டிருந்தார். என்ன அண்ணே கன நேரமாப் பார்த்துட்டே இருக்கிறீங்க? என்று அவரது சீடன் சயந்தன் அவரிடம் கேட்டாராம். ஒரு கயிறைக் கொண்டு போறதுக்கு, ரெண்டு லொறியா எனக் கூறிவிட்டு மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்தார் மாவை சேனாதிராசா" இது அந்த அரட்டையர் ஒருத்தரின் ஞான திருஷ்டி.

"எங்கடை மாவையாரின்ர அரிய கண்டுபிடிப்பு ஒண்டு இது. சுன்னாகம் 'பவர் ஸ்ரே சன்' நிறுவனத்தின் கழிவு ஒயிலால் கிணத்து நீர் மாசு அடையவில்லை என்று கண்டுபிடித்துக் கூறினார்.

இந்த விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்காக அவருக்குக் கிடைச்சி ருக்கக் கூடிய இலஞ்சப் பணமே மாவையாரின் மாவிட்டபுரப் பங்களாவில் மாபிள் கற்களாகவும், கருங்கற்களாகவும் மாறியிருக்கிறது" இது வம்பளக் கும் மற்றொரு அரட்டையர். "தமிழரசுக்கட்சியின் வீட்டு சின்னத்துக்குப் புள்ளடி இட்டால் தமிழ் மக்களுக்குத் தீர்வு வரும் என்றார். ஆனால் அவருக்குத்தான் சென்னையில் ஒரு வீடு, கொழும்பில் ஒரு வீடு, மாவிட்டபுரத்தில் ஒரு வீடு என்று வந்து கொண்டிருக்கிறது" இப்பிடி யாக ஏகப்பட்ட அரட்டைகளுடன் அந்தப் பதிவு நின்றுவிடவில்லை. "இவர் சொல்லுறதுபோல மீண்டும் கிளர்ச்சி வெடித்தால் அவருக்கு மீண்டும் பதவி கிடைக்கும். பல வீடுகள் கிடைக்கும். இப்பிடியெண்டால் மனுசன் வீட்டுச் சின்னத்தையும் தமிழரசுக்கட்சியையும் விடாப்பிடி யாகப் பிடித்துக்கொண்டு தானே இருக்கும்...!" இப்படியே போகுது.

## போஸ்னியா மக்களுக்கு ஒரு நியாயம் தமிழ் மக்களுக்கு இன்னொரு நியாயமா?



சேர்பியாவின் முன்னாள் இராணுவத் தளபதி ராட்கோ மிலாடிக், 1990ஆம் ஆண்டு நடைபெற்ற போஸ்னியப் போரின்போது இனப்படுகொலைக் குற்றங்கள் புரிந்தமை நிரூபிக்கப்பட்டு அவருக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது ஐ.நாவின் தீர்ப்பாயம் ஒன்று.

போஸ்னியாவைச் சேர்ந்த 7ஆயிரம் வரையான முஸ்லிம் ஆண்களும், சிறுவர்களும் இனப் படுகொலை செய்யப்பட்டதற்கு மிலாடிச் பொறுப்பு என்று நீதிபதிகள் கூறியுள்ளனர். இலங்கையில் 40 ஆயிரம் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்பட்டதாக ஐ.நா வினாலே கூறப்பட்டிருந்தும் இன்னும் அதற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படவில்லை.

போஸ்னியாவில் 7ஆயிரம் பேர் கொல்லப்பட்டதை இனப் படுகொலையாக ஏற்றுக்கொள்ளும் ஐ.நா, இலங்கையில் இலட்சக்கணக்கில் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருந்தும் அதை வெறும் போர்க் குற்றமாகவே கருதுகிறது. ஆனால் சேர்பிய இராணுவத் தளபதியைத் தண்டித்திருக்கின்ற ஐ.நா. தமிழ் மக்கள் விடயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் அரசுக்குத் துணை போகிறது. ஏன் இந்த நிலை?

இந்த நாடு போஸ்னியா போன்று ஐரோப்பாக் கண்டத்தில் இல்லாமல் ஆசியாக் கண்டத்தில் இருப்பதால்தானா கவனிக்கப்படவில்லை? அல்லது, இந்தியாவை மீறி இலங்கைத் தமிழர்களுக்கு உதவ வல்லரசு நாடுகள் விரும்பவில்லையா? அதாவது, இலங்கை எனும் சிறிய சந்தைக்காக இந்தியா எனும் பெரிய சந்தையை இழக்க
ஏகாதிபத்தியங்கள் விரும்பவில்லையா? அல்லது,
இலங்கையில் பெற்றோலிய எண்ணெய்வளம் இல்லாதபடியால்தான் இந்த நிலமையா? இப்படித்தனே நாம் நினைப்போம்... ஆனால், பேஸ்புக் அரட்டையர்கள் இப்படிக் கூறுகிறார்கள். 'நடந்தது இனப்படுகொலை அல்ல என்று கூறுவதற்கு சுமந்திரன்கள் பேரஸ்னியாவில் இல்லை'

'பன்னாட்டு விசாரணை தேவையில்லை. உள்ளக விசாரணை போதும். அதுவும் இப்போதைக்குத் தேவையில்லை என்று கால அவகாசம் எடுத்துக் கொடுக்க சம்பந்தர்கள் போஸ்னியாவில் இல்லை' எப்படியிருக்க...?

# 47 ஆண்டுகளின் பின்னர் இடம்பெற்ற ஆயர்த்துவ திருநிலைப்படுத்தலின்; இரண்டாம் ஆண்டு நினைதல்

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

யாழ். மறைமாவட்ட ஆயரான ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் ஆயர்த்துவ திருநிலைப்படுத்தல் சடங்கு 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆம் திகதியன்று யாழ். மரியன்னைப் பேராலயத்தில் இடம்பெற்றது. அந்தவகையிலே இதுவரையான தனது இரண்டு ஆண்டு கால சேவைக் காலத்தில் மேற்கொண்ட பணிகள் பற்றி இவ்வாக்கம் பேசுகிறது.

### ஏனைய மறைமாவட்டங்களுடனான தொடர்பு

யாழ். மறைமாவட்ட அருட்சகோதரர்களை களுத்துறை குருமடத்துக்கு ஒரு வருடப் பயிற்சிக்காக அனுப்பி வைக்கும் செயற்பாடு மீண்டும் தமிழ் சிங்கள குரு மாணவர்கள் மற்றும் குருக்களிடையே உறவையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தி தமிழ் அருட்சகோதரர்களுக்கு ஒரு பன்முகப் பயிற்சியையும், ஆளுமைமையும் வழங்கும் நோக்கமாகும்.

1983ஆம் ஆண்டு இனக்கலவரத்தோடு யாழ் மறைமாவட்ட தமிழ் அருட்சகோதரர்கள் கண்டி அம்பிற்றிய தேசிய குருமடத்தை விட்டு வெளியேறி கொழும்புத்துறையில் தம் பயிற்சிகளை பெறத் தொடங்கினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் ஏனைய மறைமாவட்டங்களின் ஆயர்களை யாழ். மறைமாவட்டத்துக்கு அழைக்கும் யாழ். ஆயரின் முயற்சியானது தமிழ் சிங்கள கத்தோலிக்க உறவை கட்டி எழுப்பும் ஒரு முயற்சியாகும். கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை, கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மக்ஸ்வெல் சில்வா ஆண்டகை ஆகியோரின் யாழ். மறைமாவட்டத்துக்குரிய வருகை இதையே வெளிப்படுத்துகிறது. யாழ். ஆயர் ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையின் இந்த அணுகுமுறையை இனங்கண்ட இலங்கையின் ஏனைய மறைமாவட்ட ஆயர்கள் இவரை தமது மறைமாவட்டங்களுக்கும் அழைக்கத் தொடங்கியுள்ளனர். இதன் முதற் செயற்பாடோகவே யாழ். ஆயர் காலி மறைமாவட்ட மாத்தறை அன்னை யாத்திரைத்தலத்துக்கு அழைக்கப்பட்டார். மாத்தறை அன்னை யாத்திரைத்தலத்துக்கு அழைக்கப்பட்ட முதல் தமிழ் ஆயர் இவரே என்ற பெயரைப் பெற்றுள்ளார் என்பது இங்கு பெருமையுடன் பதியப்பட வேண்டிய விடயமாகும்.

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையில் இளையோர் ஆணைக்குழுவுக்கு தலைவராகவும் நிதி, பொதுநிலையினர் மற்றும் நீதி சமாதானம், மனித முன்னேற்றம் ஆகியவற்றுக்கு உப தலைவராகவும் இவர் நியமிக்கப்பட்டுள்ளமையாலும் இலங்கையின் ஏனைய மறைமாவட்டங்களுடனான தொடர்பு மேலும் வளர வாய்ப்புக்கள் உண்டு.

### தமிழ் மக்களின் நியாயமான எதிர்பார்புகளுக்கு ஏற்ற நிரந்தரத் தீர்வு

இன்று தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ற நிரந்தர தீர்வை அரசியல் யாப்பினை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதற்குரிய காலம் என்றுமில்லாதவாறு கனிந்திருக்கும் வேளை, அத்தீர்வினை அடைய இராஜதந்திர ரீதியாகவும், இரகசியமாகவும், அமைதியாகவும் பங்காற்றி வருகிறார். அண்மையில் முதலமைச்சர் சார்பாக பிரச்சினை ஏற்பட்டபோது, இவர் நல்லை ஆதீனத்துடன் இணைந்து ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

மேலும் அவர் விடுக்கும் அறிக்கைகள் உறுதிப்பாடுடையவையாகவும் தெளிவானவையாகவும் உள்ளன. இறந்தவர்களை உயிர்ப்பிக்க முடியாது. அதே வேளை உயிரோடு இருப்பவர்களை காலம் காலமாக மறைத்தே வைத்திருக்க முடியாது. மனித உயிர் சம்பந்தமான இப்பிரச்சினைக்கு இனியும் காலம் தாழ்த்தாது முடிவு காணுங்கள் போன்ற அறிக்கைகளை வெளியிட்டுள்ளார்.





பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற கொழும்பு அக்குயனாஸ் கல்லூரியோடு இணைந்து திருமறைக் கலாமன்றத்தில் ஆங்கில பாட டிப்ளோமா பாடநெறியை ஆரம்பிக்கவும், அகவொளி நிறுவனத்தில் உளவியல் மற்றும் உள ஆற்றுப்படுத்தல்துறை விஞ்ஞானப் பட்டமாணி பட்டப்படிப்பை மேற்கொள்ள முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகிறது.

மொன்பேட்சபை அருள்சகோதரர்களின் நெறிப்படுத்தலில் அல்லைப்பிட்டியில் பன்னாட்டுப் பாடசாலை அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் தொழில்நுட்பக் கல்வியை அபிவிருத்தி செய்ய இரண்டு மாடிக்கட்டட தொழில்நுட்ப ஆய்வுகூடத்தை அமைக்கும் முயற்சி நிறைவடையும் நிலையில் உள்ளது. முல்லைத்தீவு சிலாவத்தையில் கப்பூச்சியன் சபைக் குருக்களின் தொழில்நுட்ப கல்லூரி அமைக்கப்படவுள்ளது. பிரான்ஸ் லியோன் நகர் புனித யோசவ் சபை அருட்சகோதரிகள் மணற்காடு மற்றும் அல்லைப்பிட்டி பங்குகளில் பணியாற்ற அழைக்கப்பட்டுள்ளனர்.

### மதபேதமின்றி தமிழ் மண்ணுக்கும், தமிழ் மக்களுக்கும் உதவும்படி அழைப்பு

வெளிநாடுகளுக்குச் செல்லும் போதெல்லாம் மதபேதமின்றி தமிழ் மண்ணுக்கும், தமிழ் மக்களுக்கும் உதவும்படி தமிழ் மக்கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்துக்கொண்டே வருகிறார். பெல்ஜியம் நாட்டில் யாழ்ப்பாணத்தில் தொழிற்சாலைகளை நிறுவ முன்வாருங்கள் எனப் பகிரங்கமாக விடுத்த அழைப்பை இங்கு குறிப்படலாம். 2016 ஆம் ஆண்டு யூன் மாதம் 28 ஆம் திகதி, உதயன் பத்திரிகையின் சூரிய காந்தி ஞாயிறு இணைப்பிதழின் கிறிஸ்தவ ஞாயிறு பகுதியில் இவ் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அதில் 'யாழ்ப்பாணத்தில் தொழிற்சாலைகளை நிறுவுங்கள். பெல்ஜியம் புலம்பெயர் தமிழ் மக்களிடம் யாழ் ஆயர் வேண்டுகோள்.' என கட்டுரை வெளியாகியிருந்தது.



கடந்த 2016 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 03 ஆம் திகதி, உதயன் பத்திரிகையின் வாசகர் திருமுகம் பகுதியில் கே.எஸ். சிவஞானராஜா, "யாழ். குடாநாட்டில் இன்றைய தேவை குறித்த யாழ். ஆயரின் பார்வை என்ற தலைப்பில் மடல் எழுதியிருந்தார். அதில் அவர், யாழ். ஆயர் கூறிய அத்தனை வசனங்களும் உயிரோட்டமான பொருள் பொதிந்தவையாகும். இந்த மண்ணை புனிதமாக நேசிக்கும் ஆன்மிகவாதி ஒருவர் உலக அரங்கில் உரத்துச் சொல்லியிருப்பது இதுவே முதல் தடவை என்று கருத முடியும். யாழ். ஆயரின் சிந்தனை அடுத்த நூறு வருடங்களுக்குப்போதுமான இரண்டு இலட்சம் இளைஞர்களை வேலையில் இணைப்பதற்கான செயற்றிட்டத்தை வலியுறுத்துவதாக நோக்கப்படுகிறது. ஆயரின் தூர நோக்கு வெல்வதாக" என கே.எஸ். சிவஞானராஜா மேலும் தெரிவித்திருக்கிறார்.

மேலும் புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் மத்தியில் ஐரோப்பாவிலும், அமெரிக்கா கனடா போன்ற நாடுகளிலும் செயற்படும் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகங்கள் யாழ். மறைமாவட்டத்தின் செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்ய வேண்டுமென வேண்டியுள்ளார்.

“ இன்று தமிழ் மக்களின் எதிர் பார்ப்புகளுக்கு ஏற்ற நிரந்தர தீர்வை அரசியல் யாப்பினை உறுதிப்படுத்தி பெற்றுக்கொள்வதற்குரிய காலம் என்றுமில்லாதவாறு கனிந்திருக்கும் வேளை, அத்தீர்வினை அடைய இராஜ தந்திர ரீதியாகவும், இரகசியமாகவும், அமைதியாகவும் பங்காற்றி வருகிறார். அண்மையில் முதலமைச்சர் சார்பாக பிரச்சினை ஏற்பட்டபோது, இவர் நல்லை ஆதீனத்துடன் இணைந்து ஆற்றிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.

### திருச்சிலுவைக் கன்னியரின் பராமரிப்பில் கொழும்புத்துறை

கடற்கரை வீதியில் உள்ள புனித யோசப் முதியோர் இல்லம் ஜேர்மன் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்தின் உதவியுடன் முதியோருக்குத் தேவையான வசதியான இல்லம் ஒன்றை அமைக்க அடிக்கல் நடப்பட்டுள்ளது. யாழ். மறைமாவட்ட நிதிவளத்தை உள்ளூரில் இருந்தும் பெற்றுக்கொள்ள மறைமாவட்டத்தின் நிதி மூலங்களில் ஒன்றாக விளங்கிய தென்னந்தோட்டங்களை கத்தோலிக்க நிதி நிறுவனங்களின் உதவியோடு அபிவிருத்தி செய்யப் பொறுப்பாக ஒரு குருவை நியமித்துள்ளார். மேற்படி விடயத்தில் அறிவும் அனுபவமும் பின்புலமும் உள்ள எறிக் றோசான் அடிகளார் நியமி க்கப்பட்டுள்ளார்.

புனித யோசப்வாஸ் அடிகளாரின் யாழ். மறைமாவட்ட திருத்தலத்தை இலங்கை திருச்சபை வரலாற்றில் சின்ன உரோமை என அழைத்து, அவருக்குப் பாதுகாப்பு வழங்கிய சில்லாலை பங்கில் அமைக்க பணிகள் ஆரம்பமாகியுள்ளன. பருத்தித்துறை தும்பளை லூர்து அன்னை திருத்தலத்தில் நற்கருணைச் சிற்றாலயம் அமைப்பதற்கான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புனித யோசவ்வாஸ் இறையியற் கல்லூரியின் பணிகளை மேலும் மேம்படுத்தவும், அங்கீகரிக்கப்பட்ட பட்டங்களை வழங்கவும் எம்.வி.இ.இர விச்சந்திரன் அடிகளார் அதிபாரக நியமிக்கப்பட்டு தனிக்கட்டடம் வழங்கப்பட்டுள்ளது.

### புதிய மறைக்கோட்டங்கள் மற்றும் பங்குகளின் உருவாக்கம்

போர்க்காலத்தில் துண்டிக்கப்பட்டு தனியாகவும் தொடர்புகளை ஏற்படுத்தவும் முடியாமல் இருந்த கிளி. முல்லை மறைக்கோட்டம், கிளிநொச்சி மறைக்கோட்டம், முல்லைத்தீவு மறைக்கோட்டம் என இரண்டு மறைக்கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு பணி இலகுவாக்கப்பட்டு அதிர்காரப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மறைக்கோட்டத்தில் சுதந்திரபுரம் உடையார் கட்டு மற்றும் யாழ். மறைக்கோட்டத்தில் மணியம்தோட்டம் கட்டைக்காடு போன்ற புதிய பங்குகள் உருவாக்கப்பட்டுள்ளன.

### மறைமாவட்டத்தின் மேய்ப்புப்பணி மாநாடு மற்றும் திட்டங்கள்

2106 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 29ஆம் திகதி முதல் ஒக்ரோபர் மாதம் முதலாம் ஆம் திகதி வரை யாழ். மறை மறைமாவட்டத்தின் முக்கிய பணியாக மேய்ப்புப்பணி மாநாடு நடைபெற்றுள்ளது. இதன் நடைமுறைப்படுத்தல் கூட்டம் பங்குகளில் பணியாற்றும் குருக்களுக்கு அண்மையில் நடைபெற்றுள்ளது.

யாழ். மறைமாவட்டத்தில் 2018ஆம் ஆண்டு இளைஞர் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டு "இறைதிட்டம் தேடும் இளையோர் பயணம்" என்ற கருப்பொருளின் அடிப்படையில் வட பகுதி இளைஞர்களின் வாழ்வை மேம்படுத்தவும், பலத்த விமர்சனங்களுக்கு மத்தியில் அவர்களை நெறிப்படுத்தவும் வழி ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளது. சமூக ஊடகங்களிலேயே மூழ்கியிருக்கும் இளைஞர்களுக்கு உரிய நெறிப்படுத்தல் வழங்க ஊடக அறிவும், அனுபவமும் பெற்ற அன்ரன் ஸ்ரீபன் அடிகளார் சமூகத் தொடர்பு ஆணைக்குழுவுக்கும், இளையோர் ஆணைக்குழுவுக்கும் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்.

### யாழ். மறைமாவட்ட குருக்களின் பணி வாழ்வை மேம்படுத்தல்

பூநகரி, பாசையூர், கூழாமுறிப்புப் பங்குகளில் புதிய பங்குபணிமனைகள் கட்டப்பட்டுள்ளன. யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றி இளைப்பாறும் ஆயர்கள் மற்றும் குருக்கள் தாம் இளைப்பாறும் இறுதிக்காலத்தை மகிழ்வோடும், மனநிறைவோடும் செலவு செய்ய நல்லாயன் நம்பிக்கை நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பிரதான வீதியில் அமைந்துள்ள இளைப்பாறும் ஆயர்கள் குருக்களின் இல்லமான எமிலியானூஸ் இல்லத்தின் பணிகள் மேம்படுத்தப்பட்டு, அதன் பணிகளை விசேடமாகக் கவனிக்க பொறுப்பான குருவாக ஜெயசீலன் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

போரினால் முற்றாகச் சேதமடைந்த வளலாயில் உள்ள குருக்கள் மற்றும் குருமட மாணவர்களின் விடுமுறை இல்லமும், சிற்றலாயமும் கடற்படையினரின் துணையோடு புதிதாக அழகுறக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. ஆயர் ஜஸ்ரின் இல்லம் என அவ்வில்லத்துக்குப் பெயரிட்டுள்ளனர்.

யாழ். ஆயர் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக கடற்படையினரால் ஊர்காவற்துறை புனித மரியாள் ஆலய வளாகத்தில் ஆரம்பிக்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி ஆயரால் திறந்து வைக்கப்பட்டுள்ளது. "மரியன்னை வழி இயேசுவிடம்" என்ற விருதுவாக்குடன் தம் பணியை ஆரம்பித்த ஆயர் நிறையவே விதைத்துள்ளார். அறுவடையை அனுபவிக்க சில காலம் தேவை. ஆயர் யாழ். மறைமாவட்டத்தை வழிப்படுத்திச் செல்லத் தொடங்கி இரண்டு ஆண்டுகள் நிறைவான வேளையில், உதயன் பத்திரிகையின் ஞாயிறு சிறப்பு இணைப்பிதழான சூரிய காந்தியின் கிறிஸ்தவ ஞாயிறு பகுதி அன்பு நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துவோம். இறையாசீர் வேண்டுவோம்.

## நாகபூஷணி திருமண சேவை

**மணமக்கள் அனைவருக்கும் பதிவுக்கட்டணங்கள் யாவும் இலவசம்**
**26. 11. 2017 இலிருந்து 05. 12. 2017 வரை**

டாக்டர், எஞ்சினியர், எக்கௌண்டன், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர் மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். நீங்கள் விரும்பும் மணமக்கள் ஜாதகங்களை உடன் பொருத்தமாகத் தரப்படும்.

**077 1387 596, 077 770 4457**

**642, பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம்**
**(நல்லூர்க் கோயிலுக்கு முன்னால்)**

## கண்ணீர் அஞ்சலி



எமது நிறுவன பொருளாளரும் யாழ். போதனா வைத்திய சாலை கணக்காளர் **கி. சுரேஸ்குமார்** இன் அன்பு மாமனும் எமது நிறுவன உறுப்பினரான திருமதி **சு. ஹேமா** (கணக்காளர், மாகாண திறைசேரி) இன் பாசமிகு தந்தையுமான

### அமரர் த. யோகநாதன்

காலமாகிய செய்தி அறிந்து ஆழ்ந்த கவலை அடைந்ததுடன் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பொது நிதிக்கான தலைமைத்துவ அபிவிருத்தி நிறுவனம் IPFDL**

## கண்ணீர் அஞ்சலி



எமது கலாமன்ற உபதலைவர் **ச. இராசநாயகம்** அவர்களின் பாசமிகு சகோதரர்

### சபாரத்தினம் ஆறுமுகம்பிள்ளை

அவர்களது திடீர் மறைவுச்செய்தி கேட்டு அதிர்ச்சி யடைவதோடு அன்னாரது ஆத்மா எல்லாம் வல்ல ஈழத்துச்சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேர பிரார்த்திப்பதுடன் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

சாந்தி சாந்தி சாந்தி

**நிர்வாக சபையினர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள்.**

**கிழவன்காடு கலாமன்றம், காரைநகர், யாழ்க்கிளை.**

## மரண அறிவித்தல்கள்

### தாமோதரம்பிள்ளை வேலாயுதபிள்ளை



தெல்லிப்பழை, மாத்தனையைப் பிறப்பிடமாகவும் நாச்சிமார் கோவிலடியை வசிப்பிடமாகவும் அளவெட்டி மகாத்மா வீதியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை வேலாயுதபிள்ளை நேற்று (25.11.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் இராசலட்சுமி காலஞ்சென்ற சிவபாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ரமணி (ஆசிரியர், சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலயம்), ரோகினி (யாழ்/போதனாவைத்திய சாலை), தர்மினி (நுணாவில் மொடேன் வைத்தியசாலை), காலஞ்சென்ற சிவபாலன் மற்றும் குணபாலன் (கனடா), விஜயபாலன் (கனடா), விஜயகுமாரி (ஜேர்மனி), ஜெயகுமாரி (கனடா), சசிகுமாரி (இந்தியா) ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள்இன்று (26.11.2017) ஞாயிற்றுக் கிழமை ந.ப. 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அளவெட்டி, கேணிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**பனிக்கர் தோட்டம், மகாத்மா வீதி, அளவெட்டி. க.கனகவாசன்**

---



**பிறப்பு** . 14 . 10 . 1963

**இறப்பு** . 24 . 11 . 2017

### இராசரட்ணம் இராம்குமார்

கட்டுவன், (மைலிட்டி) யை பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசரட்ணம் இராம்குமார் 24.11.2017 வெள்ளிக் கிழமை காலமானார்.

அன்னார் றஜனியின் அன்புக் கணவரும் அபிஷேக் (யா / கொக்குவில் இந்துக் கல்லூரி )இன் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த இறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும் .

**ஒஸ்காலேன், உரும்பிராய் தெற்கு ,உரும்பிராய்.**

**தகவல்: இராசதுரை (மாமனார்)**

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலகத்தில் கணக்காளராக கடமையாற்றும் **திருமதி சு. ஹேமா** அவர்களின் அன்பு தந்தையார்.

### தம்பையா யோகநாதன்

**(ஓய்வு பெற்ற எழுது வினைஞர் . இலங்கை துறைமுக அதிகார சபை )**

அவரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஊழியர் நலன்புரி சங்கம்,**
**பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகம், நிதி, வட மாகாணம்.**

## கண்ணீர் அஞ்சலி



சரவணை, தேவபுரம் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் மகோற்சவ முதலாம் திருவிழா உபயகாரர் **திரு. திருமதி கெங்காதரம்பிள்ளை** அவர்களின் மருமகனும் எமது ஆலயத்தின் திருப்பணிச் சபையின் பொருளாளர் **திரு. சுரேஸ்குமார்** (பிரதம கணக்காளர் யாழ். போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்) இன் மாமனும் ஆகிய

### தம்பையா யோகநாதன்

(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்) அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபையினர், ஆலய திருப்பணிச் சபையினர், கதிர்வேலவன் இந்து இளைஞர் சங்கம்.**

## மரண அறிவித்தல்கள்



### சபாரத்தினம் ஆறுமுகம்பிள்ளை

*(முன்னாள் பணியாளர் காரைநகர் பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்)*

காரைநகர் நீலிப்பந்தனையை பிறப்பிடமாகவும் புது வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சபாரத்தினம் ஆறுமுகம்பிள்ளை 24.11.2017 வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மகனும் சொர்ணாம்பிகையின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதிப்பிள்ளை,கனகசபாபதி (முன்னாள் கிராம சேவையாளர்,குட்டிவிதானையார்) மற்றும் சகுந்தலாதேவி, சண்முகரட்ணம் (ஓய்வு பெற்ற தபாலதிபர்),சறோஜினிதேவி,குணநாயகம் (குணம் மாஸ்டர்), இராசநாயகம்( பிரதம முகாமைத்துவ உதவியாளர்,ஆதாரவைத்தியசாலை ,ஊர்காவற்றுறை),சுந்தரேஸ்வரன்(நல்லைகுமரன் றெக்ஸ் நல்லூர்) ஆகியோரின் அன்பு சகோதரனும் காலஞ்சென்ற கமலாம்பிகை மற்றும் கணபதிப்பிள்ளை ,சாந்தமலர், றஞ்சிதமலர், நாகராசா, குமாரலட்சுமி, அன்பரசி,யோகேஸ்வரி மற்றும் கனகசபாபதி (கனடா) ஆகியோரின்அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (27.11.2017) திங்கட்கிழமை காலை 6.30 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைநகர் சாம்பலோடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர் ,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**புது வீதி,காரைநகர். குடும்பத்தினர்.**

## திருமதி
## இராசம்மா (இராசமணி) கந்தசாமி



புலோலி தெற்கு, புலோலி மந்திகை பெருந்தெருவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா (இராசமணி) கந்தசாமி நேற்று (25.11.2017) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் கந்தசாமியின் அன்பு மனைவியும் கண்ணன் (அதிபர் யா / ஞானாசாரியார் கல்லூரி கரவெட்டி), கமலாசினி ஆகியோரின் அன்புத் தாயும் சுகந்தினி (ஆசிரியர், யா / விக்னேஸ்வரா ஆரம்ப பாடசாலை), ஈஸ்வரன் ஆகியோரின் அன்புமாமியும் தர்சனா (மாணவி, யா / புற்றளை மகாவித்தியாலயம்), மோகனா (மாணவி, யா / பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை) ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கருகம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: க. கண்ணன்**
**(அதிபர், யா /ஞானாசாரியார் கல்லூரி)**
**077 613 5342**

### காணி விற்பனைக்கு

யாழ் மருத்துவபீடத்துக்கு முன்பாக 50 மீற்றர் தூரத்தில் 1 1/2 பரப்பு காணியும் ,பொற்பதி வீதியில் 3 பரப்பும் விற்பனைக்குண்டு.

**076 697 2287, 077 305 8782**

### வீடு விற்பனைக்கு

கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு முன்பாக மீனாட்சி அம்மன் வீதியில் 2 பரப்பு காணியில் அமைத்துள்ள வீடு விற்பனைக்குண்டு
0778449687

### வீடு வாடகைக்கு

தாவடியில் சுதுமலை வீதியில், K.K.S. வீதிக்கு அருகில் நல்ல நிலையிலுள்ள வீடு வாடகைக்குண்டு.

**தொடர்பு - 077 5222 533**

### மருந்தகத்துக்கு வேலையாள்கள் தேவை

திருநெல்வேலியை அண்மித்த மருந்தகத்துக்கு வேலைக்கு ஆள்கள் தேவை.
(பழக விரும்புகின்றவர்களும் விரும்பத்தக்கது)
T.P:-075 943 1018

### கடை வாடகைக்கு

நல்லூர் செட்டித் தெருவில் மூன்று மாடி கடை வாடகைக்கு உள்ளது. தனித்தனி கடையாகவோ அல்லது மொத்தமாகவோ வாடகைக்கு விடப்படும்.
0773973166

### வாடகைக்கு

3 Room கொண்ட Anex வீடு கச்சேரி நல்லூர் வீதி. நல்லூரில் வாடகைக்குண்டு. University Student / Workers இற்கு உகந்தது.

**077 756 6484**

### தேவை

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்துக்குத் திறமையான அனுபவமுள்ள நன்னடத்தை கொண்ட சாரதி (Driver) தேவை.

**077 592 5371, 076 316 5730**

### வீடு வாடகைக்குத் தேவை

யாழ்ப்பாண நகரிலிருந்து 5 km தூரத்திற்குள் ஏதேனும் பிரதான வீதிகளை அண்மித்து வீடு வாடகைக்குத் தேவை. மாடி வீடு விரும்பத்தக்கது. ( இரு வீடுகளும் சேர்த்து) 2 வருடகால ஒப்பந்த அடிப்படையில் வாடகை. முற்பணம் வழங்கத்தயார். T. P : 077 248 7272

### உடன் வாடகைக்கு

நல்லூர்கோயிலுக்கு மிக அருகில் 5 படுக்கை அறைகள், சமையலறை, சாப்பாட்டறை, வரவேற்பறை, ஹோல் இணைந்த இரண்டு குளியலறைகள் கொண்ட மேல் மாடி வீடு மட்டும் வாடகைக்குண்டு.

தொடர்பு - **071 8945 692**

### S.K.Broking
Res.No. - NAL / DS / 1442

### காணி வீடு விற்பனைக்கு

கோண்டாவில் பழனி முருகன் கோயிலுக்கு அண்மையில், 1 1/2 பரப்புக் காணியுடன் புத்தம் புதிய வீடும் சகல வசதியுடனும் கல்வியங்காடு 3 ஆம் கட்டையடியில் 2 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு.

**077 193 3490, 077 461 3884**

### Walk - In - Interview

கொழும்பில் தலைமை அலுவலகமாகவுள்ள எமது கல்வி நிறுவனம் யாழ்ப்பாணத்தில் கீழ்வரும் பதவிக்கு விண்ணப்பங்களை கோருகின்றது.

**Administrative officer**

* G.C.E (A/L) தகைமை
* வயது : 20-25
* ஆங்கில, கணினி அறிவு

நேர்முகத் தேர்வு : 28 .11. 2017 செவ்வாய்க் கிழமை காலை 10.00 மணி

தொடர்பு : 075 475 5177

### மருந்து இல்லா மருந்து வைத்தியம்

நாட்பட்ட முள்ளந்தண்டு நோய்கள், மூட்டுவலிகள், தலைவலி, கால்வீக்கம், ஆரம்ப Kidney Failure (High Creatinine, Urea, Uric acid) High E.S.R. or CRP குழந்தைப் பாக்கியம், பலவீனம்.

Dr.R.Sivagurunathan
077 730 1669
ஞாயிறு, திங்கள் யாழ்ப்பாணத்தில் சந்திக்கலாம்

## நாடாளுமன்றத்தில்...

நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன்.
நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழர் தம் வாழ்வோடு, அவர் தம் வரலாற்றோடு, ஆன்ம உணர்வுகளோடு ஊறி ஒருமித்து, நெஞ்சமெங்கும் நிறைந்து நிற்கும் புனிதமான நாளே மாவீரர் நாள். இந்த நாள் ஆயிரமாயிரம் சுதந்திரச் சுடர்களாக, எமது விடுதலைக் கோவிலை அலங்கரித்து நின்ற மாவீரர்களைப் போற்றி வணங்கும் புனிதநாள். இது சாவுக்கு கலங்கியழும் சோக நாளோ அன்றி துயரத்தில் உறைந்துபோகும் துக்க நாளோ அல்ல. தியாகிகளின் திருநாள். ஒரு சத்திய இலட்சியத்திற்காகத் தம் இன்னுயிரை ஈகம் செய்த எம்மின வீரர்களின் வீரம் செறிந்த போராட்ட வாழ்வையும், ஒப்பற்ற தியாகங்களையும், அற்புதமான அர்ப்பணிப்புக்களையும் நம் நெஞ்சப் பசுமையில் நினைவுகூரும் உணர்வெழுச்சி நாள்.
மாவீரர்கள் அமைதி விரோதிகளோ அன்றி சமாதான வழியில் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எதிரானவர்களோ அல்லர். அவர்கள் வேண்டியது உண்மையான, உறுதியான சமாதானத்தையே! எமது மக்கள் எமது மண்ணில் நிம்மதியாக, சுதந்திரமாக, அந்நியத் தலையீடுகள் ஏதுமின்றி அமைதியாக வாழ்ந்து, தமது அரசியல் வாழ்வை தாமே தீர்மானிக்கக்கூடிய நிரந்தரமான சமாதானத்தையே அவர்கள் வேண்டி நின்றார்கள். ஆனபோதும் சிங்கள, பௌத்த பேரினவாதத்துள் ஆழ அமிழ்ந்திருந்த அரசமைப்புக்களுக்கும், அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபோதும் புரிந்துகொள்ளவில்லை.
சிங்களதேச பிரதான அரசியல் கட்சிகள் எவையும் தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைக்கூட அங்கீகரிக்கத் தயாராக இருக்கவில்லை. வடக்கு - கிழக்கு மாநிலம் தமிழர்களின் வரலாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான இனக்கட்டமைப்பைக் கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ, தமிழீழ மக்களுக்கு பிரிந்து செல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமை உண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ளவுமில்லை. ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவுமில்லை.
எமக்கான உரிமைகள் கிடைப்பதற்கான ஏதுக்கள் ஏதுமில்லை என்பதால் நாமே எமது உரிமைகளைப் போராடி வென்றெடுக்க வேண்டும் என்றும் போராடாது, குருதி சிந்தாது, சாவையும் அழிவையும் சந்திக்காது, தியாகங்கள் புரியாது எந்தவொரு தேசமும் விடுதலை பெற்றதாய் வரலாறு இல்லைஎன்பதையும்புரிந்துகொண்டு ஆக்கிரமிப்பாளரின் அடக்குமுறைக்கு ஆளாகி அவலக்குரல் எழுப்பிநின்ற தமது மக்களின் துயரக்கண்ணீரைத் துடைத்தெறிய உறுதியெடுத்து, பணிந்து போகாது, தமது இரத்தத்தை இரையாக்கியேனும் இலட்சியத்திற்காக போராடுவோம் என்று துணிந்து போராடிய தூய வீரர்களை என்றென்றும் எம் நெஞ்சிருத்துவோம்.
அவர்தம் இலட்சியக் கனவுகள் எவையும் எட்டப்படவில்லை எனினும் மூன்று தசாப்தமாக முடிவின்றித் தொடர்ந்த ஆயுதப்போருக்கு ஓய்வு கொடுத்து ஒன்பது ஆண்டுகள் ஆகிவிட்டபோதும் போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்பு நிலையுமின்றி, இடைக்காகத் தீர்வுமின்றி, இனப்பிரச்சினைக்கு முடிவுமின்றி, விடிவு, விடுதலை, எதிர்கால சுபீட்சம் எதுவுமின்றி சூனியமான அரசியல் வெறுமைக்குள்ளேயே நாம் இன்றளவும் வாழ்ந்துவருகின்றோம். இந்த வேளையிலும், மண்ணின் விடிவுக்காய், மக்களின் விடுதலைக்காய் களமாடி வீழ்ந்த மறத்தமிழ் மாவீரர்களை எம் நெஞ்சிருத்தி அஞ்சலிப்பதில் அவர்தம் வீரப்பரம்பரையில் வந்துதித்த தமிழர்களாகிய நாம் ஒவ்வொருவரும் ஆத்ம திருப்தி அடைகிறோம் - என்றார். (உ-5,31)

## உள்ளூராட்சி...

உள்ளூராட்சி அமைச்சரால் கடந்த பெப்ரவரி மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலுக்கு டிசெம்பர் 4ஆம் திகதி வரை நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. இதனால் ஜனவரி 29ஆம் திகதி உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடத்த முடியாத சூழல் ஏற்பட்டிருந்தது. இதனையடுத்து தேர்தல்கள் ஆணைக்குழு உடனடியாக நேற்றுக் கூடி ஆராய்ந்தது.
நாட்டில் 336 உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. நீதிமன்றத் தடையினால் 203 உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஜனவரி 29ஆம் திகதி தேர்தல் நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எஞ்சிய 133 உள்ளூராட்சி மன்றங்களிலும் 40 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலையும் இப்போதைய நிலையில் நடத்த முடியாது. அந்த 40 உள்ளூராட்சி மன்றங்களின் வர்த்தமானி அறிவிப்பிலும் உள்ளூராட்சி அமைச்சர் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.
எந்தப் பிரச்சினையும் இல்லாத 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தல் ஆணைக்குழு ஏற்கனவே திட்டமிட்டவாறு ஜனவரி 29ஆம் திகதி தேர்தல் நடத்த ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. இந்தத் தேர்தலுக்கான அறிவிப்பு, மற்றும் வேட்புமனுக் கோரலுக்கான அறிவிப்பு என்பன நாளை திங்கட்கிழமை வெளியிடப்படவுள்ளது.
இதற்கு அமைவாக வடக்கில் சாவகச்சேரி நகர சபைக்கு மாத்திரமே தேர்தல் நடத்த முடியும். கிழக்கு மாகாணத்தில், ஏறாவூர் நகரசபை, ஏறாவூர்பற்று பிரதேச சபை, கோறளைப்பற்று பிரதேச சபை, மண்முனை பிரதேச சபை ஆகியவற்றுக்கு மாத்திரம் தேர்தல் நடத்த முடியும்.
இதேவேளை உள்ளூராட்சி அமைச்சு 40 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் உரிய திருத்தங்களை மேற்கொண்டு உடனடியாக வர்த்தமானியில் பிரசுரிக்க நடவடிக்கை எடுத்தால், வடக்கில் வலி.வடக்கு பிரதேசசபை, வலி.தெற்குப் பிரதேச சபைக்கு மாத்திரம் தேர்தல் நடத்த முடியும் ஏன்பது குறிப்பிடத்தக்கது. (உ-5,101)

## நினைவேந்தல்களை...

டிக் கிடந்த் துயிலும் இல்ல நிலங்கள் துப்புரவு செய்யப்பட்டு சமப்படுத்தப்பட்டன. இல்லத்தின் நடுநாயகமாக கொடிக்கம்பம் நடப்பட்டு சுற்றிலும் சிவப்பு மஞ்சள் கொடிகள் பிரகாசிக்க விடப்பட்டுள்ளன. துயிலும் இல்லத்தைச் சுற்றிலும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டுக் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன.
சில துயிலும் இல்லங்களில் இராணுவத்தினரால் இடித்தளிக்கப்பட்ட நினைவிடங்களின் எச்சங்கள் நடுநாயகமாகக் குவிக்கப்பட்டு வரலாற்று நினைவிடமாக உருவாக்கப்பட்டுள்ளன.
ஏற்பாடுகள் அனைத்தும் முழுமை பெற்றுள்ள நிலையில் வழக்கம் போலவே மாலை 6.02 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டு, 6.05 மணிக்கு ஈகச்சுடரேற்றல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து, மாவீரர் நாள் பாடல் ஒலிக்கவிடப்படும். இதற்கான ஏற்பாடுகளை அந்தப் பகுதிகளில் உள்ள மாவீரர் துயிலும் இல்லப் பணிக்குழுக்கள் ஏற்பாடு செய்துள்ளன என்று கூறப்படுகின்றது.
யாழ்ப்பாணத்தில், உடுத்துறையிலும், சாட்டியிலும், கிளிநொச்சியில் கனகபுரத்திலும், முழங்காவிலிலும், முல்லைத்தீவில், தேராவில், முள்ளியவளை, இரணைப்பாலை, அளம்பில், வன்னிவிளாங்குளம், கூழாம்முறிப்பிலும், மன்னாரில் ஆட்காட்டிவெளி, பண்டிவிரிச்சான், வவுனியா ஈச்சங்குளத்திலும் மாவீரர் தின நிகழ்வுகள் நடக்கவுள்ளன. (உ-5,101)

## தேசியக்....

இவ்வாறு விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.
நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தேசியக் கொடியை ஏற்ற மறுத்துள்ளார். இது பாரதூரமான விடயமாகும். தேசியக் கொடியை ஏற்க மறுத்தால் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் போன்று வீரனாகி விடலாம் என்று அவர் நினைக்கின்றார் போல் தெரிகிறது. நாட்டின் தேசியக் கொடியை தீர்மானிக்கும் குழுவில் ஜி.ஜி பொன்னம்பலம், நடேசன், டி.எஸ் சேனாநாயக்க, எஸ்.டப்ளியு.ஆர்.டி.பண்டாரநாயக்க ஆகியோர் இருந்துள்ளனர். இது அவருக்கு தெரியாதா? இதன்போது தேசியக் கொடியில் சேர்க்கப்பட வேண்டி விடயங்கள் தொடர்பில் பலர் பலவிதமான கருத்துகளை தெரிவித்தனர். ஒரு சிலர் எதிர்ப்பினையும் வெளியிட்டனர். இந்தக் குழுவில் அனைத்து இனத்தவர்களுக்கும் மதிப்பளித்தே சரியான தேசியக் கொடியை தெரிவு செய்தனர். தேசியக் கொடியில் காணப்படும் சிங்கம் தமிழர்களை காலால் மிதிப்பதாக நாடாளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கூறினார். தேசியக் கொடிக்கு அனைவரும் மதிப்பளிக்க வேண்டும். அப்படி மதிப்பளிக்க முடியாவிடின் யாராக இருந்தாலும் அவர்கள் நாட்டை விட்டு வெளியேறலாம்.
இப்படி வடக்கில் நிலமை இருக்கும் போது தெற்கில் எப்படி புதிய அரசமைப்புப் பற்றி பேசமுடியும். தமிழ்த் தலைவர்களில் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தனை மாத்திரமே எங்களால் ஏற்றுக்கொள்ள கூடியவராக உள்ளார். இந்த நிலையில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனை ஒருபோதும் தமிழ் தலைவர்களாக நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம் - என்றார். (உ-5,31)



# பிரபா படங்கள் வடமராட்சியில்

வடமராட்சி, நவ.26
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் படங்கள் அடங்கிய சுவரொட்டிகள் நேற்று வடமராட்சின் சில பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தன. எனினும் அவை காலையில் அகற்றப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.
இன்று தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளாகும். 1954ஆம் ஆண்டு வல்வெட்டித்துறையில் வேலுப்பிள்ளை பிரபாகரன் பிறந்தார். அவரின் பிறந்ததாள் தமிழ் மக்களால் பெருமெடுப்பில் கொண்டாடப்படுவது வழமை. ஆயுதப் போர் மௌனிக்கப்பட்ட பின்னர் பிறந்தநாளை மக்கள் பகிரங்கமாகக் கொண்டாடுவதில்லை. இருப்பினும் இந்த ஆண்டு பகிரங்கமாகப் பிறந்தநாள் கொண்டாடப்பட்டுள்ளது. (ற-ரி2,26)

## புதிய...

(சமஷ்டி) ஆட்சி வேண்டாம் என்ற வாசகம் அடங்கிய உடைகளை அணிந்து, கறுப்புத் துணிகளை நெற்றியில் கட்டியவாறு ஊர்வலம் நடத்தப்பட்டது. துண்டறிக்கைகளும் மக்களுக்கு வழங்கப்பட்டன.
"புதிய அரசமைப்பு மீது பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதற்கெதிராக மக்கள் வாக்களிக்க வேண்டும். வடக்கில் வேறு நாடு என்ற உணர்வில் இருப்பதால்தான் சர்வேஸ்வரன், விக்னேஸ்வரன் ஆகியோர் மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். தேசியக் கொடியை நிராகரிக்கும் வடக்கு கல்வியமைச்சர், புத்தர் சிலைகளை உடைக்கும் விக்னேஸ்வரன் ஆகியோர் குறைந்தளவில் அதிகாரம் இருக்கின்ற போதே இவ்வாறு நடந்து கொள்கின்றனர் என்றால், அதிக அதிகாரம் வழங்கப்பட்டால் எப்படி நடந்துகொள்வார்கள் என்பதை அரச தலைவரும் தலைமை அமைச்சரும் உணர்ந்துகொள்ள வேண்டும்
இந்த அரசு 5 வருடங்களுக்குத்தான் ஆட்சிக்கு வந்தது. ஆனால் பல்லாண்டுகளுக்கு சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்கிறது. புதிய அரசமைப்பின் ஊடாக எவ்வாறு நாடு பிரிகிறது, குருதி ஆறு எவ்வாறு ஏற்படும் என்பதையெல்லாம் இந்தத் துண்டறிக்கை ஊடாக விளக்கியுள்ளோம். பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் அதற்கெதிராக வாக்களிக்கும்படி மக்களை தெளிவுபடுத்தி வருகின்றோம்" என்றார் உதய கம்மன்பில. (உ-ற)

## 113 மன்றங்களில்...

டுள்ளது. இவற்றில் 90 உள்ளூராட்சி மன்றங்கள் மாத்திரமே பல உறுப்பினர் வட்டாரங்களைக் கொண்டவையாகும். ஏனைய 113 உள்ளூராட்சி மன்றங்களும் பல உறுப்பினர் இல்லாத வட்டாரங்களாகும்.
நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கிலும் பல உறுப்பினர் வட்டாரங்களைக் கொண்ட உள்ளூராட்சி மன்றங்களிலேயே தவறு இருப்பதாகப் பிரதானமாகச் சொல்லப்பட்டுள்ளது.
இதனால் அந்த வட்டாரங்கள் தவிர்ந்த ஏனைய உள்ளூராட்சி மன்றங்களில் தேர்தலை நடத்த அனுமதிக்கக் கோரும் மனுவை சட்டமா அதிபர் மூலம் தாக்கல் செய்வது என்று தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுத் தீர்மானித்துள்ளது.
இந்த மனு எதிர்வரும் புதன்கிழமை தாக்கல் செய்யப்படவுள்ளது. (உ-5,101)

## அரசுக்கு...

உள்ளூராட்சி அமைச்சு அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.
உள்ளூராட்சித் தேர்தல் தாமதிக்கப்பட்டதன் பின்னணியில் உள்ளூராட்சி அமைச்சர் இருக்கின்றார் என்று பகிரங்கமாகவே தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். இனியும் உள்ளூராட்சி அமைச்சை நாம் நம்பத் தயாராக இல்லை. நாம் திட்டமிட்டவாறு 93 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஜனவரி மாதம் 29ஆம் திகதி தேர்தல் நடத்துவோம். அதற்கும் ஏதாவது தடை ஏற்படுத்த முயன்றால், தேர்தல்கள் அலுவலகத்தில் எதிர்வரும் புதன்கிழமையிலிருந்து கறுப்புக் கொடி பறக்கவிடப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவினர் எச்சரிக்கை விடுத்துள்ளனர். (உ-5,101)

## 3 பிள்ளைகளின்...

சிவபாலன் (வயது48) என்பவரைக் கொன்றார் என்று பொலிஸார் குற்றஞ்சாட்டுகின்றனர். உயிரிழந்தவர் 3 பிள்ளைகளின் தந்தையாவார்.
சிவபாலன் பருத்தித்துறை, ஓராங்கட்டையை அண்மையில் உள்ள மைதானம் ஒன்றில் இருந்தபோது, அங்கு டிப்பரில் வந்தவர் அவரை மதிலுடன் சேர்த்து மோதிக் கொன்றார் என்று கூறப்படுகின்றது. சம்பவ இடத்திலேயே சிவபாலன் உயிரிழந்துள்ளார்.
புலோலி வடக்கைச் சேர்ந்த டிப்பர் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார். இவர் 45 வயதானவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.
காங்கேசன்துறை உதவிப் பெலிஸ் அத்தியட்சகர் டி.கே.பிரியந்தவின் ஆலோசனைக்கு இணங்க, பருத்தித்துறை தலைமை அதிகாரி மற்றும் பருத்தித்துறை குற்றத் தடுப்பு பிரிவினர் இணைந்து சந்தேகநபரைக் கைது செய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி2,26,101)

## கிணற்றில்...

காணாது பெற்றோர் தேடியுள்ளனர். வீட்டுக் கிணற்றுக்குள்ளும் எட்டிப் பார்த்தனர் காலையில் எதுவும் தெரியவில்லை. மாலையில் அதே கிணற்றில் குழந்தை சடலமாக மிதந்தது.
உடனடியாகக் குழந்தையை கிணற்றிலிருந்து மீட்டு வைத்தியசாலை கொண்டு சென்றபோதிலும் குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டிருந்தது. (உ-8)

## நள்ளிரவில்...

பிரதேசங்களிலும் வெடிகொழுத்தி, கேக்வெட்டிக் கொண்டாடப்பட்டது.
வல்வெட்டித்துறையில் பிரபாகரன் பிறந்த வீட்டின் முன்பாகவும் கேக் வெட்டி பிறந்த நாள் கொண்டாடப்பட்டுள்ளது. (5,26)



# இந்து இளைஞர் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், நவ. 26
நீர்வேலி காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்திய யாழ்ப்பாண மாவட்ட அணிக ளுக்கு இடையிலான கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணி கிண்ணம் வென்றது.

காமாட்சி அம்பாள் விளையாட்டுக் கழக மைதா னத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளை யாட்டுக் கழகமும், ஆவரங்கால் இந்து இளை ஞர் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. 5 செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் இரண்டு செற்களையும் முறையே 25:17, 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞர் அணி கைப் பற்றியது. 34:32 என்ற புள்ளிகளின் அடிப்படை யில் மூன்றாவது செற்றைக் கைப்பற்றியது மத்தி. இருந்த போதிலும் அடுத்த செற்றில் ஆக் ரோசத்துடன் விளையாடிய இந்து இளைஞர் அணி 25:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் அந்த செற்றைக் கைப்பற்றி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென் றது. ஆட்டநாயகனாக இந்து இளைஞர் அணி யின் ஜெனகன் தெரிவானார். (ம-108)

## மரண அறிவித்தல்கள்



### இராமலிங்கம் தம்பிராசா
(குட்டி மாமா)

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் தம்பிராசா (குட்டி மாமா) 23.11.2017 வியாழக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்திரம்மா, ஜானகி யம்மா, சங்குவதியம்மா, சின்னராசா ஆகியோரது பாசமிகு தம்பியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2017) ஞாயிற் றுக்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் வல்வெட்டித்துறை ஊறணி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**துரையன் செம்பாடு,
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.**

**தகவல்:
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்**

## மரண அறிவித்தல்கள்

பிறப்பு
12
04
1932



இறப்பு
21
11
2017

### திருமதி பவளம்மா சிற்சபேசன்

யாழ் கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி, லண்டன் Woodford Green ஐ வதிவிடமாகவும் கொண்ட பவளம்மா சிற்சபேசன் அவர்கள் 21.11.2017 செவ்வாய்க்கிழமை அன்று இறைவனடி எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் ஆசைப்பிள்ளையின் அன்பு மகளும், வேலுப்பிள்ளை சின்னப்பிள்ளையின் மருமகளும், காலஞ்சென்றவரான சிற்சபேசன் அவர்களின் அன்பு மனைவியும்.

லோகநாயகி (ரதி), நாகேஸ்வரி (சுகந்தி), இந்துமதி, முருகானந்தன், மாலா ஆகியோரின் அன்புத் தாயாரும், குணசேகரம், சண்முகரட்ணம், காலஞ்சென்ற சுந்தரேசன், இரவீந்திரன், கௌரி, பாஸ்கரதாஸன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் காலஞ்சென்றவர்களான கனகம்மா, தில்லையம்பலம், துரைசிங்கம், சிவபாக்கியம், தங்கரட்ணம் ஆகியோரின் சகோதரியுமாவார்.

இத்தகவலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அஞ்சலிக்கு : சனிக்கிழமை 25.11.2017 2.00 பி.ப 5.00 பி.ப
H L Hawes & Son Ltd, 106 Tanners Lane, Ilford. Ig6 1QE, UK
கிரியை : ஞாயிற்றுக்கிழமை 26.11.2017 07.00 மு.ப 09.00 மு.ப
Ravidasia Community Centre, 26 Carlyle Road, Manor Park, E12 6BN
தகனம் : ஞாயிற்றுக்கிழமை 26.11.2017, 10.00 மு.ப
South Chapel, City of Londan, Cemetery & Crematorium, Aldersbrook Road, Manor Park, London E12 5DQ, UK

**மேலதிக தகவல்களுக்கு : குணம் - 07806452531 , பாஸ்கி - 07956592498**

## இந்தியா முன்னிலை



இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் முன்னிலை பெற்றது இந்திய அணி.

இலங்கை அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடரின் இரண்டாவது ஆட்டம் நாக்பூரில் நேற்றுமுன்தினம் ஆரம்பமா னது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 205 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்ச மாக சந்திமல் 57 ஓட்டங்களையும், கருணாரத்ன 51 ஓட்டங்களையும், டிக்வெல்ல 24 ஓட்டங்களையும் பெற்ற னர்.

பந்துவீச்சில் அஸ்வின் 4 இலக்குகளை யும், ஜடேயா, இசாந் சர்மா இருவரும் தலா 3 இலக்குகளையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி நேற்றுமுன்தினம் ஓர் இலக்கை இழந்து 11 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முரளி விஜய் 2 ஓட்டங்களுடனும், புஜாரா 2 ஓட்டங்களுடனும் நேற்றுக் களமிறங்கி னர். இருவரும் தொடர்ந்து சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினர். லக்மல், கமகே, கேரத், சானக என்று அத்தனை பந்துவீச்சாளர்களும் முயன்று பார்த்த போதிலும் இலக்குச் சரிவு ஏற்படவில்லை. இருவரும் அரைச் சதம் கடந்தனர். இணைப்பாட்டம் 200 ஆனது. சதமும் கடந்தனர். அணி 216 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது 128 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் முரளி விஜய். அடித்தாடி அரைச்சதம் கடந்தார் கோலி. நாள் முடிவில் இந்திய அணி 2 இலக்குகளை இழந்து 312 ஓட்டங்களைக் குவித்துள்ளது. (ம)

## மரண அறிவித்தல்

### தம்பையா யோகநாதன்
( ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் - Sri Lanka Ports Authority)



கரப்பொன்னைப் பிறப்பிடமாகவும் சரவணையை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா யோகநாதன் நேற்று (25.11.2017) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்க ளான கெங்காதரம்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் மருமகனும், பராசக்தி அம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான் பரதராசா, தன்லட்சுமி மற்றும் சத்தியமூர்த்தி, விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு சகோதரரும், கௌசலா (ஆசிரியை - வேம்படி மகளீர் உயர்தர பாடசாலை), ஹேமா (கணக்காளர் - மாகாண திறைசேரி), தினேஸ்காந் (வைத்தியர் - NHSL), சுகன்யா (கல்வி மேம்பாட்டு உத்தியோகத்தர், தேசிய நூதனசாலை - கொழும்பு) ஆகியோரின் அன்பு தகப்பனாரும், றமேஸ் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - யாழ்.மாநகரசபை), சுரேஸ்குமார் (கணக்காளர் - யாழ். போதனா வைத்தியசாலை), ரூபிகா (முகாமைத்துவ உதவியாளர் - காணித் திணைக்களம்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பாலகுமார் (பிரான்ஸ்), தனபாலன் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), உலகேஸ்வரி (ஜேர்மனி), காலஞ் சென்ற கிருபாகரன் ஆகியோரின் மைத்துனரும், ஆர்த்திகா, ஆருணியா, அபிஸ்னவி ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26.11.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் இல.30/4, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாண இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக்கொள்ளவும்.

**தகவல்:
குடும்பத்தினர்.**

**011 737 0937, 077 283 0673**



### றெஜினோல்ட் இராஜேந்திரன் அஸ்பெரி

அராலியைப் பிறப்பிடமாகவும், உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட றெஜினோல்ட் இராஜேந்திரன் அஸ்பெரி (ராஜன்) நேற்று (25.11.2017) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான றொபேட் கிருபைநாயகம் அஸ் பெரி (கிருபாமணி) தம்பதிகளின் அன்பு மகனும், இன்பரட்ணம் (இன் பம் - ஏழாலை) அவர்களின் அன்புக் கணவரும், பாலு அஸ்பெரி, திருமதி IVY சோமசேகரம் மற்றும் காலஞ்சென்ற விமலன் அஸ்பெரி, மகான் அஸ்பெரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், ஐறீன் - றொசான் (கொழும்பு) ஆகியோரின் தந்தையாரும், ரமோ - வித்யா ஆகியோ ரின் மாமனாரும், Aiden - Aaron ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (27.11.2017) திங்கட் கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது உடுவில் இல்லத்தில் நடை பெற்று மாலை 5மணியளவில் அராலி CACM சேமக்காலையில் நல் லடக்கம் செய்யப்படும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 768 1144, 078 301 4280**

## மக்ஸ்வெல் இரட்டைச்சதம்

> “மக்ஸ்வெல் நீக்கப்பட்டமைக்கு பல தரப்புக்களிடம் இருந்து கண்டனங்கள் குவிந்தமை குறிப்பிடத்தக்கது.

நோர்த் சிட்னி ஓவலில் நடைபெற்ற விக்டோரியா, நியூ சவுத் வேல்ஸ் அணிகளுக்கு இடையிலான ஆட்டமொன்றின் முதல் நாளில் மக்ஸ்வெல் அதிரடி இரட்டைச் சதம் அடித்து ஆஸ்திரேலிய அணித் தேர்வாளர்களுக்கு செய்தி அறிவித்துள்ளார்.

விக்டோரியா அணியைச் சேர்ந்த கிளென் மக்ஸ்வெல், நியூ சவுத் வேல்ஸ் அணியின் சிறந்த பந்து வீச்சாளர்களான டக்கி போலிஞ்சர், டிரெண்ட் கோப்லேண்ட், ஸ்டீவ் ஓகீப், அபொட், ஹென்றிக்ஸ் ஆகியோருக்கு எதிராக சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தினார்.

விக்டோரியா அணி நேற்றுமுன்தின முதல் நாள் முடிவில் 365 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளை இழந்திருந்தது. இதில் மக்ஸ்வெல் 213 ஓட்டங்களைக் குவித்திருந்தார். இரட்டைச் சதத்தை 226 பந்துகளில் 26 பவுண்டரிகள் 3 சிக்சர்களுடன் விளாசியிருந்தார்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையில் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. இந்தத் தொடருக்கான ஆஸ்திரேலிய அணியில் இருந்து மக்ஸ்வெல் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக மார்ஷ் சேர்க்கப்பட்டிருந்தார். மக்ஸ்வெல் நீக்கப்பட்டமைக்கு பல தரப்புக்களிடம் இருந்து கண்டனங்கள் குவிந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)




## கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம், நவ. 26

உடுவில் குபேரா கலைமன்றம் நடத்தத்திட்டமிட்ட யாழ். மாவட்ட ரீதியான கரப்பந்தாட்டத் தொடர் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் உடுவில் உதயசூரியன் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இந்தத் தொடரில் கலந்துகொள்ள விரும்பும் கழகங்கள் காலை மைதானத்துக்கு வருகை தருவதன் மூலம் பதிவை உறுதிப்படுத்திக்கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்தனர். (ம-108)

# ஆஸ்திரேலியா முன்னிலையில்



ஆஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் முதலாவது ஆட்டத்தின் நேற்றைய மூன்றாம் நாள் நிலவரத்தின் படி ஆஸ்திரேலிய அணி முன்னிலை பெற்றது.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான நடப்பு வருட ஆஷஸ் தொடர் பிரிஸ்பெய்ன் மைதானத்தில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 302 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. பந்துவீச்சில் ஸ்ராக், கம்மின்ஸ் இருவரும் தலா 3 இலக்குகளையும், லையன் 2 இலக்குகளையும், ஹசில்வூட் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கியது ஆஸ்திரேலியா. ஆரம்ப வீரரான பான்குரொப்ட் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கவாயா 11 ஓட்டங்களுடன் பவிலியின் திரும்பினார். வோர்ணர், சிமித் இருவரும் சிறிது நிலைத்தனர். 26 ஓட்டங்களுடன் வோர்ணர் ஆட்டமிழந்தார். பெரிதும் எதிர்பார்க்கப்பட்டவரான ஹான்ட்ஸ்கொம் வெறும் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நேற்றுமுன்தின இரண்டாம் நாள் முடிவில் ஆஸ்திரேலிய அணி 4 இலக்குகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. சிமித் 64 ஓட்டங்களுடனும், ஷோன் மார்ஷ் 44 ஓட்டங்களுடனும் மூன்றாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். அரைச்சதம் கடந்தார் ஷோன் மார்ஷ். அவர் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். மறுமுனையில் சதம் கடந்தார் சிமித். கம்மின்ஸூம் ஓரளவு தாக்குப்பிடிக்க இங்கிலாந்தை முன்னிலை பெற்றது ஆஸ்திரேலியா. முடிவில் அந்த அணி சகல இலக்குகளையும் இழந்து 328 ஓட்டங்களைப் பெற்றது. சிமித் ஆட்டமிழக்காமல் 141 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

பந்துவீச்சில் புரோட் 3 இலக்குகளையும், அண்டர்சன், மொயின் அலி இருவரும் தலா 2 இலக்குகளையும் வோக்ஸ், போல், ரூட் மூவரும் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து நேற்றைய மூன்றாம் நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 33 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. குக் 7 ஓட்டங்களுடனும், வின்ஸ் 2 ஓட்டங்களுடனும் ஹசில்வூட்டின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர். ஸ்ரோன்மன் 19 ஓட்டங்களுடனும், ரூட் 5 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)



## ஆஸ்திரேலிய வீரர்கள் வேகமாக வீசுகின்றனர்

### சிமித் பெருமிதம்

ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்கள் தற்போது மிகவும் வேகமாக வீசுகின்றனர் என்று தெரிவித்தார் அந்த அணியின் தலைவர் சிமித்.

ஆஷஸ் தொடர் தற்போது நடைபெற்று வரும் நிலையில், இந்தத் தொடர் தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பு ஒன்றிலேயே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

“ஸ்ராக், ஹசில்வூட், கம்மின்ஸ் போன்ற எமது வேகப்பந்து வீச்சாளர்கள் மிகவும் நேர்த்தியுடனும், வேகமாகவும் பந்துவீசுகின்றனர். உண்மையில் இவர்கள் அனைவரும் மிச்செல் ஜோன்சனை விடவும் வேகமாக வீசுகின்றனர். அவர்களின் பந்துவீச்சை வலைப் பயிற்சியின்போது எதிர்கொள்வதற்கு மிகவும் பதற்றப்பட்டடேன். இது எங்களுக்குச் சாதகமான விடயம்” என சிமித் மேலும் தெரிவித்தார். (ம)

## எல் கிளாசிகோ நேரம் மாற்றம்

ஸ்பெய்னின் முக்கிய கால்பந்தாட்டக் கழகங்களான ரியல் மட்ரிட், பார்சிலோனா அணிகள் மோதும் எல் கிளாசிகோ ஆட்டம் நடைபெறும் நேரம் ஆசிய ரசிகர்களையும் கவரும்படியாக மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

பரம வைரிகளான இந்த இரண்டு அணிகளும் மோதும் ஆட்டத்தைக் காண்பதற்கு உலகமே ஆவலுடன் காத்திருக்கும். வழக்கமாக இந்த ஆட்டங்கள் இலங்கை நேரப்படி நள்ளிரவு 12 மணிக்கே ஆரம்பமாகும். ஆனால் மாலை 5.30 மணிக்கு இனி ஆட்டங்கள் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)




## ஹத்துருசிங்கவை நியமிப்பதற்கு விருப்பம் தெரிவித்தது இலங்கை

இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்சியாளராக ஹத்துருசிங்கவை நியமிக்க விரும்பு வதாக இலங்கை கிரிக்கெட் சபை பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்குத் தெரிவித்துள்ளது. பங்களாதேஷ் கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக செயற்பட்டுவந்தார் ஹத்துருசிங்க. இவரை இலங்கை கிரிக்கெட் சபை தனது பயிற்சியாளராக நியமிக்க விருப்பம் தெரிவித்தது. இதையடுத்து ஹத்துருசிங்கவும் பங்களாதேஷ் அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலக அந்த நாட்டின் கிரிக்கெட் சபைக்கு விருப்பம் தெரிவித்திருந்தார். தற்போது ஹத்துருசிங்கவை தனது தலைமைப் பயிற்சியாளராக்க விரும்புவதாக பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்குத் தெரிவித்துள்ளது இலங்கை கிரிக்கெட் சபை. (ம)



Daily Food City

# CAREER OPPORTUNITIES

Are you a good Team Player?

DO YOU HAVE
- Good communication skillls?
- Good interpersonal skills?
- Excellent customer services?

**Then why do you wait?**

## BECOME A PART OF OUR TEAM

தகைமைகள் - O/L ஆறு பாடங்களில் சித்தி (Mathematics, English உட்பட)
- வயதெல்லை 18 - 28
- இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**அண்மையில் எடுத்த புகைப்படத்துடன் கூடிய சுயவிபரக் கோவையினை இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

CAREERS@DAILYFOODCITY.COM



www.dfc.lk

fb.com/dailyfoodcity

இல. 273. ஆடியபாதம் வீதி.
கொக்குவில் கிழக்கு.
கொக்குவில்.

0212224600

# யாழ். பல்கலை சம்பியன்

யாழ்ப்பாணம், நவ. 26

இலங்கைப் பல்கலைக் கழகங்களுக்கு இடையிலான ஹொக்கியில் பெண்கள் பிரிவில் யாழ். பல்கலைக் கழக பெண்கள் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

கொழும்பு டொறின்ரன் மைதானத்தில் நேற்று இந்த இறுதியாட்டம் இடம்பெற்றது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணியை எதிர்த்து ராஜரட்டை பல்கலைக் கழக அணி மோதியது. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் கோல்கள் பதிவாக வில்லை. சமநிலைத் தவிர்ப்பில் வைத்து 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது யாழ்ப்பாணப் பல்கலைக் கழக அணி.

(ம-422)

**வான் விற்பனைக்கு**

250 - XXXX Town AC Hairup வான் விற்பனைக்கு.

தொடர்பு - 075 5900 985

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**சிறி காந்தன் றோகினி (ரெக்சி)**

நீண்டதொரு வாழ்வதனில் - என்றும்
நிலையான புகழுடன் வாழ்ந்து
உற்றமும் சுற்றமும் வாழ்த்தி நின்ற
அன்பின் திருவுருவே ! பாசத்தின் இருப்பிடமே !
பண்பின் உறைவிடமே ! உண்மையின் உருவே !
உயிரான ஆலயமே !
இறைவன் அடி சேர்ந்திட்ட உங்களுக்கு
எங்களது விழிநீர் துளிகளை
காணிக்கையாகச் சமர்ப்பிக்கின்றோம்

கணவர் பிள்ளைகள்
இரத்தினம் - சிறிகாந்தன்.பிரியதர்சினி (யாழினி).பிரியங்கா (திவ்வியா)
முதலாம் வட்டாரம். புதுக்குடியிருப்பு.

**கார் விற்பனைக்கு உண்டு.**

nissan bluebird selphy
No - JJ XXXX
077 564 2197

**பெயர் மாற்றம்**

தங்கராசா பிரதீபா என இதுவரை காலமும் அழைக்கப்பட்ட நான் இன்றிலிருந்து எனது அனைத்து ஆவணங்களிலும் தங்கராசா சங்கீதா என மாற்றியுள்ளேன்.

சங்கீதா.

**பதவி வெற்றிடம்**

கொழும்பு. வெள்ளவத்தையில் இயங்கும் பிரபல வர்த்தக மற்றும் சேவை நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்கள் உண்டு.

- உதவியாளர்கள் (Packing Assistance - Boy)
- Computer Graphic Designer
- Computer Billing Cashier
- Super Market Manager
- Heavy Vehicle Driver

077 069 6816

SAMSUNG

# Joy begins with J

Enjoy every moment with Sri Lanka's most loved Smartphone Series.



| Galaxy J7 Pro | Galaxy J7 Max | Galaxy J7 Prime | Galaxy J5 Prime | Galaxy J7 Nxt | Galaxy J2 2018 |
|---|---|---|---|---|---|
| 5.5" FHD sAMOLED Display | 5.7" FHD TFT Display | 5.5" FHD Display | 5.5" HD Display | 5.5" HD sAMOLED | 5" HD sAMOLED |
| Memory 64GB \| RAM 3GB | Memory 32GB \| RAM 4GB | Memory 32GB \| RAM 3GB | Memory 32GB \| RAM 3GB | Memory 16GB \| RAM 2GB | Memory 16GB \| RAM 2GB |
| 13MP+13MP Enhanced Camera | 13MP+13MP Enhanced Camera | Fingerprint scanner | Fingerprint scanner | Latest Android Nougat | S Bike Mode |
| ரூ. 48,200 | ரூ. 42,250 | ரூ. 37,600 | ரூ. 31,650 | ரூ. 28,750 | ரூ. 21,250 |

JKOA | SINGER | SINGHAGIRI | softlogic

SIMPLY DIAL 011 SAMSUNG 7267864

www.facebook.com/SamsungLanka

My Galaxy
The all you need app

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.11.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.